இரண்டாவது
உலகத் தமிழ்க்
கருத்தரங்கு நிகழ்ச்சிகள்

INTERNATIONAL ASSOCIATION OF TAMIL RESEARCH

EVERY COUNTRY IS MY COUNTRY · EVERY MAN IS MY KINSMAN

திருக்குறள்

சென்னை

சனவரி 1968

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு

ஆராய்ச்சி செயல்முறைக்

கருத்தரங்கு

இரண்டாவது
உலகத் தமிழ்க்
கருத்தரங்கு நிகழ்ச்சிகள்

சென்னை

சனவரி 1968

மூன்றும் தொகுதி

வி. ஐ. சுப்பிரமணியம்

உலகத் தமிழாராய்ச்சி மன்றம்
தமிழகம், சென்னை—34

PUBLISHED UNDER THE AUSPICES OF
THE INTERNATIONAL ASSOCIATION OF TAMIL RESEARCH
WITH FINANCIAL ASSISTANCE FROM
UNESCO

FIRST PUBLISHED: OCTOBER 1971

PRINTED IN INDIA
AT HOE & CO., THE "PREMIER PRESS," MADRAS-1

பதிப்புரை

சென்னையில் மிகச் சிறப்பாக நடந்தேறிய இரண்டாவது உலகத் தமிழ் மகாநாட்டுக் கருத்தரங்கில், சனவரித் திங்கள் (1968) நான்காம் நாள் முதல் பத்தாம் நாள் வரை அரங்கேற்றி விவாதிக்கப்பட்ட தமிழ் ஆராய்ச்சியுரைகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

கருத்தரங்கின் ஒவ்வொரு பிரிவிலும் தமிழில் எழுதிய கட்டுரைகளுக்கும் படிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று நண்பர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இலக்கியம், சமூகவியல், சித்த வைத்தியம், சமயம், இலக்கணம் ஆகிய துறைகளில் இத்தொகுதியிற் காணும் கட்டுரைகள் இருபத்தேழும் இடம் பெற்றன. மலேயா உறுப்பினர் ஒருவரும், சிங்கப்பூர் வாசிகள் இருவரும், இலங்கை வாழ் தமிழர் ஐவரும், தமிழ் நாட்டாய்வாளர்கள் பத்தொன்பதின்மரும் இக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துத் தடை விடைகளால் பயன் பெற்றனர். மகாநாடு முடிந்ததும் இக்கட்டுரை ஆசிரியர்களிற் சிலர் தமது கட்டுரைகளைத் திருத்தி உதவினர். ஏனையோர் அவ்வாறே அவற்றைப் பதிப்பிக்க இசைவு தந்தனர். தடை விடைகள் சுவையாக அமைந்திருந்தனவாயினும் அவற்றைப் பதிவு செய்யும் முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே அவற்றைப் பதிப்பிக்காமல் விட்டுவிட நேர்ந்ததற்கு வருந்துகிறோம்.

இலங்கை வாழ் உறுப்பினர் உருவாக்கிய கட்டுரைகளில் அங்கு நிலவும் தமிழ் வழக்கு இடம் பெற்று இன்சுவையளிக்கிறது. சிங்கப்பூர், மலேயா உறுப்பினர்கள் நடைக்கும் தமிழ்நாட்டு நடைக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடில்லை. இலங்கைத் தமிழில் எவ்வித மாற்றமும் செய்யாமல் அவ்வாறே கட்டுரைகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கட்டுரைகள் அனைத்தும் பலதரப்பட்ட செய்திகளை விளக்குகின்றன. அவற்றைப் பொருளடக்கத்தில் வரலாறு, இலக்கியம், இலக்கணம், கலைச்சொல் எனும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஆசிரியர் பெயர்களின் அகர வரிசைப்படி வகைப்படுத்தப்பட்டுள்ளன. சில கட்டுரைகள் இரு பிரிவுகளைச் சாரத்தக்க பொருளாற்றலுடையன. எனினும் பெரும்பான்மை நோக்கி ஒரு பிரிவினுள் அடக்கப் பெற்றுள்ளன.

சிதறிக் கிடக்கும் பல செய்திகளை இந்நூலிற் காணும் கட்டுரைகள் அனைத்தும் தொகுத்துத் தந்துள்ளன என்றால், அதில் கருத்து மாறுபாடு இராது. அதைப் போன்றே, பரந்த நோக்கும், பல மொழியறிவும், நெறியான ஆய்வு முறைக்குத் தேவை என்பதை இந்நூற்றொகுதி வற்புறுத்தும் என்று கூறினும் மறுப்புத் தோன்றாது. இக்கட்டுரைகளைச் சீர்தூக்கி, தரம் பிரித்து ஆராயுமாறு தமிழ் ஆய்வாளர் அனைவரையும் வேண்டுகிறோம்.

இத்தொகுப்பின் இறுதியில் ஆசிரியர்களின் அகர வரிசைத் தொகுப்பும் அதனையடுத்துக் கட்டுரைப் பெயர்களின் அகர வரிசைத் தொகுப்பும் படிக்கின்றவர்களுக்குத் துணையாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. கட்டுரை ஒவ்வொன்றின் முதற்பக்கத்தடியிலும் ஆசிரியர்களைப் பற்றிய சிறு குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதனை நன்றாக அச்சேற்றி உதவிய ஹோ அண்டு கோ அச்சகத்தாருக்கு மகாநாட்டு அமைப்பாளர் சார்பில் நன்றியுரியது. நூலிற் பிழைகள் காணின் அதற்கு வருத்தந் தெரிவித்துக் கொண்டு கட்டுரைகளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

பதிப்பாளன்

பொருளடக்கம்

வரலாறு

இலக்கியம்

மறைந்துபோன மருங்கூர்ப் பட்டினம்

(சங்க காலத்துத் துறைமுகம்)

மயிலை. சீனி. வேங்கடசாமி*

மருங்கூர்ப் பட்டினம் என்னும் பெயருள்ள ஒரு துறைமுகப் பட்டினம் பாண்டி நாட்டின் கிழக்குக் கடற்கரை யோரத்தில் இருந்தது என்பதை இதுவரையில் ஒருவரும் அறியவில்லை. பேர்போன கொற்கைத் துறைமுகம் பாண்டி நாட்டில் இருந்ததும் பிற்காலத்தில் அது மறைந்துபோய் புன்னைக்காயல் துறைமுகம் ஏற்பட்டதும் பின்னர் அதுவும் மறைந்துபோய் இப்போது தூத்துக்குடி துறைமுகம் ஏற்பட்டிருப்பதும் தெரிந்ததேயாகும். கொற்கைத் துறைமுகத்தைத்தவிர மருங்கூர்ப் பட்டினம் என்னும் இன்னொரு துறைமுகப்பட்டினம் கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் இருந்ததைச் சங்க இலக்கியத்திலிருந்து அறிகிறேம்.

பெரிப்ளஸ் என்னும் கிரேக்க நூலும் தாலமி என்பவர் எழுதிய கிரேக்க நூலும் அக்காலத்திலிருந்த தமிழ் நாட்டின் துறைமுகப் பட்டினங்களின் பெயர்களைக் கூறுகின்றன. ஆனல், மருங்கூர்த் துறைமுகப்பட்டினத்தின் பெயர் அந்நூல்களிற் காணப்படவில்லை. பரணர், நக்கீரர், மருதன் இளநாகனர் என்னும் மூன்று சங்க காலப் புலவர்களின் செய்யுள்களிலிருந்து இந்தத் துறைமுகப்பட்டினத்தைப் பற்றி அறிகிறேம். இந்தச் செய்யுள்களிலும் இந்தப் பட்டினத்தின் முழு வரலாறு கூறப்படவில்லை. மருங்கூர்ப் பட்டினம் ஒரு துறைமுகப்பட்டினம் என்பது மட்டும் இச்செய்யுள்களிலிருந்து தெரிகின்றது. சங்கச் செய்யுள்களைப் படித்து ஆராய்ந்த ஆராய்ச்சிக்காரர்களுக்கு இந்தத் துறைமுகப்பட்டினம் தெரியாமற் போனது ஆச்சரியமாக இருக்கிறது. கிடைத்துள்ள சான்றுகளை ஆதாரமாகக்கொண்டு இந்தப் பழைய துறைமுகப்பட்டினத்தைப் பற்றி விளக்கிக் கூறுவோம்.

சோழ நாட்டிலிருந்த பேர்போன காவிரிப்பூம்பட்டினம் அக்காலத்தில் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்று இரண்டு பகுதியாகப் பிரிந்திருந்தது போலவே இந்தத் துறைமுகப்பட்டினமும் **மருங்கூர்ப் பட்டினம்** என்றும் **ஊணூர்** என்றும் இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. காவிரிப்பூம்பட்டினத்துப் பட்டினப்பாக்கத்தைச் சூழ்ந்து மதில் அரணுக இருந்தது போலவே, மருங்கூர்ப்

---

*ஆய்வாளர், சென்னை.

பட்டினத்தைச் சேர்ந்த ஊணூரைச் சூழ்ந்து மதில்அரண் இருந்தது. இந்தத் துறைமுகப்பட்டினத்தைப் பற்றிச் சங்கச் செய்யுள்கள் கூறுவதைப் பார்ப்போம்.

மருங்கூர்ப் பட்டினம் செல்வம் கொழித்த நகரம் என்றும் அது கடற்கரையில் இருந்ததென்றும் அங்குக் காயல்களும் (உப்பங்கழிகள்) தோட்டங்களும் இருந்தன என்றும் அவ்வூர்க் கடைத்தெரு சிறந்திருந்தது என்றும் நக்கீரர் கூறுகிறார்.

> "விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
> **இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து**
> எல்லுமிழ் ஆவணம்." (அகம் : 227 : 19-21).

காக்கைகள் வீட்டில் வந்து கரைந்தால் அவ்வீட்டுக்கு விருந்தினர் வருவார்கள் என்பது அக்காலத்து நம்பிக்கை. மருங்கூர்ப் பட்டினத்து மகளிரும் தங்கள் வீட்டுக்கு விருந்தினர் வரவேண்டுமென்று விரும்பிக் காக்கைகளுக்குச் சோறு (பலி) இட்டனர். சோற்றுப் பலியை உண்ட காக்கைகள், அவ்வூர்க் கடைத்தெருவில் ஓரிடத்தில் குவித்து வைத்திருந்த இறால் மீன்களைக் கவர்ந்து கொண்டுபோய்த் துறைமுகத்தில் தங்கியிருந்த வங்கங்களின் (கப்பல்களில்) பாய் மரத்தின் மேல் அமர்ந்து இறால்களைத் தின்றன என்று நக்கீரர் கூறுகிறார்.

> "கதிர்கால் வெம்பக் கல்காய் ஞாயிற்றுத்
> திருவுடை வியனகர் வருவிருந் தயர்மார்
> பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த
> கொக்குகிர் நிமிரல் மாந்தி எற்பட
> அகலங் காடி யசைநிழற் குவித்த
> பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை
> **தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்**
> **மருங்கூர்ப் பட்டினம்."** (நற்றிணை. 258:3-10)

மருங்கூர்ப் பட்டினம் சுருக்கமாக **மருங்கை** என்றும் கூறப்பட்டது. மருங்கை, பசும்பூண் வழுதி என்னும் பாண்டியனுக்கு உரியது என்று நக்கீரர் கூறுகிறார். இதனால் இத்துறைமுகப்பட்டினம் பாண்டி நாட்டில் இருந்தது என்பது தெரிகின்றது.

> "பெருஞ்சே யிறவின் துய்த்தலை முடங்கல்
> சிறுவெண் காக்கை நாளிரை பெறூஉம்
> **பசும்பூண் வழுதி மருங்கை."** (நற்றிணை. 358:8-10)

மருங்கூர்ப் பட்டினத்தை அடுத்து (மேற்கே) **ஊணூர்** என்னும் ஊர் இருந்தது. இவை இரண்டும் ஒன்றையொன்று அடுத்து ஒரே நகரம் போல் இருந்தன. ஊணூரின் தலைவன் பெயர் **தழும்பன்** என்பது. ஊணூரைச் சூழ்ந்து மதிற்சுவர் அரணாக அமைந்திருந்

தது. ஊணூர்த் தலைவனாகிய தழும்பனைத் **தூங்கல்** என்னும் புலவர் பாடினார். இச்செய்திகளை நக்கீரர் கூறுகிறார்.

"........................வாய்வாள்
தமிழகப் படுத்த இமிழிசை முரசின்
வருநர் வரையாப் பெருநாள் இருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினம்..."
(அகம். 227 : 13-20)

இச்செய்யுளில், ஊணூர்த் தழும்பனைத் தூங்கல் என்னும் புலவர் பாடினார் என்று நக்கீரர் கூறுகிறார். தூங்கல் என்பது **தூங்கல் ஓரியார்** என்னும் புலவனைச் சுட்டுகிறது. தூங்கல் ஓரியார் பாடிய செய்யுட்கள் குறுந்தொகையில் இரண்டும் (151, 295), நற்றிணையில் ஒன்றும் (60) ஆக மூன்று செய்யுட்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவர் ஊணூர்த் தழும்பனைப் பாடிய பாடல்கள் கிடைக்கவில்லை. அப்பாடல் அல்லது பாடல்கள் தொகை நூல்களில் தொகுக்கப்படாமல் விடுபட்டன போலும்.

ஊணூர், கடற்கரைக்கு அருகில் மருங்கூர்ப் பட்டினத்தைச் சார்ந்து இருந்தது. ஊணூரைச் சூழ்ந்து நெல்வயல்கள் இருந்தன என்று மருதன் இளநாகனார் கூறுகிறார்.

"முழங்குகடல் ஓதம் காலைக் கொட்கும்
பழம்பல் நெல்லின் **ஊணூர்** ஆங்கண்."
(அகம். 220:12-13)

ஊணூர்க் கழனிகளில் உழவர் நெற்கதிரை அரியும்போது தண்ணுமை (மத்தளம்) வாசிக்கப்பட்டது. (அக்காலத்தில் உழவர்கள் பாட்டுப் பாடிக்கொண்டும் தண்ணுமை ஒலியைக் கேட்டுக்கொண்டும் பயிர்த்தொழில் செய்வது வழக்கம்). தண்ணுமையின் ஓசையைக் கேட்டுத் தேனீக்கள் சிதறிப் பறந்தன. ஊணூரிலிருந்த பாணர்கள் மதுக் காய்ச்சினார்கள், மீனைச் சமைத்து உண்டனர் என்று பரணர் கூறுகிறார்.

"வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடல் கொண்ட தீந்தேன் இரியக்
கள்ளரிக்கும் குயம் சிறுசில்
மீன்சீவும் பாண் சேரி
வாய்மொழித் தழும்பன் **ஊணூர்**." (புறம்.348:1-5)


இசைப்பாடல்களிலும் யாழ் முதலிய இசைக் கருவிகளை வாசிப்பதிலும் நாடகக்கலையிலும் வல்லவர்களான பாணர்களுக்குத் தலை

வன் ஊணூர்த் தழும்பன். தழும்பனுடைய உடம்பில் புண் தழும்புகள் இருந்தன. அந்தத் தழும்புகள் போர்க்களத்தில் ஏற்பட்டன போலும். ஊணூரில் யானையை அழைத்துக்கொண்டு யானைப்பாகன் வீடுதோறும் சென்று பிச்சை வாங்கினான் என்று பரணர் கூறுகிறார்.

> '' நெய்வார்ந் தன்ன துய்யடங்கு நரம்பின்
> இரும்பாண் ஒக்கல் தலைவன் பெரும்புண்
> ஏஎர் தழும்பன் ஊணூர் ஆங்கண்
> பிச்சை சூழ் பெருங்களிறு போல. ''
>
> (நற்றிணை. 300 : 8-11)

ஊணூர்த் தழும்பன் பாண்டியனுக்குக் கீழடங்கியிருந்தவன். இவ்வாறு ஊணூரும் அதனைச் சார்ந்த மருங்கூர்ப் பட்டினமும் சங்கச் செய்யுள்களில் கூறப்படுகின்றன. இனி, மேலே கூறப்பட்ட விளக்கத்திலிருந்து இவ்வூர்களின் அமைப்பு எவ்வாறு அமைந்திருக்கக்கூடும் என்பதை ஊகித்துப் படம் வரைந்து காட்டுவேன்.

மருங்கூர் துறைமுகப் பட்டினமும்
ஊணூரும்



இந்த ஊணூர்-மருங்கூர்ப் பட்டினம் பாண்டி நாட்டிலே எங்கிருந்தது என்பது தெரியவில்லை. இதை அறிவதற்கு வேண்டிய சான்றுகளோ குறிப்புக்களோ இப்போது கிடைக்கவில்லை. இது பாண்டி நாட்டுக் கிழக்குக்கரை ஓரத்தில் இருந்திருக்கவேண்டும். சங்கச் செய்யுள்களும் யவன நூல்களும் குறிப்பிடுகிற பேர்போன கொற்கைத் துறைமுகப் பட்டினத்துக்கு வடக்கே இது இருந்திருக்க வேண்டும்.

மருங்கூர்ப் பட்டினமும் சாலியூரும் ஒன்று?

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மேல் பாடப்பட்ட மதுரைக் காஞ்சியிலே (வரி 75-88) ஒரு துறைமுகப்பட்டினம் கூறப்படுகிறது. மாங்குடி மருதனார் அந்தப் பட்டினத்தின் பெயரை நேராகக் கூறாமல் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறார். '' நெல்லின் ஊர் '' என்று அதைக் குறிப்பிடுகிறார். இதற்கு உரை எழுதிய மிகப் பிற்காலத்தவரான நச்சினார்க்கினியர், '' நெல்லின் பெயரைக் கொண்ட சாலியூர் '' என்று எழுதுகிறார். மேலும் '' இன்னை அசையாக்கி நெல்லூர் என்பாரும் உளர் '' என்றும் கூறுகிறார். எனவே சாலியூர் அல்லது நெல்லூர் என்னும் துறைமுகப்பட்டினம் பாண்டி நாட்டில் இருந்தது என்பது தெரிகிறது. செல்வம் கொழித்த அந்தத் துறைமுகப்பட்டினத்திலே **பெருநாவாய்கள்** (பெரிய பாய்க்கப்பல்கள்) வந்து இறக்குமதி ஏற்றுமதி செய்தன என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. அதன் வாசகம் இது:

'' வான் இயைந்த இருமுந்நீர்ப்
பேஎ நிலைஇய பெரும்பௌவத்துக்
கொடும் புணரி விலங்குபோழக்
கடுங் காலொடு கரைசேர
நெடுங் கொடிமிசை இதை எடுத்து
இன்னிசைய முரச முழங்கப்
பொன்மலிந்த விழுப் பண்டம்
நாடார நன்கிழி தரும்
ஆடியற் **பெருநாவாய்**
மழைமுற்றிய மலை புரையத்
துறை முற்றிய **துளங்கிருக்கைத்**
தெண்கடற் **குண்டகழிச்**
சீர்சான்ற உயர் **நெல்லின்**
ஊர்கொண்ட உயர் கொற்றவ.

(மதுரைக்காஞ்சி. அடி 75-88.)

இதன் கருத்து: ' தொடுவானம் பொருந்திய பெரிய கடலாகிய அச்சந் தருகின்ற பௌவத்திலே (அக்கரை நாடுகளிலிருந்து) அலைகளைக் கிழித்துக்கொண்டு காற்றின் உதவியினால் இக்கரையை யடைவதற்குப் பாய்களை விரித்துக்கொண்டு வந்த பெரிய நாவாய்க் கப்பல்கள் இத்துறைமுகத்திலே கூட்டமாக வந்து தங்கின. நாவாய்களில் விலையுயர்ந்த பண்டங்களை இறக்குமதி செய்யும் போது அச்செய்தி முரசு அடித்து ஒலியுண்டாக்கி அறிவிக்கப் பட்டது. துறைமுகத்தில் நாவாய்கள் தங்கியிருந்த காட்சியானது, கடலை முற்றுகை செய்யும் மலைகள் போலத் தோன்றிற்று. இப்படிப்பட்ட வாணிக வளமுள்ள, ஆழமான அகழியையுடைய சாலியூரை (நெல்லூரைக்) கைப்பற்றினான் நெடுஞ்செழியன் '' என்பது.

இவ்வாறு சிறப்பிக்கப்பட்ட சாலியூர்த் துறைமுகப்பட்டினமும் மேலே கூறப்பட்ட மருங்கூர்த் துறைமுகப்பட்டினமும் ஒன்றுதானோ என்னும் ஐயம் தோன்றுகிறது. சாலியூர், கடல்நீரை அகழியாகக் கொண்டிருந்தது என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. மருங்கூர்ப் பட்டினத்தை யடுத்திருந்த ஊணூர், கோட்டை மதிலைப் பெற்றிருந்தது என்று நக்கீரர் கூறுகிறார். மதிலைச் சூழ்ந்து கிடங்கு (அகழி) இருப்பது வழக்கந்தானே. இக்குறிப்புகளினால் சாலியூரும் ஊணூரும் ஒன்று என்று கருதத் தோன்றுகிறது. ஆனால், உறுதியாகச் சொல்லத் தக்க சான்றுகள் இல்லை. இது எப்படியானாலும் சரி, இதுவரையில் அறியப்படாத ஒரு பழைய துறைமுகப்பட்டினம் இப்போது சங்கச் செய்யுள்களிலிருந்து வெளிப்பட்டது என்பது இந்த ஆராய்ச்சிக் கட்டுரையினால் நன்கு தெரிகின்றது.

மருங்கூர்ப் பட்டினம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுச் சாசனங்களிலும் கூறப்படுகிறது. சோழநாட்டிலே நன்னிலம் தாலுகாவில் உள்ள திருச்செங்காட்டங்குடி உத்தராபதீசுவரர் கோவிலின் முன் மண்டபத்து மேற்குப் பக்கத்துச் சுவரின் அடிப்புறத்தில் ஒரு சாசனம் எழுதப்பட்டிருக்கிறது. திரிபுவன சக்கரவர்த்தி இராஜராஜ தேவரின் (III) மூன்றும் ஆட்சியாண்டில் (கி.பி. 1218-இல்) இந்தச் சாசனம் எழுதப்பட்டது. மருங்கூர் வாசிகளான இருவர் இந்தக் கோவிலுக்கு நிலம் தானங் கொடுத்ததை இச்சாசனம் கூறுகிறது. மருங்கூருக்கு இராஜநாராயண சதுர்வேதிமங்கலம் என்று பெயர் இருந்ததை இச்சாசனம் தெரிவிக்கிறது.

இதே கோவிலின் இரண்டாவது கோபுர வாயிலின் இடது புறச் சுவரில் உள்ள சாசனம், திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டிய தேவரின் ஏழாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்டது. மருங்கூரில் இருந்த இரண்டு வேலி நிலத்தை இக்கோயிலுக்குத் தானம் செய்யப்பட்ட செய்தி இதில் கூறப்படுகிறது.[1]

இந்தச் சாசனங்களிலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலும் மருங்கூர்ப்பட்டினம் இருந்ததென்பது தெரிகின்றது. இப்போது இவ்வூர் இதே பெயருடன் இருக்கிறதா, அல்லது வேறு பெயர் பெற்றிருக்கிறதா, அல்லது கடலில் மறைந்து போய்விட்டதா என்பதை மேற்கொண்டு ஆராய வேண்டியது பழம் பொருள் ஆராய்ச்சி இலாகாவின் கடமையும் ஆராய்ச்சிக்காரர்களின் கடமையும் ஆகும்.

[1] 63 & 76 of 1913, Nos. 753 & 766, Tanjore Dt. A Topographical list of the inscriptions of Madras Presidency. Vol. II.

மேலைநாட்டு நிலஇயல் நூல்களும் சங்ககால ஆராய்ச்சியும்

மறைத்திரு சே. தனிநாயகம்*

1. மேலைநாட்டு நிலஇயல் ஆசிரியரின் நூல்களைப் பதிப்பித்தோர் அன்னார் கூறும் தென்னாட்டின் பட்டினங்களும் உள்நாட்டுப் பேரூர்களும் மலைகளும் ஆறுகளும் எங்கு அமைந்துள்ளன என்று குறிப்பிடவும் முயன்றிருக்கின்றனர். இம்முயற்சியில் ஈடுபட்டு அரிய கருத்துக்கள் பலவற்றைத் தொகுத்துத் தந்தவர் செங்கடற் செலவு (Periplus Maris Erythraei) நூலின் பதிப்பாசிரியரும் இந்திய வணிகத்தைப் பற்றித் தனி நூல் (1807) யாத்தவருமான வின்சென்ட் என்பவர். அவருடைய நூல்கள் 1807-ஆம் ஆண்டு முதல் அச்சிடப்பட்டனவாயினும் இன்றும் அவை போற்றப்பட்டு வருகின்றன. அத்துணைச் சிறப்பு வாய்ந்த குறிப்புக்களைக் கொண்டவையாதலால்,[1] வின்செண்ட் உடைய செங்கடற் செலவு நூலின் பதிப்பு வெளியிடப்பட்ட பின்னர், கால்ட்வெல் போன்றோர் சில பெயர்களையும் இடங்களையும் ஒப்புநோக்கி அவற்றினைப் பற்றிக் குறிப்புக்கள் எழுதினர். தொலமி கூறும் " ஆய்யோய் ", (Aioi) என்பவர் பொதியில் மலைக் குறுநில மன்னரென்றும் ' கொல்கை ' என்பது பாண்டியரின் கொற்கையென்றும் கால்ட்வெல்லே முதல் முதற்றெளிவாகக் குறிப்பிட்டார். தம் முன்னோரின் கருத்துக்கள் அனைத்தையும் திரட்டி மக்கிரண்டில் (McCrindle) என்பவர் தாம் பதிப்பித்த இரு நூல்களில் ஏனைய இடப் பெயர்களையும் இனப் பெயர்களையும் விளக்குவது போலத் தமிழ் நாட்டின் இடப் பெயர்களையும் இனப் பெயர்களையும் விளக்கியுள்ளார்.[2] மக்கிரண்

---

*எம். ஏ., எம். லிட்., பிஎச். டி., பொதுச் செயலாளர், உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்.

[1] THE PERIPLUS OF THE ERYTHREAN SEA. Part the first, containing : An Account of the Navigation of the Ancients, from the Sea of Suez to the coast of Zanguebar. With Dissertations. By William Vincent. London: Cadell, Jun. Davies, 1800.

THE COMMERCE AND NAVIGATION OF THE ANCIENTS IN THE INDIAN OCEAN. By William Vincent, D. D., Dean of Westminister. In two volumes. London: Cadell and Davies, 1807. Vol. I, *The Voyage of Nearchus*. Vol. II, *The Periplus of the Erythrean Sea*. Part the first containing, An Account of the Navigation of the Ancients from the Sea of Suez to the coast of Zanguebar. With Dissertations. Part the second containing, An Account of the Navigation of the Ancients from the Gulph of Elana, in the Red Sea, to the Island of Ceylon.

THE VOYAGE OF NEARCHUS AND THE PERIPLUS OF THE ERYTHREAN SEA. (as-cribed to Arrian), translated by W. Vincent, Oxford 1809.

[2] MCCRINDLE, J. W.,: *Ancient India as described by Ptolemy*, London, 1885; *The Commerce and Navigation of the Erythrean sea*, Calcutta, 1879.

டில் உடைய பதிப்பும் முடிபுகளும் விளக்கக் குறிப்புக்களுமே பெரும்பாலும் இன்று தழுவப்பட்டு வருகின்றன. மக்கிரண்டிலும் அவர் முன்னோரும் மேலைநாட்டுநிலஇயல் ஆசிரியர் கூறும் தமிழ் நாட்டு ஊரையும் பெயரையும் சுட்டிக் குறிப்பிடும்பொழுது தம் காலத்தில் வழங்கும் ஊர்ப்பெயர்களோடுதாம் ஒப்பிட்டுப் பார்த்தனர். அன்னார் காலத்தில் சங்க இலக்கியங்களை மேலைநாட்டினர் நன்கு அறிந்திருக்கவில்லை. சங்க இலக்கியங்களை அறிந்திருப்பினும் பெரிப்புளூஸ் (Periplus) தொலமி (Ptolemy) போன்றோரின் நூல்களும் ஏறக்குறைய அதே காலத்தவை எனும் உண்மையையும் உணர்ந்திலர். எனவே இப்பழைய மேலைநாட்டு நிலஇயல் ஆசிரியரின் நூல்களைச் சங்க இலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் புதிய ஒற்றுமைக் குறிப்புக்களைக் காண்டல் கூடும் எனும் கருத்துடன் ஒரு சில குறிப்புக்கள் ஈண்டு தொகுக்கப் பெற்றுள்ளன.

பிரதிகள் பல

மேலைநாட்டு நில இயல் நூல்களைப் பண்டுதொட்டு ஐரோப்பியரும் அராபியரும் நன்கு கற்று வந்துள்ளதோடு, தம் காலத்தின் நிலஇயல் அறிவிற்கேற்ப அவை கூறும் நாடுகளின் படங்களையும் வரைந்துள்ளனர். அந்நூல்களின் பிரதிகளோ பல; பல நாடுகளின் நூற்கூடங்களிற் பாதுகாக்கப்பெற்று வருகின்றன. பண்டு தொட்டு வழங்கி வரும் இந்த நூல்களின் கையெழுத்துப் பிரதிகளில், மூலங்கள் குறைந்தும், உரைகள் சிதைந்தும் பிறழ்ந்தும் இருப்பது இயல்பேயாம். சிதைவுகளும், கையெழுத்துப் பிழைகளும் பிறநாட்டு வேற்றுமொழிப் பெயர்களையும் ஊர்களையும் குறிக்கும்போது தோன்றுவது அதனினும் இயல்பேயாம். எனவே சங்க காலப் பெயர்களை மேலைநாட்டு நூல்கள் தரும் பெயர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்குங்கால், அப்பிரதிகளிலிருந்து பெற்ற மூலபாடத்தையும் பாட பேதங்களையும் நாம் நன்கு ஆய்தல் வேண்டும். இவ்வாறு ஒப்பிட்டு ஆய்வதால் செங்கடற் செலவு நூலிலும் தொலமியிலும் இன்னும் பல அரிய ஒற்றுமைப் பெயர்களைக் கண்டுபிடித்தல் கூடும் என்று நம்புவதற்குச் சான்றுகளுள. எடுத்துக்காட்டாக, இத்தகைய ஆய்வு செங்கடற் செலவு நூலில் 'கலம்' எனும் தமிழ்ச்சொல் கிரேக்க மூலப் பிரதியில் மறைந்திருப்பதைக் காட்டும் பான்மையைக் காண்க.

''கலம்'' என்ற சொல்

தமிழ் நாட்டின் கிழக்குக் கரையில் இயங்கும் கடற்செலவுக் கருவிகளை மூன்று வகுப்பாகப் பிரிக்கின்றார் செங்கடற் செலவு நூலின் ஆசிரியர். கரையைத் தழுவிச் செல்லும் தோணிகள் ஒரு பிரிவு; இவ்விரு தோணிகளாகக் கட்டப்பட்டுச் '' சங்காரா '' எனப்படும் படகுகள் இரண்டாம் பிரிவு; '' கிறிசே '' எனப்படும் கீழ்த்திசை

நாட்டிற்கும் கங்கை மாநிலத்திற்கும் செல்லும் " கொலாண்டியா " எனப்படும் மாபெருங் கப்பல்கள், மூன்றும் பிரிவு. சங்கரா எனப்படும் படகுகள் இன்றும் சேர நாட்டில் உள்ள ஒரு வகையைக் குறிக்கின்றனவென்றும், சங்கரா எனும் சொல் மலையாளத்தில் " சங்காடம் " எனும் சொல்லுடன் தொடர்புள்ளதென்றும் கருதுகின்றனர் அறிஞர் பலர். ஆனால் **'கொலாண்டியா'** எனப்படும் மாபெருங் கப்பல்களின் பெயரைப் பற்றிக் கருத்து வேற்றுமைகள் சில உள. இச்சொல் 'Kolāntarapota' எனும் வடமொழிச் சொல்லென்றும், அதன் பொருள் " வேற்று நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள் " என்றும் கூறுகின்றார் ஒருவர்; (Rajendralal Mitra, Antiquities of Orissa I, 115 p.) மலாய் மொழியில் உள்ள 'கொலே பாஞ்சேயில்' (Koleh panjail-sailing ship) எனும் தொடரின் அடியாகப் பிறந்த சொல் என்பர் வேறொருவர். (Pritchett, Sketches of shipping and craft.)

இந்நூலின் மூலப் பதிப்புகள் இச்சொல்லினைப் பற்றி என்றும் ஐயுறுமாறு காணப்படுகின்றன. 1849-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பதிப்பில் இச்சொல்லினை " கொலாண்டியாபொன்தா " (colandiaphonta) என்று படித்துள்ளனர் பாபிரிசியஸ் (Fabricius) என்பார். 1855-ஆம் ஆண்டில் பல படிகளை ஆய்ந்து தம் **'Geographi Graeci Minores'** (கிரேக்க நில இயல் சிறு ஆசிரியர்) என்ற நூலை வெளியிட்ட மூலர் (Muller) என்பாரும் " colandiaphonta " என்ற பாடத்தையே தழுவினராம். முகவுரையிலும் அடிக்குறிப்பிலும் இப்பாடத்தைப்பற்றித் தம் ஐயத்தைக் கூறிப் பிற பாடங்களையும் தந்துள்ளார். 1883இல் பாபிரிசியஸ் என்பவர் மீண்டும் இந்நூலினைப் பதிப்பித்து " Colandiaphonta " எனும், இடத்தில் " colandia "வே திருந்திய பாடமென்றும், அப்பாடத்திற்கு உறுதிச் சான்றுகள் மூலருடைய (Muller) பதிப்பிலும் இதர பாடங்களிலும் அமைந்துள்ளனவென்றும் எழுதியுள்ளார். இந்நூற்றாண்டில் செங்கடற் செலவு நூலினைப் பல உரைகளுடன் 1912-ஆம் ஆண்டில் வில்பிரட் சாப் (Wilfred H. Schoff) என்பவர் பதிப்பித்தார். அவரும் " Colandia " எனும் பாடத்தையே தழுவினார். ஆனால் பிற பாடங்களை நாம் ஊன்றி நோக்கும்பொழுது " கலம் " என்ற சொல்லே மறைந்திருப்பதைக் காண்கிறோம். மூலர் குறித்த வேறு இரு பாடங்கள் " kolana diapheronta வும் " kolana legontai onta megista " வும் " கொலனு என்று கூறுகின்றனர்; அவை மிகப் பெரியன. " Kolana " எனும் சொல் ஒருமையில் Kolanon ஆகும்; "கலம்" என்ற தமிழ்ச் சொல்லினைக் கிரேக்க மொழியில் எழுதுவதென்றாலோ ஒலிப்பதென்றாலோ வேறு எந்த முறையில் எழுதவோ ஒலிக்கவோ கூடும்?.[3]

[3] Meile, Les Yavanas dans l'Inde Tamoul in *Journal Asiatique*, 1940, pp. 85-123.

நாவாய், வங்கம், கலம், கப்பல்

சங்க இலக்கியங்களில் " நாவாய் ", " கலம் ", " வங்கம் " என்ற சொற்களே பெருங்கப்பல்களின் பொதுப் பெயர்களாக வழங்கப்படுகின்றன.

புறம் 126:15	பொலம் தருநாவாய்
நற்றிணை 295:6	பலவினை **நாவாய்**
மதுரை 81	ஆடியற் பெரு**நாவாய்**
மதுரை 321	விழுமிய **நாவாய்**
பெரும்பாண் 321	வடவளம்தரும் **நாவாய்**
திருக்குறள் 496	**நாவாய்** ஓடா நிலத்து
அகம் 149:9	வினைமாண் நன்**கலம்**
அகம் 152:7	நன்**கலஞ்** சிதைய
புறம் 26:2	வளிபுடைத்த **கலம்**போல
புறம் 30:13	புகார் புகுந்த பெருங்**கலம்**
புறம் 56:18	நன்**கலம்** தந்த தண்கமழ்தேறல்
புறம் 126:16	பிற **கலம்**
புறம் 343:5	**கலம்** தந்த பொற்பரிசம்
மதுரை 536	வளிதரு **வங்கம்**
பதிற். 52:4	பெருங்கலி **வங்கம்**
நற்றிணை 189:5	கங்கை **வங்கம்**
அகம் 255:1	உருகெழு **வங்கம்**.

சில ஆண்டுகளுக்குமுன் மறைந்தவரும் பிரெஞ்சு நாட்டின் சிறந்த தமிழ் அறிஞருமான பீர் மேல் (Pierre Meille) எழுதின " தமிழ் நாட்டில் யவனர் " என்னும் கட்டுரையில் " கலம் " எனும் சொல் மேல் நாட்டாரின் கப்பல்களையே சங்க இலக்கியத்தில் குறிப்பிடக்கூடும் எனும் கருத்தைத் தெரிவித்துள்ளார்.[4] ஒரு சில மேற்கோள்கள் இக்கருத்திற்குச் சான்றாக இருப்பினும், **நாவாய், கலம், வங்கம்** ஆகிய மூன்றும் இன அடிப்படையாகவோ திசை அடிப்படையாகவோ கப்பல்களை வகுப்பனவாகத் தோன்றவில்லை. (நிற்க, **நாவாய், வங்கம், கப்பல்** ஆகிய சொற்கள் திராவிடச் சொற்கள்தாமா எனும் வினாவைப் பற்றி, கட்டுரை ஆய்வு நேரத்தில் அறிஞரின் விடைகள் யாவை என்று அறிய விரும்புகின்றேன்.)

தொலமியின் நூல்

தொலமி தரும் செய்திகளைப் பெரும்பாலும் மக்கிரிண்டிலுடைய வழிநூலைத் தழுவியே நம் அறிஞர் தம் கருத்துக்களை விளக்கியிருக்கின்றனர். 1925-ஆம் ஆண்டில் பேராசிரியர் ரெனௌ (Renou) என்பார் தம் டாக்டர் பட்டத்திற்கென இந்தியாவைப் பற்றித்

[4] W. H. SCHOFF, *The Periplus of the Erythrean Sea.* New York 1912. See Paul WHEATLEY, the Golden Chersonese, University of Malaya Press, Kuala Lumpur, 1961.

தொலமி கூறும் பகுதியைப் பல பிரதிகளை ஆராய்ந்து பாடபேத அடிக்குறிப்புக்களுடன் புதியதோர் மூலத்தை வெளியிடார்.[5] இப் பதிப்பில் உள்ள சில புதுப்பாடங்கள் சங்ககாலப் பெயர்களுடன் வியப்புத் தரும் முறையில் ஒத்திருக்கின்றன.

தொலமியிற் காணப்படும் தொண்டி, முசிறி, கரூர், குமரி, கொற்கை, காவேரி, பொதுகை போன்ற துறைமுகங்களும், தேனூர், பெருங்கரை, ஆகூர், நாகூர் போன்ற உள்நாட்டு ஊர் களும் தமிழ்ப் பெயர்கள்தாம் என்பவை பற்றி ஐயுற இடமே யில்லை. வேறு சில ஊர்ப்பெயர்களிலோ தமிழ் வடிவு, எளிதில் தோன்றக் காணோம்.

(அ) மெல்கிந்த (Melkynda): இவ்வூரும், செங்கடற் செலவு நூலில் உள்ள நெல்சிந்த (Nelcynda) வும் ஒரே இடமென்று கரு தியே, இப்பெயரின் மூலநகர் நெல்விசுரமாக இருத்தல் வேண்டு மென்று எழுதியுள்ளனர். பர்த்தோலோமியோவும் (Fra Poola di Santo Bartolomeo), வின்சென்டும் (Vincent) மக்கிரிண்டிலும் (McCrindle) சில பிரதிகளில் காண்பது போல் மேற்கொண்ட பாடம் மெல்குண்டாவாயினும் ரெனௌ தரும் பாடம் மெல்குடா வாகும். மெல்குடா ஆயருடைய மாநிலத்தில் கடற்கரையில் எலங்கோறருக்கு வடக்கேயுள்ளது. ஆய்குலத்தவரின் அரசு மேற்குக் கரையில் குமரி தொடங்கி கொல்லத்திற்கும் வடக்கு வரை பரவியிருந்ததைத் தொலமியில் காண்க.

(ஆ) தங்கலா (Tangola): தொலமி இதனைப் பாண்டி நாட் டின் உள்நாட்டு ஊர் என்பர். தங்காலில் வாழ்ந்த சங்கப் புல வர்கள் மூவர் அல்லது நால்வர் ஆவர். (தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார், தங்கால் பொற்கொல்லன் வெண்நாகனார், தங்கால் பொற்கொல்லனார் ஆகியோர்). "செங்கோற் றென்னன்றிருந்து தொழின் மறையவர் தங்கால்," (சிலம்பு: 23:74-75) என இளங்கோ அடிகள் புகழும் திருத்தங்காலூர் தொலமியிலும் சுட் டப்பட்டுள்ளது.

(இ) சொசிகுராய் (Sosikuroi): இப்பாடம் ரெனௌவின் பதிப்பில் "மோசிக்குறி" யென மாற்றப்பட்டுள்ளது. இது குமரி முனைக்கும் கொற்கைக்கும் இடையே அமைந்த கடற்கரைப் பட்டினம். கிரேக்கர் மோசிக்குடியை மோசிக்குறியென்று எழுதி யிருக்கலாம். சங்ககாலப் புலவரின் பெயரும் (திருந்துமொழி மோசி பாடிய ஆய்—புறம் 158:13) மோசிக்கரையனார் (அகம் 260), மோசி கீரனார் (புறம் 50) மோசி கொற்றனார் (குறு. 377), மோசி சாத்தனார் (புறம் 272), மோசி கண்ணத்தனார் (நற். 124) ஆகி யோரின் பெயரும், ஊரின் பெயரே. தொலொமியின் மோசிக்குறி குமரிமுனைக்கும் கொற்கைக்கும் இடையே உள்ள பட்டினமாகும்.

---

[5] RENOU, L.: *La Geographie de Ptolomee, l'Inde*, Paris 1925.

(ஈ) சேலூர்: பாண்டியரின் பட்டினமாகவும் வணிக நகராகவும் சேலூர் குறிப்பிடப்பட்டுள்ளது. இரு பிரதிகள் '' சாலூர் '' என்ற பாடத்தைக் குறிக்கின்றன. படங்களும் இவ்வூரைச் சாலூர் என்றே குறிப்பிடுகின்றன. இப்பட்டினம் சாலியூராகவே இருத்தல் கூடும். மதுரைக் காஞ்சியில் வரும் அடிகளைக் கொண்டு அப்பட்டினத்தில் வணிகச் சிறப்பை நாம் அளவிடல் கூடும் (77ff)

'' சீர் சான்ற உயர் நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ. '' (87-88)

காவிரிப்பட்டினத்தை எவ்வாறு 'emporion' (வணிக நகரென்று) குறிப்பிடுகின்றாரோ அவ்வாறே 'emporion' என்று சாலியூரையும் அழைக்கின்றார் தொலமி. 'சேலூர்' ஆகவும் இருத்தல் கூடுமென்று எண்ணுவதற்கு இடமுண்டு.

(உ) எய்குர் (Eikur): ஒக்கூரென்றும் (புறம் 248) எக்கூரென்றும் இரு பெயர்கள் சங்க இலக்கியப் பதிப்புக்களில் உள்ளன. (ஒக்கூர் மாசாத்தனார்). இவ்விரு பெயர்களும் ஒரே ஊரினைக் குறிக்கக்கூடும் என்ற எண்ணம் சாமிநாதையரின் பதிப்புக்களில் தோன்றுகின்றது. தொலமியில் ஏறக்குறைய ஒக்கூர் ஒலிவடிவு கொண்ட ஒரு நகர் பாண்டிய நாட்டிலும் எக்கூர் ஒலிவடிவு கொண்ட ஒரு நகர் சோழ நாட்டிலும் இருந்தனவாகக் கருத இடமுண்டு.

(ஊ) பதொய் (Batoi): பாண்டி நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையே வாழும் பதொய் (Batoi) எனும் ஒரு வகுப்பினரையும், அவருடைய கடற்கரைப் பட்டினங்கள் உள்நாட்டு ஊர்கள் இவற்றின் பெயரையும் குறித்திருக்கின்றார் தொலமி. பதொய்யரைப் போல சேரருக்கும் பாண்டியர்க்கும் இடையே ஆயரும், ஆயருக்கும் பாண்டியர்க்கும் இடையே கரையரும் ஆண்டு வந்தனர். மூவேந்தர்க்கும் அரச நகரைப் பசிலெயான் (basileon) எனப் பெயரிடும் தொலமி, இதர இனத்தார்க்கு அரச நகர்கள் (basileon) இருந்ததாகக் காட்டவில்லை. ஆயர்க்கும், பதொய்க்கும் தலைநகர்களே உள (Metropolis); கரையர்க்கும் அறுவனர்க்கும் தலைநகர்கள் கூடப் பெயரிடப்படவில்லை.

ஆயர், கரையர், பதொய், அறுவனர் ஆகியவர்கள் யாவர்? ஆயரைப் பற்றி ஐயமேயில்லை; கரையர் என்பவர் கோடிக்கரையில் வாழ்ந்த மக்களாவர். அறுவனரும் பதொய்யும் எவ்வினத்தவர் என்பதை ஆராய்வது எளிதன்று. பதொய் என்பவர் வேள் பாரியுடன் அல்லது பரதருடன் தொடர்புள்ளோராக இருத்தல்கூடும். பரதவர் தென்திசைக் கண் குறுநிலமன்னராக இருந்த செய்தியைப் புறம் 378இல் 'தென்பரதவர் மிடல் சாய' வென்பதினின்றும் மதுரைக்காஞ்சியில் (114) சாலியூரினை வென்ற செய்தியிலிருந்தும் அறிக.

இன்னும் சில மொழியியற் செய்திகள் தொலொமியில் குறிப்பிடத் தக்கவை.

(அ) சேர நாட்டின் கடற்கரை ஊர்களும் உள்நாட்டு ஊர்களும் " உரா " வென்று 'ர' கர நெடில் ஈற்றெழுலியுடன் முடிவதும், இதர தமிழ் நாட்டின் ஊர்களின் பெயர் 'ர' கர மெய்யுடன் முடிவுறுவதும் குறிப்பிடத்தக்கவை.

(ஆ) இரு கிரேக்கச் சொற்கள் தமிழ் நாட்டுப் பெயர்களாகத் தரப்பட்டுள்ளன. ஸ்யுடோஸ்தொமஸ் (Pseudostomos) (பேர்யாறு) ஒன்று, தென்னகொரா (Tennagora) பிறிதொன்று. இந்தியாவில் வேறு ஆறுகளையும் ஸ்யுடோஸ்தொமஸ் (Pseudostomos) என்றே தொலொமி பெயரிடுகின்றார். " பொய்வாய் " என்று பொருள் படும் இத்தொடர் கிரேக்க மொழியில் பெருங்கழியையும் புகு முகத்தையும் குறிப்பிட்டிருக்கலாம்.

தென்னகொரா (Tennagora) பிறிதொரு பெயர். ஈண்டு " தெற்கு " எனும் தமிழ்ச் சொல்லும் அகொரா (agora) எனும் அங்காடியெனப் பொருள்படும் கிரேக்க மொழிப் பெயர்ச் சொல்லும் இணைக்கப்பட்டுள்ளன. சோழ நாட்டின் உள்நாட்டூராகவும் உறத்தூரெனும் சோழரின் அரசநகர் அண்மையிலும் அமையும் இவ்வூரை, தென்னூர் அல்லது தென்னங்காடியெனத் தமிழாக்கிக் கூற இயலும்.

கொற்கை

இறுதியாக, கொற்கை பண்டை மேலைநாட்டு நூல்களில் 'Colchis, Kolkhoi' என்று 'ல' கர ஒலியுடன் எழுதப்படுகின்றது. எனவே இச்சொல் மக்களின் பேச்சு வழக்கைக் காட்டுதல் கூடுமென்றும், 'கொல்கை' காரணப் பெயராக இருத்தல் கூடும் என்றும் எண்ணுவதற்கு இடமுண்டு. மேலும் கொற்கையில் முத்துக் குளிப்பதற்கு அரச தண்டனைக்குட்பட்ட குற்றவாளிகளையே அனுப்புகின்றனர் என்று பிளினி குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரம், மதுரையில் நிகழ்ந்த கொடுங்கோன்மைக்குக் கொற்கையில் ஆயிரம் பொற்கொல்லரைக் கொன்று கழுவாய் நிகழ்த்தியதாகக் கூறுகின்றது. பாண்டியர் தம் தண்டனைகளை அங்கு நிறைவேற்றுவதால், அப்பட்டினத்திற்குக் கொல்கையென்ற பெயர் பிறந்ததா? இன்றேல், பாண்டியரின் பழைய பதியாதலாலும் 'கொலுவின் கை' அங்கு வீற்றிருப்பதாலும் கொற்கையாயிற்றா ?

ஊர்ப்பெயர்களின் உருமாற்றம்

அ. மு. பரமசிவானந்தம் *

தமிழ் மரபு தொன்மை வாய்ந்தது. தமிழர்தம் அத்தொன்மை மரபு, வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் விளங்கக் காணலாம். நல்ல பண்பாட்டையும் பிற நல்லியல்புகளையும் அதில் காண முடிகின்றது. தமிழகத்தில் நிலப் பிரிவுகளும் கூட இத்தமிழ் மரபின் பண்பினைக் காட்டிக் கொண்டு நிற்கின்றன. ஆயினும் கால வெள்ளத்திடையில் பல்வேறு வகைப்பட்ட பண்பாடு, நாகரிகம், கலை, வாழ்க்கை முறை, அரசியல் முதலியன தமிழ் நாட்டில் கடந்த மூவாயிரமாண்டுகளாக வந்து கலந்து நிலைபெற்ற காரணத்தால் இன்று எத்தனையோ மாறுபாடுகளைக் காண்கின்றோம். அவற்றுள் ஊர்ப்பெயர்களின் உருமாற்றமும் ஒன்றாகும்.

தமிழர் தாம் வாழிடங்களைத் தம் பண்போடு ஒட்டியே போற்றினார்கள். மிகப் பழங்காலத்தில் அவ்வவ்விடங்களின் இயற்கை நிலையை ஒட்டியே காரணக் குறியீடுகளின் அடிப்படையிலேயே தத்தம் ஊர்ப்பெயர்களை அமைத்துக் கொண்டனர் தமிழர். பிற்காலத்தார் தம் பெருமையோ—தம் பாராட்டுக்குரியோரின் பெருமையோ விளங்க, அவரவர் பெயர்களாலே எத்தனையோ ஊர்களையும் தெருக்களையும் உருமாற்றி வழங்குவதறிகிறோம். பின் வந்தவர் எத்துணை மாற்றத்தைச் செய்யினும் ஒரு சில அடிப்படைப் பெயர்கள் நிலைகெடாது தம் பண்டை மரபு கெடாவகையில் இன்றும் வாழ்கின்றன. தற்பெருமையாலும் பிற போற்றுதலாலும் வழங்கப் பெற்ற பெயர்களுள் பெரும்பாலானவற்றைக் காலத்தேவன் அழித்தும் சிதைத்தும் கெடுத்தும் பழைய பண்புகொள் பெயர்களையே வாழ வைக்கின்றான். ஒரு சில பெயர்கள் மக்கள் பேச்சுவழக்கின் மருவால் மாற்றம் பெறுகின்றன. சில, சமய அடிப்படையிலும் நிலை குலைகின்றன. சில, வெளி நாட்டவர் தம் ஆதிக்க வாடையின் காரணமாக மாற்றப் பெறுகின்றன. சில வேற்று மொழியாளர்தம் விருப்பத்தினால் வேறாக எண்ணுமாறு மொழிபெயர்க்கப் பெறுகின்றன. ஊர்ப்பெயர்கள் மட்டுமின்றி, மக்கள் பெயர்கள், அவர்தம் வாழ்வொடு கலந்த பிற பொருள்களின் பெயர்கள் அனைத்துமே மாற்றப் பெறுகின்றன. இந்த நிலை வளர்ந்து கொண்டே போகுமானால் தமிழ் மரபின் தன்மை நிலை கெடுவதோடு அம்மரபின் அடிப்படையே இல்லை என்ற ஒரு நிலை

---

*எம். ஏ., எம். லிட்., தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உண்டாயினும் உண்டாகலாம். எனவே அத்தகைய அவல நிலைக்குச் செல்லுமுன் இம்மாற்றங்களை எண்ணி, மரபு கெடாத நல்ல நிலையை மறுபடி நிலைநாட்ட அனைவரும் முற்பட வேண்டும்.

ஊர்ப்பெயர்கள் பல வகைகளில் மாறுபடுகின்றன என்று கண்டோம். அவற்றுள் பெரும்பான்மையாக உள்ள ஒரு சிலவற்றை இங்கே எண்ணி அமைவோம்.

தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர்கள் ஆதலினாலே, தாம் வாழ்ந்த ஊர்களுக்கு அவ்வியற்கையின் அடிப்படையிலேயே பெயரிட்டார்கள். பசிய வாழைகள் சூழ்ந்த சோழ நாட்டு ஊர் ஒன்றற்குப் 'பைஞ்ஞீலி' என்றே பெயரிட்டார்கள். ஆயினும் அது கால வெள்ளத்தில் உருமாறி 'பங்கிலி' அல்லது பங்கிளி என இன்று வழங்குகின்றது. அப்படியே அழகார் பசுமையான சோலை சூழ்ந்த பாண்டிய நாட்டு ஊர் ஒன்றற்குப் 'பைம்பொழில்' என்றே பெயரிட்டார்கள். அதுவும் சிதைந்து 'பம்புளி' என வழங்குகின்றது. தஞ்சை நாட்டில் சிறந்த ஆடையாகிய கூறை நெய்தளிக்கும் கூறை நாடு இன்று, 'கொரநாடு' என அழைக்கப் பெறுகின்றது. தருமபுரி மாவட்டத்தில் அதிகமான் அரசோச்சிய ஊர் ஒன்று உண்டு. அது இதுவரை 'அதமன் கோட்டை' என வழங்கப் பெற்று, இன்றைய ஆட்சியாளர் கண்ணில் பட்டு தற்போது 'அதிகமான் கோட்டை'யாக மாறியுள்ளது. அவ்வூரை அடுத்த 'லக்கிரிப்பேட்டை' என்ற ஊர் அவ்வாறு அழைக்கப் பெற நேர்ந்த காரணத்தை ஆராய்ந்தபொழுதுதான் அதன் உண்மை விளங்கிற்று. அது ஔவை வாழ்ந்து இலக்கியம் ஆய்ந்த இடம் என்றும் அதன் இயல்பான பெயர் 'இலக்கியப்பட்டி' என்றும் அறியும்போது மகிழ்ச்சி பிறக்கிறது. அதற்குப் பக்கத்திலே ஔவை சென்ற 'ஔவை வழி' என்ற ஊரும் இருக்கிறது. 'மரூஉ' என்பது இலக்கணமாய், மரபில் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று எனினும் அதனால், அடிப்படை நிலை கெடலாகாது. இவ்வாறு மருவி வழங்கும் பெயர்கள் காலத்தால் உருமாறிச் சிதைந்து விடாதபடி இயல்பான காரணத்தோடு அமைந்த பெயர்களைக் கட்டிக் காத்தல் தமிழர் கடன். இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ பெயர்கள் நாட்டில் உருமாறியுள்ளன.

பெருமன்னர்கள் தம் ஆற்றலும் வீரமும் கருதிச் சில ஊர்களுக்குப் பெயரிட்டு உள்ளார்கள். அவையும் சிதைந்தும் மாறியும் நிலைகெட்டும் உள்ளன. பல்லவப் பெருமன்னன் 'மாமல்லன்' தன் பெயர் கொண்டு அமைத்த மாமல்லபுரம் இன்று 'மகாபலிபுர'மாகி, மாபலிச் சக்கரவர்த்தியோடு தொடர்புபடுத்தப் பெற்று அதற்கெனக் கதைகளையும் ஆக்கிக்கொண்டது. அங்கமைந்த ஏழு கோயில்களைக் கண்ட மேலைநாட்டார் அதை ஏழு கோயில் என்றே அழைத்தனர் (Seven Pagodas). அவ்வாறே தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள 'வீரநாராயணன் ஏரி', 'வீராணத்தேரி' என மருவி வந்துள்ளது.

இவ்வாறு தம் புகழ் நாட்ட அமைத்த ஊர்ப்பெயர்கள் உருமாறிய நிலை ஒருபுறம் இருக்க, இயல்பாக அமைந்த சில தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்களைச் சில அரசர்கள், தங்கள் புகழ் நாட்டும் நிலைக் களன்களாகக் கொண்டு, தங்கள் வெற்றியைக் குறிக்கும் ஊர்களாக எண்ணி, அவற்றை மாற்றி அமைத்தனர். எனினும் அறிவுடைய தமிழ்ச் சமூகம் தற்பெருமையால் அமைந்த அப்பெயர்களைத் தள்ளி, அவ்வூர்களின் இயற்பெயர்களையே வாழ வைத்துள்ளது. அவற்றுள் ஒன்று-சிறந்தது 'பழநி' என்னும் 'பொதிநி' யாகும். ஆவியர் குடிமகன் ஆண்டதால், அக்குடிப் பெருமையை நிலைநாட்ட, அம்மரபின் வழி வந்தவர், அப்பெருந்தெய்வப் பேருருக்குத் தம் மரபின் வழியில் 'ஆவிநன்குடி' என்றே பெயரிட்டனர்; அவ்வாறே புலவர் பெருமான் நக்கீரரையும் பாடவைத்தனர். எனினும் தமிழர் இன்று அதைப் 'பழநி' என்று அதன் பழம் பெயராலேயே அழைக்கின்றனர். அப்படியே இடைக்காலத்தில் வாழ்ந்த சோழ, பாண்டிய மன்னர்கள் தம் விருதுப் பெயர்களால் பல ஊர்களின் இயற்பெயர்களைச் சிதைத்துப் புகழ் கொண்டனர். ஆயினும் பின்வந்த தமிழ் மக்கள் தற்புகழ்ச்சிப் பெயர்களைத் தள்ளி, பண்டைத் தமிழ்ப் பெயர்களையே கொண்டனர். ஒரு சில சான்று காணலாம்.

'உலக மாதேவீச்சுரம்' என்று அரசியின் பெயர் மாற்றப்பெற்ற செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஊர் இன்னும் 'மணிமங்கலம்' என்ற பழைய பெயராலேயே உள்ளது. 'இராசராசச் சதுர்வேதி மங்கலம்' என்று புகழ் பாராட்ட அமைந்த ஊர் அதன் இயற்பெயராகிய 'உக்கல்' என்றே இன்றும் உள்ளது. 'கம்ப மாதேவீச் சுரம்' என்று சுட்டப்பட்ட ஊர் சிற்றீசம்பாக்கம் என்ற பெயராலேயே இன்றும் உள்ளது. தம்மை மறந்து அடியவர் புகழ் பாடிய சேக்கிழாரைப் போற்றிய அநபாயனும் புகழுக்கு அடிமையானான் போலும். அநபாய நல்லூர் என ஒரூரை அழைத்தான் (அதைச் சேக்கிழாருக்கு மானியமாகவும் அளித்திருக்கலாம்). எனினும் தமிழ் மக்கள் அவ்வூரை 'அரும்பாக்கம்' என்ற இயற்பெயராலேயே இன்று அழைக்கின்றனர். தஞ்சை நாட்டுப் 'பழையாறை' என்னும் ஊரை, மாற்றூர் முடிகொண்ட பெருமையை விளக்குமுகத்தான் 'முடிகொண்ட சோழபுரம்' என ஆக்கிய 'தற்பெருமையை' அழித்து அதை இன்றும் 'பழையாறை' என்றே தமிழர் பாராட்டுகின்றனர். வீரநாராயணபுரம் என்ற தற்பெருமைப் பெயர் மாறி 'காட்டுமன்னார் கோயில்' என்ற இயற்பெயரே வாழ்கின்றது. இவ்வாறு இன்னும் எத்துணையோ பெயர்கள். தமிழர் காலப் போக்கில்-அவர்தம் பண்பாட்டை நழுவ விடாமல் காப்பாற்றும் திறம் பெற்றவர்கள் என்பதையும் தற்பெருமையையும் பிற வீர, செல்வ வளங்களால் காணும் சிறப்புக்களையும் அவர்கள் மதியார் என்பதையும் இப்பெயர்கள் காட்டுகின்றன.

இன்னும் சில ஊர்கள் தமிழ் நாட்டில் புதிய பெயர்களைப் பெற்றுள்ளன. அவ்வாறு அவை பெறுதற்கு அமைந்த காரணங்களை ஆராய்ந்து காணல் அறிஞர் கடனாகின்றது. திருவூறல் 'தக்கோல'

மாகவும், திருவிற்கோலம் 'கூவ'மாகவும், திருநணு 'பவானி'யாக வும், திருவலிதாயம் 'பாடி'யாகவும், திருக்கடிகை 'சோளிங்கபுர' மாகவும், புள்ளமங்கை 'பசுபதி கோயி'லாகவும், துருத்தி 'குத்தால'மாகவும் மாறியுள்ளன. இவற்றுள் ஒரு சிலவற்றின் காரணம் வெளிப்படையே. எனினும் இவ்வாறு நாட்டில் எண்ணற்ற ஊர்கள் உண்மையின், இவை பற்றிய தனி ஆய்வு தேவை.

இடைக்காலத்தில் சமய மாறுபாட்டால் சில ஊர்ப்பெயர்கள் உருமாறின. காஞ்சியை அடுத்த பல ஊர்களில் அக்காலத்தில் சீவரத்தார் ஆகிய சமணர்கள் வாழ்ந்திருந்தனர். அவர்கள் சிறக்க வாழ்ந்த ஊர்கள் சில. அவை 'சீவரம்' எனவும் 'பழைய சீவரம்' எனவும் வழங்கப் பெற்றன. பின்வந்த சைவர்கள் தம் ஊராக்கிக் கொள்ளக் கருதி, சீவரத்தைச் 'சிவபுர'மாக்கினர். எனினும் பின்வந்த மகமதிய மன்னர் தன் மனைவியின் பெயரால் அதை 'வாலாஜாபாத்' என வழங்கினர். ஆனால் அவ்வூரைச் சுற்றியுள்ள மக்கள் இன்றும் அதைச் 'சீவரம்' எனவே அழைப்பது எண்ணற்குரியது. இவ்வாறே திருச்சி மாவட்டத்தில் திருத்தவத் துறைக்கு, 'லால்குடி' என்னும் புதுப்பெயரை மகமதியர்கள், தம் 'செம்பதுமை' எனப் பொருள்கொண்ட பாரசீக மொழிப் பெயரை இட்டு அழைத்தனர். இவ்வாறு மாறிய ஊர்கள் இன்னும் சில. உசேன் ஊர், சாயர்புரம் போன்று பிற்காலத்தில் கால்கொண்ட சமயங்களின் தலைவர்கள் அமைத்த ஊர்களும் உள்ளன.

இடைக்காலத்தில் தமிழகத்தில் வடமொழியாளர் ஆதிக்கம் மிக்கிருந்த நிலையினை அனைவரும் அறிவோம். அவர்கள் தமிழகத்தின் ஊர்ப்பெயர்களை மட்டுமின்றி, சமயநெறி, வாழ்க்கைமுறை, தமிழர்தம் பெயர்கள் முதலிய அனைத்தையும் மாற்றி அமைக்க வழி கோலினர். மொழியில் வடமொழியைப் புகுத்தி 'மணிப்பிரவாளம்' என்றே புது வகை மொழியை வளர்க்க நினைத்தனர். எனினும் அறிவுடைத் தமிழினம் அம்மொழியை ஒதுக்கித் தள்ளியது. ஆயினும் எப்படியோ பல ஊர்களின் பெயர்களை அவர்கள் எளிதில் தம் வடமொழிப் பெயர்களாக அமைத்துக் கொண்டனர். அவ்வாறு அமைத்துக் கொள்வதில் அவர்கள் எத்தனையோ தவறுகளைச் செய்துள்ளனர். பல புரியாத தமிழ்ச் சொற்களுக்குத் தங்கள் மனம் போன போக்கில் மொழி பெயர்ப்பினைச் செய்து கொண்டனர். மயிலாடு துறைக்கு 'மாயூரம்' எப்படி மொழி பெயர்ப்பாகும்? 'குடமூக்கு'க்கு எப்படிக் கும்பகோணமாகும்? இவ்வாறு எத்தனை எத்தனையோ. ஒரு சில பொருந்திய மொழி பெயர்ப்புக்களாக உள்ளன. மறைக்காடு 'வேதாரணிய'மாயிற்று; வெண்காடு 'சுவேதவன'மாயிற்று; மதுரை 'கடம்பவன' மாயிற்று; பழமலை பழைய மலையாகிப் பிறகு முதுகுன்றமாகிப் பின் 'விருத்தாசல'மாயிற்று. மேலைநாட்டார் தம் ஒலி முறைப்படி சில தமிழ் பெயர்களை உரு மாற்றினர். தரங்கம்பாடி 'டிரங்கோபார்' ஆயிற்று, தஞ்சை 'டேஞ்சூர்' ஆயிற்று. ஐயாறு 'திருவாடி' ஆயிற்று. அவையும் தம் பழம்பெயர் கெடாமல் வாழ்வது மகிழ்ச்சிக்குரியதே. இவ்

வாறு பலவற்றை அவர்கள் மாற்றியமைத்தார்களாயினும் எங்கோ ஒரு சிலவற்றைத் தவிர்த்துப் பெரும்பாலன தம் பழம் பெயர் களாலேயே அழைக்கப் பெறுகின்றன. எனினும் மாறிய மற்றவை களையும் திருந்திய தமிழ்ப் பெயர்களாகவும் ஆக்கும் பொறுப்பு தமிழ் மக்களுடையதாகும்.

தமிழ் நாட்டில் தற்போது மற்றொரு வகையான மாற்றம் ஊர்ப் பெயர்களில் காண்கிறோம். பிற மாநிலங்களிலிருந்து வந்து இங்கு வாணிபத்தைத் தொடங்குபவர்கள் தத்தம் பெயரால் ஊர்களை அமைத்துக் கொள்ளுகின்றனர். 'டால்மியா புரம்' 'அசோக் நகர்' போன்றவை ஒரு சில. இன்னும் இன்று நாட்டில் வாழ்ந்த—வாழ்கின்ற—தலைவர்கள் பெயர்களால் எத்தனையோ ஊர்களும் தெருக்களும் அமைக்கப் பெறுகின்றன. பல பழைய ஊர்களும் தெருக்களும் இவ்வாறு அவ்வக் காலத்தில் வாழும் தத்தம் தலை வர்களுக்காகப் பெயர்மாற்றம் பெறுகின்றன. சென்னையில் இருக் கும் 'சைனு பஜார்' எனும் சீனக் கடைத்தெருவை 'சுபாஷ் சந்திர போஸ்' பெயரால் மாற்றினார்கள். இம்மாற்றம் செய்து ஆண்டு கள் பலவாயினும் மக்கள் அதைப் பழைய பெயராலேயே அழைப் பதைக் காண்கிறோம். சில ஆங்கிலப் பெயர்கள் வழக்கில் மாற் றம் பெற்றுச் சிதைந்துள்ளமைக்கு 'ஹாமில்டன் பாலம்' ஒரு சான்று. இவ்வாறு தனிமனிதர்களின் நினைவாக ஆக்கப் பெறும் எந்தப் பெயரும் எத்தனை நாள் நிலைத்து வாழும் என்ற உண்மையைக் கணக்கிடும் திறன் காலத் தேவனுக்கே உண்டு. நான் முதலிலே கூறியபடி, தமிழ்மக்கள் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்துபவ ராகையால், அந்த இயற்கை நியதிக்கும் வாழ்வுக்கும் மாறுபட்ட வகையில் அமையும் எதுவும் காலப் போக்கில் அவர்களால் நீக்கப் பெறும் என்பது உறுதி. மொழி வழியில் அந்த நிலையினை நாட்டு நிகழ்ச்சி இன்று நமக்குக் காட்டுகின்றது. ஊர்ப்பெயர்களை வாழ வைப்பதிலும் அந்த உணர்வு உள்ளமையை, முன்னர் சுட்டிக் காட்டினேன். இவ்வூர்ப்பெயர்களுள் பலப்பல இன்னும் திருத் தம் பெற வேண்டியுள்ளன. எதிர்காலத்தில் அவை திருத்தம் பெறலாம் என்ற நம்பிக்கை உண்டு.

ஊர்ப்பெயர்கள் மட்டுமன்றி மக்கட்பெயர், உணவு வகைகளின் பெயர்கள், ஊர்திகளின் பெயர்கள் இன்னும் வாழ்வின் தேவைப் பொருள்களின் பெயர்கள் இவற்றிலெல்லாம் உருமாற்றங்கள் உள் ளன. தமிழ் நாட்டில் இன்று உலக நாகரிகங்களின் எல்லாச் சாயல்களும் உள்ளன. எல்லா மொழிகளின் வாடைகளும் உள் ளன. எல்லாச் சமயங்களின் தெளிவுகளும் உள்ளன. எனவே பல மாற்றங்கள் இருப்பதைக் காண்கின்றோம். இத்தகைய மாற்றங் கள் ஒரு வகையில் வரவேற்கத்தக்கனவேயாயினும், முதல் நிலையின் மரபு கெடாத வகையில், வந்தவை இணைந்து இந்த நாட்டுப் பண் பாட்டுடன் பிற இயல்புகளும் சிறந்தோங்கும் வகையில் அமைய வேண்டும்—நாம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

"வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

எனத் தொல்காப்பியர் மொழி அமைப்புக்குச் சொன்ன இலக்கண மரபு, வாழ்வில் எல்லா அடிப்படை நிலைகளுக்கும் பொருந்தும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', என்ற பண்பாட்டில் தலைநின்ற தமிழன் யாரையும் எதையும் வெறுப்பவனல்லன். ஆனால் மற்றவை அவன் மேல் வீழ்ந்து அவன் அடிப்படை வாழ்வினையே சாடும் போது விழித்து நிமிர்ந்து நின்று உண்மையை வாழ வைப்பான். அப்பண்பாட்டின் ஒரு துளியே பல மாற்றங்களுக்கு இடையில் நல்ல ஊர்கள் தத்தம் பழந்தமிழ்ப் பெயர்களோடு வாழ வழி செய்கின்றது. இவ்வாறே எல்லாத் துறையும் காக்கும் கடமையில் தமிழினம் செயலாற்ற வேண்டும்.

சீர்பாத குலம்

அருள் செல்வநாயகம்*

கிறிஸ்து பிறப்பதற்கு முன் வெகு ஆண்டுகாலமாக வடக்கு ஈழத்திலே நாகப் பேரரசு தலை நிமிர்ந்து நின்றது. அதன் பயனாக வடக்கு ஈழம் நாகநாடு என்னும் பெயரைப் பெற்றுச் சிறப்பாகத் துலங்கியது. கிறிஸ்துவுக்குப்பின் நான்காம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை நாகப் பேரரசின் வலிமை குன்றியது.

2. கிறிஸ்துவுக்குப்பின் எட்டாம் நூற்றாண்டில் நாகநாட்டு அரசர்கள் தனி அரசர்களாகவும், அநுரதபுரத்து அரசர்களது ஆணைக்குட்பட்டவர்களாகவும் செங்கோல் செலுத்தினார்கள். காலத்துக்குக் காலம் ஏற்பட்ட பல்லவ மன்னர்களது படையெடுப்பினால் திறை செலுத்தும் அரசர்களாகவும் அரசு செலுத்தினார்கள்.

3. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவர்களது வலிமை குன்றியது. அதே போல் அநுரதபுரத்து மன்னர்களது வலிமையும் குன்றியது. அதன் பயனாக நாகநாட்டில் அவர்களது ஆணை செல்லாதொழிந்தது. இக்காலையில் நாகநாட்டு அரசகுலத்தில் சந்ததியினர் அற்றுப் போனார்கள். இதனை அறிந்து, விசயனுடன் வந்த கலிங்கர் குடியேறிய அண்ணியபுரத்தின் தலைவனான உக்கிர சிங்கன் என்பவன் கி.பி. 795ல் நாகநாட்டைக் கைப்பற்றிக் கதிரமலையைத் தலைநகராகக் கொண்டு ஆணை செலுத்தலானான்.

மாருதப்பிரவல்லி

4. இக்காலையில் சோழகுல இளவரசியான மாருதப்பிரவல்லி, தனது குன்ம நோயினை நீக்கும் பொருட்டுத் தன் பரிவாரங்களுடன் நாகநாட்டிலுள்ள கீரிமலையில் வந்திறங்கினாள். கீரிமலையில், வளவர்கோன்பள்ளத்துக்கணித்தாய் ஓர் இடத்தில், பாளையம் போட்டுத் தங்கித் தினமும் கீரிமலைப் புனித நீரூற்றில் நீராடி வந்தாள். சாந்தலிங்க முனிவரால் கீரிமலை நீரூற்றின் சக்தியைக் கேள்விப்பட்டுத்தான் மாருதப்பிரவல்லி கீரிமலைக்கு வந்தாள்.

5. கீரிமலை நீரூற்றில் நாள் தவறாமல் நீராடிக்கொண்டு நகுலேஸ்வரனையும் மாருதப்பிரவல்லி வழிபட்டு வந்தாள். புனித நீரூற்றின் மகத்துவத்தினாலும், இறைவனது அருளினாலும் மாருதப்

---

* இலங்கை ஆய்வாளர்

பிரவல்லியின் குன்ம நோய் நீங்கியது. அக்காலை அயல் இடங்களுக்கு அவள் உலாவச் செல்வது வழக்கம். ஒரு நாள் கோயிற் கடவைக்குச் சென்றபொழுது அரசமரமொன்றின்கீழ், சடையன் என்னும் பெரியார் முருகனது வேலினுக்கு விளக்கு வைத்து வழிபாடு செய்துகொண்டிருந்தார். அதனைக் கண்ணுற்ற மாருதப் பிரவல்லி முருகன்மீது உளமுருகித் தன்னையுமறியாது வழிபட்டாள். அதன் பயனாக அந்த இடத்தில் முருகனுக்கு ஓர் ஆலயம் எடுக்கத் தீர்மானித்தாள். உடனே தன் தந்தைக்கு ஓலை போக்கிக் கோயில் அமைக்கச் சிற்பிகளையும் பெரும் பொருளையும் பெற்றுக் கோயில் எடுக்கலானாள்.

6. முருகனது சிலைகளும் வழிபாடு செய்ய அந்தணர்களும் சோழ நாட்டிலிருந்து வந்தார்கள். ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்து மாருதப்பிரவல்லி முருகனுக்கு விழா எடுப்பித்தாள்.

7. மாருதப்பிரவல்லி கோயில் எடுப்பித்த காலையில்தான் உக்கிர சிங்க மன்னவன் அவளைக் கண்டு காதல் கொண்டான். நள்ளிரவில் அவளது கூடாரத்துக்குச் சென்று அவளைத் தூக்கி வந்து தனது இல்லக்கிழத்தி ஆக்கிக் கொண்டான்.

8. திருமண வாழ்க்கையினை மேற்கொண்ட உக்கிரசிங்கன் கதிர மலையை விடுத்துச் சிங்க நகரைத் தனது இராசதானியாக்கிக் கொண்டான். காலப்போக்கில் மாருதப்பிரவல்லி வாலசிங்கன் எனப்படும் நரசிங்கனையும், சண்பகாவதி என்ற மகளையும் பெற்றெடுத்தாள்.

9. உக்கிரசிங்கன் மரணமடைய, அவனது மகனான வாலசிங்கன், ஜெயதுங்க பரராசசிங்கன் என்னும் விருதுடன் சிங்கை நகர் அரியணையில் அமர்ந்தான்.

குமராங்குச சோழன்

10. சங்க காலம் தொட்டுப் பெரும் புகழுடன் வாழ்ந்த சோழ மன்னவர்களது வரலாற்றிலே ஐந்து நூற்றாண்டுகள் இருள் சூழ்ந்த காலமாகும். கி.பி. 300ம் ஆண்டு தொடக்கம் 800ம் ஆண்டுவரை சோழர்கள் தங்களது பெரும்புகழினை இழந்து, நாட்டின் பெரும் பகுதியையும் பறிகொடுத்து, சிற்றரசர்களாக ஒடுங்கி வாழ்ந்தார்கள். கிறிஸ்துவுக்குப்பின் ஒன்பதாம் நூற்றாண்டுவரை சோழர்கள் சிற்றரசர்களாக அடைப்பட்டுக் கிடந்தனர். இவ்வாறான நிலைமையிலேதான் சோழ வரலாற்றின் வருங்கால மகோன்னத நிலைக்கு முன்னோடியாகப் பழையாறை அரியணையில் கி.பி. 831ம் ஆண்டு குமராங்குச சோழன் அமர்ந்தான்.

11. குமராங்குச சோழனது சிறப்பினைப்பற்றி வேலூர்ப் பாளையச் செப்பேடுகள் மிகவும் சிலாகித்துக் கூறுகின்றன. நேர்மையும்,

ஒழுக்கமும் கொண்ட குமராங்குசன் தருமசிந்தையும், இறைபக்தியும் மிக்கவன். கொடையில் கர்ணனைப் போன்றும், வாய்மையில் தர்மனைப் போன்றும் வாழ்ந்த குமராங்குசன் பகைவனிடத்தும் அன்பு செலுத்தும் பண்பு கொண்டவன். குமராங்குசன் வாழ்நாள் முழுதும் பல்லவனது ஆணையை ஒப்புக்கொண்டு சிற்றரசனுகவே வாழ்ந்தான்.

12. இக்காலையில் சிங்கை நாட்டு அமைச்சர்கள் மன்னவன் வாலசிங்கத்துக்குத் திருமணம் பேசிக் குமராங்குச சோழனிடம் வந்தார்கள். தானுகவே பெண் கொள்ளவரும் சிங்கை மன்னவனது திருமண உறவினைச் சோழநாட்டின் வருங்கால நிலையை உத்தேசித்துக் குமராங்குசன் வரவேற்றுன்.

கடல் பிரயாணத்தில் கணபதி

13. குறிக்கப்பட்ட முகூர்த்த நன்னுளில் பழையாறை அரண்மனையில் சிங்கை மன்னவனுகிய வாலசிங்கன், குமராங்குச சோழனின் புதல்வியான சீர்பாத தேவியை மணந்தான். இரு திங்கள் பொழுதினை இன்பமாகக் கழித்த வாலசிங்க மன்னவன் தன் நாட்டினுக்குச் செல்ல முனைந்தான். கணவன் வாழும் இடம்தானே மனைவிக்கும் சொர்க்கம். ஆகவே குமராங்குச சோழன் தன் மகளையும் அவளுக்குத் துணையாகப் பலரையும் அவனுடன் அனுப்பி வைத்தான்.

14. திருவொற்றியூர், கட்டுமாவடி, பெருந்துறை, பழையாறை, என்னும் நகரங்களில் வாழ்ந்த வேளாளர், அந்தணர், செட்டிகள், அரசகுலத்தவர் முதலியவர்களில் முதன்மையான பலரை இதற்குத் தேர்ந்தெடுத்தான். சிந்தன், பழையன், காங்கேயன், காலதேவன், என்பவர்களும், அவர்களது மனைவிமார்களும் கண்ணப்ப முதலி, சந்திரசேகர அய்யங்கார், அச்சுத அய்யங்கார், முத்து நாயகச்செட்டி, சதாசிவச் செட்டி என்பவர்களும், அவர்களது மனைவிமார்களும், சீர்பாததேவியின் தோழியான வெள்ளாகியும் கப்பல் ஏறினுர்கள். இத்தனை பரிவாரங்களுடனும் மன்னன் வாலசிங்கனும், ராணி சீர்பாததேவியும் ஈழத்துக்குப் புறப்பட்டார்கள்.

15. தனது ஆணை பரவும் நாடுகளின் கடல் வளத்தைச் சீர்பாத தேவிக்குக் காட்டும் பொருட்டுக் கப்பலினை ஈழத்தின் கிழக்குக் கரையோரமாகச் செலுத்த மன்னவன் பணித்தான். அதற்கிணங்கக் கப்பல் செல்லுகையில், திருகோணமலையில் குடிகொண்டிருக்கும் கோணேஸ்வரப் பெருமானது திருக்கோயிலைச் சமீபித்ததும் எந்தத் திக்கும் நகர முடியாதவாறு நின்றது. கப்பல் நிற்கும் காரணத்தைக் காணப் பலர் கடலில் குதித்தார்கள். கப்பலுக் கடியில் கணபதியின் திருவுருவமொன்றிருக்கக் கண்டு கப்பலில் சேர்த்தார்கள்.

16. கணேசப் பெருமானைக் கண்ட சீர்பாததேவி தெண்டனிட்டுப் பணிந்து ''இக்கப்பலானது தங்குதடையின்றி ஓடி எங்குகரைதட்டி நிற்கிறதோ அங்கு ஆலயம் எடுப்பித்து விழாக் கொண்டாடுவேன்,'' என வேண்டினாள். கப்பலும் ஓடலாயிற்று.

17. கிழக்குக் கடல் வழியாக ஓடிய கப்பலானது மட்டக்களப்பினைச் சமீபித்ததும், கடல்வழியாகச் செல்லாமல் மட்டக்களப்பு வாவியிலே புகுந்து ஓடலாயிற்று. கணேசரது அருளினால் கப்பலானது வடக்கே செல்லாமல் தெற்கு நோக்கிச் சென்று வாவியின் இறுதியான வீரமுனையில் கரை தட்டி நின்றது.

வீரமுனையில் விநாயகருக்கு ஆலயம்

18. கரை தட்டிய கப்பலிலிருந்து அனைவரும் இறங்கினார்கள். சீர்பாததேவியின் வேண்டுதலுக்கிணங்கக் கப்பலில் வந்த சோழ நாட்டு மக்கள் வீரமுனையில் விநாயகருக்கு ஆலயம் எடுக்கலானார்கள். சோழநாட்டு மக்களின் கைவண்ணத்திலே கிழக்கு ஈழத்து மக்களின் உழைப்பிலே, வீரமுனையில் விநாயகருக்கு நவமான கோயில் எழுந்தது. புனிதமான நன்னாளிலே விநாயகரது திருவுருவத்தை எழுந்தருளச் செய்து சிந்து யாத்திரையில் கிடைத்தமையினால், சிந்தாத்திரைப் பிள்ளையார் எனப் பெயர் சூட்டிப் பெருவிழா எடுப்பித்தான் மன்னவன் வாலசிங்கன்.

19. ஆலயத்தில் நாள் தவறாது வேளைதோறும் வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருக்க, மக்கள் குடியேறாத வீரமுனையில் சீர்பாததேவி தன்னுடன் வந்த சோழநாட்டு மக்களைக் குடியிருத்த விரும்பினாள்.

சீர்பாத குலத்தோற்றம்

20. 'சீர்பாததேவியின் விருப்பினை மன்னவன் வாலசிங்கன் அகம் மலர ஏற்றுக் கொண்டான். ஆனால் அரசகுலத்தவர், அந்தணர், வேளாளர், செட்டிகள் ஆகிய நான்கு குலத்தவர்களையும் வீரமுனையில் குடியிருக்கப் பணித்தால் ஒருக்கால் சாதி வேறுபாடு தோன்றிக் கோயில் வழிபாடு சிதைந்துவிடக்கூடுமோ என்று கருதினான். ஆகவே குலவேறுபாடு எழாமலிருக்கவும், ஆலய வழிபாடு செம்மையாக நடைபெறவும், நான்கு குலத்தவரையும் ஒரு குலமாக வகுத்துச் சீர்பாதகுலம் எனப் பெயர் சூட்டினான்.

21. சோழநாட்டு அரச குலத்தவருடன் ஏனைய குலத்தவரையும் சீர்பாத தேவியின் பெயரினால் சீர்பாத குலமாக வகுத்த மன்னவன் அனைவருமே அரச குலத்தவர் என்று கௌரவித்து, அரவிந்தமலர், செங்கோல், கொடி என்பன பொறித்த விருதினைச் சீர்பாத குலத்தவருக்கு வழங்கினான். விநாயகர் ஆலயத்தினுக்கும், சீர்பாத குலத்தவர்களுக்கும் மானியமாக வயல்வெளிகளையும் மன்னவன் வாலசிங்கன் வழங்கினான்.

கல்வெட்டுகளில் சீர்பாத குலம்

22. 'சீர்பாதகுல வரன்முறை'யினைப் பற்றிப் பல கல்வெட்டுகள் கூறுகின்றன. கல்வெட்டுகள் அனைத்தும் சீர்பாததேவியின் பெயரினால் சீர்பாதகுலம் வகுத்ததாகக் கூறுகின்றன. அந்த வகையிலே,

"ஓர் பெயரினால் ஓர் குலத்தவரென
சீர் பாத தேவியின் திருப்பெயர் சூட்டி"

என்று வீரமுனைக் கல்வெட்டிலும்,

"பாற்கடல் மீது பற்றிச்சேர்த்ததனால்
சீர்பாத தேவியின் திருப்பெயராற்
சீர்பாதகுலமெனச் சிறந்தபெயர் சூட்டி"

என்று திருக்கோயில் கல்வெட்டிலும்,

"விருதெனவீந்து விருப்புடன் தேவியின்
திருபெயரென்றும் மறவாது வழங்க
சீர்பாதத்தோரெனச் சீரிய நாமம்"

என்று துறைநீலாவணைக் கல்வெட்டிலும்,

"அரசியின் குலமென்ன அவள் நாமமே
பெற்று அன்று சீர்பாதமானேன்"

என்று திருகோணமலைக் கல்வெட்டிலும் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே சீர்பாததேவியின் பெயரினால் 'சீர்பாதகுலம்' வகுக்கப் பெற்றதென்பது ஐயத்துக்கிடமின்றித் தெளிவாகிறது.

கல்வெட்டுகளில் சீர்பாத குல மக்கள்

23. வீரமுனைக் கல்வெட்டில், தம்மோடு வந்த உறவினரைக் கோயில் பணிபுரியச் சீர்பாதகுலமாக வகுத்ததாகக் கூறப்படுகிறது. சோழ நாட்டிலிருந்து புறப்பட்ட கப்பலில், சீர்பாத தேவியுடன் அரசகுலத்தவர், அந்தணர், வேளாளர், செட்டிகள் ஆகிய குலத்தவர்கள் வந்திருக்கிறார்கள். இவர்களில் தம்மோடு வந்த உறவினர் என்று பொருள் கொள்ளுங்கால், அவர்கள் சோழ நாட்டிலிருந்து வந்த அரசகுலத்தவர்களேயாகும். ஏனெனில், ஏனைய குலத்தவர்கள் அரசகுலத்தினருக்கு உறவினராகமாட்டார்கள். ஆகவே வீரமுனையில் சீர்பாததேவி, அரசகுலத்தவரையே ஆலயத்தின் பொருட்டுக் குடியிருத்தினாள். அவர்களை மன்னவன் சீர்பாத தேவியின் பெயரினால் சீர்பாதகுலமாக வகுத்தான். இதனை வீரமுனைக்கல் கல்வெட்டில்,

"தொக்கு முழங்கிடத் தொன்னன் மரபாம்
தம்மொடு வந்த தமதுறவினரை
செம்மனதுடனே திருக்கோயிற்பணி
புரியச்சொல்லி பூமி பகிர்ந்து"

எனக் கூறப்படுகிறது.

24. திருக்கோயில் கல்வெட்டில், அந்தணர்களைத் திருக்கோயிற் பணி புரியச் சீர்பாததேவியின் பெயரினால் சீர்பாத குலமாக வகுத்ததாகச் சொல்லப்படுகிறது. இதனைத் திருக்கோயில் கல்வெட்டில்,

'' தேவாலயத்தின் திருப்பணிச்சாமான்
எல்லாவற்றையும் எழுத்தில் வரைந்து
அந்தணர் தங்களை அரசனழைத்து
பாசாங்கு சங்கரன் பாதாரவிந்தம்
பாற்கடல்மீது பற்றிச் சேர்த்தனால்
சீர்பாத தேவியின் திருப்பெயராற்
சீர்பாதகுலமெனச் சிறந்தபெயர் சூட்டி''

என்று கூறப்படுகிறது.

25. துறைநீலாவணைக் கல்வெட்டில், சோழநாட்டிலிருந்து கப்பலில் வந்த அனைவரும் சீர்பாத குலமாக வகுக்கப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. அதாவது, அரசகுலத்தவர், அந்தணர், வேளாளர், செட்டிகள் என்பவர்களே சீர்பாதகுலமாக வகுக்கப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. இதனைத் துறைநீலாவணைக் கல்வெட்டில்,

'' கோயிலூழியம் குறைவிலாதியற்ற
ஆய நான்குமரபோர்கள் ஆணையிற்படிந்து''

என்று கூறப்படுகிறது.

26. திருகோணமலைக் கல்வெட்டில், கட்டுமாவடி, பெருந்துறை, திருவொற்றியூர் என்னும் இடங்களிலிருந்து கப்பலில் வந்தவர்கள், சீர்பாதகுலமாக வகுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அது வருமாறு:

'' திருமருவு கட்டுமாவடி பெருந்துறை சிறந்த உத்தர தேசமும்
உரைவிருதுதனையுடைய ஆரியநாடு திருவொற்றியூரரசு புரிவீரனே''

27. கொக்கொட்டிச்சோலைக் கல்வெட்டில், சிந்தாத்திரன், காலதேவன், காங்கேயன், நரையாகி, வெள்ளாகி, முடவன், பழைச்சி, என்னும் தலைவர்களைக்கொண்டு அனைவரையும் சீர்பாத குலமாக மன்னவன் வகுத்தான் என்று கூறப்படுகிறது. அப்பகுதி வருமாறு:

'' துரைபேர் வீரகண்டன் சிந்தாத்திரன் காலதேவன் காங்கேயன்
நரையாகி வெள்ளாகி முடவனெனும் பெண்பழைச்சி குடியேழ்காண்
வரையாக இவர்களையும் வகுத்துவைத்து மானிலத்தில் ஒற்றுமையாய்வாழுமென்று
திரையகல் சூழ்புவியரசன் வகுத்துவைத்து சீர்பாதமென்று செப்பினனே''

கல்வெட்டுகளின் ஆராய்ச்சி

28. வீரமுனைக் கல்வெட்டு அரசகுலத்தவரைச் சீர்பாதகுலமாக வகுத்ததாகக் கூறுகிறது. திருகோணமலைக் கல்வெட்டு, கட்டு மாவடி, பெருந்துறை, திருவொற்றியூர் என்னும் இடங்களிலிருந்து வந்தவர்களைக் கொண்டு சீர்பாதகுலம் வகுக்கப்பட்டதாகக் கூறு கிறது. வீரமுனைக் கல்வெட்டினையும், திருகோணமலைக் கல்வெட் டினையும், ஆராய்ந்தால், அரச குலத்தவர்களே சீர்பாதகுலமாக வகுக்கப்பட்டார்களென்பது தெற்றென விளங்கும். அரச குலத் தவரைக் கொண்டு சீர்பாத குலம் வகுக்கப்பட்டதாயினும், கப் பலில் கூடவே வந்த அந்தணர், வேளாளர், செட்டிகள் என்பவர் களும் வீரமுனையில் வசிக்கவே செய்தார்கள்.

29. சீர்பாத குலத்தவருடன் கூடிவாழ்ந்த அந்தணர் திருமண உறவு கொண்டு கலந்து வீரமுனையிலேயே சீர்பாதகுலமானார்கள். இதனைத் திருக்கோயில் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. பின் னர் சீர்பாதகுலத்தவருடன் வேளாளரும், செட்டிகளும் திருமண உறவினால் கலந்து சீர்பாதகுலமானார்கள். இதனைத் துறைநீலா வணைக்கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது.

30. இந்த ஐந்து கல்வெட்டுகளையும் கொண்டு பூரணமான ஒரு ஆராய்ச்சி முடிபினுக்கு வரலாம்: அதாவது, அரச குலத்தவரான சீர்பாதகுலத்தவருடன் அந்தணர், வேளாளர், செட்டிகள் ஆகிய குலத்தவர்கள் கலந்து வீரமுனையிலே நவமான சீர்பாதகுலம் தோன்றியது என்பதாகும்.

31. கொக்கொட்டிச்சோலை கல்வெட்டு எழுந்த காலையில், அரசகுலத்தவர் அந்தணர், வேளாளர், செட்டிகள் ஆகிய அனைவரும் ஓர்குலமான, சீர்பாத குலமாகவே இருந்தார்கள் என் பதும் தெளிவாகிறது.

32. ஓர் குலத்தவரைமட்டும் சீர்பாதகுலமாக வகுக்க வேண் டிய அவசியமில்லை. ஏனெனில், ஓர் குலத்திலுள்ளவர்களிலே விருதுகளிலோ, வரிசைகளிலோ வேறுபாடுகள் தோன்றுவதற்கு இடமில்லையே. பல்வேறு குலத்தவரை ஓர்குலமாக வகுக்காது, ஒன்றாகக் குடியிருத்தினால் நிச்சயமாக வேறுபாடுகள் தோன்றவே செய்யும். இவ்வாறான ஓர் நிலைமை ஏற்படாது தவிர்க்கவே சோழ இளவரசி சீர்பாததேவிக்குத் துணையாகச் சோழ நாட்டிலிருந்து வந்த நான்கு குலத்தவரையும் சீர்பாததேவியின் பெயரினால் ஓர் குலமாக மன்னவன் வாலசிங்கன் வகுத்தான். வீரமுனை விநாயகர் ஆலய வழிபாடு குலப்பெருமையினால் சீர்குலையாமலிருக்கவேதான் மன்னவன் அனைவரையும் சீர்பாததேவியின் பெயரால் சீர்பாத குலமாக வகுத்தான்.

33. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வீரமுனையில் வளரத்தொடங் கிய சீர்பாத குலத்தவர்கள் இருபதாம் நூற்றாண்டில், மல்வத்தை,

துறைநீலாவணை, சேனைக்குடி, நாவிதன்வெளி, குருமண்வெளி, மகிழூர்முனை, மண்டூர்க்கோட்டைமுனை, தம்பலவத்தை, பாலமுனை, கரயாக்கன் தீவு என்னும் ஊர்களில் நிறைந்து வாழ்கிறார்கள். இவ்வூர்கள் அனைத்தும் சீர்பாதகுலத்தவர்கள் மட்டும் வாழும் தனி ஊர்களாக விளங்குகின்றன.

34. அரசகுலமாகச் சீர்பாதகுலம் வகுக்கப்பட்டது. அதனாற்றான் குலவிருதுக் கல்வெட்டில், அவர்களை அமரர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனைக் குலவிருதுக் கல்வெட்டில், ''அமரருக்குத் தேர்க்கொடி'' என்று கூறப்பட்டிருக்கிறது.

35. இருபதாம் நூற்றாண்டில் சாதாரண மக்களாகப் பல்கிப் பெருகி வாழும் சீர்பாத குலத்தவர்கள், அன்று பூணூல் அணிந்து அரச கௌரவத்துடன் வாழ்ந்தார்கள்.

'' படையும் கொடியும் குடியும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாருமுடியும் நேர்வனபிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய. ''

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினால், அரசகுலத்தைச் சார்ந்தவர்களின் சிறப்புத் தெளிவாகும்.

பர்மாவில் தமிழர் சமுதாயம்

இரா. உக்ரபாண்டியன் *

பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் தென் கிழக்காசிய நாடுகளில் ஐரோப்பியர்களின் பிரவேசத்தைக் காண்கிருேம். 1824-ம் ஆண்டில் முதல் போரையும், 1852-ம் ஆண்டில் இரண்டாவது போரையும் தமிழர் படை உதவியுடன் ஆரம்பித்த ஆங்கிலேயர், 1885-ம் ஆண்டில்தான் பர்மா பூராவையும் கைப் பற்றிக் கொள்ள முடிந்ததெனினும், 1854-ம் ஆண்டு முதற் கொண்டே தமிழ் நாட்டிலிருந்து தொழிலாளர்களையும் வணிகர்களையும் பாய்மரக்கப்பல்களில் அழைத்துச் சென்று பர்மாவில் குடியேற்றினர். நிர்வாக சீர்திருத்தப்பணியிலும், வர்த்தகத் துறையிலும், உழவுத் தொழிலிலும் தமிழர்களின் பெரும்பகுதியினர் ஈடுபட்டு நாட்டில் சீரான நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் பெரிதும் உதவினர். பர்மாவின் அரிசியும், மலேயாவின் ரப்பரும், இலங்கையின் தேயிலையும் இன்று சர்வதேச வணிகத்துறையில் முக்கிய இடம் பெற்றிருக்கிறதென்ருல், அது தமிழர்களின் உழைப்பு சக்தியால் ஏற்பட்ட பலன் என்பதை இன்றைய உலக மக்கள் மறுக்கவோ-மறைக்கவோ முடியாது.

1897-ம் ஆண்டு இந்தியாவின் ஓர் மாகாணமாக பர்மா சேர்த்துக் கொள்ளப்பட்டு நிர்வாகம் நடைபெற்று வந்ததெனினும் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் பர்மாவிற்கு விஜயம் செய்த சைமன் கமிஷனுடைய சிபாரிசின் பேரில் 1937-ம் ஆண்டில், இந்தியாவிருந்து பர்மா பிரிக்கப்பட்டுத் தனி நாடாக்கப்பட்டது. இந்தக் காலத்தில்தான் தமிழ் நாட்டைச் சேர்ந்த பல லட்சம் மக்கள் பர்மாவில் குடியேறினர். பர்மாவில் நெல்விளையும் நிலங்களில் பெரும்பகுதி தமிழ் நாட்டைச் சேர்ந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுக்குச் சொந்தமாகியது. உழவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் 100க்கு 75 பேர் தமிழர்களே. தங்கம், வெள்ளி, ஜவுளி போன்ற பெரிய வியாபாரங்களிலும் அரிசி, இறைச்சி, மீன், காய்கறி, மளிகைக்கடை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள் வியாபாரங்களிலும், வெற்றிலை பாக்குக் கடை முதல் ஸ்டோர், காப்பிக்கடை வியாபாரம் ஈருக எல்லாவித வியாபாரங்களிலும் பெரும்பாலும் தமிழர்களே ஈடுபட்டிருந்தனர்.

---

* செயலாளர், பர்மா இந்தியர் கஷ்ட நிவாரணக் குழு.

தொழில் துறைகள், பேங்குகள், சர்க்கார் காரியாலயங்கள் ரயில்வே, நகரசபை, தொழிற்கூடங்கள் முதலியவைகளிலும்-பெரும்பாலும் தமிழர்களே இடம் பெற்றிருந்தனர். நீதிபதிகள், வக்கீல்கள், டாக்டர்கள், காவல் துறையினர் ஆகியவர்களும் இந்தியர்கள்தாம். கவர்னர் நிர்வாக சபை முதல், இரங்கோன் நகர மேயர், நகரசபை மெம்பர்கள் பதவி வரை, தமிழர்கள் இடம் பெற்றிருந்தனர். இத்துறைகள் அனைத்திலும் பர்மியர்கள் 15 முதல் 20 சதவிகிதமே இடம் பெற்றிருந்தனரென்பது குறிப்பிடத் தக்கது. கிராமங்களிலும், நகரங்களிலும் பர்மியர்களும், தமிழர்களும் எவ்வித வித்தியாசமும், பாகுபாடும் இல்லாமல் சகோதரர்கள் போல் வாழ்ந்து வந்தனர். தமது மூதாதையர்கள் பிழைப்புக்காக பர்மா வந்தார்கள் என்ற நினைப்போ, கவலையோ இல்லாமல் தமிழர்கள் பர்மாவில் வாழ்ந்த காலம் அது.

யுத்தத்துக்குப்பின் எம்மைப் பொறுப்பாசிரியராகக் கொண்ட 'ரசிக ரஞ்சனி' நாளிதழ் 1935-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மற்றும் 'சுதேச பரிபாலினி', 'பர்மா நாடு,' போன்ற தமிழ்த் தினசரிகளும் நடைபெற்று வந்தன. 1937-ம் ஆண்டு இந்தியாவிலிருந்து பர்மா பிரிக்கப்பட்ட பின்னர், அப்போது கவர்னர் நிர்வாக சபையில் முதல் மந்திரியாக இருந்த ஊஸோ, முதன் முதலாக இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையே இமிகிரேசன் சட்டத்தைக் கொண்டு வந்து அமுல் நடத்தினர்.

கட்டுப்பாடில்லாமல் அதுவரை பர்மாவுக்குப் போய் வந்து கொண்டிருந்தவர்கட்கு, இது புது அனுபவமாக இருந்தது. இந்த நிலையில் 1939-ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் யுத்த மேகம் சூழ்ந்து விட்டாலும் 1941-ம் ஆண்டு டிசம்பர் 8-ம் தேதிதான் கிழக்கே ஜப்பான் யுத்தப் பிரகடனம் செய்தது. எங்கேயோ யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென எண்ணி இருந்த இரங்கோன் நகர மக்கள் மீது ஜப்பானியப் போர் விமானங்கள் 23-12-1941-இல் குண்டு வீசிக் கொன்றழித்ததை நேரில் கண்ட பின்னர்தான், யுத்தத்தின் பயங்கரத்தை இவர்கள் புரிந்து கொள்ள முடிந்தது.

இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையே எல்லாப் போக்குவரத்துக்களும் நின்று விட்டபடியால், மேல்பர்மா வழியாக மணிப்பூர் மார்க்கத்தில் பல ஆயிரக்கணக்கானோர் கால்நடையாக வரத்துவங்கினர். அவர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் பசி, பட்டினி காரணமாக வழியிலேயே மாண்டு மடிந்தனர். இவ்வாறு மடிந்தவர்களில் தமிழர்களே அதிகம். பல்லாயிரக்கணக்கானோர் பர்மாவிலேயே தங்கிவிட்டதால் இவர்கள் மீண்டும் நகரங்கட்கு வந்த ஜப்பானிய ரா்ணுவ ஆதிக்கத்தின் கீழ் மறுபடியும் தங்களுக்குப் பழக்கமான தொழில்துறை, வியாபாரம் முதலியவைகளை ஆரம்பித்தனர். சுமார் 15 நாட்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எமது ''ரசிக ரஞ்சனி'' பத்திரிகையும் ஜப்பானியர் அனுமதியுடன் தொடர்ந்து ஆரம்பமாயிற்று.

இந்த நிலையில், இந்திய சுதந்திரப் போராட்டத்தலைவர்களில் ஒருவரும், ஜப்பானில் தலைமறைவாகி இருந்தவருமான திரு. ராஸ் பிகாரி போஸ் அவர்கள், ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதரவுடன் ''இந்திய சுதந்திரலீக்'' (Indian Independent League) எனும் ஸ்தாபனத்தை உருவாக்கி யுத்தத்தின் காரணமாகத் தென்கிழக்காசியா நாடுகளில் சிதறிக் கிடந்த 30 லட்சம் இந்தியர்களை ஒன்று சேர்க்கும் பணியில் ஈடுபட்டார். இந்த இயக்கத்திற்குப் பலத்த ஆதரவு கிடைத்து வந்த நிலையில், திரு. சுபாஸ் சந்திர போஸ் ஜெர்மனியிலிருந்து நீர்மூழ்கிக் கப்பலில் ஜப்பான் வந்து சேர்ந்தார். இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைமைப்பீடத்தை இவர் ஏற்ற உடனேயே தென்கிழக்காசிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, சிதறிக் கிடந்த இந்திய மக்களை ஒன்றுபடுத்தும் பணியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

மகுடியைக் கண்ட நாகம் போல் நேத்தாஜியின் உணர்ச்சிமிக்க, வீரம் செறிந்த பேச்சுக்கு இந்திய மக்கள் பணிந்து ஜாதிமத வித்தியாசத்தை மறந்து ஒரே தலைமையின் கீழ், இந்திய தேசிய மூவர்ணக் கொடியின் கீழ் ஒன்றுபட்டனர். தங்களின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்ய முன் வந்தனர். ஒற்றுமை, விசுவாசம், தியாகம் எனும் நேத்தாஜியின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு ''ஜெய் ஹிந்த்'' என்னும் தாரக மந்திரத்துக்குத் தலை வணங்கினர். 1943-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ந்தேதி சிங்கப்பூரில் சுதந்திர இந்திய அரசாங்கத்தை (Azad Hind Government) உருவாக்கிய பின்னர் அதன் தலைமைச் செயலகத்தை பர்மாவின் தலைநகரான இரங்கோனுக்கு மாற்றிவிட்டார். ஆங்கிலேயரால் கைவிடப்பட்டுச் சென்ற இந்திய ராணுவத்தினரையும், கடல் கடந்த இந்தியர்களையும் ஒன்று சேர்த்து இந்திய தேசிய ராணுவத்தை (Indian National Army) உருவாக்கினார். ஏழை முதல் பணக்காரர் வரை பொருள்களை அள்ளி அள்ளிக் கொடுத்ததால் இவற்றைப் பாதுகாத்து நிர்வகிக்க சுதந்திர இந்திய பேங்கு (Azad Hind Bank) ஒன்றையும் நேத்தாஜி போஸ் உருவாக்கினார்.

இந்திய தேசிய ராணுவத்தில் திருமதி லெட்சுமி பாய் தலைமையில் பெண்களுக்கான ''ஜான்ஸிராணி'' படைப்பிரிவும், சிறுவர்களுக்கென ''பாலசேனை'' படைப்பிரிவும் உருவாக்கினார். இந்திய தேசிய ராணுவத்தில் 100-க்கு 60 பேர் தமிழர்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. எமது ''ரசிக ரஞ்சனி'' தமிழ்ப் பத்திரிகையும் சுதந்திர இந்திய அரசாங்க ஆதரவுடன் ஒரே இந்தியப் பத்திரிகையாக ''சுதந்திர ஹிந்துஸ்தான்'' எனப் பெயர் மாற்றப்பட்டு நடைபெற்று வந்தது.

விவசாயிகளாகவும், தொழிலாளர்களாகவும், உத்தியோகஸ்தர்களாகவும் இருந்த தமிழர்களிடையே வீரத்தையும், தேசிய உணர்ச்சியையும் பெருக்கி நேத்தாஜி போஸ் இவர்களைத் துப்பாக்கி ஏந்திப் போரிடும் வீரர்களாக்கி விட்டார். இந்தியா-பர்மா எல்லையில்

மணிப்பூர், திம்மாபூர், இம்பால், கோஹிமா போர்முனைகளில் இந்திய சுதந்திரத்திற்காகப் போரிட்டு உயிர்நீத்த தமிழர்களின் வீரத்தையும் தேச விசுவாசத்தையும் சரித்திரம் மறந்துவிடாது.

1945-ம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் ஜப்பானியருடன் நேத்தாஜிபோஸ் பர்மாவிலிருந்து பின் வாங்கிச் சென்றபோது, தலைநகரின் நிர்வாகப் பொறுப்பை மேஜர் ஜெனரல் லோகநாதன், மேஜர் ஜெனரல் அளகப்பா ஆகியோரின் தலைமையில் இந்திய தேசிய ராணுவத்தினரிடம் ஒப்படைத்துச் சென்றார். 1942-ஆம் ஆண்டு பிரிட்டிஷார் பர்மாவிலிருந்து பின் வாங்கியபோது, அநேக இடங்களில் இந்தியர்க்கு முன்னர் ஏற்பட்ட விபரீத விளைவுகள் மீண்டும் ஏற்பட்டு விடாவண்ணம், இந்தியர்களின் உயிர்களும், உடைமைகளும் இதன் மூலம் பாதுகாக்கப்பட்டன.

இரண்டாவது உலக மகா யுத்தம் நின்று விட்டதால் பர்மாவில் வியாபாரம், தொழில் ஆகியவைகள் முன் போல் ஆரம்பமாயிற்று. எல்லாத் துறைகளிலும் வழக்கம்போல் தமிழர்களே அதிக இடம் பெற்றனர். கிராமாந்திரங்களில் விவசாயம் செய்த தமிழர்களில் பெரும்பாலோர் யுத்தத்தின் காரணமாக நகரங்களுக்கு வந்துவிட்டபடியாலும் இவர்கள் வியாபாரிகளாகவும், தொழிலாளர்களாகவும் மாறிவிட்டதாலும் மீண்டும் விவசாயம் செய்ய இவர்கள் கிராமங்களுக்குச் செல்ல விரும்பாததாலும் பர்மாவில் நெல் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டது. கடந்த யுத்தம், இவர்களை அந்த நாட்டில் அன்னியர்களாகச் சுட்டிக்காட்டிவிட்டதாலும், யுத்தகாலத்தில் இந்தியர்கள் என்ற ரீதியில் இந்தியாவின் சுதந்திரத்துக்காகத் துப்பாக்கி ஏந்திப் போரிட நேரிட்டதாலும் இவர்கட்குத் தாயக மனப்பான்மையே அதிகம் ஏற்பட்டது. இருப்பினும் தாய்த் தமிழ் நாட்டைப் பற்றி எதுவுமே தெரியாத பெரும்பகுதித் தமிழர்கள் எப்பவும் போல் தங்களுடைய தொழில்களையும், வியாபாரங்களையும் நடத்தி வந்தனர்.

இதற்கிடையில் 1945-46-ம் ஆண்டில் பர்மிய சுதந்திர வீரர், ஜெனரல் அவுங்சான் தலைமையில், பர்மாவின் சுதந்திரப் போராட்டம் ''பசாபலா'' பாசிஸ்ட் எதிர்ப்பு இயக்கம் (Anti Facist Peoples Freedom League) எனும் ஸ்தாபனத்தின் கீழ் மும்முரமாக இயங்கியது. மேற்படி ''பசாபலா'' ஸ்தாபனம் வெளியிட்ட சுதந்திரப் பிரகடனத்தில் 8 ஆண்டு காலம் பர்மாவில் நிரந்தரமாக வசித்து வந்தவர்கள் மட்டுமே பர்மா பிரஜா உரிமை பெறத்தகுதியுள்ளவர்கள் என்றும் இதற்குத் தகுதியில்லாதவர்கட்கு ஓட்டுரிமை இல்லையென்றும் தெரிவித்தது. நிரந்தரமாக பர்மாவில் வசித்து வந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்களுக்குத் தகுதியிருந்தும் இந்தப் பிரகடனத்தின் உட்கருத்தைப் புரிந்துகொள்ளாமல் பிரஜா உரிமை பெறத் தவறிவிட்டதால் இவர்கள் அரசியலில் இடம் பெற முடியாத நிலையை அடைந்தனர். இதை மக்களிடம் தமிழ்ப் பத்திரிகைகளும், (ரசிக ரஞ்சனி, சாந்தி), தலைவர்களும் அவ்வப்

போது விளக்கமாக எடுத்துக்கூறி வந்தாலும், அரசியல் ஞானத்துடன் இப்பிரச்னையில் தலையிடத்தக்க தலைமைத்துவம் தமிழர்கட்கு, இல்லாது போய்விட்டதென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இந்த நிலையில், பர்மாவுக்கு சுதந்திரமளிக்க பிரிட்டிஷார் இணங்கிவிட்டதால் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த 'பசாபலா' ஸ்தாபனத்தார் கவர்னருடைய நிர்வாக சபையில் ஈடுபட்டு இடம் பெற்று, மந்திரிசபை அமைத்து அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி அரசியலமைப்புத் திட்டத்தையும் தயாரித்து வந்தனர். இந்த வேலைகள் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், மந்திரிசபைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, மந்திரிமார்கள் ஒன்பது பேரை அதிகாரவெறி கொண்ட கூட்டத்தார், மாஜி பிரதமர் ஊஸோ தலைமையில், இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். ('பர்மா மந்திரிமார்கள் கொலை வழக்கு விசாரணை' எனும் எமது நூலில் இதன் முழு விபரத்தைக் காணலாம்). எனவே, சுட்டுக்கொல்லப்பட்ட '' பசாபலா '' தலைவர் ஜெனரல் அவுங்சான் வகுத்த அரசியமைப்புத் திட்டம் எவ்வித மாற்றமுமின்றித் தயாரிக்கப்பட்டு 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் தேதி பார்லிமெண்டரி ஜனநாயக முறைப்படி பர்மா சுதந்திரமடைந்தது. அரசியல் நிர்ணய சபைத் தலைவராகவும், பின்னர் நிர்வாக சபைத் தலைவராகவும் விளங்கி வந்த ஊநூ, சுதந்திர பர்மாவின் முதலாவது பிரதம மந்திரியானார். இவர் இந்தியர்கள் மீது அபிமானமும் நல்லெண்ணமும் கொண்டவர்.

பர்மாபூராவும் விவசாயத்தை நம்பி இருந்ததாலும், பெரும் பகுதி நிலங்கள் அயல் நாட்டினருக்குச் (தமிழ் நாட்டைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்) சொந்தமாக இருந்ததாலும், 1948-ம் ஆண்டு இறுதியில் பார்லிமெண்டில் நிலங்கள் தேசீயமயமாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டு, விவசாய நிலங்கள் அனைத்தும் தேச உடைமையாக்கப்பட்டு விட்டன. நிலவரியை அடிப்படையாகக் கொண்டு தேச உடமையாக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டிருந்தாலும் இதன் மூலம் கிடைக்கப் பெறும் பணத்தை வெளிநாட்டுக்கு எடுத்துச்செல்ல சட்டபூர்வமான அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் தமிழ் நிலச்சுவான்தார்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் பல கோடிக் கணக்கான ரூபாய்களாகும்.

பிரஜா உரிமை பெருதவர்கட்கு ஓட்டுரிமை இல்லையெனச் சட்டபூர்வமாக மறுக்கப்பட்டிருந்தாலும், பிரஜா உரிமை பெறுதற்கு ஒரு காலக்கெடுவு கொடுக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் பர்மியரல்லாத வம்சாவழியைச் சேர்ந்தவர்கள் யாவரும் அந்நியர் பதிவு சட்டத்தின்கீழ், தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென பர்மிய அரசு ஒரு புதிய நிபந்தனையை அமுலுக்குக் கொண்டு

வந்தது. பல தலைமுறைகளாகப் பர்மாவிலேயே பிறந்து வளர்ந்த தமிழர்கள் இதன் உள்நோக்கம் புரியாது, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பிரஜா உரிமை பெறுவதற்குத் தவறியது மட்டுமல்லாது, தங்களை அன்னியர்களெனப் பதிவு செய்துகொள்ள ஆரம்பித்தனர். பிரஜா உரிமைப் பதிவுக் காலக்கெடுவு முடிந்ததும் அன்னியர் பதிவு சர்டிபிகேட் வைத்திருந்த அனைவரும், அந்நாட்டில் அன்னியர்களெனப் பிரகடனப்படுத்தப்பட்டனர். சில நூறு பேர் தவிர்த்து பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தகுதியிருந்தும் இதனால் தங்களின் உரிமைகளை இழந்தனர்.

இதையடுத்து வியாபாரத்துறையில் பர்மியர்-பர்மியரல்லாதார் எனப் பாகுபடுத்தி, பர்மியரல்லாதாரின் உரிமைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு விட்டன. தொழில் ஸ்தாபனங்கள் போன்ற துறைகளிலும் பர்மியரல்லாதார் சட்டபூர்வமாகக் குறைக்கப்பட்டு, பர்மியர்களுக்கே பூரா சலுகையும் அளிக்கப்பட்டு வந்தன. பர்மிய மொழியும் தேசீய மொழியாக்கப்பட்டு, தேசீய மொழி தெரிந்தவர்கட்கு மட்டுமே முதல் சலுகையளிக்கப்பட்டு வந்தது. பள்ளிகளிலும் பர்மிய மொழி கட்டாயப் பாட மாக்கப்பட்டது.

அன்னியப் பதிவு சர்டிபிகேட் வைத்திருந்த 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் வருடமொன்றுக்கு 25 ரூபாய் கட்டணம் (பின்னர் 50 ரூபாயாக உயர்த்தப்பட்டது) செலுத்த வேண்டுமென்றும், கட்டத்தவறினால் ஜெயில் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டன. இதனால் பல நூற்றுக்கணக்கான பர்மாத் தமிழ் மக்கள், எவ்வித குற்றமும் செய்யாமல், அறியாமையின் காரணமாக ஜெயில் தண்டனை அனுபவிக்க நேரிட்டது. இது சம்பந்தமாக இந்திய அரசாங்கத்திடமும், பர்மாவுக்கு விஜயம் செய்த இந்தியத் தலைவர்களிடமும் பல தடவை முறையிட்டும், அந்நாட்டுச் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, அந்நாட்டு மக்களாகவே வாழ்ந்து வரும்படி அறிவுரை' கூறினார்களேயன்றி மேற்கண்ட பிரச்னைகளுக்கு ஒரு சிறிய பரிகாரம்கூடக் காண முற்பட்டாரில்லை.

1960-ம் ஆண்டு முதல், பர்மாவில் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டு, குழப்பங்கள் மிகுதியாகிவிட்டதால், நாட்டில் பொருளாதாரச் சீர்குலைவும், அமைதியின்மையும் ஏற்பட்டன. இதை முன்னிட்டு, 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதி, நடுநிசியில் பர்மா ராணுவத்தினர், சேனாதிபதி ஜெனரல் நேவின் தலைமையில் அதிகாரத்தைக் கைப்பற்றி, ஜனாதிபதி உள்பட மந்திரிமார்கள், அரசியல் தலைவர்கள் முதலியோரைக் கைதுசெய்து, அரசியலமைப்புத் திட்டத்தை ரத்து செய்து பார்லிமெண்ட், சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட் ஆகியவற்றையும் கலைத்துவிட்டனர். ராணுவத்தினர் வெளியிடும் அறிக்கையே சட்டமாகி வந்தது.

ராணுவ ஆட்சியினரும் புதுப்புது சட்டங்களைப் பிறப்பித்து வந்தனர். அதில் ஒன்று, இந்தியாவுக்குச் செல்லும் பர்மியரல்லாதார்

மீண்டும் பர்மாவுக்குத் திரும்பிவர அனுமதி மறுக்கப்பட்டதாகும். இதனால் பாதிக்கப்பட்டவர் பெரும்பாலும் தமிழர்களே. இந்த நிலையில் ராணுவ ஆட்சியினர் வர்த்தகம் பூராவையும் தேசிய உடைமையாக்கும் நோக்குடன் முதலில் வெற்றிலைப் பாக்குக் கடைகளை தேசியமயமாக்கினர். அடுத்து, பேங்குகள் பூராவையும் தேசிய மயமாக்கினர். இதனால் பீதியடைந்த இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் நூற்றுக்கணக்கில் தாயகம் திரும்ப ஆரம்பித்தனர். இந்த நிலைமையில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதி, பர்மியர்-பர்மியரல்லாதார் என்ற பாகுபாடின்றி சிறிய பெரிய வியாபார நிலையங்கள், தொழில் ஸ்தாபனங்கள் எல்லாவற்றையும் பர்மா ராணுவத்தினர் ''தேசிய மயம்'' என்ற பெயரில் கைப்பற்றி எவ்வித நஷ்ட ஈடோ, உரிமையோ, தொடர்போ, கொடுக்காமல் அவர்களை வெளியேற்றிவிட்டனர். இதைத் தொடர்ந்து சட்டபூர்வமான செலாவணியிலிருந்து 100 ரூபாய் 50 ரூபாய் நோட்டுக்கள் குறுகிய காலக் கெடுவுக்குள் 500 ரூபாய்க்கு மேல் ஒருவர் மாற்றக்கூடாதென்ற நிபந்தனையுடன், செல்லாது என்றும் பிரகடனப்படுத்தினர். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் தமிழர்களே.

எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்ட பின்னர்தான் இந்திய சர்க்கார் இப்பிரச்னையில் தலையிட்டு எல்லோரையும் பாகிஸ்தான் அகதிகள் போன்று ஏற்றுக் கொள்வதாகப் பிரகடனப்படுத்தினர். திடீரென அச்சமயத்தில் (1964-மே) இந்தியப் பிரதமர் நேருஜி மரணமடைந்து விட்டாலும், இவர் போட்ட திட்டப்படி சென்னைக்கும் இரங்கோனுக்குமிடையே அகதிக் கப்பல் போக்குவரத்து ஆரம்பமாயிற்று. சொத்துசுகங்கள் இழந்து, வாழவழியில்லாது தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கப்பல் கப்பலாகத் தமிழ்நாடு வந்து சேர்ந்தனர். இதுவரையில் 1,55,000 பேர் இங்கு வந்து சேர்ந்துவிட்டதாகப் புள்ளி விபரக் கணக்குகள் தெரிவிக்கின்றன. அகதியாகக் கப்பலில் ஒருவர் டிக்கட் இன்றி வந்தால் தலா ரூ. 15 ரூபாயும், டிக்கட் எடுத்து வந்தால் 50 ரூபாயும், விமான மூலம் நேரிடையாகச் சென்னைக்கு வந்தால் 125 ரூபாயும் மட்டுமே எடுத்துவர பர்மா சர்க்கார் அனுமதியளித்தனர். இத்துடன் 2 சவரன் தங்க நகைகளும் உடுத்துக் கொள்வதற்குத் துணிமணிகள் சொற்ப அளவும் எடுத்துவர அனுமதிக்கப்பட்டனர்.

எமது ''ரசிக ரஞ்சனி'' ''தொண்டன்'' போன்ற தமிழ்த் தினசரிகள் உட்பட அன்னிய மொழிப்பத்திரிகைகள் அனைத்தும் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியுடன் பர்மா ராணுவ அரசு, ஓர் உத்தரவின் மூலம் நிறுத்திவிட்டது. எமது ''ரசிக ரஞ்சனி'' 1935-ம் ஆண்டு நிறுவப்பட்டு அதுமுதல் வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகையாகும். இவ்வாறு 30 ஆண்டு காலம் தொடர்ந்து வெளிவந்துக் கொண்டிருந்த ''ரசிக ரஞ்சனி'' 1-1-1966 முதல் நிறுத்தப்பட்டது.

எமது கோரிக்கை

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் இந்த சர்வதேச தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டில் பர்மாத் தமிழர் பரம்பரையில் 3-வது தலைமுறையைச் சேர்ந்த நான், பர்மாத் தமிழர்களின் நிலைபற்றிய சுருக்கத்தையே வெளியிட முடிந்தது. தமிழைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் இம் மகாநாட்டில் கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களின் நிலையைப்பற்றி எடுத்துக் கூறுவதும் பொருத்தமென்றே நம்புகிறேன். இன்னும் பல ஆயிரக்கணக்கான தமிழர் பர்மாவில் இருக்கின்றனர். ஏற்கெனவே தமிழ் நாடு வந்து சிரமப்படுபவர்களின் நிலைமைகளைக் கேட்டு இங்கு புறப்பட்டு வரத் தயங்கிக்கொண்டும், அங்கு நிரந்தரமாக வாழமுடியாத நிலையிலும் இருந்து வருகின்றனர். பர்மிய மொழியில் பாண்டித்யம் பெற்ற தமிழர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர். 'திருக்குறளைப்' பர்மிய மொழியில் மொழி பெயர்த்திருப்பவர்களும் தமிழர்களே. எல்லாம் இருந்தும் என்ன பயன்?

இரண்டாவது உலக மகாயுத்தத்துக்குப் பின் தென் கிழக்காசியாவில் பல நாடுகள் சுதந்திரமடைந்தன. நீண்ட காலம் அடிமைப் பட்டு கிடந்த மக்கள், தங்கள் நல்வாழ்வுக்காக எடுத்துக்கொள்ளும் சட்டதிட்ட நடவடிக்கைகள் அங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த பிறநாட்டு வம்சாவளியினரை, ஓரளவு பாதிக்கத்தான் செய்யுமென்பதில் ஐயப்பாடு இருப்பதற்கில்லை. எனினும், அந்நாடுகளின் வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் உழைத்து, உருக்குலைந்த சமுதாயம் தங்களின் சொத்து, சுகங்கள், உரிமைகளை இழந்துவிடவேண்டுமா? பர்மாத் தமிழர்கட்கு ஏற்பட்ட இதுபோன்ற நிலை இதர நாடுகளில் பரம்பரையாக வாழ்ந்துவரும் தமிழர்கட்கு ஏற்பட்டு விடக்கூடாது. உரிமை இருந்தும், தகுதி இருந்தும் அதற்கு நாமே காரணமாகி விடவும் கூடாது, என்பதை இங்கு தெளிவுபடுத்த வேண்டுமென்பதே எமது நோக்கம். எனவே எமது பின்வரும் 3 கோரிக்கைகளை இம் மகாநாட்டார் ஏற்றுக்கொண்டு செயலாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1. ஆயிரமாயிரம் ஆண்டு காலமாகக் கடல்கடந்து சென்ற தமிழர்களின் சரித்திரம் எழுதப்பெற இம்மகாநாடு முயற்சிப்பதுடன் இந்நாடுகளில் தமிழர்களின் கலை, கலாச்சாரம் முதலியவைகளைப் பாதுகாக்க இம் மகாநாடு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

உதாரணம்—மலாயாவில் மலாக்கா எனும் நகரில் 'மலாக்கா செட்டியார்' என்ற ஓர் வகுப்பினர் வாழ்கின்றனர். ஆண்களுக்கு சுப்பிரமணிய படையாச்சி, ராமசாமி நாயக்கர் என்பன போன்ற பெயர்களும், பெண்களுக்கு மீனாட்சி, காத்தாயி போன்ற பெயர்களும் இடம் பெற்று விநாயகர், சுப்பிரமணியர், மாரியம்மன் கோயில்கள் கட்டித் தமிழ் முறைப்படி வழிபடுகின்றனர். ஆனால்

இவர்கட்குத் தமிழ் பேசத் தெரியவில்லை. தாங்கள் 200 ஆண்டு கட்கு முன்பு தமிழ் நாட்டிலிருந்து வந்த பரம்பரையினர் என்பதை உணர்கின்றனர். மலாய் மொழிதான் இவர்கட்குத் தாய்மொழி யாக இருக்கிறது. தாய்த் தமிழர்களுடன் நெருங்கிப் பழகித் தொடர்பு கொள்ள விரும்புகின்றனர். இதற்கு வாய்ப்புகள் குறைவு. இதுபோன்று, மொரிசியஸ், மேற்கிந்தியத் தீவுகள் முதலிய இடங்களிலும் மற்றும் உலகின் பல பாகங்களிலும் தமிழர்களின் சந்ததியினர் வாழ்கின்றனர். இதற்குப் பரிகாரம் காண இம் மகாநாடு செயல்பட வேண்டும்.

2. தமிழ் நாட்டில் தமிழனின் சரித்திரம் பல பிரிவுகளாகக் காணப்படுவதால் இவைகளைச் சரித்திர ஆதாரங்களுடன் கல் வெட்டுகள், ஓலைச்சுவடிகள் ஆகியவற்றை ஆராய்ந்து முறையாக வரிசைக்கிரமமாக ஒரு காவியமாகத் தொகுக்கப்பட்டு இதுதான் தமிழன் சரித்திரம் எனப் பிற்கால சந்ததியார் புரிந்து கொள்ளும் வண்ணம், வரையறுத்து உருவாக்க இம் மகாநாடு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

3. இதுபோன்ற தமிழாராய்ச்சி மகாநாடு, உலகின் பலபாகங் களில் நடைபெறவிருந்தாலும், ஐக்கிய தேச மகாசபை அமெரிக்கா விலிருந்து செயல்படுவதுபோல, தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மகா நாட்டின் தலைமைச் செயலகம் தமிழ் நாட்டில் நிறுவப்பெற்று செயல்பட இம் மகாநாடு நடவடிக்கைகள் எடுத்து, அதைச் செயல் படுத்தவேண்டும்.

தமிழ்ச் சமூக நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்

இரா. தண்டாயுதம்*

1. கதையை உணர்ச்சிப் பெருக்குடன், நிகழ்ச்சிகளைச் சங்கிலித் தொடர்போல, கேட்டாரைப் பிணிக்கும் வண்ணம் கூறும் ஆற்றல் ஒரு சிலரிடமே இருந்தாலும், கதை கேட்கும் ஆர்வம் மக்கட் பிறப்பிற்கே இயல்பானதும் பொதுவானதும் ஆகும். கதை எல்லாக் காலத்திற்கும் பொதுவானாலும், அதை உணர்த்துவதில் ஏற்படும் வடிவங்கள் காலத்திற்குக் காலம் மாறுகின்றன. செய்யுளில் யாக்கப்பட்ட காலத்தில் காவிய, புராண வடிவம் பெற்ற கதை, உரைநடை வளர்ந்தபின் நாவல், சிறுகதை, நாடகம் ஆகிய வடிவங்கள் பெற்றுள்ளன. இவற்றுள் நாவல் வசன காவியம் (Prose epic) என்றே முதல் உலக நாவலாசிரியரால் போற்றப்பட்டுள்ளது.

2. தமிழில் உரைநடை தொல்காப்பியர் காலத்திலேயே இருந்தது. அவர் தம்முடைய நூற்பாக்களில் நான்குவகை உரைநடை வகைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.[1] அவற்றுள் 'பொருளொடு புணராப் பொய்ம்மொழி' என்பன ஈசாப் கதைகள், பஞ்சதந்திரம் போல்வன என்றும்; 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' என்பன சமத்காரம், குத்தல், புகழ்வதுபோலப் பழித்தல் போல்வன என்றும் அறிஞர் கூறுவர்.[2]

இவ்வாறு உரைநடை இருந்தமைக்குச் சான்றுண்டே தவிர, அவ்வுரைநடை நூல்கள் கிடைக்கவில்லை. பின்னர் உரைநடை, இலக்கியங்கட்கு உரை கூறுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. தமிழ் அறிஞர்களுக்குச் செய்யுள் கைவந்ததுபோல உரைநடை கைவரவில்லை. 1862-ஆம் ஆண்டில் தமிழ்-ஆங்கிலப் பேரகராதி செய்த உவின்ஸ்லோ இதனைத் தெளிவாகத் தம் அகராதியின் முன்னுரையில் கூறியுள்ளார்.[3]

மேலைநாட்டாரின் தொடர்பால் இங்கு உரைநடை வளம் பெற்றது. உரைநடையிலேயே எல்லாத்துறை நூல்களையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. உரைநடை

---

*எம்.ஏ., பிஎச்.டி., சென்னை.

[1] தொல்காப்பியம் நூற்பா எண் 1422, பக்கம் 381.

[2] கு. அருணாசலக் கவுண்டர், மாயூரம் முனிசிப் வேதநாயகம்பிள்ளை, பக்கம் 131.

[3] M. Winslow, Tamil and English Dictionary, p. vii.

யிலே படைப்புத்துறை இலக்கியங்களையும் படைக்க முடியும் என்று முதலில் காட்டிய பெருமை பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரமாமுனிவரைச் சாரும். அவரால் செய்யப்பட்ட 'பரமார்த்த குரு கதை'யே தமிழ் உரைநடையில் வெளிவந்த முதல் படைப்பிலக்கியம். மேலைநாட்டாரின் தொடர்பாலேயே இங்கு உரைநடை வளர்ந்ததென்றாலும், அங்கு தோன்றிய இலக்கியங்களை அப்படியே கடன்வாங்கிக் கொள்ளவில்லை. அவற்றை மாதிரியாகக் கொண்டு, இந்நாட்டிற்கேற்பவே இலக்கியங்களைப் படைக்க இந்த நாட்டு அறிஞர் விழைந்தனர்.[4]

3. நாவல்களைப் பொதுவாக, வரலாற்று நாவல்கள் சமூக நாவல்கள் என்று இரு வகையாகப் பிரிக்கலாம். 'சமூக நாவல்கள் கூட ஒரு வகையில் வரலாற்று நாவல்களே' என்று அமெரிக்க நாவலாசிரியர் ஜான் ஓ. ஹாரா கூறுகிறார். தாம் எழுதுபவை சமூக நாவல்கள், சிறுகதைகள் என்று பலர் கூறினாலும், தாம் எழுதுபவை வரலாற்றுக் கதைகள் என்றே அவர் கூறுகிறார். அவர் மேலும் "இந்த நூற்றாண்டின் அமெரிக்க வாழ்வுதான் எனக்கு நன்கு பரிச்சியமான ஒன்று. அதைப் பற்றித்தான் நான் எழுதுகிறேன். சமூக வரலாற்றுக் கதைகள் என்று வேண்டுமானாலும் அவற்றைக் குறிப்பிடுங்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரிட்டனை ஆராயும் எந்த வரலாற்றுப் பேராசிரியர்தான் டிக்கன்ஸை மேற்கோள் காட்டாமலிருக்க முடியும்?" என்று கேட்கிறார். இருப்பினும், ஆசிரியர் வாழ்ந்த காலத்தையோ, அல்லது அதற்குச் சிறிது முன்னதாகிய காலத்தையோ பின்னணியாகக் கொண்டு எழுதப்படுவன சமூக நாவல்கள் என்றும், வரலாற்று நூல்களால் மட்டுமே அறியக்கூடிய காலத்துச் சமூகத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்படுவன வரலாற்று நாவல்கள் என்றும் பொதுவாகக் கூறலாம்.

5. சமூக நாவல் என்பது அது எழுந்த காலத்தின் பொருளாதார, சமூக நிலைகளை மையமாகக் கொண்டதாகும்.[5] இந்நாவல் பலவகைப்படும். ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரச்னையை மையமாகக் கொண்டு எழுதப்படும் 'பிரச்னை நாவல்' (Problem Novel), தாம் எண்ணியதை மக்களிடம் பரப்புவதற்காக எழுதும் பிரச்சார நாவல் (Propaganda Novel), தொழிலாளர் பிரச்னைகளை அனுதாபத்துடன் அணுகும் தொழிலியல் நாவல் (Proletarian Novel), ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் பிரச்னைகள், பழக்கவழக்கங்களை மையமாக வைத்து எழுதப்படும் வட்டார நாவல் (Regional Novel) —என்று சமூக நாவலின் வகைகள் விரிந்துகொண்டே போகின்றன.

---

[4] "They represent the spirit of England clad in a half oriental garb. There has been no wholesale borrowing, but an assimilation of foreign models, while retaining a surprising amount of originality." —Jadunath, *India Through Ages.* p. 114

[5] "The 'Sociological Novel' studies the effect of economic and social conditions at a given time and place upon human conduct".
—*Dictionary of World Literary Terms*, Edited by Joseph T. Shipley. *p.* 286

மக்களின் அன்றாட வாழ்க்கை சமூக நாவலுக்குரிய கருப்பொருள் என்றாலும் வாழ்க்கை முழுவதையும் அதனுள் திணித்துவிட முடியாது. வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டதென்றாலும், அது வாழ்க்கையைத் திருத்துவதற்கும் பயன்படுகிறது. ஆனால் இவ்வாறு திருத்துவது அதனுடைய முக்கிய வேலை இல்லையென்பதுடன், அதை நேரடியாகவும் நாவலாசிரியன் செய்யக் கூடாது. ''சமூகம், சமயம், அரசியல் பிரச்னைகளை விளக்க அல்லது தீர்க்க அது எழுதப்படுவதல்ல; என்றாலும், ஆசார சீர்திருத்தங்களுக்கு அனுகூலமான மனப்பான்மையை அது உண்டுபண்ணுகிறது. சமூக ஊழல்களைப் பரிகாசம் செய்ய அது ஏற்பட்டதல்ல; என்றாலும் குற்றங்குறைகளை அது நையாண்டி செய்யாமல் இல்லை. ஒழுக்கத்தை உபதேசிப்பது அதன் கடமை அல்ல; செய்திகளைச் சித்தரிக்க வேண்டுமே அன்றி, சரியா தப்பா என்று எடைபோடக் கூடாது. என்றாலும் ஆசிரியனுடைய செய்திறனால், சம்பவ சோடனையால் போதனை அதிலே பொதிந்துவிடுகிறது. ஆசிரியனுடைய அனுதாபங்களும், கருத்துக்களும் உணர்ச்சிகளும் எப்படியும் இடம்பெற்று, வாசகர்களின் மனத்தைக் கிளறிவிடுகிறது. நவீனம் தத்துவ நூல் அல்ல; எனினும் மெய்ப்பொருள் அறிவு அதிலே இடம்பெறாமல் இல்லை'' என்ற கருத்து சமூக நாவல்களின் நிலையை உள்ளவாறு உணர்த்துவதாகும்.[6]

6. உலகச் சமூக நாவல் வரலாறு 1740ஆம் ஆண்டில் தோன்றிய ரிச்சர்ட்சனின் 'பாமெலா'வுடன் தொடங்குகிறது. தமிழ்ச் சமூக நாவல் வரலாறு 1876-இல் தோன்றிய மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரத்'துடன் தொடங்குகிறது.

7. முதல் தமிழ் நாவலாசிரியர் வேதநாயகம் பிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த அறிஞர். புகழ்பெற்ற கவிஞராகவும், கட்டுரையாசிரியராகவும் விளங்கி, வாழ்க்கையில் நிறைந்த அனுபவங்களைப் பெற்ற பின்னரே இவர் நாவல் துறைக்கு வந்தார். நாவல்களின் இன்றியமையாமையைப் பற்றி இவருடைய நாவலிலேயே கதைத் தலைவி ஞானம்பாளின் மூலம் இவ்வாறு கூறியுள்ளார்: ''இங்கிலீஷ், பிரஞ்சு முதலிய பாஷைகளைப் போலத் தமிழில் வசன காவியங்கள் இல்லாமலிருப்பது பெருங்குறை யென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அந்தக் குறையைப் பரிகரிப்பதற்காகத்தான் எல்லாரும் ராஜபாஷைகளுந் தமிழுங் கலந்து படிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ராஜபாஷைகளும் சுதேச பாஷைகளும் நன்றாக உணர்ந்தவர்கள் மட்டும் உத்தமமான வசன காவியங்களை எழுதக் கூடுமேயல்லாது இதரர்கள் எழுதக் கூடுமா? வசன காவியங்களால் ஜனங்கள் திருந்தவேண்டுமேயல்லாது செய்யுட்களைப் படித்துத் திருந்துவது அசாத்தியம்

[6] கு. அருணாசலக் கவுண்டர், மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை, பக்கம் 134-5.

அல்லவா? ஐரோப்பிய பாஷைகளில் வசன காவியங்களில்லாம லிருக்குமாணுல் அந்தத் தேசங்கள் நாகரீகமும் நற்பாங்கும் அடைந் திருக்கக் கூடுமா? அப்படியே நம்முடைய சுயபாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கிற வரையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயம்''.[7]

ஓய்வும் வசதியும் பெற்ற கதைத் தலைவனே இந்தக் கதையைக் கூறுவது போல இதன் வடிவம் அமைந்துள்ளது. கதையோட்டத் தில் அதிகச் சிக்கல்கள் இல்லாமல் இருப்பினும், சுவையாகக் கதையை ஆசிரியர் நடத்திச் செல்கிறுர். அவ்வாறு கதையை நடத்திச் செல்லும்போது, தம்முடைய கருத்துக்களையும் அக்கால சமூகத்தையும் ஆசிரியர் படம் பிடித்துக் காட்டத் தவறவில்லை. தம்முடைய கருத்துக்களை நிகழ்ச்சிகளாக மாற்றிக் கலைவடிவம் தராமல் அப்படியே சொற்பொழிவுகளாகத் தந்துள்ளார் என்பது இந்த நாவலுடைய குறையாகும். கதை மாந்தர் படைப்பைப் பொறுத்த மட்டில் வேதநாயகம் பிள்ளை மனிதப் பண்புகளை உள்ளது உள்ளவாறே காட்டாமல் முழுமையாக்கிக் காட்டுவதுடன் (Perfection) அவ்வாறு காட்டுவதே தம்முடைய நோக்கம் என்றும் கூறியுள்ளார்.[8]

கதை கற்பனையாயினும், படிப்பவர்க்கும் கதைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பேற்படுத்த ஆசிரியர் இதனைச் 'சரித்திரம்' என்றே அழைக்கிறுர். ஆங்கிலத்தில் தொடக்க காலத்தில் எழுந்த நாவல்களும் இவ்வாறே அழைக்கப்பட்டன. தமிழிலும் இதற்குப் பின்னர் எழுந்த நாவல்கள் 'கமலாம்பாள் சரித்திரம்', 'பத்மாவதி சரித்திரம்' என்றே பெயரிடப்பட்டதும் கருதத் தக்கன.

8. 'பிரதாப முதலியார் சரித்திரத்'தை அடுத்த 1893-ஆம் ஆண்டில் குருஸ்வாமி சர்மா எழுதிய 'பிரேம கலாவதீயம்' என்ற நாவல் தோன்றியது. உயர்வு நவிற்சியான நிகழ்ச்சிகளும், உண்மை இயலுக்குப் பொருந்தும் நிகழ்ச்சிகளும் கலந்த ஒரு நாவல் இது. உரையாடல்களில் பேச்சுத் தமிழைக் கொச்சை யாகப் பயன்படுத்துதல், கதை மாந்தரைப் பண்புகளாக உருவகப் படுத்துதல் ஆகிய இரண்டும் இந்த நாவலின் குறிப்பிடத்தக்க இயல்புகள் என்று கூறலாம்.

9. இதனையடுத்து 1896-ஆம் ஆண்டில் தோன்றிய ராஜம் ஐயரின் 'கமலாம்பாள் சரித்திரம்' உண்மையியலின்பாற்பட்ட மிகச் சிறந்த ஒரு நாவலாகும். 1893-95-ஆம் ஆண்டுகளில் தொடர்கதையாக இந்த நாவல் 'விவேக சிந்தாமணியில்' வெளி வந்தது. அந்த முறையில் தமிழிலேயே முதல் முதலாக வந்த தொடர்கதை என்ற சிறப்பையும் இந்த நாவல் பெறுகிறது.

---

[7] வேதநாயகம்பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், பக்கம் 276.

[8] மு. நூ. பக்கம். 8.

'கமலாம்பாள் சரித்திரம்' ஓர் அற்புதப் படைப்பு. அக்காலக் கிராமச் சூழ்நிலை, அவர்களின் வாழ்க்கை நெறிகள், பழக்க வழக்கங்கள் முதலிய அனைத்தையும் தம் நாவலில் மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ராஜம் ஐயர். இளமையிலேயே முதிர்ந்த அனுபவங்கள் பெற்ற ராஜம் ஐயரின் வேதாந்த விசாரணைகள் கதையுடன் இரண்டறக் கலந்து நாவலை அணிசெய்கின்றன. இந்த நாவலை எழுதுவதில் தமக்குக் கதையே முக்கிய கருத்தன்று என்றும், ''அவனது மாயா விபூதியாம் பெருங்கடலுள் ஓர் அலையுள், ஓர் நுரையுள், ஓர் துளியில் ஓர் அணுவை யானெடுத்து, அதனுள் என் புல்லறிவிற் கெட்டியமட்டும் புகுந்து பார்த்து, அவனே அங்கும் இருக்கக் கண்டு, ஆடிப்பாடி ஓட வேண்டும்'' என்பதும் தம் ஆசை என்று அவர் கூறியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.[9] அவருடைய 'வம்பர் மகாசபை'யின் வருணனையும் அம்மையப்ப பிள்ளையின் வேடிக்கைச் செயல்களும் படிப்பவர் நெஞ்சைக் கவர்வன.

10. ராஜம் ஐயருக்குப்பின் இன்றைய சமூகத்தின் குடும்பப் பிரச்னைகளைக் கருப்பொருளாகக் கொண்டு நாவல்கள் எழுந்தன. அவர்களுள் தலைமையானவர்கள் மாதவையாவும், பண்டித நடேச சாஸ்திரியும் ஆவர். மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' (1898), 'முத்துமீனாக்ஷி' (1903), 'விஜயமார்த்தாண்டம்' (1903) ஆகிய மூன்று நாவல்களும் மூன்று விதத்தில் சிறப்பாகக் குறிக்கத் தக்கன. 'பத்மாவதி சரித்திரம்'-கதை மாந்தரைத் தனித்தன்மையுடன், முரண்பாடுகளை அழகாகக் காட்டிப் படைத்தல், சிக்கலில்லாமல் நிகழ்ச்சிகளைப் பின்னும் பாங்கு ஆகியவற்றில் தனித்து நிற்கின்றது. அன்றியும் கதைமாந்தர் பேச்சுக்களைப் பேச்சுத் தமிழிலேயே எழுதவேண்டும் என்று குருஸ்வாமி சர்மா தம் நாவலில் காட்டிய கருத்திற்கு இந்த நாவலின் முன்னுரையில் தான் வடிவம் தரப்பட்டுள்ளது.[10] 'முத்துமீனாக்ஷி' விதவையரின் துயரைக் கருப்பொருளாகக் கொண்ட நாவல். இந்திய மொழிகளிலேயே இந்தப் பிரச்னையை முதலில் அணுகிய நாவல் என்பது மட்டுமல்ல, விதவைத் திருமணத்தை ஆதரித்து எழுதப்பட்ட முதல் நாவலும் இதுதான். 'விஜயமார்த்தாண்டம்' மறவர் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட நாவலாகும்.

பண்டித நடேச சாஸ்திரியின் 'தீனதயாளு' (1900) அன்றையக் குடும்ப வாழ்வைக் காட்டுவதினின்றும் ஒரு படிமேலே போய் அன்றைய அலுவலகங்களின் அவல வாழ்வையும் படம் பிடித்துக் காட்டுகிறது. இவருடைய மற்றொரு நாவலான 'திக்கற்ற இரு குழந்தைகள்', தமிழ் நாவல் வரலாற்றில் மற்றொரு திருப்பத்தை ஏற்படுத்தியது. மனிதன், குடும்பத்தின்—அதை அடக்கிய சமூகத்தின்—ஓர் அங்கம் என்ற நிலையில் நாவலின் கருப்பொருளானது

[9] பி. ஆர். ராஜமய்யர், கமலாம்பாள் சரித்திரம், பக்கம் 309-10.

[10] மாதவையா, பத்மாவதி சரித்திரம், பக்கம் 8.

போய், மனிதனுக்கென்று உள்ள தனிப் பிரச்னைகளை மையமாகக் கொண்டு நாவல்கள் எழத் தலைப்பட்டதை இந்த நாவல் சுட்டிக் காட்டுகிறது. அன்றியும் அடுத்துவரப் போகின்ற துப்பறியும் நாவல்களின் சகாப்தத்தையும் இந்த நாவல் முன்னறிவித்து நிற்கின்றது.

11. இதனையடுத்துத் தமிழ் நாவலில் ஏற்பட்ட காலத்தைத் தழுவல், மொழிபெயர்ப்பு, துப்பறியும் நாவல்களின் காலம் என்று கூறலாம். இந்தக் காலம் சுமார் முப்பது ஆண்டுகள் நீடித்தது. இந்தக் காலகட்டத்தில் தோன்றிய குறிப்பிடத்தக்க நாவலாசிரியர்களாக தி. மா. பொன்னுசாமிப் பிள்ளை, பாரதியார், வ. ரா., கா. சி. வேங்கடரமணி ஆகியவர்களைக் குறிப்பிடலாம்.

தி. மா. பொன்னுசாமிப் பிள்ளை இந்த நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளிலே ஆறு நாவல்களை எழுதினார். அவற்றுள் குறிப்பிடத்தக்கன 'கமலாக்ஷி'யும் (1903), 'சிவஞானமும்' (1920) ஆகும். இந்த நாட்டு வாழ்க்கையை மேலை நாட்டு ஆசிரியர்களின் பாணியில் படம்பிடித்துக் காட்டுதல், ஒவ்வொரு நாவலிலும் பத்தொன்பதாம் அத்தியாயத்தில் 'சிவஞான சித்தியாரி'ன் சில நூற்பாக்களை உரையாடல் வடிவில் விளக்குதல் ஆகிய இரண்டும் இந்த நாவல்களின் குறிப்பிடத்தக்க இயல்புகள்.

பாரதியாரின் 'சந்திரிகையின் கதை' ஒரு முற்றுப்பெறாத நாவலாகும். விதவை மறுமணமும், கலப்புத் திருமணமும் இந்த நாவலில் வரவேற்கப்பட்டு உள்ளன.

கவிக்குயில் பாரதியாரை மகாகவி என்று உலகிற்கு அறிமுகப் படுத்திய அறிஞர் வ. ரா. எழுதிய 'சுந்தரி' (1917), 'விஜயம்' ஆகிய இரண்டு நாவல்களும் விதவை மறுமணத்தைக் கருப் பொருளாகக் கொண்டவைகள் என்றாலும், 'சுந்தரி' கலை அழகுடன் மிளிர்கின்றது. கதைமாந்தர் படைப்பும், நிகழ்ச்சிகளின் கட்டுக்கோப்பும், வ. ரா. விற்கே உரிய தனித்த நடையும் இந்த நாவலின் வெற்றிக்குக் காரணங்களாகும்.

கா. சி. வேங்கடரமணியின் 'முருகன் ஓர் உழவன்' (1927), 'கந்தன் ஒரு தேச பக்தன்' (1932) ஆகிய இரண்டு நாவல்களும் இரண்டு புதிய துறைகளைத் தமிழ் நாவல் வரலாற்றில் தோற்றுவித்துள்ளன. ஆசிரியர் முதலில் இந்த நாவல்களை ஆங்கிலத்திலேயே எழுதினார். 'கந்தன் ஒரு தேசபக்தன்' நாவலை ஆசிரியரும், 'முருகன் ஓர் உழவன்' நாவலைக் கிருஷ்ணகுமாரியும் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். 'முருகன் ஓர் உழவன்', கிராமச் சீர்திருத்தங்களின் இன்றியமையாமையை மையமாகக் கொண்டு பின்னப்பட்ட ஓர் அழகிய நாவல். அன்றைய கிராமங்களின் நிலையும், அவற்றை எவ்வெவ்வகையில் சீர்திருத்தவேண்டும் என்பதும் இந்த நாவலில் நிகழ்ச்சிகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன. 'கந்தன் ஒரு தேசபக்த'னை முதல் தமிழ் அரசியல் நாவல் என்றே

குறிப்பிடலாம். அன்றைய அடிமை இந்தியாவின் இழிநிலையும், விடுதலையின் தேவையும் கதைமாந்தர் மூலம் அருமையாகக் காட்டப்பட்டுள்ளன. பின்னர் எழுந்த கல்கியின் 'அலையோசை'யில் வரும் பல கதைமாந்தர் இந்த நாவலின் கதைமாந்தரை நினை வூட்டுகின்றனர்.

12. 1936-37-இல் வெளிவந்த கல்கியின் 'கள்வனின் காதலி' யுடன் தமிழ் நாவல் வரலாற்றில் மற்றொரு காலகட்டம் தொடங்கு கிறது. இதனை யடுத்து சுமார் இருபது ஆண்டுகளைக் 'கல்கி காலம்' என்றே கூறிவிடலாம், துப்பறியும் நாவல்களிலே மூழ்கிக் கிடந்த தமிழ் நாவல் வாசகர்களைத் திசை திருப்பியது 'கள்வனின் காதலி' தான். ஒரு கள்வனைக் கதைத் தலைவனாகக் கொண்டு நிகழ்ச்சிகளை இயற்கைக்குப் பொருந்தப் பின்னி, நாவலுக்கு அதிக வாசகர்களை இந்த நாவலின்மூலம் தேடித்தந்தவர் கல்கி. இவ ருடைய நாவல்கள் அனைத்திலுமே அக்காலச் சமூகமும் பின்னணி யில் அழகாகத் தீட்டப்பட்டிருக்கும். அக்கால அரசியல் சூழ்நிலை எல்லா நாவல்களிலுமே கூறப்பட்டிருந்தாலும், அவருடைய நாவல்களில் 1948-இல் எழுதப்பட்ட 'அலைஓசை' தனித்து நிற் கின்றது. முதல் தமிழ் நாவலாசிரியர், நாவல்களை 'வசன காவி யங்கள்' என்று கூறியது இந்த நாவலுக்கு மிகமிகப் பொருந்தும். 1930-48 ஆண்டுகளின் அரசியல் வாழ்வே இந்த நாவலின் பின்னணி. அதிக அளவு எண்ணிக்கையுள்ள கதைமாந்தர் வந்தா லும் கதையைச் சுவையுடன் அரசியலுடன் கலந்து தரும் பாங்கு கல்கிக்கு மட்டும் கைவந்த ஒன்று. இவருடைய நாவல்களின் வெற்றிக்கு இவருடைய எளிய, இனிய, ஆழ்ந்த தமிழ்நடையும் ஒரு குறிப்பிடத்தக்க காரணமாகும்.

13. இவருக்கு முன்னரே நாவல் எழுதத் தொடங்கி, அதிக நாவல்களை எழுதிப் புகழ்பெற்ற மற்றொரு நாவலாசிரியர் 'ஜீவா' என்ற புனைபெயரில் எழுதும் நாரணதுரைக்கண்ணன் ஆவார். 'கோகிலா', 'தியாகத்தழும்பு', 'நடுத்தெரு நாராயணன்' முதலி யன இவருடைய சிறந்த நாவல்களில் சில.

14. கல்கிக்குப் பின் பெருமளவு நாவல்களை எழுதி அதிக வாசகர்களைக் கவர்ந்தவர்கள் என்று தேவன், டாக்டர் மு. வ., அகிலன் ஆகியவர்களைக் குறிப்பிடலாம்.

தேவனுடைய நாவல்கள் அனைத்தும் தொடர்கதையாக வந்த வையே. அவை இன்றளவும் நூல்வடிவில் வரவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். ஓர் எழுத்தாளனின் வாழ்வை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட 'மிஸ்டர் வேதாந்தம்' இவருடைய நாவல் களில் மிகச் சிறந்ததாகும்.

டாக்டர் மு. வ. வும், அகிலனும் சமகாலத்தவர் என்பதுடன் ஏறத்தாழ ஒரே காலத்தில் எழுதத் தொடங்கியவர்கள். அவ் வாறு எழுதினும் இருவருடைய போக்குகளும் தனித்தன்மை

யுள்ளனவாகும். டாக்டர் மு. வ. நல்ல சிந்தனையாளர், அறிஞர் என்பதுடன் சிறந்த கலைஞருமாவார் என்பதை அவருடைய நாவல்கள் காட்டுகின்றன. மற்ற நாவலாசிரியர்கள் படைப்பிலக்கியம் படைப்பதிலிருந்து திறனாய்வுத் துறைக்குப் போக, இவரோ ஆராய்ச்சி அறிஞராகப் புகழ்பெற்ற பின்னரே நாவல் துறைக்கு வந்தார்.[11] பலவகைக் கருப்பொருள்களை நாவலின் அக அமைப்பிலும் பல்வேறு வகையான நோக்கு நிலைகளை (View Points) புறவடிவிலும் சிறப்புடன் கையாண்டவர் இவர். குடும்பத்தில் நிகழும் சிறு சிக்கல்கள் முதல் இரண்டாம் உலகப் போர்வரை இவர் எல்லாவற்றையும் தம்முடைய நாவலின் பொருள்களாக எடுத்தாண்டுள்ளார். பால் உணர்ச்சிகளை அறிவியல் முறைப்படி ஆராயும் 'அல்லி', இளைஞர் மனத்தின் இயல்புகளைக் காட்டும்' அகல் விளக்கு', அரசியல் வாழ்வின் அவலங்களைக் காட்டும் 'கயமை', வாழ்க்கையில் தவறிய பெண்டிரின் மனப்போராட்டங்களைக் காட்டும் 'நெஞ்சில் ஒரு முள்' ஆகியவை இவருடைய நாவல்களில் மிகச் சிறந்தவையாகும். தம்முடைய உயர்ந்த சிந்தனைகளையும், அறிவுரைகளையும், அறவுரைகளையும் கலைவடிவாக்கித் தந்து இந்த நூற்றாண்டின் இணையற்ற நாவலாசிரியராக டாக்டர் மு. வ. விளங்குகிறார்.

மனித சிந்தனைகளை மையமாக வைத்து நாவல்களைப் படைத்தவர் டாக்டர் மு. வ. என்றால் மனித உணர்ச்சிகளை மையமாக வைத்து நல்ல பல நாவல்களைப் படைத்துத் தந்தவர் அகிலன் என்று கூறலாம். ஜான் ஓ. ஹாரா தம்முடைய நாவல்களைப் பற்றிக் கூறிக் கொண்டது இவருடைய நாவல்களுக்கும் பொருந்தும். இவருடைய ஒவ்வொரு நாவலும் அது எழுந்த சமுதாய, அரசியல், பின்னணிகளை அழகாகக் காட்டுகின்றது. கலப்புத் திருமணத்தை மையமாகக் கொண்ட 'வாழ்வு எங்கே?', இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும் இருந்த சமூக நிலைகளின் ஏற்றத் தாழ்வுகளைப் பின்னணியாகக் கொண்ட 'புதுவெள்ளம்', ஓர் எழுத்தாளன் மனஉணர்ச்சிகளின் மேல் கட்டப்பட்ட 'பாவை விளக்கு' ஆகியவை இவருடைய சிறந்த நாவல்களில் சில. இவற்றுள் 'பாவை விளக்கு' பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் நெஞ்சைக் கவர்ந்த நாவலாகும். கதைமாந்தர் படைப்பு, நடை, நிகழ்ச்சிப் பின்னல் ஆகியவற்றில் இந்த நாவல் தனித்து நிற்கின்றது.

14. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் பிரச்னைகளையும் வாழ்க்கைப் போக்குகளையும், பேச்சுவழக்குகளையும் மையமாகக் கொண்டு எழுதப்படும் 'வட்டார நாவல்'களை எழுதுவதில் ஆர். ஷண்முக

---

[11] "Varadarasan is the objective research worker, thinker and scholar who has turned novelist, in contrast with writers of fiction in TamilNad who have turned research workers".

—Xavier S. Thani Nayagam, 'The Novelist of the 'City of Madras', Tamil Culture, Vol. X, No. 2, April-June 1963, The Academy of Tamil Culture, Madras, p.8.

சுந்தரம் சிறந்து விளங்குகிறார். கொங்கு நாட்டினரின் வாழ்க்கையைக் காட்டும் இவருடைய நாவல்களில் 'பூவும் பிஞ்சும்', 'நாகம்மாள்', 'அழியாக்கோலம்' ஆகியவை சிறப்பாகக் குறிக்கத் தக்கன. இதே துறையில் தோன்றிய மற்ற நாவல்களில் ஆ. பழனியப்பனின் 'காவிரிக் கரையினிலே', இலங்கை எழுத்தாளர் கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்', 'சடங்கு' ஆகியவை பாராட்டத் தக்க கலைப்படைப்புக்கள்.

15. கல்கியுடன் பிறந்த நாவலின் மறுமலர்ச்சிக் காலமாகிய தற்போது தமிழ் நாவல் பூங்காவில் எத்தனையோ நூற்றுக்கணக்கான வண்ணமும் மணமும் மிக்க மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. கிராம மக்களுக்கு மண்ணின்மீதுள்ள காதலை மையமாகக் கொண்ட சங்கரராமின் 'மண்ணாசை', ஓர் இசைக்கலைஞரின் வாழ்வைக் கருப்பொருளாகக் கொண்ட ந. சிதம்பர சுப்ரமணியனின் 'இதயநாதம்'; பால் பிரச்னைகளை மையமாகக் கொண்ட தி. ஜானகிராமனின் 'மோகமுள்', சாவியின் 'விசிறிவாழை'; நெசவாளர்களின் துயரவாழ்வைக் காட்டும் 'பஞ்சும் பசியும்'; வரதட்சணைக் கொடுமையைக் காட்டும் பி. எஸ். ராமையாவின் 'பிரேமஹாரம்'; ஜல்லிக்கட்டு என்ற கிராமிய விளையாட்டை மையமாகக் கொண்ட சி. சு. செல்லப்பாவின் 'வாடிவாசல்'; தற்காலத் திரைப்படங்கள் பெண்களின் மனத்தை எவ்வெவ்வகையில் கெடுக்கின்றன என்பதைக் கருப்பொருளாகக் கொண்ட கோவி. மணிசேகரனின் 'தவமோ? தத்துவமோ?'; வயதடைந்தும் பருவமடையாப் பெண்ணின் மனஇயல்புகளைக் காட்டும் அவருடைய மற்றொரு நாவலான 'தென்னங்கீற்று'; ஓர் எழுத்தாளனின் வாழ்க்கையை மையமாகக்கொண்ட நா. பார்த்தசாரதியின் 'குறிஞ்சி மலர்'; ஒரே நாளில் நடந்த நிகழ்ச்சிகளை அழகுறத் தரும் க. நா. சு.வின் 'ஒரு நாள்'; அலுவலகத்தில் ஒருநாள் உண்மைக்கு ஏற்படும் சோதனைகளை மையமாகக் கொண்ட பிலஹரியின் 'நெஞ்சே நீ வாழ்க!'; நனவோடை உத்தியை இந்திய மண்ணிற்கேற்பக் கையாண்ட லா. ச. ரா.வின் 'புத்ர'; ஆர்வியின் 'அணையா விளக்கு'; விந்தனின் 'பாலும் பாவையும்' முதலியன சிறப்பாகக் குறிக்கத் தக்க நாவல்கள்.

16. தமிழ்ச் சமூக நாவல்களின் வளர்ச்சியில் நாவலாசிரியைகளின் பங்கும் குறிப்பிடத்தக்கதாகும். வீட்டுப் பிரச்னைகளை மையமாகக் கொண்ட பல 'குடும்ப நாவல்'களை இவர்கள் படைத்துத் தந்துள்ளனர். குகப்பிரியையின் 'சந்திரிகா'; ராஜம்கிருஷ்ணனின் 'மலர்கள்'; 'குறிஞ்சித்தேன்'; லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்', 'பெண்மனம்', 'காஞ்சனையின் கனவு'; அநுத்தமாவின் 'பிரேம கீதம்,' 'மணல் வீடு,' 'நைந்த உள்ளம்,' முதலியன பலர் மனங்களைக் கவர்ந்த இனிய நாவல்கள்.

17. நாவலைத் தம்முடைய சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தி, கலைவடிவில் சீர்திருத்தக்

கருத்துக்களைப் பொதிந்து தந்தவர்களில் சிறப்பிடம் பெறத் தக்கவர் சி. என். அண்ணாதுரை. அவருடைய 'பார்வதி, பி.ஏ.'வும், 'ரங்கோன் ராதா'வும் இத்துறையில் குறிப்பிடத்தக்க இரண்டு சிறந்த நாவல்கள்.

18. இதுகாறும் கூறியவற்றால், கதை நாவலின் அடிப்படையாகனும் உரை நடை செல்வாக்குப்பெற்ற பின்னரே நாவல் வடிவம் தோன்றியதென்பதும், முதல் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திர'த்தின் இயல்புகளும், பிற பத்தொன்பதாம் நூற்றாண்டு நாவல்களின் போக்குகளும், இருபதாம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் சமூக நாவல் பெற்றிருந்த வீழ்ச்சியும், கல்கி ஏற்படுத்திய மறுமலர்ச்சியும், தேவன், டாக்டர் மு. வ., அகிலன் ஆகியோரின் சாதனைகளும், பல்வேறு துறைகளில் கிளைவிடும் இன்றைய நாவல்களின் போக்குகளும், நாவலாசிரியைகளின் பங்கும், சீர்திருத்தக் கருத்துக்களுக்கு நாவல் வடிவம் கருவியாவதும் போன்ற செய்திகளை அறியலாம். மாறிவரும் உலகில் தமிழ்ச் சமூக நாவலுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதற்கு இவை கட்டியம் கூறி நிற்கின்றன.

நூல் விவர அட்டவணை

தமிழ்

1. கமலாம்பாள் சரித்திரம், பி. ஆர். ராஜமய்யர், விவேகசிந்தாமணி, சென்னை, 1947.
2. தொல்காப்பியம், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1961.
3. பத்மாவதி சரித்திரம், மாதவையா, லிப்கோ வெளியீடு, சென்னை, 1964.
4. பிரதாப முதலியார் சரித்திரம், வேதநாயகம் பிள்ளை, செல்லப்ப முதலியார், சென்னை, 1907.
5. மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை, கு. அருணாசலக் கவுண்டர், தி அலய்டு பப்ளிஷிங் கம்பெனி, சென்னை, 1952.

ஆங்கிலம்

1. Dictionary of World Literary Terms, Edited by Joseph T. Shipley, George Allen & Unwin Ltd., London, 1955.
2. India Through the Ages, Jadunath, M. C. Sarkar & Sons, Calcutta, 1928.
3. Tamil and English Dictionary, M. Winslow, American Mission House, Madras, 1862.
4. Tamil Culture, A Quarterly Journal, Academy of Tamil Culture, Madras, 1963.

கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

நா. பார்த்தசாரதி*

தமிழில் இலக்கியப் பத்திரிகைகள்

இக் கட்டுரையில் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சியைப் பற்றிக் கூறுவதற்கு முன் இந்தியாவிலும் தமிழகத்திலும் நவீனப் பத்திரிகைத்துறை (Modern Journalism) எப்போது பரவலாக அறிமுகத்துக்கு வந்தது என்பதை ஓரளவு முன்னுரையாகச் சுருக்கித்தர வேண்டுவது இன்றியமையாதது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய பிரிவுகளுக்கும் இயல், இசை, நாடகம் ஆகிய பிரிவுகளுக்கும் தமிழில் இலக்கணம் இருந்தது போல் பத்திரிகைத்துறைக்கு முன்னிலக்கணம் எதுவும் இல்லை. எப்படி நவீன இலக்கியத் துறைகளான சிறுகதை, நாவல், முதலியன (Modern Literature) நமக்கு ஆங்கில மொழியின் தொடர்பால் கிடைத்தனவோ அப்படியே நவீனப் பத்திரிகைத்துறையும் ஆங்கில மொழியின் தொடர்பால் நமக்குக் கிடைத்த ஒன்று ஆகும். தேசிய விடுதலை இயக்கத்தைப் பற்றிய உணர்வு (National Movement) தோன்றிய காலத்தில் அந்த இயக்கத்திற்கு உறுதுணையாகப் பயன்படும் என்ற காரணத்தினால்தான் பத்திரிகைத் துறையைப் பற்றியே இந்தியாவிலும் தமிழகத்திலும் முதன்முதலாகச் சிந்திக்கத் தொடங்கினோம். அந்தச் சிந்தனை அப்போது தினப் பத்திரிகை (Daily News Paper) செய்திப் பத்திரிகை (News Magazine) அளவில்தான் வளர்ந்தது. பாரதியாரின் 'இந்தியா', 'சுதேசமித்திரன்,' 'இந்து', 'தினமணி' 'தமிழ்நாடு' போன்றவை இவ்வாறு தோன்றியவையே. தமிழகத்தைத் தவிரத் தமிழ் வழங்கும் பிற நாடுகளான இலங்கை, மலேயா, பர்மா, போன்ற பிறபகுதிகளிலும் தொடக்க காலப் பத்திரிகைத் தொழில் இந்த எல்லையில்தான் இருந்தது. வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை, இலக்கியப் பத்திரிகை, நகைச்சுவைப் பத்திரிகை, தொழில்துறைப் பத்திரிகை, என்றெல்லாம் பிரிந்து பின்பு இன்றுள்ள நிலைக்குக் கிளைத்தது இந்த ஆரம்ப எல்லையிலிருந்ததுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

---

*ஆசிரியர், 'தீபம்', சென்னை.

2. இந்தப் பிரிவுகளில் இலக்கியப் பத்திரிகை (Literary Journal) என்ற பிரிவை மட்டும் எடுத்துக் கொண்டாலும் கடந்த கால் நூற்றுண்டுக் கால அளவில்தான் அது வளர்ச்சியும், வளமும், பல்வேறு வடிவமும் பெற்றிருக்கிறது. தொடக்க காலத்தமிழ் இலக்கிய ஏடுகள் யாவும் இலக்கண, இலக்கிய ஆராய்ச்சிகளிலும் புலவர்களின் விவாதங்களிலுமே கவனம் செலுத்தின. பாமரத் தமிழ் மகன் அவற்றில் ஈடுபாடுகொள்ள அவை வாய்ப்பளித்ததில்லை. மதுரை, கரந்தைத் தமிழ்ச் சங்கங்களின் வெளியீடுகளான ''தமிழ்ப் பொழில்'', ''செந்தமிழ்'', சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ''செந்தமிழ்ச்செல்வி'' ஆகியவற்றை இந்தத் தொடக்ககால இலக்கிய ஏடுகளில் சேர்த்துக் கொள்ளலாம். இவை தமிழ் இலக்கியப் பத்திரிகைகளாயினும், நவீனப் பத்திரிகை உத்திகளை இவை தேடவில்லை. புலமை எல்லேயிலேயே (Intellectual's rank) இவை இருந்தன. நச்சினுர்க்கினியன், விவேக பாநு, விவேக சிந்தாமணி, பஞ்சாமிர்தம், போன்றவற்றையும் ஏறத்தாழ இந்தத் தொடக்கக் கால இலக்கிய ஏடுகளில்தான் இணைக்கவேண்டும். நவீன இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சிக் காலம் என்பது 'மணிக்கொடி', 'கலைமகள்', 'சந்திரோதயம்', 'பொன்னி', ஆகியவற்றிலிருந்து தொடங்குகிறது. தமிழ் இலக்கியப் பத்திரிகைகளில் புதுமையும், செழிப்பும், பெருகிய காலம் இதுதான்.

மணிக்கொடிக்காலம்

3. 'மணிக்கொடி,' 'கலைமகள்' காலத்துக்கு முந்திய இலக்கியப் பத்திரிகைகளான செந்தமிழ், தமிழ்ப்பொழில் போன்றவற்றில், ஓர் இலக்கண முடிவு பற்றிய விவாதமோ, ஒரு பழம்பாடலுக்குப் பொருள் காண்பதில் இருபெரும் புலவர்களுக்கிடையிலுள்ள கருத்து வேறுபாடோ, கல்வெட்டு, சாஸன ஆராய்ச்சிகளோதான் இலக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டன.

4. ஆனல் 'மணிக்கொடி, 'கலைமகள்', ஏடுகள் அந்த நிலையை மாற்றிக் கதை, நாவல், இலக்கியத் திறனுய்வு (Literary criticism) புத்தக விமர்சனம் (Book Review) ஆகிய அம்சங்களையும் இலக்கிய ஏட்டுக்குரியவைகளாக்கி வளர்த்தன. புனைகதை (Fiction) அம்சத்துக்கு இலக்கிய அந்தஸ்து (Literary Merit) ஏற்பட இந்தப் பத்திரிகைகளே முதன்முதலில் பாடுபட்டன என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும். புதுமைகளையும், சோதனை இலக்கியத்துறைகளையும் (Experimental Ways) வளர்க்க இந்த ஏடுகளின் காலத்துக்குப் பின்பே அதிக வாய்ப்புக் கிடைத்தது. இலக்கியப் போக்குகள் (Literary trends) என்று உலக இலக்கியத் தரத்துக்குப் பேசத்தக்க சில நிலைமைகள் இந்த இலக்கியப் பத்திரிகைகளால்தான் அறிமுகமாயின. இந்தக் காலகட்டத்தில் மேலை நாட்டின் இலக்கியத்துறைகளோடு தமிழ் எழுத்தாளர்களுக்கு ஏற்பட்ட பரிச்சயமும் இதற்கு ஒரு காரணம். இந்தப் பத்திரிகைகள் வகுத்த வழியில் பின்னல் இலக்கிய அம்சங்களோடு கவர்ச்சிகர

மான பொதுமக்கள் அம்சங்களையும் (Features of Mass scale Journalism) கலந்து தமிழில் சில பத்திரிகைகள் வந்தன. அவை 'ஹனுமான்', 'இந்துஸ்தான்', 'அணிகலம்' போன்றவை. இதே காலகட்டத்தில்தான் ரங்கூனிலிருந்து வெ. சாமிநாத சர்மாவின் 'ஜோதி'யும் வெளிவந்தது. பின்னாளில் வெளிவந்த 'காலச் சக்கரம்', 'காதம்பரி,' 'தேனி', 'சூறாவளி', போன்ற பத்திரிகைகளுக்கு எல்லாம் கூட 'மணிக்கொடி', 'கலைமகள்' ஆகியவைதான் தூண்டுதலாக அமைந்தன. இலக்கியப் பத்திரிகை என்ற பெயரின் பொருள் முழுமை அடையத் தொடங்கிய சமயம் இதுதான் என்று கூறவேண்டும். ''மணிக்கொடி'' நடந்து நின்றுவிட்டாலும் தமிழில் இலக்கியப் பத்திரிகைகளின் வரலாற்றை எழுத அது தான் மைல் கல்லாக இன்னும் இருக்கிறது. மணிக்கொடியும், கலைமகளும் ஒரு கால எல்லையில் தமிழ் இலக்கியத்தின் புதிய கிளைகளில் பல சோதனைகளும், சாதனைகளும், செய்து பார்த்த ஏடுகள். அந்தச் சோதனைகளும், சாதனைகளுமே பிற்காலத்தில் பல இலக்கியப் பத்திரிகைகளுக்கு முன்மாதிரியாக அமைந்தன. பத்திரிகைத் தொழிலில் இலக்கிய ரீதியான வளம் இந்த இரண்டு பத்திரிகைகளாலும் ஒரு காலத்தில் துல்லியமாகவும், துலாம்பரமாகவும் நிரூபிக்கப்பட்டன. தமிழில் உரைநடை வளர்ச்சியின் திருப்புமுனைக் காலமாக இந்தப் பத்திரிகைகளின் காலம் இருந்ததனால் இவை புதிய புதிய இலக்கிய வகைகளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தின. பாரதியின் தூண்டுதல் (Influence) இந்தக் காலகட்டத்துத் தமிழ் இலக்கியத்தை வளர்க்கத் துணை செய்தது. வசன நடையில் கவிதையும் நளினமும், கவிதையில் வசன நடையின் எளிமையும் விரவுகிற அழகிய தமிழ் அமைப்பைப் பாரதி இந்தப் பத்திரிகைகளுக்கும் இவற்றில் எழுதியவர்களுக்கும் உதவியிருந்தார். பாரதி யுகத்தின் உத்வேகம் தமிழ்ப் பத்திரிகைகளின் இலக்கிய எழுச்சிக்கும் துணை புரிந்தது. பிற்காலத்தில் பாரதிதாசனின் 'குயிலும்'' சுரதாவின் ''காவியமும்'' கவிதை இலக்கிய ஏடுகளாக நடக்கவும் இந்தப் பாரதியுகத்துத் தூண்டுதலே முன்விளைவாக இருந்திருக்கவேண்டும் என்று அநுமானிக்க இடமிருக்கிறது. தமிழ் இலக்கிய ஏடுகளை ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையூட்டும் நிலைக்குக் (Promising stage) கொணர்ந்த காலம் இதுதான்.

இடைக்கால நிலைகள்

அதன்பின் இடைக்கால எல்லையில் ஜனரஞ்சக அம்சமும் பத்திரிகைத் தொழிலில் கவனிக்கப்பட்டது. ''கல்கி'' என்ற எழுத்தாளரின் பணியால் 'விகடன்', 'கல்கி' போன்ற இதழ்கள் தோன்றின. அவை இலக்கிய எல்லையிலிருந்து பெருகித் தம்மை இன்னும் எளிமையாக்கிக் கொண்டு வியாபாரமாகவும் மாறின. ''இலக்கியப் பத்திரிகைகள்'' என்ற பெயர் குன்றிப் ''பத்திரிகை இலக்கியம்'' என்று குறிப்பிடத்தக்க சில துணை அம்சங்கள் பத்திரிகைத் தொழிலுக்குக் கிடைத்தன.

அரசியல் தலையங்கம், நகைச்சுவைத் துணுக்குகள், தொடர் கதை, போன்ற அம்சங்கள் மிகமிக எளிமையாக்கப்பட்டன. இலக்கிய நிலைகளைவிடப் பத்திரிகைத் திறன்கள் (Journalistic talents) கவனிக்கப்பட்டன. எவ்வளவு செம்மையாக நடத்தப்படுகிறது என்பதை விட எவ்வளவு இலட்சம் பேர் படிக்கிறார்கள் என்பதே பெருமையாக மாறிய காலம் இதுதான். இலக்கியப் பத்திரிகைகள் தங்கள் நிலைக்குப் பயந்து தயங்கிய காலமும் இதுதான். ஏறக்குறைய மேலைநாட்டுப் பத்திரிகைத்துறையின் விளைவு (Impact of modern Journalism) இந்தச் சமயத்தில் தமிழிலும் ஏற்பட்டது. பத்திரிகைத்துறை செல்வாக்கான ஒரு தொழிலாக ஜனநாயக சாதனமாக மாறியது; மாற்றப்பட்டது. இரண்டொரு இலக்கியப் பத்திரிகைகளையும் இந்த நிலை நன்கு பாதித்தது. இந்தச் செல்வாக்கின் முழுப்பயனைக் ''குமுதம்'' போன்ற வெகுஜன சஞ்சிகைகள் அறுவடை செய்தன. வெகுஜன சஞ்சிகைகளின் அமோக வளர்ச்சி இலக்கியப் பத்திரிகைக்காரர்களுக்குப் பயத்தை அளித்தன. இந்தப் பயம் இரண்டுவித விளைவுகளை உண்டாக்கியது. வெகுஜன சஞ்சிகைகளிலிருந்து வேறுபட்ட தரமான நல்ல இலக்கியப் பத்திரிகைகளை நடத்த வேண்டுமென்ற பிடிவாதம் சிலருக்கு உண்டாகவும், வெகுஜன சஞ்சிகைகளை ஆதரிப்போர் இந்த வழியிலேயே முற்றிலும் போய்விடவும் நேர்ந்தது. இதனால் இலக்கியத் திறனுள்ள பத்திரிகைகளில் கவனம் செலுத்துவோரும் அத்தகைய வாசகர்களும் தனித்தனியே தங்கள் துறைகளில் கவனம் செலுத்தத் தொடங்கினர். தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு இந்த நிலை ஓரளவு உறுதுணை புரிவதாயிருந்தது என்பதை மறந்துவிடுவதற்கில்லை. இலக்கியத் தரமான குழு ஒன்று எழுத்துலகிலும், வாசகர் உலகிலும் உண்டாகவும் இந்த வெகுஜன ரஞ்சகமான இதழ்களே மறைமுகமான தூண்டுதல்களாக இருந்தன என்று அநுமானிக்கலாம். வெகுஜனப் பத்திரிகைத்துறை ஆதிக்கம் (Influence of Popular Journalism) இலக்கிய ரீதியான தனித்தன்மை, அசல்தன்மை (Individuality, Originality) உள்ள பத்திரிகைகளைக் கூடப் பாதிக்க நேர்ந்தது. இந்தக் கால கட்டத்தில் இப்படிச் சோதனையைத் தாங்கமுடியாமல், நெல்லையிலிருந்து வந்த 'சாந்தி', சென்னையிலிருந்து வந்த 'சரஸ்வதி,' 'எழுத்து,' 'இலக்கிய வட்டம்,' பம்பாய் ஏடு 'விந்தியா' போன்றவை சிரமப்பட்டுப் போராடின.

மலேசியாவில் 'மலைமகள்', ஈழத்தில் 'புதுமை இலக்கியம்', 'மரகதம்' போன்ற இதழ்களும் இதே கால கட்டத்தில் இலக்கியத் தரமான செயல்களைச் செய்ய முயன்றன. ரங்கூனில் செய்தி இதழாக ''பர்மா நாடு'' ஒன்று மட்டுமே இந்தச் சமயத்தில் தமிழ் ஏடாக இருந்தது. கலைமகள் காரியாலயம் வெளியிட்டு வளர்த்து வரும் 'மஞ்சரி', கோவை 'கலைக்கதிர்', 'தாமரை' போன்றவைகூட வெகுஜனக்கவர்ச்சி இதழ்களின் அளவு செல்வாக்குப் பெறமுடியவில்லை.

தற்கால நிலைமை

'சரஸ்வதி', 'இலக்கிய வட்டம்' போன்ற பல இலக்கியப் பத்திரிகைகள் சோதனையைத் தாங்காது நின்றேவிட்டன. 'எழுத்து' புதுக்கவிதை, விமர்சனம் (Free verse, Literary Criticism) ஆகிய துறைகளில் சோதனை செய்து வருகிறது. 'கலைமகள்' 1950ம் ஆண்டுக்கு முன் சிறுகதைத்துறையில் செய்த சோதனை முயற்சிகள் போல் இப்போது செய்வதில்லை. புதிதாகத் தோன்றிய 'தீபம்' மாத இதழ் இலக்கிய விவாதங்கள், நாடகம், சிறுகதை பற்றிய இலக்கிய விவாதங்கள், போன்றவற்றிலும், திறனாய்விலும் தரமான சிறுகதைகளை வெளியிடுவதிலும் விறுவிறுப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. பெரும்பாலான பத்திரிகைகள் கதைகளை மட்டுமே இட்டு நிரப்புவதோடு இலக்கியப்பணி நிறைந்து விடுவதாக நினைக்கும் இந்த நாளில் புதிய சோதனைகளைச் செய்ய இலக்கியப் பத்திரிகைகள்கூடத் தயங்குகின்றன.

நாட்டின் அரசியல் பொருளாதார, சினிமா வேகங்கள் நிதானமான போக்குள்ள பத்திரிகை அம்சங்களை ஊக்குவிக்கத் துணை செய்யவில்லை. ஒரு சினிமாப் பத்திரிகை இலக்கிய அம்சங்களில் எதுவுமே இன்றி வெளி வரமுடியும் என்பதுபோல் ஓர் இலக்கியப் பத்திரிகை சினிமா எதுவும் இன்றி வெளிவரமுடியாது என்றாகிவிட்டது தற்கால நிலைமை. இலக்கியத்தின் புதிய பழைய துறைகளில் ஆழ்ந்தகன்ற கவனம் செலுத்தும் பத்திரிகைகள் சிலவாவது வேண்டும். மொழியின் ஜீவாதாரமான பிரச்னை இது. விதை நெல் சேமித்து வைத்தால்தான் மறுபடி பயிரிட முடியும். இத்தகைய இலக்கியப் பத்திரிகைகள் மொழிக்கு விதை நெல்லைப் போன்றவை. நாளை இலக்கிய முயற்சிகளைப் பயிர் செய்ய இவை உதவுவதைப் போல வேறெவையும் உதவமாட்டா என்ற உணர்வு நமக்கு இருப்பது நல்லது.

இலக்கிய ஏடுகளின் எதிர்காலம்

தமிழ் இலக்கிய இயக்கம் இப்போது வளர்முகமாக இருக்கிறது. அங்கங்கே எழுத்தாளர் சங்கங்கள், வாசகர் பேரவைகள் தோன்றிப் புதுமை இலக்கியம் பற்றிச் சூழ்ந்து சிந்திக்க முனைந்துள்ள காலம் இது. இந்தக் காலத்திலும் எதிர்காலத்திலும் இலக்கியத் தரமான பத்திரிகைத் தொழில் (Ideal Journalism) கொஞ்சம் காலூன்ற வாய்ப்பிருக்கிறது. விமர்சனம், திறனாய்வு, இலக்கியத்தில் சோதனை முயற்சிகள், விவாதங்கள், போன்றவற்றை நடத்தும் தீவிரமாக இலக்கியக் கொள்கை உள்ள பத்திரிகைகளுக்கு எதிர்காலம் இருக்கிறது. எவ்வளவு வெகுஜனப் பத்திரிகைகள் அமுத்தினாலும் இலக்கியப் பத்திரிகைகள் வளர முடியும்; வளர வேண்டும்.

அகநானூற்றிலோ புறநானூற்றிலோ ஒரு பாடலுக்கு விளக்கமும் நயமும் கூறிஞலோ படம் வரைந்து விட்டாலோ அதுவே இலக்கியப் பத்திரிகையின் இலட்சணம் என்று கருதிய காலம் மாறி இலக்கியப் பத்திரிகையின் இலக்கிய நோக்கும் (Literary aim) பயனும் (Literary output) நன்கு புரிந்து கொள்ளப்படும் காலமாக எதிர்காலம் இருக்கும். இலக்கியப் பத்திரிகை வளர்ச்சியில் கருத்துள்ள யாவரும் துடிப்பான இந்த எதிர் காலத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பல்லாயிரம் விதமான பத்திரிகைகள் ஒரு மொழியில் நடந்து வளர்ந்தாலும் அந்த மொழியின் நாளைய நிதிக்குவை என்ற சேமிப்புக்குப் பொருள் வழங்குபவை இலக்கிய ஏடுகளே என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். வாசகர்களில் நல்ல கூட்டம் ஒன்று வெகு ஜனப் பத்திரிகைத் தரத்தில் மட்டும் திருப்தி காணுமல் இலக்கியத் தரமான பத்திரிகைகளை எதிர்பார்க்கும் எதிர்காலம் உருவாக வேண்டும். மொழியின் நிலைத்த சிறப்பிற்கு ஒரு காலத்தில் கவிதை இலக்கியம் எப்படி ஓர் அச்சாணியாக இருந்ததோ அப் படியே இலக்கியப் பத்திரிகைகளும் மொழிக்கு அச்சாணியாக இருக்க ஏற்றவையாகும். என்கௌண்டர் (Encounter) மாடர்ன் ரெவ்யூ (Modern Review) தமிழ்க்கலை (Tamil culture) போன்ற இதழ்கள் தமிழில் பெருகி வளரவேண்டும். ஒரு நல்ல இலக்கியப் பத்திரிகை பல்லாயிரம் பேருக்குக் கற்பிக்கும் பேராசிரியனைப் போன்றது. தரமான பத்திரிகைத் தொழிலுக்கு இலக்கியப் பத்திரிகைகளே முன்னேடிகளாக இருக்கமுடியும். பத்துத் தரக்குறைவான பத்திரிகைகளிலிருந்து ஒரு நல்ல விளைவும் ஏற்படமுடியாது. அதே சமயத்தில் ஒரு தரமான இலக்கியப் பத்திரிகையிலிருந்து பத்து நல்ல பத்திரிகைகள் தோன்றக்கூடும்.

தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் உரைநடை

அகிலன் *

மனிதர்கள் தம் கருத்துக்களையும், அனுபவங்களையும் நேரடிச் சிந்தனைகளாக வெளியிடுகிறார்கள்; அல்லது அவற்றுக்குக் கலை உருவங்கள் கொடுத்துப் படைப்பிலக்கியங்களாகவும் வெளியிடுகிறார்கள். இவ்வாறு வெளியிடுவதற்கு அவர்கள் எழுத்துக்களைச் செய்யுள் முறையிலும் பயன்படுத்துகிறார்கள்; உரைநடையாகவும் பயன்படுத்துகிறார்கள்.

மருத்துவம், வானவியல், கட்டிடக்கலை போன்ற அறிவியல் நூல்கள்கூட முன்பு தமிழிலே செய்யுளின் துணைகொண்டே இயற்றப் பெற்றிருக்கின்றன. அவ்வாறே படைப்பு இலக்கியத்தில் கலை வடிவங்களான சிறு செய்யுட்கள், சிறு காப்பியங்கள், பெருங்காப்பியங்கள் முதலியனவும் அக்காலத்தில் செய்யுட்களாலேயே இயற்றப் பெற்றன.

காலம் மாறிவிட்டது. எதற்கும், எல்லாவற்றுக்கும், செய்யுளே கருவியாக இருந்த காலம் மாறிப்போய், நாம் உரைநடையே எதற்கும் எல்லாவற்றுக்கும் என்ற காலத்தில் இப்போது வாழ்கிறோம். உரைநடையே இன்று உலகத்தின் நேரடிச் சிந்தனை வெளியீட்டுக்கும் இலக்கியப் படைப்புக்கும் கருவியாக மிகப்பெரிய அளவில் மாறிவிட்டதால், அதன் செல்வாக்குப் பிற இந்திய மொழிகளைப் போலவே தமிழையும் ஆட்கொள்ள முனைந்திருக்கிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த குறிக்கோளுள்ள தமிழ் உலகத்திலிருந்து அறவே ஒதுங்கி, இனியும் செய்யுளை மட்டும் கொண்டு வளர முடியாது என்பதை நாம் உணர்ந்து வருகிறோம்.

இந்த நிலையில் இன்றைய படைப்பிலக்கியங்களின் உரைநடையைப் பற்றி மட்டிலும் சுருக்கமாக இந்தக் கட்டுரையில் கூற விரும்புகிறேன். படைப்பிலக்கியம் (Creative Writings) விளக்க இலக்கியம் (Non-Creative Writings) என்று ஆங்கிலத்தில் பகுத்துக்கொள்வார்கள். இதில் நான் படைப்பிலக்கியங்களின் உரைநடையைப் பற்றிச் சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இங்கு மற்றும் ஒரு சிறு விளக்கம் தேவையாக இருக்கிறது. புரோஸ் (Prose) என்ற ஆங்கிலச் சொல்லுக்கும் ஸ்டைல் (Style)

---

*நாவலாசிரியர், அகில இந்திய வானொலி, சென்னை

என்ற சொல்லுக்கும் பொதுவாக நாம் 'உரைநடை' என்ற தமிழ்ச் சொல்லையே பயன்படுத்தி வருகிறோம்.

புரோஸ் என்பது பொதுவான உரைநடை என்பதும், ஸ்டைல் என்பது குறிப்பிட்ட ஓர் ஆசிரியரின் நடை அழகு என்பதும், இன்றும் விளக்கம் பெருமலே இருந்து வருகிறது. ஸ்டைல் என்ற சொல்லை நாம் 'நடை' என்றே குறிப்பிட்டு வருகிறோம். ஸ்டைல் என்பது செய்யுளால் இயற்றப்பட்ட படைப்புக்களுக்கும் பொதுவானது. என்றாலும் எழுதிய ஆசிரியரின் இந்தத் தனித்தன்மையை, அழகு நிலையை வெளிப்படுத்தக்கூடிய ஸ்டைலைப் பற்றிய ஆராய்ச்சி, கவிதை இலக்கியங்களிலேயே இன்னும் சரிவர மேற்கொள்ளப்படவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்த நிலையில்தான் நான் உரைநடை இலக்கியங்களைப் பற்றிய ஸ்டைலை நடை அழகை—ஆராயப் புகுந்துள்ளேன். ஸ்டைலுக்கு நடை அழகு என்ற பெயரை இங்கு எளிதில் விளக்கம் பெறுவதற்காகப் பயன்படுத்தியுள்ளேன். உரைநடை என்பது பொதுவானதென்றும், நடை அழகு என்பது அந்தந்த ஆசிரியர் பொதுவான உரைநடையிலிருந்து தாமே உருவாக்கிப் பயன்படுத்தியது என்றும் நாம் வைத்துக் கொள்ளலாம்.

உரைநடை பொதுவானது, நடை அழகு அதைப் பயன்படுத்திய ஆசிரியரின் தனித்தன்மையை வெளியிடுவது என்பதை மிடில்டன் மறி (Middleton Murry) தம்முடைய 'The Problem of Style' என்ற நூலில், "Style means that personal idiosyncrasy of expression by which we recognise a writer" என்று சுட்டிக்காட்டுகிறர்.[1]

இதிலிருந்து நடை அழகு என்பது ஆசிரியரின் தனிச்சொத்து என்று நாம் கருதினாலும், ஆசிரியர் அவர் வாழ்ந்த காலத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதை நம்மால் மறுக்க முடியாது. காலத்தின் சிந்தனைகள், எண்ணங்கள் அவற்றை வெளியிடும் பேச்சு மொழி, எழுத்து மொழி இவ்வளவையும், அவர் ஜீரணித்துக் கொண்டுதான், பிறகு தம்முடைய நடையழகில் படைப்பை வெளியிடுகிறார். ஆகவே படைப்பு நடைக்கு ஆசிரியர் மட்டுமே காரணமாவதில்லை. அவர் வாழும் காலமும் ஒரு காரணமாகிறது. "Each age develops unconsciously its own style and each writer modifies the style of his age to reveal his own personality"[2] என்பர் ராபர்ட் ரோஜர்ஸ் (Robert E. Rogers.) இக்கருத்து ஆழ்ந்து நோக்கத்தக்கது.

ஆகவே, தமிழின் உரைநடையைப் பற்றி ஆராய்வோரும் சரி, நடை அழகைப்பற்றி ஆராய்வோரும் சரி, அது உருவான காலத்

[1] Middleton Murry, J.—*The Problem of Style*, Oxford University Press, London, 1960, p. 65.

[2] Rober E. Rogers, *The fine Art of Reading*, The Stratfort Co., Boston, 1930, p. 138.

தின் வரலாற்றை மறந்துவிட்டு ஆராயப் புகுவது சரியாகாது என்பதால், நான் இங்கு காலத்தின் பின்னணியோடு நடை அழகைப் பற்றி என் கருத்துக்களை உங்கள் முன் வைக்கிறேன்.

உரைநடை வரலாறு

தமிழில் உரைநடை தொல்காப்பியர் காலம்தொட்டே இருந்து வந்ததென்றாலும், பாட்டுடைச் செய்யுளுக்கு இடையில் வரும் தொடர்புப் பகுதியாகவோ, பிறகு கவிதைப் படைப்புகளுக்கு உரையாசிரியர்கள் விளக்கம் சொல்லும் கருவியாகவோ, கல்வெட்டாகவோதான் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. முழுமையான படைப்பிலக்கியங்கள் உரைநடைத் தமிழில் இருந்ததற்கான சான்று ஏதும் நம்மிடமில்லை. உரைநடையைப் படைப்புக்கலை வடிவத்துக்குப் பயன்படுத்த முடியும் என்பதை நமக்கு முதன் முதலில் சுட்டிக் காட்டியவர் பெஸ்கி பாதிரியார் (Fr. Beschi) (1680-1746) எனும் இத்தாலிநாட்டினரான வீரமாமுனிவர். மேலைநாட்டுச் செல்வாக்குத்தான் அவர் எழுதிய 'பரமார்த்த குரு கதை' என்ற முதற் படைப்பிலக்கியத்தை நமக்கு வழங்கியுள்ளது. நகைச் சுவை ததும்ப அவர் ஒரு குருவைப் பற்றியும் அவர்தம் சீடர்களைப் பற்றியும் எழுதிய கேலிக்கதை (Satire) அது. இவரையே தமிழில் உரைநடைப் படைப்பிலக்கியத்தில் முதல்வர் என்று நாம் கூற வேண்டும்.

இதற்குப் பிறகு ஏற்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க இலக்கியப் பெரு நிகழ்ச்சி, 1876-ல் வெளிவந்த வேதநாயகம் பிள்ளையின் (1824-1889) 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நாவலாகும். வேதநாயகம் பிள்ளை பிறப்பால் கிறிஸ்தவர்; ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். ஆகவே மேலைநாட்டுச் செல்வாக்குக்கு மற்றவர்களைவிட எளிதில் உட்பட்ட அவர், தமிழிலும் தனித்தன்மை வாய்ந்த உரைநடைப் படைப்பிலக்கியங்களை உருவாக்க முனைந்தார்.

நாவலில் ஓரிடத்தில் அவர் கதைத் தலைவியின் வாயிலாக இவ்வாறு பேசுகிறார்:

"இங்கிலீஷ், பிரஞ்சு முதலிய பாஷைகளைப் போலத் தமிழில் வசன காவியங்கள் இல்லாமலிருப்பது பெருங்குறை என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். வசன காவியங்களால் ஜனங்கள் திருந்தவேண்டுமேயல்லாது செய்யுட்களைப் படித்துத் திருந்துவது அசாத்தியம் அல்லவா? அப்படியே நம்முடைய சுய பாஷைகளில் வசன காவியங்களில்லாமலிருக்கிற வரையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயம்."[3]

---

[3] வேதநாயகம்பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம்—ஜீவகாருண்ய விலாச பிரஸ், சென்னை, 1907, பக்கம். 276.

இதில் ஆசிரியர் காலத்தில் வழக்கத்திலிருந்த தமிழும், வடமொழியும் கலந்த மணிப்பிரவாள உரைநடை நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இவருக்குச் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே எழுதிய வீரமாமுனிவரும் இவ்வாறுதான் மணிப்பிரவாள நடையைக் கையாண்டிருக்கிறார். அது அவர்கள் வாழ்ந்து வந்த காலத்தின் உரைநடை; அந்தக் காலத்து உரைநடையைத் தங்கள் ஆற்றலால் அவர்கள் தங்கள் கருத்துக்குச் சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் வெளியிடும் நடையாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

வேதநாயகம் பிள்ளையின் நடை, ஆசிரியரே கதை சொல்வதுபோல் அமைந்தது; கதையோடு இடையிடையே ஆசிரியர் தம் சொந்தக் கருத்துக்களையும் கதாபாத்திரங்களின் வாயிலாக வெளியிடுகிறார். நகைச்சுவை கலந்து படிப்பதற்குச் சலிப்புத் தட்டாத நடை. அவர் மொழித்துறை ஆசிரியராகவும் படைப்பிலக்கியக் கலைஞராகவும் இருந்ததால், அவர் காலத்தில் வழங்கிய சொற்களைக் கொண்டு அவர் தமது நாவலைப் படைத்தார். அவர் காலத்துப் பொதுமக்கள் படித்து இன்புறுவதற்காகவும் அறிவு விளக்கம் பெறுவதற்காகவும் எழுதியதாக அவரே முன்னுரையில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அவர் படைப்புக் கலைஞராக இருந்தும் மொழி உணர்ச்சியில் யாருக்கும் சளைத்தவரல்லர். அதே நாவலில் அதையும் அவர் வெளிப்படுத்துகிறார்.

> ''தேச பாஷையுந் தமிழ். கோர்ட்டில் வழங்கா நின்ற பாஷையுந் தமிழ். நியாயாதிபதியுந் தமிழர். வாதிக்கிற வக்கீலுந் தமிழர். இப்படியாக எல்லாந் தமிழ் மயமாயிருக்க அந்த வக்கீல்கள் யாருக்குப் பிர்தியார்த்தமாக இங்கிலீஷில் வாதிக்கிறார்களோ தெரியவில்லை.''[4]

சின்னஞ்சிறு சொற்றொடர்களால் அமைந்த வாக்கியங்கள் அவர் காலத்துத் தமிழ்நடைக்குப் புதுமையானவை; புரட்சிகரமானவை. முற்றுப்புள்ளி வைக்காமல் முழுப்பக்கம் எழுதுகிற காலத்தில், இப்படியும் எழுத முடியும் என்று காட்டியவர் அவர். வடமொழிக் கலப்போடு ஆங்கிலக் கலப்பும் சேர்ந்திருப்பது அவர் காலத்துத் தமிழ் நடையை நாம் அறியத் துணை செய்வதாகும். படிப்பவர்களுடைய உணர்ச்சியைத் தூண்டவும் சிந்தனையைக் கிளறவும் அவர் எவ்வளவு நவீனமாக அந்தச் சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை நாம் கவனிக்கவேண்டும். ''யாருக்குப் பிர்தியார்த்தமாக இங்கிலீஷில் வாதிக்கிறார்களோ தெரியவில்லை''' என்ற வாக்கியத்தில் உள்ள கேலியையும் குத்தலையும் வேறு எந்தச் சொற்களாலும் அவர் அந்தக் காலத்தில் வெளிப்படுத்தியிருக்க முடியாது. அறிந்தோ அறியாமலோ அவருடைய

[4] மே. கா. நூ. பக்கம். 81.

உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சிகள், சொற்றொடர்களாக வந்து அங்கே உருப்பெற்றிருக்கின்றன. இலக்கியப் படைப்பின் ரகசியம் இது.

அவர் மொழி உணர்ச்சியற்றவர் என்றோ, தமிழில் பயிற்சி இல்லாதவரென்றோ நினைத்துக்கொண்டு இந்தக் காலத்தில் அவருடைய அந்த நடை அழகில் கை வைக்க முயல்வது அபாயகரமான போக்காகும். அந்தக் காலத்தில் அவர் எழுதிய வடமொழிச் சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும், அந்த நாவலிலிருந்து களைவது தான் தமிழ்ப் பணியென்றோ இலக்கியப் பணியென்றோ சிலர் கருதுவது தவறு. அவர் காலத்து வாழ்வைப் பிரதிபலிக்கும் இலக்கியம் அது என்பதையும், அந்தக் காலத்து உரைநடையை நாம் அறிந்து, காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய அது நமக்கோர் வழிகாட்டி என்பதையும் மொழிப் பற்று என்ற காரணம் கூறி நாம் புறக்கணித்துவிடக் கூடாது.

வேதநாயகம் பிள்ளைக்குப் பின்வந்த ராஜம் ஐயர் எழுதிய நாவல் 'கமலாம்பாள் சரித்திரம்' ஓர் உணர்ச்சிகரமான அழகிய படைப்பாகும். ஆசிரியரின் நடை நமக்கு ஆசிரியர் தனியே நின்று கதை சொல்வதுபோல் அமையவில்லை. இயற்கை வர்ணனைகள் பாத்திரப் படைப்புக்கள் அவற்றின் உணர்ச்சிப் போராட்டங்கள் இவற்றில் தாம் ஓர் உயர்ந்த கலைஞர் என்பதை இவர் நிலைநாட்டுகிறார். வேதநாயகம்பிள்ளையின் சீர்திருத்த நோக்கம் அவருடைய எழுத்து நடையில் அப்படியே வெளிப்படுவதுபோல் ராஜம் ஐயரிடம் வெளிப்படவில்லை. கதாபாத்திரங்களோடு நம்மை வாழச் செய்துவிடக் கூடிய உயிர்த்துடிப்பு இவர் நடையின் தனி அழகாகும். இவரை அடுத்து வந்த மாதவையாவின் தமிழ்நடை இவர் ஆங்கில இலக்கியத்தின் செல்வாக்கை நன்கு அறிந்து, ஓரளவு சிந்தனைத் தெளிவோடு இத்துறையில் ஈடுபட்டவர் என்பதை நமக்குச் சொல்கிறது. இவருடைய எழுத்துநடையில் நேரடியாகக் கதை சொல்லும் பாங்கும் நாடகமாகக் கதையை நடத்திக்காட்டும் தன்மையும் மாறிமாறித் தென்படுகின்றன. பாத்திரங்கள் பேசும் நடை அப்படியே அவர் காலத்து வாழ்க்கையிலிருந்து அவர் எடுத்துக்கொண்ட பேச்சு வழக்காகும். வேதநாயகம் பிள்ளையை அடுத்து வந்த இந்த இருவரின் நடை அழகையும் எடுத்துக்காட்டி விளக்கினால் விரியும்.

உரைநடையில் மாற்றங்கள்

படைப்பிலக்கிய முயற்சிகளில் இவ்வாறு சிலர் உரைநடையை வளர்த்து வந்த காலத்தில், மொழித்துறையில் ஒரு புறம் தீவிரமான மாறுதல் ஏற்பட்டு உரைநடையின் போக்கே மாறத் தொடங்கியது. பொதுவான உரைநடைத் தமிழுக்குப் புதியதோர் வேகமே பிறந்துவிட்டதென்று கூறலாம். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய இம்மாறுதல்களுக்குக் காரணமாக விளங்

கியவர்கள் மொழிப்புலவர்களே ஆவர். படைப்பிலக்கியக் கலை ஞர்கள் என்று அழைக்கப்பெருத இந்தத் தமிழ்ப் பேரறிஞர்கள் கலைஞர்களுக்கான செம்மையான கருவியாக உரைநடையைச் செப்ப னிட்டுத் தந்துவிட்டார்கள். இவர்களில் இங்கு மூவரை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். /உ. வே. சாமிநாத ஐயர் (1885-1942) ஆழ்ந்த தமிழ்ப்புலமை பெற்றவராக இருந்தும், சங்ககால இலக் கியங்கள் பலவற்றைத் தேடிப் பதிப்பித்து இருந்தும் தாமே எளிய உரைநடையில் எழுதியதன் வாயிலாக மக்களுக்குத் தமிழின் ஆழத் தையும் எளிமையையும் சுட்டிக்காட்டினர். திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் (1883-1953) தமிழ் உரைநடையின் வலிமையை யும், அழகையும், ஆற்றலையும் தமது கட்டுரைகளில் வெளிப்படுத்தி ஞர். அடுத்துத் தனித்தமிழ் நடைக்கென்று ஓர் இயக்கத்தையே தோற்றுவித்து மணிப்பிரவாளத்திலிருந்து தமிழை மீட்டவர் மறை மலையடிகள் (1876-1950). இந்த மூவரும் வெவ்வேறு தனித் தன்மை கொண்டவர்களாக இருந்தும்கூட, பொதுவான தமிழ் உரைநடைக்குத் தங்கள் பங்காக ஒவ்வொருவரும் வளம் சேர்த்து, அதை மிகவும் எளிமையும் வலிமையும் தூய்மையும் உள்ள கருவி யாகப் புதுப்பித்துவிட்டார்கள். சங்ககால இலக்கியச் செறிவு எளிதாக உரைநடைக்குள் கலக்க முற்பட்டது உ. வே. சாமி நாதையர், பூர்ணலிங்கம்பிள்ளை, செல்வக்கேசவராய முதலியார் போன்றவர்கள் உழைப்பால்; உரைநடையே உணர்ச்சி மயமான காவிய மெருகு பெற்றது திரு. வி. க.வால்; தமிழ் உரைநடை மணிப்பிரவாளத்திலிருந்து விடுபட்டுத் தனித்தமிழ் உரைநடையாக மாறத் தொடங்கியது மறைமலை அடிகளால்.

படைப்பு இலக்கிய உரைநடையை ஆராயப் புகும் நாம், படைப்பு இலக்கிய உரைநடைக்கு ஒரு வழிகாட்டியேபோல் அமைந்த திரு. வி. க.வின் நடையை எடுத்துக்காட்டாமல் மேலே செல்ல முடியாது. இதோ சில வரிகள்:

> ''கண்டிக்குச் செல்லும் வழிநெடுக இயற்கை அன்னையின் திரு வோலக்கமின்றி வேறென்ன இருக்கிறது? எங்கணும் மலைகள்—மலைத்தொடர்கள்—மலைச்சுழல்கள்; எங்கணும் சோலைகள், சாலை கள், செடிகள், கொடிகள், பைங்கூழ்கள்; எங்கணும் அருவிகள், ஆறுகள், நீர்நிலைகள் இவையாவும் ஒன்ருேடொன்று கலந்து அளிக்கும் காட்சியன்ருே கடவுட் காட்சி?''[5]

உரைநடையாக எழுதப்பெறும் சொற்களுக்கும் உயிராற்றல் உண்டு. உணர்ச்சி அழகு உண்டு, ஓசை இனிமை உண்டு, சிந்தனை யின் ஆழம் உண்டு என்பதை நிலைநாட்டியவர் திரு. வி. க. பாரதி யாரைப் புதுக் கவிதையின் தந்தையென்ருல், தமிழ் உரைநடை இலக்கியத்தின் தந்தையென்று திரு.வி.க.வைக் கூறவேண்டும். கலைச்செறிவு கொண்டவை இவருடைய கட்டுரைகள்.

[5] சோம. லெ. வளரும் தமிழ், பாரி நிலையம், சென்னை, 1956, பக்கம் 54.

தமிழ் உரைநடையின் வரலாற்றில் இவ்வாறு தமிழறிஞர்களால் ஒரு நல்ல திருப்பம் 20ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஏற்பட்டு விட்டது. ஆகவே, இவர்கள் காலத்தை ஒட்டியோ இதற்குப் பிறகோ எழுதத் தொடங்கிய படைப்பு இலக்கிய ஆசிரியர்களுக்கு முன்னிலும் சிறந்த ஒரு கருவி கிடைத்தது. 'மங்கையர்க்கரசியின் காதல்' முதலிய சிறுகதைகளை வ.வே.சு. ஐயர் (1881-1925) தொடங்கி வைத்தார். 1930க்குப் புதுமைப்பித்தன் சிறுகதைத் துறையில் பல அற்புதங்களையே நிகழ்த்திவிட்டார். உலகத்தின் சிறந்த சிறுகதைகளுடன் ஒப்பு நோக்கத்தக்க கதைகளைத் தமிழ் உரைநடையில் உருவாக்கியவர் புதுமைப்பித்தன்; அவருடைய நடை ஆண்மையின் மிடுக்கு நிறைந்தது; சமூகத்தின் நெஞ்சைச் சவுக்கடிபோல் தாக்கக்கூடியது. அவர் காலத்தவரான கு. பா. ராஜகோபாலனின் நடையில் இனிமை, மென்மை, பெண்மை முதலிய பண்புகளைக் காணலாம். புதுமைப்பித்தன் நமக்குத் தம் எழுத்து நடையால் அதிர்ச்சி தருவார், ராஜகோபாலன் நம்மை உணர்ச்சி மயமாக்கி விடுவார்.

அடுத்து 20ஆம் நூற்றுண்டுத் தமிழ் உரைநடையில் மிகப்பெரிய படைப்பென்றே 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தியைக் கூறவேண்டும். தமிழை மக்களின் மொழியென்று உணர்ந்துகொண்டு, அதைத் தமது உரைநடை வளத்தால் லட்சக்கணக்கானவர்களைப் படிக்கும் படி தூண்டிவிட்ட வித்தகர் அவர். சிறுகதை, நாவல், கட்டுரை என்ற பல உருவங்களைக் கையாண்டார் என்றாலும், ஒவ்வொன்றி லும் கலைச்சுவை இருக்கும்; நகைச்சுவை குலுங்கும்; வாழ்க்கையின் அனுபவம் மிளிறும். எவ்வளவு சிக்கலான அரசியல் சமூகப் பிரச்னை களானாலும், எவ்வளவு ஆழ்ந்த கருத்துக்களானாலும், எவ்வளவு நுண்ணறிவு உணர்ச்சிகளானாலும், அவற்றை மிகவும் எளிதாகத் தம் நடையில் கொடுத்துவிடுவார் கல்கி. அவருடைய நடை மிக மிக எளிதான நடையென்றும், யாருமே அப்படி எழுதிவிடலாமென் றும் படிப்பவர்களுக்குத் தோன்றக்கூடும். எழுதிப் பார்த்தால் தான் சிரமம் தெரியும். அவருடைய தனி நடையழகுக்கு ஓர் எடுத்துக்காட்டாக, 'அலைஓசை' என்ற நாவலில் சில வரிகள்:

> ''ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளைப்போல் அந்தச் சாலை எங்கே ஆரம்பமாகிறது, எங்கே முடிவாகிறது என்று தெரிந்துகொள்ள முடியாததாயிருக்கிறது....சாலை வட திசை நோக்கித் திரும்பிய முடுக்கிலே ராஜம்பேட்டை கிராமத்தில் தபால்சாவடி எழுந்தருளியிருந்தது....அதன் தூணிலே கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த தபால்பெட்டி திக்கற்ற அநாதையைப் போல் பரிதாபத் தோற்றம் அளித்தது.''[6]

சாலை, தபால் சாவடி, தபால் பெட்டி இவற்றைத்தான் கல்கி குறிப்பிடுகிறுர். மிகச் சாதாரணமான காட்சிதான். ஆனல்

---

[6] கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, அலைஓசை, பாரதி பதிப்பகம், சென்னை, 1953, பக்கம் 17.

அவருடைய நடையில் அது உயிர்ச்சித்திரமாக மாறிவிடுகிறது. சாலையைச் சொல்ல வந்தவர் பரம்பொருளையும் மறந்துவிடவில்லை. தபால் பெட்டியை வெறும்ஜடப்பொருளாக்காமல் அதற்கு உயிரூட்டிவிட்டார்.

இவருடைய தனி நடையில் வாழ்க்கையைச் சுவைத்து அனுபவிக்கும் ஒரு ருசி உண்டு; தென்றலின் மெல்லிய சுகமுண்டு; மாலைநேர வானத்தின் வர்ண ஜாலங்கள் உண்டு. இவர் நம்மையறியாமலே நம்முடைய தோள்மேல் கைபோட்டுத் தம்மிடம் இழுத்துக் கொண்டு நம்மிடம் சிரிக்கச் சிரிக்கக் கதை சொல்லிவிடுவார். இலக்கியம் என்பது தந்தக் கோபுரங்களின் உச்சியில் வீற்றிருக்கும் சிலருக்குத்தான் என்பதை உடைத்து நொறுக்கிய மக்களின் கலைஞர் கல்கி. திரு.வி.க.வின் சீடராகவும் அவருடைய செல்வாக்குக்கு ஓரளவு உட்பட்டவராகவும் இருந்ததால் இயல்பாகவே இவருடைய நடையில் எளிமையும் தூய்மையும் கலந்திருக்கின்றன.

உ. வே. சாமிநாத ஐயரின் சீடரான அதேசமயம் சிறுகதைத் துறையில் படைப்புக் கலைஞராகத் திகழ்பவர் கி. வா. ஜகந்நாதன். அவரைப்போல் திரு.வி.க.வின் சீடராகவும் நாவல் எழுதுவதில் படைப்புக் கலைஞராகவும் விளங்குபவர் டாக்டர் மு. வரதராசனுர். இவர்கள் இருவருமே படைப்புத் துறையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர்கள். பண்டை இலக்கிய ஆசிரியர்களாக இருப்போருக்குத் தமிழ்நாட்டில் இன்றைய இலக்கியங்களில் ஆர்வமிருப்பதில்லை. அவ்வாறே புதுமைப் படைப்பிலக்கிய ஆசிரியர்கள் பலரும் தங்கள் தொன்மை மரபை அறிந்து போற்றுவதில்லை. இதற்கு விதிவிலக்காக அமைந்தவர்கள் இவ்விருவரும். கி.வா. ஜ.வின் சிறுகதையில் அவருடைய நடை, அன்பு, இரக்கம், கருணை முதலிய பண்புகளுக்கான அமைதியோடு வாதாடுவதைக் காணலாம். கி.வா.ஜ.வின் நடை நளினமான எளிய நடை. மு.வ.வின் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள் பற்றி அவருடைய தெளிந்த சிந்தனைக் கருத்துக்களையும் அமைதியான உணர்ச்சி வெளியீடுகளையும் காணலாம். உணர்ச்சிகளைச் சிந்தனைக்குள் அடக்கும் திறன் கைவரப்பெற்றவர் மு.வ. நேரடியான சிக்கலில்லாத நடுநிலைமை கொண்ட அழுத்தமான நடை மு.வ.வினுடையது. தனியழகு வாய்ந்த இவரது நடையைப் பண்டை இலக்கிய மரபினர் சிலரும் இப்போது பின்பற்ற முயலுகிறார்கள். எனினும் தமக்கென்றே ஒரு புது நடையைத் தோற்றுவித்துக் கொண்டவர்.

நாட்டின் விடுதலைப் போர்க்காலத்தில் கல்கி பொதுமக்களுக்கான தமது தனி நடையழகை இயல்பாக எழுதி வந்தாரென்றால், 1940க்குச் சற்று முன்பின் நாட்டின் சமூகப் போராட்டத்துக்காகத் தமது எழுத்தைப் பயன்படுத்த முனைந்தவர்களில் சி. என். அண்ணாதுரை குறிப்பிடப்படவேண்டியவர். அருவியின் சலசலப்பைப் போல் ஒரு அழகு நடையைத் தமக்கென உருவாக்கியவர் இவர். கற்றோரையும் கல்லாதவரையும் கவருவது இவரது எழுத்து நடை.

இவரது நாவல்கள், நாடகங்களில் ஓசை நயமிக்க சொற்றொடர்கள் அடுக்கடுக்காக அமைந்து எளிமையும் இனிமையும் தருகின்றன. இவரது நடையையும் பின்பற்றிச் சில இளைஞர்கள் இன்று எழுதி வருகிறார்கள்.

முடிவுரை

இதுவரை நடையில் தனியழகு கொண்ட ஒரு சிலரைப் பற்றி மட்டும் இங்கு குறிப்பிட்டுள்ளேன். தமக்கெனத் தனிநடைகள் வகுத்துக்கொண்ட வேறு சில எழுத்தாளர்கள் நம்மிடையே இருந்துங்கூட, காலப்போக்கில் பொதுவான உரைநடையைச் சுட்டிக் காட்டவும், காலமாறுதலுக்குக் காரணமாக இருந்த சிலரைப்பற்றிக் கூறவுமே முயன்றுள்ளேன். உரைநடை இலக்கிய ஆராய்ச்சி பற்றிய கட்டுரை அல்ல இது. உரைநடைப் படைப்புக்களின் தனி நடைப்போக்குகளைக் கூறுவதே இதன் நோக்கம்.

உரைநடைப் படைப்புக்கள் மொழியின் பெயராலும் இலக்கியத்தின் பெயராலும் இங்கு சிலரால் சித்திரவதை செய்யப்படுகின்றன. நடை அழகென்றால் என்னவென்றே விளங்கிக் கொள்ளாத சிலர், வீரமாமுனிவர், வேதநாயகம் பிள்ளை முதலியோரின் படைப்புக்களில் அவர்களின் சொந்த நடையை அடியோடு மாற்றிப் பதிப்பித்துள்ளார்கள். தனித்தமிழ்ச் சொற்களைக் கொண்டு அவர்கள் அந்தக்காலத்தில் எழுதவில்லையென்பதற்காக ஆசிரியர்களின் தனி நடையிலிருந்து உயிர்த் துடிப்பையும் உணர்ச்சி பாவங்களையும் அடியோடு மாற்றியிருக்கிறார்கள். தனித்தமிழ்ச் சொற்கள் மட்டிலுமே இலக்கியமாகிவிடுமென்றால், தமிழ் அகராதி ஒன்றே சிறந்த இலக்கியம் என்று நாம் கருதவேண்டியிருக்கிறது.

ஆகவே, முடிவாக ஸ்டைல் என்றால் என்ன, ஆசிரியரின் தனி நடையழகு என்பது எது என்று இங்கு விளக்க வேண்டியது அவசியமாகிறது. தனி நடையழகு என்பது ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடக்கூடியது. குறிப்பிட்ட ஆசிரியருக்கே கைவரப் பெற்ற வகையில், அவருடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தொகுத்து வெளியிடுவதற்கான மொழியின் குணப்பண்புதான் தனிநடை என்பது. இதுபற்றி The Problem of style என்ற நூலில் மிடில்டன் மறி (Middleton Murry) குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது. "Style is a quality of language which communicates precisely emotion or thoughts, or a system of emotions or thoughts, peculiar to the author." மேலும் அவரே எது சிறந்த நடை என்பதையும் கூறுகிறார். "Style is prefect: it exactly accomplishes its position in the scale of absolute greatness, however, it will depend upon the comprehensiveness of the system of emotions and thoughts to which reference is perceptible." [7]

---

[7] Middleton Murry, J., *The Problem of Style*, p. 7.

''ஓர் ஆசிரியர் தாம் வெளியிட விரும்பிய உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் தெளிவாகவும் முழுமையாகவும், கச்சிதமாகவும், வெளியிடும்போது சிறந்த நடையழகு பிறக்கிறது. ஆசிரியரின் எழுத்து நடை அவருடைய தனிப்பட்ட குணப்பண்புகளையும், அவர் வாழ்க்கையைப் பற்றிக் கொண்டுள்ள கண்ணோட்டத்தையும், அவருடைய கற்பனை ஆற்றலையும் வெளிப்படுத்தக்கூடியது. அது மட்டுமல்ல, படைப்புத் துறையில் அவருடைய பயிற்சித் திறனையும் பொறுத்தது அது. இன்னும் சொல்லப்போனால் நிலைபேறான இலக்கியத்துக்கு இந்தத் தனிப்பட்ட நடையழகுதான் முத்திரை''.

படைப்புக் கலைஞன் தான் படைக்கும் வேளையில், தான் படைக்கும் உலகத்தில், தன்னை மறந்து வாழ்கிறான் என்பது பலருக்கு விளங்குவதில்லை. கருக்கொள்ளும் வயது (Impressionable age) என்று சொல்லப்படும் இளம் வயதில் அவன் பெற்ற அடிப்படை மொழிப் பயிற்சியோடு, வாழ்க்கையின் அனுபவங்களே அவனுடைய பல்கலைக்கழகமாகிறது. படைப்பிலக்கிய ஆசிரியனிடம் கூறுவதுபோல் "You are an artist, you feel superbly, you are plastic; that is, when you describe a thing you set it and touch it with our hands that is real style" என்று மிடில்டன் கூறுகிறார்.[8] படிப்பவர்களும் இவ்வாறே தாமும் அந்தப் படைப்பினிடையே வாழ்வதாக உணர்வார்களானால், அந்த ஆசிரியர் தம் நடையில் வெற்றி பெற்றுவிட்டார் என்று கருதலாம்.

சரியான முறையில், தெளிவான பயிற்சியோடும் வரைமுறைகளோடும் இங்கு உரைநடை இலக்கியப் படைப்புக்களைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்கப்பட வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

---

[8] Ibid, p. 81.

லுஞ் செருச்செய்தலுங் கொலை யொழிதலும் இறை தவிர்தலுந் தானஞ் செய்தலும் வேண்டியன கொடுத்தலும் பிறவுமாம்; மங்கல வண்ணமாகிய வெண்ணணியும் அணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருளே நிகழ்த்தலின் அதனை வெள்ளணி யென்க'' என்று விளக்கமும் கூறியுள்ளார்.

புறப்பொருள் வெண்பாமாலையில் பெருமங்கலம்

3.1. பிற்காலத்து இலக்கண நூலான புறப்பொருள் வெண்பாமாலை மன்னனுக்கு உரித்தான மங்கலங்கள் பலவற்றினைக் குறிப்பிடுகின்றது. வேந்தனின் செம்மாந்திருந்த வெற்றியினைச் சிறப்பித்தலை 'வீற்றினிதிருந்த பெருமங்கலம்'[12] என்றும், வேந்தனின் திருமணத்தினை விவரிப்பதனை 'மணமங்கலம்'[13] என்றும், மன்னனின் மகன் பிறந்தநாள் விழாவினைப் 'பொலிவு மங்கலம்'[14] என்றும், மன்னன் பிறந்தநாள் விழாவினை, 'நாண் மங்கலம்'[15] என்றும், அரசனின் நடைச் சிறப்பினைக் 'குடை மங்கலம்'[16] என்றும், வாட் சிறப்பினை 'வாண் மங்கலம்'[17] என்றும், மன்னன் மஞ்சனமாடும் மங்கல மிகுதிச் சிறப்பினை 'மண்ணு மங்கலம்'[18] என்றும் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் சேரர் ஐயனாரிதனார் குறிப்பிட்டுள்ளார்.

3.2. புறப்பொருள் வெண்பாமாலை இப்பிறந்த நாட் பெருமங்கலத்தினை நாண்மங்கலம் என்று குறிப்பிடுகின்றது என மேலே கண்டோம்.

அறந்தரு செங்கோ லருள்வெய்யோன்
பிறந்தநாட் சிறப்புரைத் தன்று[19]

என்ற கொளு நாண் மங்கலத்தினைப் பிறந்த நாட் சிறப்பென்றே குறிப்பிடுகின்றது. மேலும் கொளுவின் கீழ்க் காணப்படும் வெண்பாவில் மன்னனின் ஈர நெஞ்சமும் வீரப் பண்பும் ஒருங்கே விளக்கப்பட்டுள்ளன. அவ்வெண்பா வருமாறு:

கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்
விரும்பி மகிழ்தல் வியப்போ—சுரும்பிமிர்தார்
வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து
தம்மதில் தாம்திறப்பார் தாள்.

---

12 புறப்பொருள் வெண்பாமாலை; பாடாண் படலம் : 20.
13 மே.கா.நூ. : 22.
14 மே.கா.நூ. : 23.
15 மே.கா.நூ. : 24.
16 மே.கா.நூ. : 34.
17 மே.கா.நூ. : 35.
18 மே.கா.நூ. : 36.
19 மே.கா.நூ. : 24.

3.3. இப்பாடலால் இரவலர் களிறும் கண்கவர் பொன்னும் பெருவேந்தனின் பிறந்தநாளிற் பெறுவர் என்பதனோடு, இதுநாள் வரை இம்மன்னனுக்குப் பயந்தொளிந்திருந்த பகையரசர் அச்சம் நீங்கித் தம் மதிலைத் திறந்து தம் மகளிரோடு இனிதிருப்பர் என்பதும் பெற்றும்.

பிறந்தநாள் விழா பற்றிய செய்திகள்

4. பெருமங்கலத்தினை நன்கு விளக்க நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டும் பாடல்கள் பழந்தமிழ் மன்னர்தம் அறப்பண்புகளையும் வீரமாட்சியினையும் கொடை வளத்தினையும் எடுத்து மொழிகின்றன. மன்னனின் பிறந்த நாளன்று அந்தணர் பசுவும் பொன்னும் பெறுவர் என்றும், நாவலர் சிறந்த யானைப் பரிசில் பெறுவர் என்றும், மக்கள் தங்கள் வீட்டினையும் வெளியினையும் தூய்மைப் படுத்தி அலங்கரிப்பர் என்றும் தெரியவருகின்றன.[20] மேலும் போரில் தோற்றுச் சிறைப்பட்டிருக்கும் பகைவேந்தர் அன்று விடுதலை செய்யப்பெறுவர் என்பதும் பிறிதொரு பாட்டால் புலனாகின்றது.[21] மன்னனின் பிறந்த நாள் நட்சத்திரத்தில் பிறந்த நாள் விழாக் கொண்டாடப்படும் என்பதனையும், அன்று போர் தவிர்க்கப் படும் என்பதனையும் கீழ்க்காணும் முத்தொள்ளாயிரப் பாடல் உணர்த்தும்.

> கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்
> பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்
> தேர்வேந்தன் தென்னன் திருவுத் திராடநாள்
> போர்வேந்தன் பூசல் இவன்.[22]

சேர வேந்தன் ஒருவன் சதய நாளில் பிறந்தானாதலினால் அன்று போர் நிகழாதென்றும், ஆதலின் பகையரசர் மதிற்கதவு திறந்து மகிழ்ச்சியோடிருக்கலாம் என்றும் பிறிதொரு பாடல் குறிப்பிடுகின்றது.

> நின்று நிலைஇயர் நின்நாண்மீன், நில்லாது
> படாஅச் செலீயர் பகைவர் மீனே[23]

என்ற புறப்பாட்டு அடிகளின் விளக்கம், ஒருவர் பிறந்த நாளன்று விண்ணில் மதி நின்ற இடத்திலிருந்த மீன்தான் நாள்மீன் எனப் படும் என்பதனைத் தெரிவிக்கின்றது.

---

[20] முத்தொள்ளாயிரம்: 82.

[21] சைய, மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்தக் கொலைச் சிறைதீர் வேந்துக் குழாம்.

[22] முத்தொள்ளாயிரம்: 7.

[23] புறநானூறு: 24: 24-25.

மதுரைக்காஞ்சியில் சேரனின் பெருமங்கலம்

5. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்ட வந்த புலவர் மாங்குடி மருதனார், சேர மன்னனொருவனின் பிறந்தநாள் விழாவின் மகிழ்ச்சி ஆரவாரத்தினை உவமையாக எடுத்துக் கையாண்டு பாராட்டியுள்ளார். பிறந்த நாளன்று சேரமன்னன், கூத்தரும் சுற்றத்தினரும் ஒருங்கே வாழ்த்த, எல்லாக் கலைகளையும் உணர்ந்த பல சமயத்தவர் தாந் தாம் மாறுபட்டுக் கூறும் சமய தருக்க வாதங்களை விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தான் என்ற குறிப்பு மதுரைக்காஞ்சியால்[24] பெறப் படுகின்றது. மேலும் அந்நூலிலேயே நன்னன் என்னும் குறுநில மன்னனின் பிறந்தநாள் விழாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

..........சேரிதோறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை மன்னன் பெறும்பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு[25]

என்ற மதுரைக்காஞ்சிப் பகுதியால் முடியுடை வேந்தருடையதே யன்றிக் குறுநில மன்னரின் பிறந்தநாள் விழாவும் பழந்தமிழகத்தில் கொண்டாடப்பட்டது எனத் தெரியவருகின்றது.

சிலப்பதிகாரமும் செங்குட்டுவன் பிறந்த நாளும்

6. சிலப்பதிகாரத்தில் சேரவேந்தன் செங்குட்டுவனின் பிறந்த நாள் விழா பற்றிய குறிப்பு விரிவாகப் பேசப்படுகின்றது. கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல் கொணர வடநாடு சென்ற செங்குட்டுவன் தன் பிறந்த நாள் நெருங்குகின்றதனையறிந்து விரைந்து தன் வஞ்சிமூதூர் திரும்பி வருகின்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது:

வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக்
கவடி வித்திய கழுதையே ருழவன்
குடவர் கோமான் வந்தான் நாளைப்
படுநுகம் பூணாய் பகடே மன்னர்
அடித்தளை நீக்கும் வெள்ளணி யாமெனும்
தொடுப்பேர் உழவ ரோதைப் பாணியும்.[26]

இவ்வடிகளால் மாடுகளும் செங்குட்டுவன் பிறந்த நாளில் உழுதலையொழிந்து உவகையுடன் இருந்த செய்தி புலனாகின்றது. அமர்க் களத்தில் அஞ்சாது மாற்றார் மறம் சாய்த்த மறவர்களுக்கு

---

[24] கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்
தண்கடல் நாடன் ஒண்பூங் கோதை
பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ
விழைவுகொள் கம்பலை கடுப்ப—மதுரைக்காஞ்சி: 523-526.

[25] மதுரைக்காஞ்சி: 615-619.

[26] சிலப்பதிகாரம்; நீர்ப்படைக்காதை: 225-230.

மன்னன் பிறந்த நாளினும் மிகுதியாகப் பொன்னாலாகிய வாகைப்பூ மாலையினைப் பரிசளிப்பான் என்பதும் சிலப்பதிகாரத்தின் வழி அறிய முடிகின்றது.[27]

பிற்கால நூல்களில் பிறந்தநாள் விழாக்கள்

7.1. மணிமேகலைக்காப்பியம் ''புவிகா வலன்றன் புண்ணிய நன்னாள்''[28] என்று மன்னனின் பிறந்த நாளினைப் புண்ணிய நன்னாள் என்று போற்றுகின்றது. சிந்தாமணிக் காப்பியத்தின் வழி அரசனுக்கு மகன் பிறந்திட்டபொழுது, அவன் இறை தவிர்த்தலும் சிறைவீடு செய்தலும் உண்டென்பது தெரியவருகின்றது.[29] கம்பராமாயணத்திலும் இதனையொத்த செய்தி காணப்படுகிறது. இராம இலக்குமண பரத சத்துருக்கனர் பிறந்த செய்தியினைக் கேள்வியுற்ற தசரதன், நாடு முழுவதும் பதினான்கு ஆண்டுவரை வரியில்லாமல் ஆகுக என்றும், பொருள் நிறைந்த கருவூலங்களை ஏழைகள் அவரவர் விருப்பப்படி வாரிக்கொள்க என்றும், எவ்விடத்திலும் போர்த்தொழில் ஒழிக என்றும், சிறையிலடைபட்டுள்ள முடிபுனைந்த பகையரசர் விடுதலை செய்யப்பெற்றுத் தம்தம் ஊர் செல்க என்றும் கூறிப் பறையறையச் செய்விக்கின்றான்.[30] மேலும் அப்பிறந்தநாள் விழா நாட்டு மக்களால் நலமுறக் கொண்டாடப் பெற வேண்டும் என்றும் பறையறையச் செய்விக்கிறான்.

ஆலயம் புதுக்குக வந்த நாளர்தம்
சாலையுஞ் சதுக்கமுஞ் சமைக்க சந்தியுங்
காலையு மாலையுங் கடவு ளர்க்கணி
மாலையுந் தூபமும் வழங்கு கென்றனர்.[31]

மேலும் சூளாமணிக் காப்பியத்திலும் பிறந்தநாள் விழா பேசப்படுகின்றது. அந்நாளில் பகையொழிந்து நல்லறம் செழிப்பதும், வெள்ளணியணிந்து அரசர் விருந்தோம்புதலும் நிகழும் என்பர்.[32]

7.2. மன்னரே யன்றிப் பட்டத்து யானையும் வெள்ளணியணிந்து விளங்கும் என்பது சிந்தாமணியாலும்,[33] பெருங் கதையாலும்[34] அறியப்படுகிறது. 'மங்கல அணியினர்'[35] என்ற தொடருக்கு

---

[27] கூற்றுக்கண் ணோடா அரிந்துகளங் கொண்டோர்
நிறஞ்சிதை கவயமொடு நிறப்புண் கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாள் மறவர்
வருக தாமென வாகைப் பொலந்தோடு
பெருநா ளமயம் பிறக்கிடக் கொடுத்து.
—சிலப்பதிகாரம்; நீர்ப்படைக்காதை: 40-44.

[28] மணிமேகலை: 28.

[29] சீவக சிந்தாமணி; நாமகள் இலம்பகம்: 277-280.

[30] கம்பராமாயணம்; திருவவதாரப் படலம்: 112-113.

[31] மே.கா.நூ. :114.

[32] சூளாமணி; சுயம்வரச் சருக்கம்: 211-212.

[33] சீவக சிந்தாமணி; இலக்கணையாரிலம்பகம்: 10, 11, 54.

[34] பெருங்கதை; 1:39:74. (வெண்டுகில் பூட்டிய வேழக் குழவியும்)

[35] சீவகசிந்தாமணி; காந்தருவதத்தையாரிலம்பகம்: 111.

நாட்டில் முன்னமே வழங்கிய துயிலெடைப் பாடலின் அமைப்பையே பயன்படுத்தித் தெய்வத்திற்குத் திருப்பள்ளியெழுச்சி பாடினர். சிவனடியார் ஒருவரும் திருமாலன்பர் ஒருவரும் தம் தம் கோவில் வழிபாட்டுக்கு ஏற்ற முறையில் அழகிய வடிவம் தந்து பாடல் இயற்றியருளினர். அவ்வாறு மூலப்பாடல் இருவேறு சமயத்தினர்க்கும் பொதுவாக இருந்தமையால், அவர்கள் பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் இருவேறு சமயத்தினவாக இருந்த போதிலும் அவற்றின் வடிவும் பொருளமைப்பும் ஒரே தன்மையன வாக அமையலாயின.[9] இதுவே உண்மைக் காரணம் எனலாம்.

வணங்கலும் அருளலும்

6.1. ஐயனாரிதனார் பாடிய எடுத்துக்காட்டு, வெண்பா யாப்பில் அமைந்தது. ஆழ்வார் நாயன்மாரின் பாடல்கள் அவர் காலத்திற்குச் சிறிது முன்னமே இயற்றப்பட்டவை. ஆதலின், அவர் அந்தத் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை அறிந்திருத்தல் கூடும்.[10] ஆயினும் அவர்களைப்போல் விருத்த யாப்பில் பாடாமல், தம் நூலின் அமைப்புக்கு ஏற்ப வெண்பாவில் பாடினார். ஒரே செய்யுளாதலின், மகுடம் (பொதுவான இறுதித் தொடர்) அமைப்பதற்கும் இடம் இல்லை. மேற்குறித்த பொதுத்தன்மைகள் ஐந்தனுள், இந்த இரண்டு நீங்க, மற்ற மூன்று கூறுகளும் சுருங்கிய அளவில் அமைந்துள்ளன. 'களந் தயங்கப், பூமலர் மேல் புள்ளொலிக்கும் பொய்கை' என்ற பகுதியால் இயற்கை வருணனை சுருங்கிய அளவில் அமைந்தது. அரசனுடைய பெருமையும் ஒருசில சொற்களின் அளவில் நின்றது. 'பலர் வந்து காத்துள்ளனர். துயிலெழுந்து அருள்புரிக' என்ற கருத்தும் 'அகலிடத்து மன்னர் வணங்க...நேர்க துயில்' என்ற பகுதியில் அமைந்தது. இக்கருத்து தொல்காப்பியனாரின் விதியிலும் இல்லை; நச்சினார்க்கினியரின் எடுத்துக் காட்டிலும் இல்லை; ஐயனாரிதனாரின் கொளுவிலும் வெண்பாவிலுமே காணப்படுகிறது. 'மன்னரை **அருளிய**' என்பது கொளுவிலும், 'மன்னரை **வணங்க**' என்பது வெண்பாவிலும் உள்ளது. மாணிக்கவாசகரும் தொண்டரடிப்பொடியாழ்வாரும் பாடிய சமயச் சார்பான திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களில் மட்டுமே அடியார்க்கு அருள்புரிதல் பற்றிய கருத்தும், அடியார் வணங்குதல் பற்றிய கருத்தும் அமைந்துள்ளன. ஆகவே, அத்திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைக் கற்று அவற்றின் கருத்துக்களை நினைந்தே, ஐயனாரிதனார் 'அருளிய' 'வணங்க' என்பவற்றை அமைத்திருக்கவேண்டும்.

6.2. ஆயினும், துயிலெடைநிலை என்ற பெயரைத் திருப்பள்ளியெழுச்சி என மாற்றவோ, அரசர்களைப் பாடுதல் அல்லாமல் தெய்

[9] மாணிக்கவாசகர், திருவாகம், திருப்பள்ளியெழுச்சி தொண்டரடிப்பொடியாழ்வார், நாலயிர திவ்யப் பிரபந்தம், திருப்பள்ளியெழுச்சி.

[10] ஐயனாரிதனார் காலம் பத்தாம் நூற்றாண்டு; ஆழ்வார் நாயன்மார்களின் காலம் ஏழு எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகள்.

வத்தைப் பாடுதலும் உண்டு என்று குறிப்பிடவோ அவர் முன்வர வில்லை. அதற்குக் காரணம், பன்னிருபடலம் என்னும் பழைய இலக்கணநூலை ஒட்டி நூல் இயற்ற வேண்டும் என்று அவர் கட்டுப் பட்டமையே ஆகும்.[11] அதனால், அவ்வக்காலத்து வாழ்வை ஒட்டி இலக்கியம் வளரும் வளர்ச்சியைப்[12] புலப்படுத்த இயலாமற் போயிற்று.

வடிவச் சிறப்பு

7.1. இலக்கியம் கலைகளுள் ஒருவகை; கலைகளுக்குப் பொருள் (Content) போலவே வடிவமும் (Form) சிறப்புடையது ஆகும். தொல்காப்பியனார் குறிப்பிட்ட சூதர் பாடிய துயிலெடைநிலைப் பாட்டில் இரண்டும் சிறப்புற அமைந்திருக்கக்கூடும். அது வாழ்க் கையோடு ஒட்டிய கலையாக வளர்ந்தமைந்தது ஆதலின், பொரு ளும் வடிவமும் ஆகிய இரண்டாலும் அது சிறப்புற்றிருக்க வேண் டும். நச்சினார்க்கினியர் காட்டிய ஆசிரியப்பாவிலும் ஐயனாரிதனார் காட்டிய வெண்பாவிலும் துயிலெடைநிலையின் பொருளை மட்டுமே காண்கிறோம்; வடிவத்தைக் காண இயலவில்லை. அவை வாழ்வை ஒட்டி எழாத பாட்டுக்கள் ஆனமையால், சூதர் பாடலின் வடிவத் தைக் காட்ட இயலவில்லை. வடிவச் சிறப்பு இல்லாதது கலை ஆவதில்லை; இலக்கியமாக வாழ்தல் இல்லை.

7.2. மாணிக்கவாசகரும் தொண்டரடிப்பொடி யாழ்வாரும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள், மக்களின் கோவில் வழி பாட்டை ஒட்டியமைந்தவை; அரசரின் அரண்மனையில் பாடிவந்த பாடல்களைப் பின்பற்றி இயற்றப்பட்டவை; இரண்டும் வாழ்வின் அடிப்படையில் எழுந்த பாடல்கள். ஆகையால் உண்மையான கலைக்கூறுகள் கொண்டு விளங்குகின்றன; பொருட்சிறப்போடு வடி வச் சிறப்பும் புலப்பட அமைந்துள்ளன. ஆகவே, பழந்தமிழகத் தில் வைகறையில் தலைவர்களின் துயிலெழுப்பும் பாடலின் மரபை மேற்குறித்த ஆசிரியப்பாவும் வெண்பாவும் புலப்படுத்துதலைவிட, சமயத்துறை சார்ந்த திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களே நன்கு புலப்படுத்துவன எனக் கொள்ளல் வேண்டும். தொன்றுதொட்டு வைகறையில் பாடப்படும் இசைவகைக்கு (பூபாள ராகத்திற்கு) உரியவாறு அப்பாடல்கள் அமைந்துள்ளமையும் இதனைத் தெளி வாக்கும்.

7.3. இத்தகைய பழைய இலக்கிய வடிவங்கள் பலவற்றைப் போற்றிக் கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, கந்துகவரி, வள்ளைப்பாட்டு முதலியவற்றை இளங்கோவடி

[11] மு. நூ. ஏழாம் குறிப்புக் காண்க.

[12] Because poetry is a living thing, it changes as often as any major change occurs in man, since it expresses his thought, visions and emotions. As often as a social group changes, its poetry changes — Pester Westland, Contempcrary Literature, p. 190.

கள் நமக்குத் தந்துள்ளார். அவர்க்கு வாய்ப்பு இருந்திருப்பின், தமிழகத்தில் வழங்கியிருந்த துயிலெடைநிலைப் பாட்டின் பழைய வடிவத்தையும் காத்துத் தந்திருப்பார். அவர்க்கு வாய்ப்பு இல்லா மற்போயிற்று. அந்தக் குறையைப் போக்கும் வகையில் இத் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் உதவுகின்றன.

7.4. திருப்பள்ளியெழுச்சியின் இலக்கிய வடிவம் நல்லதொரு கலைச்செல்வம் என்பதைப் பிற்காலச் சான்றோர் சிலர் உணர்ந்து, அந்த வடிவத்திலேயே தம்தம் வழிபாட்டை அமைத்துப் பாடியுள் ளனர். மக்களிடையே வழங்கிய இலக்கிய வடிவங்களைப் போற் றும் ஆர்வம் மிக்கவர்கள் தத்துவராய சுவாமிகள், சிதம்பர சுவாமி கள், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர். தத்துவராய சுவாமிகள், பாவைப்பாட்டு, பல்லிப்பாட்டு, பந்துப் பாட்டு, ஊசற்பாட்டு, குறத்திப்பாட்டு முதலிய பலவற்றையும் தம் தத்துவக் கருத்துக்களுக்குப் பயன்படுத்திப் பாடியவர். சிதம் பரசுவாமிகளும் சில பாடியுள்ளார். இராமலிங்க சுவாமிகள், திருவுந்தியார், ஆனந்தக்களிப்பு, பலவகைக் கீர்த்தனைகள், வெண் ணிலாப்பாட்டு, கொம்மிப்பாட்டு முதலிய பலவற்றைத் தம் சமரச சன்மார்க்கக் கருத்துக்களுக்குப் பயன்படுத்தியவர். பாரதியார், பள்ளுப்பாட்டு, கோணங்கிப்பாட்டு முதலியவற்றையும் தேசீய உணர்ச்சிகளுக்கும் பக்திநெறிக்கும் பயன்படுத்தியவர். திருப்பள்ளியெழுச்சிப் பாடலின் வடிவம் இவர்களின் உள்ளங்களைக் கவர்ந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை.

அருட்டிருப்பள்ளியெழுச்சி	—10	பாட்டுக்கள்
சிவப்பிரகாச சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி	—11	,,
சொரூபானந்த சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி	—10	,,
தத்துவப்பிரகாச நாயனார் திருப்பள்ளியெழுச்சி	—10	,,
பரிபூரணப்பிரகாச நாயனார் திருப்பள்ளியெழுச்சி	10	,,

ஆகிய இந்த ஐந்து திருப்பள்ளியெழுச்சிகளைத் தத்துவராயர் பாடி யுள்ளார். சிதம்பர சுவாமிகளும், இராமலிங்க வள்ளலாரும் திருப்பள்ளியெழுச்சியாகப் பத்துப் பத்துப் பாட்டுப் பாடியுள்ள னர். சுப்பிரமணிய பாரதியார் பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி எனப் பாடிய பாட்டுக்கள் ஐந்து உள்ளன. மாணிக்கவாசகர், தொண்டரடிப்பொடியாழ்வார் பாடல்களைப் போலவே இவை எல் லாம் ஒரே வகையான யாப்பு உடையவை. தத்துவம், சமயம், சன்மார்க்கம், தேசீய உணர்ச்சி முதலாய உட்பொருள் வேறுபடி னும், அமைப்பு முறையும் இசையும் வேறுபடவில்லை. ஆகவே, மாணிக்கவாசகர்க்கு முற்பட்ட காலந்தொடங்கிப் பல நூற்றாண் டுகளாய் இன்று வரையில் பலருடைய உள்ளங்களையும் கவரும் கலைவடிவு வாய்ந்த இலக்கிய வகையாய்த் திருப்பள்ளியெழுச்சி விளங்கிவருதல் புலனாகின்றது. இவ்வளவு பழமை உடையதாய், பல நூற்றாண்டுகளாக மாறாத ஒரே வகையான அமைப்பு உடைய தாய் விளங்கும் இலக்கிய வடிவம் வேறொன்றனைக் காண்பது அரிது.

நூல்கள் (Bibliography)

அருணைசலம், மு., திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புக்கள், சைவ சித்தாந்த மகா சமாஜம் அறுபதாம் ஆண்டு மலர், 1964.

ஆழ்வார்கள், நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், மயிலை மாதவதாஸன் பதிப்பு, சென்னை இரண்டாம் பதிப்பு, 1950.

இராமலிங்க வள்ளலார், திருவருட்பா, இராகவலு நாயுடு பதிப்பு, சென்னை, 1928.

இளம்பூரணர், தொல்காப்பியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1953.

ஐயனாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை, சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1942.

சிதம்பர சுவாமிகள், திருப்போரூர்ச் சந்நிதிமுறை, சைவசித்தாந்த மகா சமாஜம் சென்னை, 1941.

தத்துவராய சுவாமிகள், பாடுதுறை, லோகநாதமுதலியார் பதிப்பு, சென்னை, 1917.

நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கனகசபாபதிப்பிள்ளை பதிப்பு, சென்னை, 1934.

பாரதியார், கவிதைகள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1962.

அமைந்துள்ளது. கற்பு கட்டவிழ்ந்து மலர்ந்து மணம் பரப்புகின்றது. இன்பப் பகுதிகளும் இனிய முறையில் இயம்பப் பெறுகின்றன.

4. தலைவர்

தன்னிகரில்லாத் தலைவரைக் கொண்டிருப்பது பெருங்காப்பியத்தின் முக்கியப் பண்புகளில் ஒன்றாகும்.[8] வழிதவறிய வையத்திற்கு வழிகாட்டிய வள்ளலாரே—மாநிலத்தின் மாசு போக்கிய மாநபியே இக்காப்பியத்தின் தலைவர். அனாதையாக வளர்ந்து இலட்சிய இளைஞராக, இனிய கணவராக, அரிய தந்தையாக, திறமிக்க அறவோராக, அரசியல் தலைவராக, அருந்தளபதியாகத் திகழ்ந்து பல துறைகளிலும் அழகிய முன் மாதிரியாக விளங்கிய நபிநாயகத்தின் வாழ்க்கை வரலாற்றையே இக்காப்பியம் எடுத்தியம்புகிறது.

5. வர்ணனைகள்

நாடு, நகர், மலை, கடல், பருவங்கள், கதிரவன், திங்களின் தோற்றம் முதலிய பதினெண் வருணனைகள் இடம் பெறுதல் வேண்டும்.[9] மேகம், ஆறு ஆகியவற்றையும் இவற்றுடன் சேர்த்துக் கூறுவர்.[10] சீறாவில் நாட்டுப் படலத்தில் இருண்ட கார்மேகம் திரண்டு இடித்து முழங்கி மழை பொழிய, ஆற்றில் வெள்ளம் பெருகிக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் பாய்ந்து வளம் செய்யும் நலம் கவிஞர் வருணனையில் பொலிவுடன் விளங்குகின்றது. இயற்கைக் காட்சிகளும் இனிய முறையில் இயம்பப் பெறுகின்றன. மலை, கடல், ஆறு, மேகம் போன்றவற்றின் வருணனைகள் இப்படலத்தில் அமைந்துள்ளன. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய பெரும்பொழுதுகளில் பலவும் வைகறை, காலை, நண்பகல், எற்படுபொழுது, மாலை, யாமம் முதலிய சிறுபொழுதுகளில் பலவும் ஆங்காங்குக் கூறப்பெறுகின்றன. கதிரவன், திங்கள் ஆகியவற்றின் தோற்றமும் மறைவும் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டப் பெறுகின்றன.

6. இன்பச்செய்தி

நன்மணம் புணர்தல், பூம்பொழில்நுகர்தல், புனல் விளையாடல், புதல்வரைப் பெறுதல், புலவியில் புலத்தல், கலவியில் களித்தல் போன்ற இன்பச் செய்திகள் பலவும் இக்காப்பியத்தில் தனிப்

---

[8] தண்டியலங்காரம்-8.

[9] தண்டியலங்காரம்-8.

[10] தமிழ்க் காப்பியங்கள்-கி.வா. ஜகந்நாதன். பக்கம்-53.

படலங்களிலும் பிறவிடங்களிலும் இயம்பப்படுகின்றன. நபி நாயகம், கதிஜா நாச்சியார், அலியார், பாத்திமா நாச்சியார் ஆகியோர் திருமணங்கள் தனிப்படலங்களில் விவரமாகக் கூறப்பெற்றுள்ளன. நாட்டுப் படலத்திலும் புனலாட்டுப் படலத்திலும் புனல் விளையாடல் கூறப்பெறுகின்றது. நபிநாயகத்திற்கு இரு ஆண்களும் நான்கு பெண்களும் பிறக்கின்றனர். பேரர் பிறந்த செய்திகளும் காப்பியத்தில் கூறப்பெறுகின்றன.

7. அரசியல்

இறைவன் ஒருவனே; உருவமற்றவன், இணையற்றவன்; அவனே வணக்கத்திற்குரியவன் என நபிகள் நாயகம் போதிக்கத் தொடங்கியதும் தீநெறியில் தோய்ந்து தேய்ந்து கொண்டிருந்த மக்காவாசிகள் கொதித்தெழுந்தனர். கொலை செய்யவும் திட்டமிட்டனர். ஆதலின் இவர்களின் கொடுமையினின்றும் நீங்கும் பொருட்டுப் பிறந்த பொன்னகரத்தை விட்டு மதீனா சென்றார்கள். பகைவர் விட்டார்களில்லை. படைகொண்டு தாக்கினர். பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள் நபிகள் நாயகம். இந்நிலையில் தோன்றியனவே பத்ரு, உகத், கந்தக் முதலிய போர்கள். இப்போர்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தலும் தூதனுப்புதலும் படையெடுத்துச் செல்லலும், பகைவரை வென்று நிற்பதும் ஆகிய நிகழ்ச்சிகளும் பத்ருப் படலம், உகத் படலம், கந்தக் படலம் போன்றவற்றிலும் பிறவிடங்களிலும் கூறப் பெறுகின்றன. நபி நாயகம் மக்கள் நலமே வேண்டிய மாநபியாதலால் பலவெற்றிகள் பெற்றும் முடி சூட்டிக் கொள்ளவில்லை. ஆனால் மாபெரும் பேரரசின் தலைவராகத் திகழ்ந்துள்ளார்கள். இன்பக் குடியாட்சியின் அன்புத் தலைவராகவே காட்டப் பெறுகின்றார்கள்.

8. உறுப்பு

சருக்கம், இலம்பகம், பரிச்சேதகம் போன்ற பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.[11] நபிநாயகத்தின் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ந்து சொல்லிச் செல்லும் சீறாப்புராணம் 3 காண்டங்களாகவும், 92 படலங்களாகவும் பிரிந்தமைந்துள்ளது. இதன்கண் 502 பாடல்கள் உள்ளன.

9. யாப்பு

இந்நூலின் யாப்பு பெரும்பாலும் விருத்தமே. சிறுபான்மை கலித்துறைகளும் அமைந்துள்ளன. தோல் முதலிய வனப்புகள் இந்நூலில் போற்றப் பெற்றுள்ளன. எனினும் இக்காப்பியம் முழு வடிவில் கிடைக்கவில்லை. 92 ஆம் படலமாகிய ஹணிக் கூட்டத்

[11] தண்டியலங்காரம்-8.

தார் படலத்துடன் நின்று விடுகின்றது. எஞ்சிய கதைப் பகுதியினைப் பனி அகமது மரைக்காயர் என்பார் 39 படலங்களில் பாடி முடித்துள்ளார். 'இது சின்னச் சீறு' என வழங்கி வருகிறது.

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்.[12]

எனும் தொல்காப்பிய விதிக்கேற்ப இழுமென் மொழியால் விழுமிய பொருளைக் கூறிச் சொல்லுகிறார் கவிஞர்.

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தின்
பொருவினும் பொருவாய் வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.
(கடவுள் வாழ்த்து-1).

எனப் பயின்று செல்லும் பாடலினது இசை நலமும் பொருள் வளமும் சுவைத்தற்குரியவை.

கூறும் பொருளுக்கேற்பச் சொல்லமைக்கும் திறத்தினைச் சீறுவில் பலவிடத்தும் காணலாம். காட்டாக ஒன்று. அலியார் புலி போன்றவர். கொடிய பகைவரை அழித்து ஒழிக்கும் அருந்திறல் வாய்ந்தவர். இவருக்கு வாழ்த்துக் கூற வந்த கவிஞர்,

படிகிடு கிடெனநாக முடிநெறு நெறெனவால
படுதிரை யளற தாகவே
வடவரை யசையதான முகடுடை படவரு
மழைமுகில் சிதறி யோடவே
யடையலர் கெடிகள்கோடி யிடுபடு படலதூளி
யலரியி னுடலின் மூழ்கவே
நடமிடு கடினவாசி மிசைவரு சமரசூர
நரர்புலி யலியை யோதுவாம்.
(கடவுள் வாழ்த்து-12).

என நமக்கு அறிமுகப்படுத்துகின்றார். இப்பாடலின் ஓசையே அலியாரின் வீரத்தையும் தீரத்தையும் வெளிப்படுத்தி விடுகின்றது. இவ்வாறு பாத்திரத்திற்கேற்ற சொல்லமைப்பு இப்புராணத்தில் பலவிடத்தும் காணப்படுகின்றது.

---

12 தொல்காப்பியம் செய்யுளியல்-1.

10. அணி

இக்காப்பியத்தில் சொல்லணி, பொருளணிகள் வேண்டுமிடங்களில் வேண்டுமளவு அமைந்து அழகு செய்கின்றன. நபிநாயகத்தின் பிறப்பைக் கூறும்போது கவிதையலை வீசும் கலைக் கடலாக மாறிவிடுகின்றூர், புலவர். காட்டாக ஒன்று.

> பானுவின் கதிரா விடருறுங் காலம்
> படர்தரு தருநிழ லெனலாய்
> ஈனமுங் கொலையும் விளைத்திடும் பவநோய்
> இடர்தவிர்த் திடுமரு மருந்தாய்த்
> தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்க்
> குறைஷியின் றிலகமே யெனலாய்
> மானிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
> முகம்மது நபிபிறந் தனரே.
> —சீறு. நபியவதாரப் படலம்-92

எனும் பாடலில் உவமைகளை வாரி வழங்கி நபிநாயகத்தின் பிறப்பின் சிறப்பை இனிய முறையில் இயம்புகிறூர்.

> உள்ளத்துள்ளது கவிதை—இன்பம்
> உருவெடுப்பது கவிதை
> தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
> தெரிந்துரைப்பது கவிதை.[13]

எனக் கவிதைக்கு அமைதி கூறுகின்றூர், கவிமணி. இவ்வமைதி கொண்ட கவிதைகள் பலவுண்டு சீறுவில். புனல் விளையாட்டுப் படலத்தில் ஒரு காட்சி! நபிநாயகம் தாமரை பூத்த தடாகத்திலே நீராடிக் கொண்டிருக்கின்றூர்கள். எழுந்து விழும் அலைகளால் மலர்கள் மேலும் கீழும் அசைகின்றன. இதில் கவிஞர் தம் கற்பனை வண்ணத்தை ஏற்றி அழகுபடுத்திவிடுகின்றூர். செந்தாமரை மலர்கள் நபிநாயகத்தின் கண், முகம், பாதம் ஆகியவற்றின் அழகினைக் கண்டு ஆற்றுமைக்கு வருந்திச் சிவந்து நாணி ஒளிந்து கொள்ள முற்படுவதுபோல் காணப்படுகின்றன, எனத் தற்குறிப்பேற்ற அணியில் வைத்துச் சுவைபடக் கூறுகின்றூர்.[14] இதில் நபிநாயகத்தின் உறுப்பு நலனும் உயர்ந்த முறையில் உயர்த்தப்பட்டுவிடுகிறது.

11. எளிமை

கங்கையைப்போல் காவிரி போல் பீடு நடைபோட்ட கவிஞர் எளிமையும் தெளிவும் இனிமையும் எழிலும் அமையப் பாடுவதிலும்

[13] மலரும் மாலையும். கவிதை-8.

[14] சீறுப்புராணம் புனலாட்டுப் படலம். பாடல்-17.

வல்லவர். நபிநாயகம் குழந்தைப் பருவத்தில் தளர் நடை பயின்றதனைக் கவிஞர்,

எந்நில மனைத்தும் தீன்நெறி நடப்ப
இயல்பெறு மறுநெறி நடப்பத்
துன்னிய அறத்தின் துறைவழி நடப்பத்
துன்பமற் றின்பமே நடப்பப்
பன்னருஞ் செங்கோல் உலகெலாம் நடப்பப்
பாரினில் குலமுறை நடப்ப
மன்னிய ரெவரும் சொற்படி நடப்ப
முகம்மது நபிநடந் தனரே.
(அலிமா முலையூட்டுப் படலம்)

எனப் பாடுகின்றார். சீர், தளை முதலிய யாப்பமைதிகளை விலக்கிச் சொற்களை அமைத்தால் உரைநடையாகவே அமைந்து எளிதில் பொருள் விளங்கும்படி செய்துவிடும். இருப்பினும் இனிய பொருளமைதி கொண்டுள்ளது.

12. மெய்ப்பாடு

இக் காப்பியத்தைப் படிக்கும்போது பொருளோடு இரண்டறக் கலந்துவிடும் இயல்பினைக் கொண்டு விடுகிறோம். நபிநாயகத்திற்கும் அவர்தம் தோழர்க்கும் மக்கா வாசிகள் கொடுமை செய்யும் நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது சிந்தை பதைத்து விடுகிறது. கண்கள் கலங்கிவிடுகின்றன. நபிநாயகம் மக்காவை விட்டு மதினா செல்லும் வழியில் குகையொன்றில் தங்கியிருக்கும்போது பகைவர் குகை வாயிலுக்கு வந்து விடுகின்றனர். அப்போது அவர்கள் தப்பித்துக் கொள்ளவேண்டும் எனும் துடிப்பும் ஆவலும் எழுந்து விடுகின்றன. இவ்வாறு தலைவர்க்கு வரும் துன்பத்திலும் இன்பத்திலும் ஈடுபட்டு விடுகிறோம். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை[15] ஆகிய மெய்ப்பாடுகளும் போற்றப்பெற்றுள்ளன.

13. முன்னோர் போற்றுதல்

உமறுப் புலவரிடம் முன்னோர்தம் சொல்லும் பொருளும் போற்றும் பண்பும் காணப்படுகின்றது. கம்பர்தம் காப்பியத்தில் சீவக சிந்தாமணியின் சாயலைப் பார்ப்பது போல் சீறாப் புராணத்தில் கம்பர்தம் சாயலைக் காண்கிறோம். கோசல நாட்டைக் கூற வந்த கம்பர் காவிரிபுரக்கும் சோழ வளநாட்டைக் கூறுவது போல் பாலை சேர்ந்த அரபு நாட்டைக் கூறவந்த உமறும் சோலையார்ந்த பொருநை பாயும் பாண்டி நாட்டைக் காட்டி விடுகின்றார். மலையிலிருந்து வளங்களை வாரிக் கொண்டு வரும் ஆற்றை விலைமகளாகக்

[15] தொல்காப்பியம்,

கம்பர் கூறுகின்றார்.[16] உமறும் அருவியை விலைமாதாகக்கூறு கின்றார்.[17] உமறு ஆற்றினை வணிகனாகக் குறிப்பிடுகின்றார்.[18] கம்பர் வாரியை வணிகனாகக் குறிப்பிடுகின்றார்.[19] கம்பர் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைத் தம் காப்பியத்தில் கதையோடு தொடர்புபடுத்திச் சிறப்பிக்கின்றார். உமறும் தம்மைப் புரந்த வள் ளல் அபுல்காசீமைக் காப்பியத்தில் பலவிடத்தும் பாராட்டுகின்றார். மிதிலை நகரக்கொடிகள் இராமனை வரவேற்றதாகக் கம்பர் குறிப் பிடுகின்றார்.[20] உமறும் நபிநாயகத்தை ஷாம் நகரக் கொடிகள் கையசைத்து வரவேற்பதுபோல வரவேற்றன எனக் குறிப்பிடு கின்றார்.[21]

சீவக சிந்தாமணி, குறுந்தொகை போன்ற தமிழ் இலக்கி யங்களில் காணப்பெறும் தொடர்களும் பொருளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அரேபியாவில் தோன்றிய நபிநாயகத்தின் வரலாறு கூறிய போதினும் இக்காப்பியத்தில் தமிழ் மணம் கமழ்கின்றது. அரே பியாப் பாலைவனத்தைத் தமிழ்ச் சோலையாக அமைத்துள்ளார். தமிழ் மரபுகளும் பழக்க வழக்கங்களும் இந்நூலிற் காணப்பெறு கின்றன. கோலமிடல்,[22] வள்ளுவர் மணமுரசறைதல்,[23] அடைக் காய் அருந்துதல், போன்ற தமிழ் நாட்டிற்கும் மொழிக்கும் உரிய செய்திகள் இதன்கண் காணக் கிடைக்கின்றன. இருப்பினும், பெயர்களும், தத்துவ விளக்கங்களும் அரபிச் சொற்களில் அமைந் துள்ளன. 'சீறா' எனும் காப்பியப் பெயரில் உள்ள சொல்லே சீறத் எனும் அரபிச் சொல்லின் தமிழ் வடிவமே. சீறத் எனும் சொல் வாழ்க்கைவரலாறு எனப் பொருள்படும். தீன், நபி, முர்சலீன், அர்ஷி, குர்ஷு, ரசூல், ஈமான் போன்ற அரபிச் சொற்களும் வந்துள்ளன.

14. முடிவுரை

இவ்வாறு சொல்வளம், பொருட்சிறப்பு, கற்பனைநலம், கவிதா உணர்ச்சி முதலிய இலக்கியப் பண்புகளைக் கொண்டும், பெருங் காப்பிய அமைதிகள் பலவும் பெற்றும் வாழும் இலக்கியமாக உள்ள

---

[16] கம்பராமாயணம். ஆற்றுப் படலம்-6.

[17] சீறாப்புராணம். நாட்டுப் படலம்-6.

[18] சீறாப்புராணம். நாட்டுப் படலம்-12.

[19] கம்பராமாயணம். ஆற்றுப் படலம்-7.

[20] கம்பராமாயணம். மிதிலைக் காட்சிப் படலம்.

[21] சீறாப்புராணம். ஷாம் நகர் புக்க படலம்-17, 18, 19.

[22] சீறாப்புராணம். பாத்திமா திருமணப் படலம்-74.

[23] சீறாப்புராணம். பாத்திமா திருமணப் படலம்-76,

சீருப்புராணம் சிறந்த பெருங் காப்பியங்களுள் ஒன்ருகும். இதன் சுவையில் ஊறித்திளைத்த பேராசிரியர் கா. அப்துல்கபூர், கவிஞரது புலமைத் திறத்தை வியந்து,

> 'செந்தமிழ்ச் சீரு சிறப்புடன் ஈந்த
> விந்தையா ருமறின் வித்தைதா அல்லா'[24]

என வேண்டுகிருர்.

மேற்கோள் நூல்கள்

1. Muslim contribution to Tamil Literature—by M. M. Uwise, M.A. (Ceylon).
2. தண்டியலங்காரம்-சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு (1960).
3. மலரும் மாலேயும்-'கவிமணி'.
4. தமிழ்க் காப்பியங்கள்-வித்வான் கி. வா. ஜகந்நாதன்.
5. இறையருள் மாலே—பேராசிரியர் கா. அப்துல்கபூர், எம். ஏ.

---

[24] இறையருள் மாலே, பேராசிரியர் கா. அப்துல்கபூர்-194.

பாரதிதாசன் கவிதைகளில் சமுதாயச் சீர்திருத்தம்

மு. பி. பாலசுப்பிரமணியன் *

கவிதை

கவிஞனின் இதயத்திலிருந்து பிறப்பது கவிதை. 'உயிரிலாச் செய்திகட்கு உயிர்மிகக்கொடுத்து, ஒளியிலாச் செய்திகட்கு ஒளியருள் புரிவது' கவிதை.[1] வாழ்க்கைக்கும் கவிதைக்கும் ஏராளமான தொடர்பு உண்டு.[2] வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்வதோடு, எப்படி வாழ வேண்டும் என்று எடுத்துக் கூறுவதும் கவிதை ஆகும். ஏனென்றால், 'கவிதை என்பது தனி உரிமை படைத்த கலையாகும். மொழி அதனுடைய ஆற்றல் மிக்க கருவியாக அமைந்துள்ள காரணத்தால் அது நம் வாழ்க்கையில் வேறு எந்தக் கலையையும் விட ஆழமாக ஊடுருவிப் பாய்ந்திருப்பதோடு, மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்தும் இருக்கிறது.'[3] அத்தகைய ஆற்றல் வாய்ந்த கருவியால்தான் சமுதாயத்தைச் சீர்திருத்த முடியும். 'ஒரு சமுதாயத்தின் விருப்பு வெறுப்பு நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே. ஆகையால் அதுவே மனித வாழ்வைப் பெரிதும் மாற்றியமைப்பது' என்பர்.[4] எனவே, 'கவிதைகள் வெறும் போதைப் பொருளாக மாறாமல் சமூகத்திற்குத் தெம்பும், திறமும் தேடித் தரும் வழியில் உருப்பெற வேண்டும். அப்போதுதான் சமுதாயம் நோயற்று வாழ முடியும்.'[5]

2. சீர்திருத்தம்

சீர்திருத்தம் என்பது காலத்தின் பணியாகும்.[6] 'எது எது நியதியினின்றும் வழுக்கி வீழ்கிறதோ, அதை அதைச் செப்பம் செய்ய இயற்கை விழையும் ஒன்று சீர்திருத்தம் என்பது. இச்சீர்

---

* எம்.ஏ., தமிழ் விரிவுரையாளர், காஞ்சிபுரம்.

[1] மகாகவி பாரதியார் கவிதைகள், ப. 195.

[2] "There is plenty of connection between life and poetry",—A. C. Bradley, *Oxford lectures on Poetry*, p. 6.

[3] "Poetry is an art singulary privileged. It penetrates deeper, and mixes more intimately into our lives, than any other art, because, the vehicle of its power is language."—L. Abercrombie, *The idea of Great Poetry*, p. 29.

[4] டாக்டர் மு. வரதராசனார், இலக்கியத் திறன், ப. 45.

[5] சிதம்பர ரகுநாதன், இலக்கிய விமர்சனம், ப. 56.

[6] "Reformation is the work of time."—Sir J. Reynolds, *The New Dictionary of Thoughts*, by Tryon Edwards, p. 532.

திருத்தம் இல்லையேல் உலகம் வளர்ச்சியுறாது.'[7] மக்கள் சமுதாயத்தில் பல சீர்கேடுகள் உள்ளன. அவற்றைச் சிந்தனையால்—சொற்பொழிவால்—செயலால் சீர்திருத்த முயன்ற செம்மல்கள் பலர். தம் கவிதையாற்றலால் சீர்திருத்த முயன்ற கவியரசர் பலர். 'கலை, கலைக்காகவே என்ற கோட்பாடு பொருளற்றது.'[8] கலை, வாழ்க்கைக்காக—கவிதை, வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக என்ற கொள்கையே வலுவுடையது. ஆதலால் சீர்திருத்தக் கருத்துக்கள் கவிதை வடிவம் பெறத் தொடங்கின.

3. பாரதிதாசன்

சாதிக்கொடுமை, சமயக் காழ்ப்பு, மூடநம்பிக்கை, கைம்மைத் துயர், குழந்தை மணம், பெண்ணடிமை, தீண்டாமை முதலிய பல இன்னல்களுக்கு இடங்கொடுத்து இழிநிலைக்குச் சென்று கொண்டிருக்கும் இன்றையச் சமுதாயத்தைக் கண்டு நெஞ்சங் கலங்கியவர் பாரதிதாசன். கவிதைகளைக் கவண் கற்களாகப் பயன்படுத்திச் சீர்கெட்ட சமுதாயத்தைச் சீர்திருத்த எண்ணிய கவியரசர். 'அடிநாள் முதலே சாதி பேதத்தையும், சமயபேதத்தையும் வெறுத்தவர். உயர்ந்த எண்ணமும் விரிந்த அறிவும் கொள்கைக்குப் போராடும் குணமும் கொண்டவர்'.[9]

4. சாதிக்கொடுமை

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'[10] என்கிறார் வள்ளுவர். அவர் வழி நின்று 'பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை'[11] என வலியுறுத்திப் பாடுகிறார். ஆண்குழந்தை தாலாட்டில் 'சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில் கனலெற்ற வந்த களிறே'[12] என்றும், பெண்குழந்தை தாலாட்டில் 'வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத் தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி'[13] என்றும் சாதியைச் சாடும் இடங்கள் கருத்தில் கொள்ளத்தக்கன. 'கடல் மேற்குமிழிகள்' என்னும் காவியத்தில்,

> "மிக்குயர்ந்த சாதி கீழ்ச்சாதி என்னும்
> வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க்கில்லை
> பொய்க் கூற்றே சாதி எனல், ஆரியச்சொல்
> புதுநஞ்சு! பொன் விலங்கு! பகையின் ஈட்டி"[14]

---

[7] திரு. வி. க., சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, ப. 112.

[8] "The Maxim 'Art for Art's sake' is meaningless"— C. T. Winchester, *Some Principles of Literary Criticism*. p. 108.

[9] பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, கவிஞரின் வாழ்க்கைக் குறிப்பு, ப. 11.

[10] திருவள்ளுவர், திருக்குறள் பாடல் 972.

[11] பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 161.

[12] மே.கா.நூ. ப. 125.

[13] மே.கா.நூ. ப. 127.

[14] மே.கா.நூ. மூன்றாம்தொகுதி. ப. 57.

என்று சாதியைக் கடுமையாகச் சாடுகிறார். ''சமத்துவப் பாட்டு'' என்னும் தலைப்பில் 'சேரிப்பறையர், தீண்டாதார் என்பார் நம் உற்றார்' என்றும், 'ஆலய உரிமை தாழ்ந்தவர்க்கும் உண்டு' என்றும் அரிய கருத்துக்களை உரிய முறையில் நம் உள்ளத்தில் பதிய வைக்கிறார். மக்களில் சிலருக்கு ஆலய உரிமை மறுக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறார்.

''குக்கலும் காகமும் கோயிலிற் போவதிற்
கொஞ்சமும் தீட்டில்லையோ?—நாட்டு
மக்களிலே சிலர் மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டில்லையோ?''[15]

என்று பாடுகிறார். நாயும் காகமும் கோயிலுக்குள் போகலாம். ஆனால் மக்களில் சிலர் போகக்கூடாதா? என வெந்த உள்ளத்தோடு வினவுகின்றார். இக்காலத்தில் சமையல் முன்னேற்றமின்றித் தாழ்ந்து போனதற்குச் சாதியும் சமயமுமே காரணம் எனக் குற்றஞ் சாட்டுகிறார்.

''சமையல்முன் னேற்றமின்றித் தாழ்தற்கு நமது நாட்டில்
சமயமும் சாதி என்ற சழக்கும்கா ரணம்என் பேன்நான்
அமைவுறும் செட்டி வீட்டில் அயலவன் உண்பதில்லை
தமைஉயர் வென்பான் நாய்க்கன், முதலி நீ தாழ்ந்தோன்
என்பான்''[16]

என்று இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டி நமக்குப் பாடமும் புகட்டுகிறார் பாரதிதாசன்.

5. சமயம், மூடநம்பிக்கை, பழக்கவழக்கங்கள்

தொடக்க காலத்தில் சமுதாயத்தைச் சீர்திருத்தி நல்வழிப் படுத்தவே சமயம் தோன்றியது. ஏசுநாதர், மகமதுநபி, புத்தர் போன்றோரின் பொன்மொழிகள் பூவுலகம் உள்ளளவும் போற்றக் கூடியவையல்லவா? ஆனால், சமயத்தைப் பின்பற்றிய மக்களுடைய மனத்தில், மூடநம்பிக்கைகள் வளர்ந்தனவே ஒழிய முன்னேற்றம் அரும்பவில்லை எனப் பகுத்தறிவாளர் பலர் கருதத் தொடங்கினர். அந்தக் கண்ணோட்டத்தோடு மதத்தை அணுகியவர்களில் பாரதிதாசனும் ஒருவர். சமுதாயம் சீர்திருந்த வேண்டுமெனில் சமயபேதம் ஒழியவேண்டும் என்ற கொள்கையினைக்கொண்டவர். தாலாட்டுப் பாட்டில், 'எல்லாம் கடவுள் செயல் என்று துடை நடுங்கும் பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய வந்தவளாக'ப் பெண்குழந்தையினைத் தாலாட்டுகிறார். சமயத்தினால் சமுதா

[15] மே.கா.நூ. ப. 199.
[16] குடும்ப விளக்கு, ப. 74,

யத்திற்குத் தீங்குதான் விளையும் என்ற திடமான நம்பிக்கை உடையவர் அவர். குறிஞ்சித்திட்டில்,

''மதம் என்ற கருங்கற் பாங்கில் மல்லிகை பூப்பதில்லை
மதியினில் மயக்கம் என்ற நஞ்சொன்றே மலரும் நாட்டில்
புதியதோர் பொல்லாங் கென்னும் எரிமலை புகையும்; மக்கள்
இதுநலம் இதுதீ தென்னும் எண்ணமும் இழந்து போவார்''[17]

என்று தன் கருத்தினை வலியுறுத்திப் பாடுகிறார். சமயத்தை வெறுத்துப் பாடினும் 'கடவுள் ஒருவர் உண்டு' என்பதனை ஒப்புக் கொள்ளுகிறார். ஆனால் உருவ வழிபாட்டை ஒப்புக்கொள்ளவில்லை.

'உள்ளதொரு தெய்வம்—அதற்(கு) உருவம் இல்லை, தம்பி'[18] என்று ஏற்றப்பாட்டில் தனக்கு ஏற்ற கருத்தினைத் தெரிவிக்கின்றார். மேலும் 'கடல்மேற்குமிழி'களில்,

''ஒரு கடவுள் உண்டென்போம்; உருவணக்கம் ஒப்போம்!
உள்ளபல சண்டையெலாம் ஒழியும் மதம் ஒழிந்தால்''[19]

என்று குறிப்பிடுகிறார். ஒருவனே தேவன்; அவனுக்கு உருவமில்லை; சமயம் ஒழிந்தால் சண்டையும் ஒழிந்துவிடும் என்ற தன் எண்ணத்தைத் திண்ணமுடன் தெரிவிக்கிறார்.

சமுதாயத்தில் கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும் எனப்பெரிதும் விழைகின்றார்.

''மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்''[20]

என்று உணர்ச்சியுடன் பாடுகிறார். ஒழுக்கம் இல்லாத பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டாம் என்று கட்டளையிடுகிறார்.

''வழக்கம் என்பதில் ஒழுக்கம் இல்லையேல்
கழுத்துப் போயினும் கைக்கொள்ள வேண்டாம்''[21]

என்று கூறும்போது, அவர் கையாளும் சொல்லாட்சியே அவர் உள்ள உறுதியை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

பெண்ணின் பெருமை

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்திச் சமுதாயத்தைச் சீர்திருத்தப் பல கவிதைகளை இயற்றினார் பாரதி

[17] குறிஞ்சித் திட்டு, ப. 123.
[18] பாரதிதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதி, ப. 151.
[19] மே.கா.நூ. ப. 86.
[20] பாரதிதாசன், முதல் தொகுதி, ப. 15.
[21] பாரதிதாசன், இரண்டாம் தொகுதி, ப. 115.

தாசன். பெண்களுக்குப் பேச்சுரிமை வேண்டும்; பெண்ணடிமை தீரவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர் அவர். சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்,

''பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என் கின்றீரோ?
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.
ஊமையென்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு''[22]

எனப் பெண்களுக்காக வாதாடும் வழக்குரைஞராகக் காட்சியளிக்கிறார்.

பெண் குழந்தை தாலாட்டில்,

''நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே''[23]

எனத் தாய்க்குலத்தின் பெருமையினைத் தரணியறிய வேண்டுகிறார். இல்லறவாழ்வில் கணவனை மரமாகவும், மனைவியை வேராகவும் மதிக்கிறார். குறிஞ்சித்திட்டுக் காவியத்தில்,

''..............மரம் கணவன் வேர்மனைவி;
வேரை மரம் வெறுத்தால் வீழ்ந்திடுமன்றோ குடும்பம்?''[24]

என்று பெண்மையைப் போற்றிப் பாடுகிறார். ஆம்! வேர் இல்லையேல் மரம் இல்லை; மனைவி இல்லையேல் கணவன் இல்லை! குடும்பவாழ்வின் இடும்பையினைத் தீர்ப்பவளாக மனைவியை மதிக்கிறார். மேலும், இருளை அகற்றி ஒளியை நல்கும் 'குடும்ப விளக்காக'வும் கருதுகிறார்.[25]

பெண்கள் நாட்டின் கண்களாகத் திகழவேண்டுமெனில் அவர்கட்குக் கல்வி இன்றிமையாதது. கல்வியில்லாப் பெண்களால் கடுகளவும் குடும்பத்திற்கோ, சமுதாயத்திற்கோ நன்மையில்லை என்ற கருத்துக் கொண்டவர் அவர். அதனாற்றான்,

''கல்வியில் லாத பெண்கள் களர்நிலம்! அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை!
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி, அங்கே
நல்லறி வுடைய மக்கள் விளைவது நவிலவோ நான்''[26]

என்று பாடுகிறார். படிக்காத பெண்களைப் பயன்தராத களர்நிலத்திற்கும், படித்த பெண்களைப் பண்படுத்தப்பட்ட கழனிக்கும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். கல்வியறிவுடைய பெண்களே நல்

---

[22] பாரதிதாசன், முதல் தொகுதி, ப. 3.
[23] மே.கா.நூ. ப.127.
[24] குறிஞ்சித் திட்டு, ப. 96.
[25] குடும்ப விளக்கு, ப. 194.
[26] மே.கா.நூ., ப. 69, 70.

லறிவுடைய நன்மக்களைப் பெற்றெடுக்க முடியும் என்கிறார். 'கல்வியில்லா மின்னாள்—வாழ்வில் என்றும் மின்னாள்'[27] என்றும் பாடுகிறார். மேலும்,

''மகளிரெலாம் கல்வியறி வொழுக்க முளராயின்
மருத்துவமே வேண்டாவாம், பிணிமூப்பு வாரா
மகளிரெலாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்
மாநிலத்தில் போரில்லை; சாக்காடும் இல்லை''[28]

என்று பெண்ணினத்திற்குப் பெருமதிப்புக் கொடுத்துப் பாடுகிறார். பெண்கள் கல்வி, அறிவு, ஒழுக்கம் உடையவர்களாக இருந்தால் மருத்துவமே தேவையில்லை; பிணியும் மூப்பும் நம்மை வந்து அணுகாது என்றும், பெண்கள் அரசியலைக் கைப்பற்றி ஆட்சி செய்தால் மாநிலத்தில் போரில்லை; சாவும் இல்லை என்றும் கூறும்போது அவர் இதயத்தில் ஊடுருவி நிற்கும் எண்ணத்தைப் புரிந்து கொள்ளுகிறோம்.

7. கலப்பு மணம், காதல் மணம்

சமுதாயத்தில் சாதிபேதமும் சமய வாதமும் ஒழிய வேண்டுமெனில் காதல் மணமும் கலப்பு மணமும் பல்கிப் பெருக வேண்டும். மக்களுக்குள் உயர்வு தாழ்வு பேசும் மடமையினை ஒழிப்பதற்கு ஒரே வழி கலப்பு மணந்தான் என்பதனை நன்கு உணர்ந்தவர் பாரதிதாசன்.

''காட்டோமே சாதி மணம்! கலப்பு மணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி.''[29]

என்று தன் உள்ளக் கருத்தினை வெளிப்படுத்துகிறார்.

''பிறப்புச் சாதியினின்றும் பெண்ணடிமை, தீண்டாமை முதலிய நச்சுக் குழவிகள் பிறந்தன. இவற்றைப் போக்கப் பல மருந்துகள் சொல்லப்படுகின்றன. சிறந்த மருந்து கலப்பு மணமேயாகும்,'' என்று திரு. வி. க. அவர்கள் கூறும் கருத்து ஈண்டு நோக்கத் தக்கது. 'புரட்சிக் கவி' காவியத்தில் புவியாளும் மன்னன் மகளுக்கும் எளிய குடிமகனை கவிஞன் ஒருவனுக்கும் கலப்பு மணம் செய்து வைக்கிறார் பாரதிதாசன். இளவரசி அமுதவல்லியிடம்,

''அன்றியும் என் காதல் அமுதே! நமதுள்ளம்
ஒன்றுபட்ட பின்னர் உயர்வென்ன தாழ்வென்ன?''[30]

என்று அந்தக் கவிக்காதலன் கூறுவதாகப் பாடுகிறார். காதலுக்குக் கட்டுப்பாடு விதிப்பது கயமைத்தனம் என்பது கவிஞரின் கருத்து.

---

[27] மே.கா.நா., ப. 70.
[28] மே.கா.நா., ப. 200.
[29] பாரதிதாசன் கவிதைகள், மூன்றாம் தொகுதி, ப. 86.
[30] பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 25.

''மண்படைப்பே காதலெனில் காதலுக்கு
மறுப்பெதற்குக் கட்டுப்பா டெதற்குக் கண்டார்?''[31]

என்று கேட்கின்றார். 'பாண்டியன் பரிசு' காவியத்தில்,

''கூழையே னுங்கொண்டு காட்டு மேட்டுக்
கொல்லையே னும்சுற்றித் திரியும் அந்த
ஏழையே னும் கண்ணுக் கினியான் இன்றேல்
இம்மியே னும் வாழ்வை இனியான் வேண்டேன்''[32]

என்று கொற்றவன் பெற்ற குலக்கொடியைக் கூற வைக்கிறார். மேலும், இழிந்த சாதியாக இருந்தாலும் இதயம் நிறைந்தவராயின் ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டேன் என்று திண்ணிய நெஞ்சத்துடன் தன் கருத்தைத் தெரிவிக்கின்றாள் இளவரசி அன்னம். பாரதிதாசன் காவியங்கள் அனைத்தும் கலப்பு மணத்தின் புகழ்பாட எழுந்தனவே ஆகும். கலப்பு மணம் செய்துகொண்டால் சமுதாயத்தில் நெளியும் சாதிப்புழு அழியும்—சமத்துவ நெறி தழைக்க வழி பிறக்கும் என்ற எண்ண எழுச்சியினைப் பெற்றவர் பாரதிதாசன்.

8. கைம்மைத்துயர், குழந்தை மணம், மறுமணம்

கைம்மை, குழந்தை மணம், பொருந்தாத் திருமணம் போன்ற கொடுமைகளைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர் பாரதிதாசன். கணவன் இறந்தவுடன் இளம் மனைவியின் ஏக்கமும் இறந்து விடுமா? என்பது அவர் எழுப்பும் வினா?

''மாலையிட்ட மணவாளன் இறந்து விட்டால்
மங்கை நல்லாள் என்ன செய்வாள்—அவளை நீங்கள்
ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்
அணுவளவும் அடையாமல் சாகச் செய்தீர்''[33]

என்று கைம்மை நிலைக்கு இரங்கிப் பாடுகிறார். மேலும்,

''கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே—இங்கு
வேரில் பழுத்த பலா''[34]

என்று கண்ணீர் விட்டுக் கலங்கும் கைம்பெண்ணுக்கு வேரில் பழுத்த பலாவின் உவமை காட்டி நம் உள்ளத்தை நெகிழ வைக்கிறார். வயது முதிர்ந்த கிழவனுக்குக்கூட மனைவி இறந்தால் வேறு மங்கையை மணந்து கொள்வதற்குச் சமுதாயம் உரிமை கொடுக்கிறது.

---

[31] பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 82.
[32] பாண்டியன் பரிசு, ப. 70.
[33] பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 120.
[34] மே.கா.நூ. ப. 106.

ஆனால் கணவனை இழந்த இளம் பெண்ணுக்கு அந்த உரிமை மறுக்கப்படுகிறது. இக்கொடுஞ்செயலைக் கண்டித்து,

''வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணந்தால் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?''[35]

என்று அவர் விடுக்கும் வினா நம் நெஞ்சைத் தொடுகிறதல்லவா? தேனீக்கள் என்றால் பாடவேண்டும்; தென்றல் என்றால் உலாவ வேண்டும்; வயிறு என்றால் பசிக்க வேண்டும். இவற்றிற்கு நேர்மாறாக உலகில் நடக்குமா? என்ற வினாவின் மூலம், விதவைக்கு வெண்ணிற ஆடைகொடுத்து வழியிழந்து தவிக்கும் சமுதாயத்திற்கு ஒளி கொடுக்க முனைகிறார் பாரதிதாசன்.

குழந்தை மணத்தின் கொடுமையினையும் கடுமையாகச் சாடுகிறார். 'குழந்தைக்கு மணஞ்செய்து கொல்வது சீரோ?''[36] எனக் கூறிக் குழந்தைக்கு மணஞ்செய்வதும் அவர்களைக் கொல்வதும் ஒன்று தான் என்கிறார். பெருங்கிழவன் ஒருவன் இளம்பெண்ணை மணக்கும் பொருந்தா மணத்தை, மூடத்திருமணம் என்கிறார். 'மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக''[37] எனச் சபிக்கிறார். மனம் வேறுபட்டால் 'மணவிலக்கு' செய்து கொள்ள அனுமதி கொடுக்கிறார். 'காதல் உடையார் தம் வாழ்வில் உளம் வேறுபட்டால் மடவார் பிறனை மணக்க விடவேண்டும்.'[38] என்கிறார். இதன் மூலம் மணவிலக்குச் செய்து கொண்டு, மறுமணம் செய்து கொள்ளலாம், என்கிறார்.

''மறுமணம் புரிவது சிறுமை என்றறைவது
குறுகிய மதியென அறிஞர்கள் மொழிகுவர்''[39]

என்று மறுமணத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்துப் பாடுகிறார் பாரதிதாசன்.

9. புரட்சித் திருமணத் திட்டம்

வைதீக மணத்தில் பின்பற்றப்படும் பலவிதமான சடங்குகளை வெறுத்தவர் பாரதிதாசன். திருமண முறையில் இத்தகைய சடங்குகளையெல்லாம் ஒழித்தால்தான், புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை உடையவர் அவர். சடங்குகள் சாத்திரங்கள்—மூடநம்பிக்கைகள் முதலியவற்றிற்கு இடங்கொடுக்காத 'புரட்சித் திருமணத் திட்டம்' ஒன்றினைக் கவிதை வடிவில் தருகிறார்.

---

35 மே.கா.நா. ப. 82.
36 மே.கா.நா. ப. 144.
37 மே.கா.நா. ப. 111.
38 குடும்ப விளக்கு, ப. 64.
39 பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 119.

அது சுயமரியாதைத் திருமணத்தின் மறுபதிப்பாகக் காட்சி யளிக்கிறது. அதில், வைதீக மணத்திற்கு இடங்கொடுத்தால் தமிழர் சமுதாயம் தலை சாயும் நிலை தான் ஏற்படும் என்று குறிப்பிடுகிறார்.

''வைதீக மணத்தை மெய்என ஒப்பிடில்
தமிழர் பண்பு தலைசா யாதோ?''[40]

என்று இன உணர்ச்சியுடன் எழுச்சிக் கவி வடிக்கிறார். மேலும், பஞ்சாங்கம் பார்த்துத் திருமணம் நடத்தும் முறையினை அவர் விரும்பவில்லை.

''மிஞ்சும் காதலர் மெய்யன் பிருக்கையில்
கெஞ்சிப் பிழைப்போன் பஞ்சாங்க மேனோ?''[41]

என அஞ்சாமல் கேட்கின்றார். இதேபோன்று 'நல்லமுத்து கதை'யிலும் திருமணத்திற்குச் சாதகம் பார்க்கும் முறைகேட்டினை நகைச்சுவையோடு இடித்துக் கூறுகிறார்.[42]

10. குடும்பக் கட்டுப்பாடு

மக்கள் தொகைப் பெருக்கத்தால் எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் பலர் உள்ளத்தில் குடிகொண்டுள்ளது. அளவான குடும்பமே மகிழ்வான சமுதாய வாழ்வுக்கு வழிகோலும் என்ற எண்ணம் பரவி வருகிறது. குடும்பக் கட்டுப்பாடே குதூகலமான வாழ்வுக்கு அடிப்படை என்ற கொள்கையுடையவர் பாரதிதாசன். குடும்ப விளக்கில்,

''ஈண்டு குழந்தைகள்தாம் எண்மிகுத்துப் போகாமல்
வேண்டும் அளவே விளைத்து, மேல்—வேண்டாக்கால்
சேர்க்கை ஒழித்துக் கருத்தடையே னும் செய்க''[43]

என்று கட்டளையிடுகிறார் கவிஞர். கருத்தடை செய்து கொள்வதின் மூலம்தான் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று நம்புகிறார். அந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையில்,

''காதலுக்கு வழிவகுத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம், இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை?
சந்தான முறை நன்று; தவிர்க்குமுறை தீதோ?''[44]

என்ற கேள்விக்கணை தொடுக்கிறார். குடும்பக் கட்டுப்பாட்டினால் சமுதாயத்தில் மறுமலர்ச்சியும் மக்களிடையே மனமகிழ்ச்சியும் ஏற்படும் என்கிறார். ஆம்! குடும்பக் கட்டுப்பாட்டிற்காக 1938ம் ஆண்டிலேயே குரல் கொடுத்தவர் பாரதிதாசன்.

---

[40] பாரதிதாசன் கவிதைகள், மூன்றும் தொகுதி, ப. 216.
[41] மே.கா.நூ. ப. 216.
[42] மே.கா.நூ. ப. 119-123.
[43] குடும்ப விளக்கு ப. 65.
[44] பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 122-124.

11. முடிவுரை

'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்'[45] என்று பாடினார் பாரதியார். கவிதைத் திறனால் சமுதாயத்தைச் சீர்திருத்த முடியும்; சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி மக்களைச் சிந்திக்க வைக்க முடியும் என்று காட்டியவர் பாரதிதாசன். நம் பிக்கையிழந்து தவித்த சமுதாயத்தின் நாடி நரம்புகளை முறுக்கி விட்ட நற்றமிழ் வேந்தர்! புத்துலகம் காணவிழைந்த தத்துவ வித்த கர்! சமுதாயத்தைச் சீர்திருத்த விழைந்த சமத்துவக் கவிஞர்! ஆம்! பாரதிதாசன் கவிதைகளில் சமத்துவ மணம் கமழ்வதைப் பரக்கக் காணலாம். 'இருண்ட வீடாக' இன்றைய சமுதாயம் இல்லாமல் 'குடும்ப விளக்காக'க் குவலயத்தில் சிறக்க வேண்டும் என எண்ணிய கொள்கைக் கவிஞர் அவர். சமுதாய சீர்திருத்தம் பாடிக் காலத்தை மாற்றும் கவிஞராகப் புதிய காலத்தையே படைக் கின்ற புத்துலகச் சிற்பியாக அவர் தோற்றமளிக்கிறார். அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள், ''பாரதிதாசன், மேல்நாட்டுக் கவிகளைப் போல் கலையைக் காலத்தின் கண்ணாடியாக்குகிறார். காலத்தையே படைக்கிறார். காலத்தையே படைக்கிறார் என்பது மாத்திரமல்ல, காலத்தையே மாற்றுகிறார்; காலத்தையே மாற்று கிறார் என்பது மாத்திரமல்ல, மாறிய காலத்திற்கு நம்மை அழைத் துச் செல்கிறார்.''[46] என்று கூறியிருக்கும் கருத்து இப்பாருள்ளள வும் கடல் நீருள்ளளவும் நிலைத்து நின்று பாரதிதாசன் புகழைப் பறைசாற்றும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மேற்கோள் நூல் விவர அட்டவணை (Bibliography)

தமிழ்

1. மகாகவி பாரதியார் கவிதைகள் நான்காம் பதிப்பு, 1958, சக்தி வெளியீடு.
2. இலக்கியத் திறன்—டாக்டர் மு.வ. தாயக வெளியீடு, முதல் பதிப்பு, 1959.
3. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து—திரு. வி. க.
4. திருக்குறள், பரிமேலழகர் உரை, சக்தி வெளியீடு, மூன்றாம் பதிப்பு, 1959.
5. பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, 1959. செந்தமிழ் நிலையம்.
6. மே.கா.நூ. இரண்டாம் தொகுதி, 1958, பாரி நிலையம்.
7. மே.கா.நூ. மூன்றாம் தொகுதி, 1964, பாரி நிலையம்.
8. குடும்ப விளக்கு—பாரதிதாசன், பாரி நிலையம், நான்காம் பதிப்பு, 1966.
9. குறிஞ்சித் திட்டு—பாரதிதாசன், பாரி நிலையம், முதற் பதிப்பு, 1959.
10. பாண்டியன் பரிசு, பாரதிதாசன், செந்தமிழ் நிலையம், ஆறாம் பதிப்பு, 1959.
11. இலக்கிய விமர்சனம், சிதம்பர ரகுநாதன், ஸ்டார் பிரசுரம், 1956.

ஆங்கிலம்

12. Oxford Lectures on Poetry by A. C. Bradley.
13. The idea of Great Poetry by L. Abercrombie.
14. Some Principles of Literary Criticism by C. T. Winchester.
15. The New Dictionary of Thoughts compiled by Tryon Edwards.

---

[45] மகாகவி பாரதியார் கவிதைகள், ப. 99.

[46] அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம்.ஏ., 20-9-45ல் பாரதிதாசன் உருவப் படத்தைத் திறந்து வைத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழி விலிருந்து எடுக்கப்பட்டது.

தமிழில் வரலாற்றுப் புதினங்கள்

கோவி. மணிசேகரன் *

தமிழ்ப் புதின இலக்கியத் துறையை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று; வரலாற்றுப் புதின இலக்கியம். இரண்டு: சமூகப் புதின இலக்கியம்.

முன்னோர்களை நினைத்துப் பார்ப்பது உலகப் பண்பு. தந்தையின் பெயரை முன்வைத்து நம்முடைய பெயரைப் பின்னே எழுதும் மரபினைப்போல, வரலாற்றுப் புதின இலக்கியத் துறையை முன் வைத்துப் பேசுவதே அறமாகும். பொதுவாகவே, காலத்தை வென்று நிலைத்த எல்லா இலக்கியங்களும் ஒரு வரலாற்றையோ அல்லது புராணத்தையோ அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை தாம். இன்றைக்குச் சமூகக் கதைகளாகத் திகழ்பவைகூட நாளைக்கு வரலாற்றைக் காட்டும் கண்ணாடிகளாய் விளங்கினாலொழிய, காலத்தை வெல்ல முடியாது என்பது என் கருத்து. பாத்திரப் படைப்புத் திறனும், கற்பனை வளமும், தெளிந்த மொழியறிவும் உறுதுணையாக அமைதல் வேண்டும். எழுத்தாளன், தான் படைக்கும் இலக்கியத்துக்கான மொழியறிவைத் துச்சமாக மதிப்பானேயானால் அல்லது தேவையற்றதாக நினைப்பானேயானால் அந்த இலக்கியம் சாறுள்ளதாக இருக்க முடியாது; வெறும் சக்கையாகத் தானிருக்க முடியும்.

சேரனையும், சோழனையும், பாண்டியனையும், பல்லவனையும் வைத்துப் புனையப் பெறும் புதினங்கள்தாம் வரலாற்றுப் புதினங்கள் என்று நினைப்பது தவறு. இன்றைய சமுதாயத்தில் நிகழும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு எழும் புதினங்களும் வரலாற்றுப் புதினங்கள்தாம்! நேற்று நடந்த மொழிப் புரட்சியைப் பின்னணியாகக் கொண்டு ஒரு புதினம் எழுமானால் அதுவும் வரலாற்றுப் புதினம்தான். அண்மையில் 'கல்கி' பத்திரிகை நடத்திய வெள்ளிவிழாப் பரிசுத் திட்டத்தில் இரண்டாம் பரிசுபெற்ற 'கல்லுக்குள் ஈரம்' என்ற புதினமும் ஒரு சிறந்த வரலாற்றுப் புதினம்தான். எழுதியவர் திரு. ரா. சு. நல்லபெருமாள்.

திரு. எம். வி. வேங்கடராமன் எழுதிய 'வேள்வித்தீ'' என்ற புதினத்தையும் வரலாற்றுப் புதினம் என்று ஏன் சொல்லக்கூடாது?

---

* நாவலாசிரியர், சென்னை.

கல்கி சகாப்தம்

இந்தியாவில் வரலாற்றுப் புதினங்கள் எழுதும் எழுத்தாளர்களுள், சிறப்பானவர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள் என்று கூற வேண்டும். பிறமொழிகளில் எழுதப் பெற்ற வரலாற்றுப் புதினங்களுள் மிகச் சிறப்பானவையாகக் கருதப்பெறும் புதினங்களான 'ஜெயசோமநாத்', 'மிருணாலவதி', 'சென்னபசவ நாயக்கன்', 'சாந்துலா' போன்ற புதினங்களைப் படித்துப் பார்த்தபோது, ஒரு ''சிவகாமியின் சபத''த்துக்கு ஈடு சொல்ல முடியாதவையாகவே எனக்குப் படுகின்றன. பாத்திரப் படைப்பு என்று எடுத்துக் கொண்டால் 'சிவகாமி' நம் நெஞ்சில் கொஞ்சும் சலங்கை கட்டி, மிஞ்சும் பரதமாடி, விஞ்சும் அழகை வெளிப்படுத்தி நிலைக்கிறாள். 'ஜெயசோமநாத்'தில் வரும் 'கௌரி' எங்கோ மறைந்து விடுகிறாள்!

வரலாற்றின் அடிப்படையைச் சொல்லப் போனால் மகோன்னதமான பல்லவப் பேரரசு, நம்கண் முன்னே படமாக விரிகிறது! இதயத்திலே திடமான பெருமையைத் தோற்றுவிக்கிறது. வடதிசை வாதாபி தென்திசையில் தெளிவு காட்டுகிறது. அன்றே தெய்வத் தமிழ்ப் புலவராம் சேக்கிழார் பெருமானின் தித்திக்கும் திருநாவில் வந்தமர்ந்த நாடல்லவா, வாதாபிப் பெருநாடு? இந்தப் பெருமையை இந்தியத் துணைக்கண்டத்தில் எந்த நாடு கண்டது? எந்தப் புலவன் பாடினான்? தமிழகம் கண்டது என்றால் பேராசிரியர் திரு. கல்கியவர்கள் ஒரு ''சிவகாமி''யின் சபதத்தைக் கண்டதில் வியப்பில்லை. சிவகாமியை நாம் மட்டும் கண்டதோடு நில்லாமல், உலகுக்கும் காட்ட முயலுவோமேயானால், அப்போதுதான் தமிழகத்தின் மறுமலர்ச்சி இலக்கியப் பெருமை செழித்தோங்கத் தொடங்கும்! பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் சகலகலா வல்லமையை அறிபவர்கள், தமிழரின் பெருமையை உணர்வார்கள்! இராசராச சோழனும் பொன்னியின் செல்வனின் திறம் வியந்து உலகம் வாழ்த்தும்! தமிழகத்துப் பார்த்திபர்களின் கனவுகள் நனவாகும்!

பேராசிரியர் திரு. கல்கியவர்கள் பலருக்கு வழிகாட்டியாக விளங்கியவர். வரலாற்றுக் கதை புனைவதற்கு—அதாவது, சுயமான திறமான கற்பனையையும் வரலாற்றறிவையும் இணைத்துப் புனைவதற்குப் பேராசிரியர் கல்கி அவர்கள் ஒரு முன்னோடி! ஆகவே, வரலாற்றுப் புதினத் தொடக்கத்தைக் 'கல்கி சகாப்தம்' என்று கூறினால் பொருத்தமிக்கதாகும்.

ஒன்பான்மணிகள்

தமிழகத்தில் இப்போது பலரும் வரலாற்றுக் கதை புனைவதில் பேரார்வம் காட்டி வருகின்றனர். பலர் எழுதிப் பார்ப்போமே என்று எழுதுகிறார்கள். சிலர் எழுதுவதையே கலையாகக்கொண்டு எழுதுகிறார்கள்.

வரலாற்றுக் கதை எழுதுவதென்பது அத்துணை எளிதான செயலன்று. அதற்கான அறிவே வேறு; ஆற்றலே வேறு. தாம் பயின்றதையுணராமல் கதைகளை எழுதி வந்தவர்கள்கூட, இடைக்காலத்தில், பத்திரிகைச் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, சுயமான வரலாற்றைக் கதாசிரியர்களுடன் போட்டியிட்டுப் பார்க்க முன்வந்தனர். கண்டது படுதோல்வி. வரலாற்றுக் கதை எழுதுகிறவன் ஒரு நடமாடும் நூல் நிலையமாக விளங்க வேண்டும் என்ற பேருண்மையை அவர்கள் உணராமல் போய்விட்டனர். ஏதோ, பள்ளி மாணவர்கள் படிக்கும் வரலாற்று நூல்களையும், ஒரு சில பேராசிரியர்கள், பதிப்பாளர்களிடையே ஏற்பட்ட போட்டியை நிறைவு செய்ய எழுதித் தள்ளிய வரலாற்று நூல்களையும் வைத்துக் கொண்டு வரலாற்றுக் கதைகளை எழுத முடியும் என்று நினைப்பது மடமை! வரலாற்றின் ஆணிவேர் எங்கே இருக்கிறது என்று தேடிப் படித்து, ஆய்ந்து, உணர்ந்து, பிறகு கற்பனையில் அன்வயப் படுத்துகிறவர்கள் தாம் உண்மையான வரலாற்று எழுத்தாளர்கள். அப்படிப்பட்டவர்கள் ஒன்பதின்மரை இங்கே நான் அறிமுகப்படுத்தவும்—படுத்திக் கொள்ளவும் ஆசைப் படுகிறேன்.

1. பேராசிரியர் திரு. கல்கி 2. திரு. சாண்டில்யன் 3. திரு. ஜெகசிற்பியன் 4. திரு. சோமு 5. திரு. அகிலன் 6. திரு. அரு ராமநாதன் 7. திரு. விக்கிரமன் 8. திரு. தே. ப. பெருமாள் 9. கோவி. மணிசேகரன்.

என்னை நானே கூறிக்கொள்வது மரபில்லையானாலும், பலரை உலகுக்குக் காட்ட முனைந்த நான், என்னை நானே இழந்து விடுவது அறமாகாது.

பேராசிரியர் திரு. கல்கி அவர்கள் மூன்று வரலாற்றுப் புதினங்கள்தாம் எழுதியிருக்கிறார்கள். 1. ''பார்த்திபன் கனவு'' 2. ''சிவகாமியின் சபதம்'' 3. ''பொன்னியின் செல்வன்''.

பேராசிரியருடைய வரலாற்றுப் புதினத் திறனைப் பற்றி முன்னமேயே கூறியாய் விட்டது. முன்னம் கூற வேண்டிய மூலப் பிரணவத்தைப் போன்றவை அவருடைய வரலாற்றுப் புதினங்கள். குறிப்பாகப் ''பொன்னியின் செல்வன்'' உலகின் மிகப் பெரிய ஓரிரு புதினங்களுள் ஒன்றாகும். இந்தியாவின் மிகப் பெரிய ஒரே புதினம் அதுதான்! கனத்தில் மட்டும் அல்லாமல், குணத்திலும்—அதாவது, வரலாற்றுப் புதினங்களுள் அதுவேதான் சிறக்க நிற்பது என்று கூறுவேன்!

''சாண்டில்யன்'' இளைஞர்களை வயப்படுத்தவல்ல வயதான இலக்கியச்செல்வர்! விண்ணென்று நரம்பு தெறிக்கவல்ல விசித்திர நிகழ்ச்சிகளை அவருடைய கதைகளில் காணலாம்! வாலிபர் முதல் பாமரர் வரை விரும்பிப் படிக்கும் வாத்சாயன நடையழகு அவ

ருடைய எழுத்துக்களில் மிளிரும்! ''கடல் புறா'', ''யவனராணி'', ''கன்னிமாடம்'', ''மன்னன்மகள்'', ''மலைவாசல்'', ''ஜீவபூமி'', ''ஜலமோகினி'', ''மூங்கில்பாலம்'', ''நாகதீபம்'' முதலான வரலாற்றுப் புதினங்களைப் படைத்தவர். ''கடல் புறா'' ஒரு குறிப்பிடத்தக்க பெரிய முயற்சி; ஆயினும், ''கன்னிமாடம்'' போற்றத் தக்க அரிய முயற்சியாகும். பாண்டியர் காலத்தில் ஏற்பட்ட சிங்களப்படை இறக்குமதியைப் பின்புலமாகக் கொண்ட இந்த வரலாற்றுப் புதினம், ஆசிரியரின் திறனுக்கு ஒரு சான்று பகர்வதாகும். பொதுவாக, திரு. சாண்டில்யனின் வரலாற்றுக் கதைகளில், வரலாற்றின் மையமும், பாத்திரங்களும் தென்படுவதற்கு மாறாக, அதன் கரையோரப் பகுதிகளை வைத்துக் கொண்டு கற்பனைப் பாத்திரங்கள் உலவுகிற சாகசங்களையே காணமுடியும். ஆனால் ''கன்னிமாடம்'' இந்தப் போக்குக்கு முற்றிலும்மாறுபட்டது. வரலாற்றுப்பாத்திரங்களுடன் கற்பனைப் பாத்திரங்கள் நேர்முகமாகச் சந்தித்துக் கதை நடத்தும் பாங்கினை அடிக்கடி காண முடியும். வரலாற்றுக் கதை புனைபவர்களுக்குச் சொல்லாராய்ச்சி முக்கியமான ஒன்று. இந்தக் குறை திரு. சாண்டில்யனிடம்மட்டுமல்லாமல் பலரிடமும் இருக்கக் காணுகிறோம்.

திரு. சாண்டில்யனின் தமிழ் நடையும், வரலாற்று ஆராய்ச்சியும் காலத்தை வெல்லத் தக்கனவாக அமையவில்லை என்பது கண்கூடு. உதாரணமாக ''மூங்கில்பாலம்'' நூலை எடுத்துக் கொண்டால் அதில் 'மைனு', 'ஊட்டி', போன்ற சொற்கள் வரக் காணலாம். இப்படிப் பல நாவல்களில் சூழ்நிலை மறந்த சொற்கள் காணப்படும். அண்மையில் எழுதிக் கொண்டுவரும் 'ராஜமுத்திரை'யிலும்கூட 'பட்டணம் என்றும், 'மீன் வயிற்றில் முத்து பிறக்கும்' என்றும் எழுதியிருக்கிறார். தமிழ் நடையில் இலக்கணப் பிழைகள் மலிந்து கிடக்கும். கதையமைப்பில் எங்கோ எப்போதோ படித்த அல்லது திரைப்படங்களில் பார்த்த நினைவு அல்லது உணர்வு ஏற்படும். ஆயினும் மக்கள் முன்னே அவர் வெற்றி நிறைந்த வரலாற்று எழுத்தாளர் என்பது உண்மை.

திரு. ஜெகசிற்பியன்: ''பத்தினிக்கோட்டம்'', ''திருச்சிற்றம்பலம்'', ''ஆலவாய் அழகன்'', ''மகரயாழ் மங்கை'', ''நாயகி நற்சோணை'', ''மாறம்பாவை'', ''நந்திவர்மன் காதலி'', ''மதுராந்தகி'' போன்ற புதினங்களை எழுதியவர். இவற்றிலே குறிப்பிடத்தக்க புதினம் ''பத்தினிக்கோட்டம்''. பல்லவப் பேரரசைப் பகைப்புலமாகக் கொண்டது இந்தப் புதினம். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சியை அரசாண்ட பரமேச்சுரவர்மனுடைய காலத்தை வைத்துப் பின்னப்பட்ட இந்தப் புதினம், சுவை நிறைந்த ஒரு புதினமாகும். வடமொழிக் கலவையுடன் கூடிய இவருடைய தமிழ் நடையில், தமிழுணர்ச்சியின் மதமதர்த்த தன்மையைக் காணமுடியும். 'சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்' என்ற வரியுடன் புதினம் தொடங்குகிறது.

குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்

என்று மணிமேகலையில் வரும் சுடுகாட்டு வருணனைவரி, இப்புதினத்தில் நாட்டு வருணனையுடன் தொடங்கும் அழகினைக் காணலாம். 'மேலோர் விழையும் நூல் நெறி மாக்கள், பால்பெற வகுத்த பத்தினிக்கோட்டம்' என்று சிலப்பதிகாரம் செப்பும் பத்தினிக்கோட்டம், பல்லவ நாட்டில் எங்கே இருந்தது என்று பலரும் வியக்கலாம். அதனைக் கொண்டு வந்து நிறுத்திய பாங்கினைப் படித்தவர்கள்தாம் உணரமுடியும். புதினத்தில் மாமல்லபுரக்காட்சி வரும் போது, (ஐந்தாம் அத்தியாயத்தில்) தருமராசன் கோயில், பீமசேனன் கோயில், அர்ச்சுனன் கோயில், திரௌபதி கோயில், சகாதேவன் கோயில் என்றெல்லாம் பேசப்படுகிறது. ''வேங்கடம் முதல் குமரி வரை'' என்ற நூலில் திரு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் இப்பெயர்கள் பிற்காலத்தில் ஏற்பட்டனவென்று குறிப்பிடுகிறார். அப்பேர்ப்பட்டவரே இந்நூலுக்கு முன்னுரை வழங்கி, மிகவும் பாராட்டி இருக்கிறார் என்றால், புதினத்தின் படைப்புத் தன்மைதான் காரணம். இப்படியான சிலபல சிறுகுறைகளை மறந்து விட்டால் ''பத்தினிக்கோட்டம்'' பாராட்ட வேண்டிய புதினம்தான்.

திரு. சோமு: தமிழகத்துப் புனிதமான கதாசிரியர்களுள் ஒருவர். மணம் நிறைந்த அகிற்புகையினூடே, அமைதியாகத் தவம் செய்யும் இனிய கனவை—ஆரோக்கியமான உணர்வை—அளிக்க வல்லன திரு. சோமுவின் புதினங்கள். இரண்டு வரலாற்றுப் புதினங்களை எழுதியிருக்கிறார். 1. ''கடல் கண்ட கனவு'', 2. ''வெண்ணிலவுப் பெண்ணரசி''.

சேரமன்னன் நெடுஞ்சேரலாதனைக் கொண்டு புனையப்பட்ட புதினம்தான் ''வெண்ணிலவுப் பெண்ணரசி''. கவிதை துள்ளும் தமிழ் நடைமிக்க இந்தப் புதினம், ஆசிரியருடைய முந்திய புதினத்தைவிடச் சிறப்பாக அமைந்ததாகும். வெள்ளைத் தீவுக் கடம்பர்களைச் சூழ்ந்து கதை நடையழகு பயில்கிறது. நீலவல்லி நம் கண் முன்னே நிலவாக நின்று அமுதத்தைப் பொழிகிறாள்.

திரு. அகிலனையும், திரு. அரு. ராமநாதனையும் ஒன்றாக இணைத்துப் பேசலாமே! என்னறிவுக்கு, என் சுவைக்கு எட்டியவரை இன்றுள்ள வரலாற்றுப் புதினங்களுள் குறிப்பிடத்தக்க புதினங்களைப் படைத்திருப்பவர்கள் இவர்கள் இருவர் என்றால் மிகையல்ல. வரலாற்று ஆராய்ச்சி, அனுபவம் பற்றியதில் இருவருக்கும் சமபீடத்தை அளிக்கலாம். தமிழ் நடையைப் பொறுத்தவரை திரு. அகிலனுடையது இனிய இசை போன்றது. திரு. அரு. ராமநாதனுடையது, நளினமான நாட்டியத்தைப் போன்றது. முன்னவர் சுருதி சுத்தமான தம்பூரா! பின்னவர் ஜதி சுத்தமான கொஞ்சும் சலங்கை! ''வேங்கையின் மைந்தன்'', ''கயல்விழி'',

''வெற்றித்திருநகர்'' ஆகிய மூன்று புதினங்களை திரு. அகிலன் எழுதியிருக்கிறார். ''வீரபாண்டியன் மனைவி'', ''அசோகனின் காதலி'', ''வெற்றிவேல் வீரத்தேவன்'' ஆகிய மூன்று புதினங்களை எழுதியவர் திரு. அரு. ராமநாதன்.

முன்னவரின் குறிப்பிடத்தக்க புதினம் ''வேங்கையின் மைந்தன்''. பின்னவரின் போற்றத்தக்க புதினம் ''வீரபாண்டியன் மனைவி''.

உலகை வியக்கச் செய்யும் இந்திய மன்னன்—மாவீரச்சக்கரவர்த்தி ராசேந்திர சோழனைக் கதைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பெற்ற புதினம் ''வேங்கையின் மைந்தன்.'' அழகான தமிழ் நடை; தெளிவான வரலாற்று ஆராய்ச்சி, அருமையான பாத்திரப் படைப்பு. கற்பனைப் பாத்திரமான ரோகிணியை யாரும் மறக்க முடியாது; மறப்பவர்கள் உணர்ச்சியற்றவர்கள். சிங்களவன் வயிற்றில் பிறக்கச் செய்து, தமிழ் மகனைக் காதலிக்கச் செய்து, அந்தக் காதலைத் தியாகம் நிறைந்ததாக ஆக்கும்போது, நாம் நம்மை மறக்கிறோம். வேளிர்குலச் செல்வன் இளங்கோ, அந்தப் பேதைப்பெண் ரோகிணிக்காக ஏங்கும் காட்சி, அவனுக்காக ஏங்கித் துடிக்கும் அருள்மொழியின் துடிதுடிப்பு, நெஞ்சை உலுக்கும். காதல் துடிப்பு மட்டுமல்லாமல், சாகசத் துடிப்பும் இந்தப் புதினத்தில் உண்டு. பாண்டியர் முடியைக் கைப்பற்ற ஈழத்துக்குச்சென்ற இளங்கோவின் வீர சாகசம் மெய்சிலிர்க்க வைக்கும். வணங்கத்தக்க தமிழ்—தமிழகப் பற்று மிக்க திரு. அகிலனை நாடு மறவாது.

இதைப்போலவே, திரு. அரு. ராமநாதனின் ''வீரபாண்டியன் மனைவி''யில் வரும் ஜனநாதன் பாத்திரம் நினைக்கவே அஞ்சும் அபூர்வப் படைப்பு! சோழமன்னன் குலோத்துங்கன், பாண்டிய மன்னன் வீரபாண்டியனை வென்று, அவனுடைய மனைவி மக்களைச் சிறைப்பிடித்து, வேளமேற்றிய சில வரலாற்று வரிகளை வைத்துக் கொண்டு பெரிய புதினத்தைப் படைத்துவிட்டார் ஆசிரியர் அரு. ராமநாதன். புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கிவிட்டால் பிறகு எந்தவிதச் சலனமும் நமக்கு ஏற்படாது. அத்தகு விறுவிறுப்பான புதினம் ''வீரபாண்டியன் மனைவி''. அருவியின் சலசலப்புப் போன்ற இனிநான எழில் நடை; வியக்கத்தக்க கற்பனை வளம்; பாராட்ட வேண்டிய பாத்திரப் படைப்புக்கள். வருங்கால இலக்கியச் சமுதாயம் அவரை நினைத்துப் பார்க்கும்.

திரு. விக்கிரமனையும், திரு. தே. ப. பெருமாளையும் ஒன்றாக இணைத்துப் பேசலாம். இருவருமே வரலாற்று அறிவு மிக்கவர்கள்.

''நந்திபுரத்துநாயகி'',, ''காஞ்சி சுந்தரி,'' ''காதல் சிகரம்'', ''பராந்தகன் மகள்'', ''வல்லத்து இளவரசி'' போன்ற வரலாற்றுப் புதினங்களைப் படைத்தவர் திரு. விக்கிரமன். ''தளவாய்

வேலுத்தம்பி'', ''சிற்பியின் காதல்'', ''வேணாட்டு வேந்தன்'', ''வஞ்சிக் கோமகள்'' போன்ற புதினங்களைப் படைத்தவர் திரு. தே. ப. பெருமாள்.

திரு. விக்கிரமன் எழுதிய ''நந்திபுரத்து நாயகி'' வெற்றி தேடித்தந்த புதினமாகும். பேராசிரியர் திரு. கல்கி எழுதிய ''பொன்னியின் செல்வ'' னைப் பின்பற்றி எழுதப் பெற்ற இந்தப் புதினத்தில் நிறைவான வரலாற்று ஆராய்ச்சி நுணுக்கங்களைக் காண முடிகின்றது. இதே நுணுக்கங்களை, திரு. தே. ப. பெருமாள் எழுதிய ''தளவாய் வேலுத்தம்பி'' யிலும் நிறைவாகக் காணலாம். முன்னது முற்காலச் சோழநாட்டின் கதை; பின்னது பிற்காலத் திருவிதாங்கூர்க் கதை. அங்கே இராசராசசோழன் கதாநாயகன்; இங்கே மாவீரன் வேலுத்தம்பி கதாநாயகன். அங்கே ரவிதாசன் போன்றோரின் சூழ்ச்சி; இங்கே குஞ்சு நீலன் போன்றோரின் சூழ்ச்சி. திரு. பெருமாளிடம் கவிதை நடை துள்ளும்; திரு. விக்கிரமனிடம் கல்கி நடை அள்ளும்! வித்தியாசம் இதுதான். ஆனால் கதையின் விசாலக் கற்பனை, அழுத்தமான நாடகத் திருப்பம், மனத்தில் நிற்கவல்ல பாத்திரப்படைப்பு சுவை மிக்க முறையில் உருவாகி இருக்குமானால், பேராசிரியர் கல்கியின் படைப்புக்கு இணையாக இவற்றைச் சொல்லி வைக்க முடியும்.

கோவி. மணிசேகரன்: எழுதிய வரலாற்றுப் புதினங்கள் பல. குறிப்பாகச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். ''செம்பியன் செல்வி'', ''பொற்காலப் பூம்பாவை'', ''வெற்றித்திருமகன்'', ''பொன்வேய்ந்த பெருமாள்'', ''சேரன் குலக்கொடி'', ''ராணி வேலுநாச்சி'', ''மயிலிறகு!''.

என்னைப்பற்றி நானே விளக்குவதைவிட, பிறர் விளக்கிய இரண்டொரு வரிகளைக் கூறிக் கட்டுரையை முடிக்கிறேன்.

திரு. கோவி. மணிசேகரன் அவர்கள் சரித்திரச் சான்றுகளை ஆர்வத்தோடு கற்றவர்; சிறந்த தமிழ் உள்ளம் பெற்றவர்; ஆற்றலோடு கதைகளைக் கூறும் திறமை அவருக்கு வளமாக இருக்கிறது. ஆகவே அவருடைய கதைகளைப் படிப்பது ஒரு தனியான அனுபவம்![1]

—**திரு. சோமு.**

ரசமாகக் கதையை நடத்திச் செல்லும் தந்திரங்களைத் திரு. கோவி. மணிசேகரன் நன்றாகத் தெரிந்தவர்; பயன்படுத்தி வெற்றி கண்டவர்.[2]

—**சாண்டில்யன்.**

---

[1] முன்னுரை-'செம்பியன் செல்வி'.

[2] முன்னுரை-'தியாகத்தேர்'.

யாரும் பின்பற்ற முடியாத வேகமும், எழிலும், வருணனைத் திறனும் கலந்த வண்ணநடை இவருக்கே சொந்தம். இது உண்மை; வெறும் புகழ்ச்சியன்று.[3]

—திரு. க.ஸ்ரீ.ஸ்ரீ.

'மயிலிறகு'—அழகிய நடை, ஆற்றொழுக்கான போக்கு, எதுகை மோனை இணைவு, கற்பனைவளம், கையாளும் திறம், சங்கத்தமிழ், சமயத்தமிழ், சங்கீதத் தமிழ், பகுத்தறிவுத் தமிழ், பாரதிதாசன் தமிழ், இத்தனையும் கொண்டு மயிலிறகு போலக் கருத்தும் காட்சியும் தரும். திரு. மணிசேகரனின் 'மயிலிறகு' படிக்க இனியது; நினைக்கச் சுவையுடையது; சிந்திக்கச் சிறப்புடையது.[4]

—திரு. வே. தில்லை நாயகம்.
(நூலகர், கன்னிமாரா நூல் நிலையம்)

முடிவுரை

வரலாற்றுப் புதினங்கள் தமிழில் அடைந்த வளர்ச்சியைப் பார்க்கும்போது நாம் பெருமைப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதே நேரத்தில், நம்மைப் பற்றி உலகுக்கு எடுத்துச் சொல்லத் தக்கவர்கள் இல்லாத குறையை எண்ணிச் சிறுமைப்படுகிறோம்.

உலகத் தமிழர் மாநாட்டின் இந்த உதயத்திலிருந்து, தமிழ் இலக்கியச் சூரியன் தரணி முழுவதும் ஒளிபரப்ப வேண்டுகிறேன்.

[3] முன்னுரை-சரித்திரக் கதைக் களஞ்சியம்.
[4] 'மயிலிறகு' தொடர்கதைக்கு வந்த பாராட்டுக் கடிதங்களுள் ஒன்று.

இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளரின் வரலாற்றினை ஆய்ந்து தேர்வதற்குரிய மூலாதாரமாக நாட்டுப்பாடல்கள் வகிக்கும் இடம்

க. நவசோதி*

1. மூலாதாரமாக நாட்டுப்பாடல்கள்

இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளரின் வரலாற்றிற்கு, 1922 ஆம் ஆண்டின் இந்தியக் குடியகல்வுச் சட்டம், 1949 ஆம் ஆண்டின் இந்திய பாகிஸ்தானியப் பிரஜாவுரிமைச் சட்டம் என்பன போன்ற தோட்டத் தொழிலாளரைக் குறிக்கும் சட்டங்கள், வேலையாட்கள் சட்டங்கள், 1912 ஆம் ஆண்டின் வைத்திய உதவிச் சட்டங்கள், 1908 ஆம் ஆண்டின் தொழிலாளர் ஆணைக் குழுவின் அறிக்கை, இலங்கைத் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தினதும், தொழிற் திணைக்களத்தினதும், தொழிற்சங்கங்களினதும் வரலாறுகள், "எமெர்சன் ரென்னெண்ர்" போன்ற தேசாதிபதிகளும், "கோர்னல்றைட், ஹென்ட்றிகேவ், நிக்கலஸ்" போன்றோரும் இலங்கை, தேயிலைத் தொழில், தமிழ்க் கூலியாட்கள், ஆகியனபற்றி எழுதியதைப் போன்ற நூல்களும் பலவகைப் பட்ட ஆதாரங்களாகும். இவற்றிற்குப் புறம்பானதே இதுவரையிலும் ஏட்டுருவில் தொகுக்கப்படாத மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நாட்டுப்பாடல்கள். முற்கூறிய ஆதாரங்களினின்றும் வேறுபட்ட மரபுவழிப்பட்ட ஆதாரங்களே இந்த நாட்டுப்பாடல்கள். "வரலாற்று ஆதாரங்கள் உண்மைக்கு மாறாயிருக்குமிடங்களில் அவ்வெற்றிடங்களை மரபுவழிப்பட்ட", ஆதாரங்கள் நிரப்பும் தன்மையனவாயினும்[1] முதல்வகை ஆதாரங்களைப் போன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களைத் தருவது, மலையக நாட்டுப் பாடல்களின் சிறப்பு அம்சமாகும்.

---

*பி.ஏ. (ஆனர்ஸ்), மொழிபெயர்ப்பாளர், அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை.

[1] ஜி.எல். கோம்–சமய அறநூல் அறிவுக் களஞ்சியம், தொகுதி 6, நியூ யோர்க், 1955, பக்கம் 58.

கோப்பிக் காலம்

2. தென்னிந்தியத் தமிழ்த் தொழிலாளரின் முக்கியத்துவம்

தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது அப்பகுதிகளைச் சூழ்ந்து பெரும்பான்மையினராக வசித்துவந்த சிங்களவர்கள் மலைப்பகுதிகளில் கடின உழைப்புக்குப் பின்தங்கினர்.[2] இதனால் ஆரம்ப காலங்களில் தோட்டங்களில் வேலைசெய்வதற்குத் தென்னிந்தியத் தமிழர்களே அமர்த்தப்பட்டனர்.[3] 1908ஆம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டபோது, தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர்களை அதிக அளவில் ஈடுபடுத்தும் பிரச்சினையையும் ஆராய்ந்தது[4]. நாட்டுப்பாடல்களில் ஒன்றேனும் சிங்களத் தோட்டத் தொழிலாளரைப் பற்றிக் குறிப்பிடாதது அவர்கள் முக்கியத்துவம் பெறாததனை மறைமுகமாக எடுத்துக் காட்டுவதாகும்.

3. தொழிலாளரைத் திரட்டல்

தென்னிந்தியத் தமிழ்த்தொழிலாளர் திரட்டப்பட்டபோது கங்காணி போன்ற முகவர்கள், இலங்கை பற்றி அறியாதவர்க்கு நாட்டைப்பற்றி எடுத்துரைத்தனர் என்பதற்கு "இந்தியாவுக்கும் தென்கிழக்கே இலங்கை என்றதோர் தேசம்", என்னும் பாடலடி சான்றாகும். தஞ்சாவூர், சேலம் பகுதிகளில் தொழிலாளர் திரட்டப்பட்டதை "தஞ்சாவூர் முதல் சேலம் ஜில்லா வரையும்" என்று நாட்டுப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. "காற்று மழைகள் அதிகமுண்டாகும் அங்கே ஏற்ற இறக்கங்கள் மெத்தவுண்டாம்" என்னும் அடி, மலையகம் பற்றிய அவர்களின் அறிவினைப் புலப்படுத்துகின்றது. கங்காணிமார் பலவகையிலும் தொழிலாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டியிருந்ததென்பதற்கு ஏனைய மூலாதாரங்களைப்[5] போன்றே "காற்று மழைகள் அதிகமில்லை; ஏற்ற இறக்கங்கள் மெத்த இல்லை. வாழைப் பழத்திலே வீடு மெழுகியே வாசலுக்குப் பாக்கு வெத்திலையாம்" என்னும் பாடல்களும் சான்று தருகின்றன.

4. இலங்கைக்குக் கப்பலேறிய துறைமுகம்

தென்னிந்தியாவிலிருந்து தொண்டி என்ற துறைமுகத்திலிருந்தும் கப்பல் மூலம் இலங்கைக்குத் தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டனர். "தொண்டி இருகரை பொங்கையிலே, வந்து நிற்குமாம் தொண்டி கப்ப, நாம சேர்ந்து வந்த கப்பலில்" என்னும் பாடலடிகள் இதைத் தெரிவிக்கின்றன.

---

[2] எமெர்சன் ரென்னென்ர்—"கண்டியில் கோப்பிப் பயிர்ச் செய்கையும் அதனது விளைவும்", இலங்கை, தொகுதி 11, இலண்டன் 1859, பக்கம் 96.

[3] ஹென்றி கேவ்—இலங்கையும் அதனது தேயிலைத் தொழிலும், இலண்டன் 1900, பக்கம் 184.

[4] தொழிலாளர் ஆணைக்குழு அறிக்கை 1908, கொழும்பு, 1908, பக்கம் IV.

[5] ஹென்றி கேவ்—இலங்கையும் அதனது தேயிலைத் தொழிலும், இலண்டன் 1900, பக்கம் 182.

5. ''அரிய நடை'' யாத்திரையும் காட்டை அழித்தலும்

இலங்கைக் கரையில் வந்திறங்கிய தொழிலாளர்கள் மலையக கண்டிப்பகுதியை நோக்கி அடர்ந்த காடுகளினூடே நீண்ட பயணத்தை மேற்கொண்டனர். இத்தகைய பிரயாணத்தை "அரிய பெரு நடையும்" "அரிய வழி நடையும்" என்று பாடல்கள் சித்தரிக்கின்றன. கோப்பித் தோட்டங்கள் ஏற்படுத்துமுன்னர் தொழிலாளர்கள் காடுகளை அழித்ததை "நாளோடை நாளா கோடாலி சத்தம் குமுறுதங்கே உறுமமது கேட்டா உறுமும் புலி சத்தம் நரி ஊளை எல்லாம் காட்டோடே அழிஞ்சுதடி" என்றொரு பாடல் தெரிவிக்கின்றது.

6. கோப்பித் தோட்டத்தில் தொழிலாளர்

ஒரு காலத்தில் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகக் கோப்பி விளங்கியது. 1857ஆம் ஆண்டில் 403 கோப்பித் தோட்டங்களில் ஒரு ஏக்கருக்கு இருவர் என்னும் அடிப்படையில் 129,200 தொழிலாளர் பணிபுரிந்தனர்.[6] பின்வரும் பாடலடிகள் தோட்டத் தொழிலாளர்கள் கோப்பித் தோட்டங்களிலும் தொழிலாற்றினர் என்பதற்குச் சான்றுகளாகும்: (அ) கோண மலையேறி கோப்பிப் பழம் பறிக்கையிலே (ஆ) இருபுறமும் கோப்பி மரம் அவசரமா புடுங்குறோளே.

7. கோப்பியின் அழிவு

கோப்பிப் பயிர்ச்செய்கை மிகக் குறுகிய காலத்தில் அழிவடைந்தது. நாட்டுப்பாடல்களில், தேயிலைத் தோட்டங்களையும், தொழிலாளரின் வாழ்வினையும் பிரதிபலிக்கும் பாடல்களே பெரும்பான்மையானவை. இவை கோப்பித் தொழிலின் மறைவை மறைமுகமாக எடுத்துக்காட்டுகின்றன. "கோப்பியில கொழுந்துமில்ல" என்ற அடி கோப்பியினழிவைக் குறிப்பதாகும்.

தேயிலைக் காலம்

8. தேயிலைத் தோட்ட வாழ்க்கை

தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளரின் வாழ்க்கை எவ்வாறு அமைந்துள்ளதென்பதற்குரிய சான்றுகளைப் பாடல்களில் பரக்கக் காணலாம். தவணை தவறாது தேயிலைச் செடிகளை வெட்டிவிடுவதாகிய "கவ்வாத்து" ஆண்களின் தொழிலாகும்; தேயிலைச் செடிகளுக்குப் புறம்பான காடுகளை வெட்டல், களை பிடுங்கல், குழி வெட்டல், முள்ளு குத்தல், உரம் போடல் ஆகியவற்றையும் இவர்கள் செய்து

---

[6] ஏ. எம். பெர்குசன்—இலங்கைக் கோப்பிப் பயிர்ச் செய்கையின் விரிவான புள்ளி விபரங்கள் 1857, சிலோன் ஒப்சேர்வர், 11 ஜூலை 1857.

வந்தனர். (அ) கவ்வாத்துக் கார மச்சான் கத்திப்பிடி மன்னவனே. (ஆ) காடு வெட்டி களைச்ச மச்சான். (இ) சாய்ந்த மலே களையெடுப்பு. (ஈ) எண்ணிக் குழிக வெட்டி. (உ) முள்ளுக் குத்தும் என் சாமி. (ஊ) அதுக்கு உரம் போடுறதும் என்னும் பாடலடிகள் இதற்குரிய சான்றுகளாகும். தொழிற்சாலேயிலும் இவர்கள் வேலேயாற்றிய மைக்கு (அ) இஸ்டோர் மேல்மெத்தை இலேபோடும் என்சாமி. (ஆ) வெங்கல ரோதையில வேலே செய்யும் என்சாமி எனப் பெண் தொழிலாளி பாடுவதாய் அமைந்தவை சான்று தருவதாகும். இதனேவிட மாடு மேய்த்தலும், துரையின் வீட்டுத் தோட்டத்தில் வேலே செய்வதும் ஆண்களின் தொழில்களாகும் என்பதனேயும், " மாடு மேய்க்கும் சின்னத்தம்பி " " பூஞ்செடிக்குத் தண்ணி போடும் புண்ணியரே " என்னும் சான்றுகள் நிரூபிக்கின்றன. கோப்பிக் காலத்தில் கோப்பிப் பழம் பறித்தலும், தேயிலேக் காலத்தில் கொழுந்து எடுப்பதுமே பெண்களின் முக்கியத் தொழில்களாகும். (அ) இருப்புறமும் கோப்பி மரம் அவசரமா புடுங்குருளே. (ஆ) ஓடி ஓடி நிரை பிடிச்சு, ஒரு கூடை கொழுந்தெடுக்க என்னும் உதாரணங்கள் இதனேத் தெரிவிக்கையில், உரமூட்டை கொண்டு செல்வதும், தொழிற்சாலேயில் முற்றிய இலே வேருக்குவதும் அவர்கள் ஆற்றிவந்த ஏனேய தொழில் களாகும் என்பதனே " உர மூட்டை தூக்கச் சொல்லி ;" " முத்தல் இலே பொறுக்கலும் " என்னும் உதாரணங்களிலும் காணலாம்.

9. தொழில் முறை

தொழிலாளர் நாளாந்தம் காலேயில் ஐந்துமணிக்கு எழுந்து கஞ்சியைக் குடித்துவிட்டுத் தொழிற்சாலேக்குச் சென்று இருள் மறையு முன்னரே வரிசையாகச் சென்று நிற்பர். இதற்கு அறிகுறியாகத் " தப்பு " அடிக்கப்படும். அங்கு அவர்களின் " பெயர் " கூறப் பட்டு அவரவர்க்குரிய வேலே ஒழுங்குகளேக் கங்காணி அறிவிப்பான். இந்த வேலே நியமத்தைக் " கொந்தரப்பு " என்பர். பெண்கள் நிரையாய் நின்று கொழுந்து பறிப்பர். நாளாந்தம் நடைபெறும் இந்த ஒழுங்கினேப் பின்வரும் பாடல்களின் மூலம் அறியலாம். (அ) அஞ்சி மணிக்கெழும்பி கஞ்சி குடிக்கிறதும் (ஆ) இருட்டு நேரம் வெளுக்குமுன்னே பிரட்டு களம் போனும் (இ) ஆத்தோரம் கொந்தரப்பு (ஈ) கானுல நிரை பிடிச்சு.

10. தொழிலாற்றிய சூழல்

மலேப்பிரதேசங்களில் தொழிலாளர் வேலே செய்ய முற்பட்ட போது, தாம் வாழ்ந்த இந்திய மண்ணில் காணப்படாத வகையில் மழைவீழ்ச்சி அதிகமாகக் காணப்பட்ட நிலேயில், ஆரம்பகாலங் களில் இடர்ப்பாடுற்றனர்.[7] நாட்டுப்பாடல்களில், " கடகடன்னு

---

[7] எஸ். ஈ. என். நிக்கலஸ்—இலங்கையின் தொழிலாளர் பிரச்சினேகள், கொழும்பு 1930, பக்கம் 17.

மழை பேய" "அட்டை ரத்தம் குடிக்கிறதும்" "உச்சிமலை கவ்வாத்து உசந்தமலை கொழுந்தெடுப்பு," "சாய்ந்தமலை களையெடுப்பு கைநடுக்க மாகுதம்மா" "காட்டுத்தொங்க ஏத்தத்துக்கும்" என்று வரும் அடிகள் இதனைத் தெரிவிக்கின்றன.

11. ஏனையோர்

நாட்டுப்பாடல்கள் தனியாகத் தொழிலாளர்களைப் பற்றியே குறிப்பிடாது தோட்ட முதலாளியாகிய துரை, கங்காணி, சில்லறைக் கங்காணி, கணக்கப்பிள்ளை, கண்டக்கையா ஆகியோரைப் பற்றியும் பல தகவல்களைத் தருகின்றன. தோட்டத்தின் பொறுப்பும் பொதுவான மேற்பார்வையும் துரை என்பவரிடம் இருந்தது. தொழிலாளர் வேலையில் தவறுமிடத்து அவர்களைத் தண்டித்தும் வந்தார். (அ) "குதிரை மேலே ஏறிட்டாராம் பச்சைக்காடு சுத்திவர" (ஆ) "கூலியாளை முன்னேவிட்டு, அண்டையிலே நிக்குராராம்" (இ) "ஒரு பழம் தப்பிச் சென்னு ஒதைச்சாளையா சின்னதொரை" என்னும் நாட்டுப் பாடலடிகள் இதனைக் குறிப்பதாகும். தொழிலாளர், பிரதம கங்காணியைக் "கங்காணி ஐயா" என்றும் உதவிக் கங்காணியைச் "சில்லறைக் கங்காணி" என்றும் குறிப்பிட்டனர். இதற்கு "காரிய காரராம் நம்மையா கங்காணி", "சில்லறை கங்காணி சேவுகமே" என்னும் நாட்டுப் பாடலடிகள் ஆதாரங்களாகும். தோட்டங்களில் தொழிலாளர்க்குச் சம்பளம் கொடுப்பதும், பெரட்டுக் கலைப்பதும், பெயர் போடுவதும், வேலை மேற்பார்வையிடுவதும், தொழிலாளரின் வேலையைக் குறித்த நேரத்தில் முடிப்பதும், கங்காணியின் கடமையாகுமென்பதற்கு முறையே (அ) குதிரை மேலே நம்மையா கங்காணி குவிஞ்சு சம்பளம் கேளுங்கடி (ஆ) பெரட்டும் நல்லா கலைப்பாராம் (இ) ஒண்ணரை நாள்பேரு போட்டேன் (ஈ) வெட்டு வெட்டெங்கிறார் வேலையற்ற கங்காணி (உ) நேரம் கண்டு வேலைவிடும் நேசமுள்ள கங்காணியே, என்னும் பாடலடிகள் ஆதாரங்களாகும். இவ்வாறு தோட்டத் தொழில் அமைப்பில் கங்காணி முக்கிய இடத்தை வகித்ததால் இம்முறை மாற்றியமைக்க முடியாதவாறு முக்கியத்துவம் பெற்று விளங்கிற்று.[8]

12. தகரச் சீட்டு—பென்சு காசு

இலங்கைக்கு வரும் ஒவ்வொரு தொழிலாளர்க்கும் அடையாளமாகத் தகரச்சீட்டு கங்காணியினால் வழங்கப்பட்டது. இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இரு இலக்கங்களும் தொழிலாளரையும் கங்காணியையும் பற்றிய விபரங்களையும் இலங்கைக் கரையில் உள்ள அதிகாரிக்குத் தெரிவித்துவிடும்.[9] இத்தகைய தகரத் துண்டை கங்காணி வைத்திருந்தது பற்றி, "அவர் தகரத்துண்டையும் சேப்பில்

---

[8] தொழிலாளர் ஆணைக்குழு அறிக்கை 1908, கொழும்பு 1908, பக்கம் IX.

[9] இலங்கைத் தோட்ட முதலாளிமார் குறிப்புப் புத்தகம், கொழும்பு 1902- பக்கம் 240.

வைத்தார்", என்று பாடல் தெரிவிக்கின்றது. தலைமைக் கங்காணி, தோட்டத்தில் வேலைசெய்யும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு நாளுக்கு $1\frac{1}{2}$ சதம் முதல் 2 சதம் வரை "தலைக்காசு", பெற்று வந்தார்; ஆனால் சில்லறைக் கங்காணி இவ்வகையில் 3 சதம் முதல் 4 சதம் வரையில் பெற்று வந்ததற்கு "பென்சுக் காசு", என்று குறிப்பிட்டனர்.[10] பென்சுக் காசுக்காகத் தொழிலாளரைக் கங்காணி திரட்டியதை "கும்பிட்டழைத்தாராம் பென்சு காசுக்கு" என்று பாடலடி தெரிவிக்கின்றது.

13. கங்காணி—கணக்குப்பிள்ளைமார் மீது தொழிலாளர் அதிருப்தி

கங்காணி தொழிலாளருடன் கடுமையாக நடந்துகொண்டதை, "கங்காணி கோபத்துக்கும்" "கங்காணி ஏசிட்டானு" என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. கொழுந்தின் எடையினைக் கங்காணி குறைத்துக் குறித்ததற்கு "சிறு கொழுந்து நாளெடுக்க பாவிகணக்கபுள்ள பத்து ராத்த போட்டாரடி" என்னும் பாடல் ஆதாரமானது. எவரிடமும் பெறாத இம்சையைக் கங்காணிமார்களிடம் பெற்றதற்கு "தோட்டம் பெறளி இல்லே தொரமேலே குத்தமில்ல கங்காணிமார்களால் கணப்பெறளி யாகுதடா" என்ற நாட்டுப்பாடல் ஆதாரமாகும்.[11]

14. தோட்டங்களும்—தோட்டம் மாறுதலும்

தொழிலாளர் தொழில் புரிந்து வந்த தோட்டங்கள் பற்றிய தகவல்களையும் பாடல்கள் தருகின்றன. கட்டதொரப்பட்டி (பூண்டு லோயா)[12], கண்டி, கொத்தமலி, மஸ்கெலியா, கம்பளை, நீலகிரி ஆகிய தோட்டங்கள் பற்றி "கட்டதொரபட்டியிலே" "பேரான கண்டியிலே" "கொத்தமல்லி தோட்டத்துல", மஸ்கெலியா தோட்டத்துல", "கம்பளத்து மீனுச்சி", "ஏறுதடி நீலகிரி" என்றவாறு பாடல்கள் ஆதாரம் தெரிவிக்கின்றன. தொழிலாளர் இலங்கை மண்ணில் காலெடுத்து வைக்கும்போது கங்காணிமார்களுக்குக் கடன் கொடுக்க வேண்டிய வர்களாகவே வந்திறங்கினர். சம்பளத்தின் மூலம் கங்காணிக்குச் செலுத்தவேண்டிய இக்கடன் தொகையினுக்கும் அதிகமாகக் கங்காணி கணக்குக் காட்டவே அதன் நிமித்தமும் தொழிலாளர் தோட்டம் விட்டுத் தோட்டம் மாறவேண்டியிருந்தனர்.[13] "தோட்டம் விட்டுப் போறமின்னு துயரம்களை வைக்காதே" என்ற அடி தொழிலாளர் தோட்டம் விட்டுத் தோட்டம் மாறியதற்கு ஆதாரமாகும்.

---

[10] தொழிலாளர் ஆணைக்குழு அறிக்கை 1908, கொழும்பு 1908, பக். VII.

[11] தொழிலாளர் ஆணைக்குழு அறிக்கை 1908, கொழும்பு 1908, பக். VII.

[12] சி. வி. வேலுப்பிள்ளை—தோட்டப்பாடல்கள், டைம்ஸ் தேயிலை நூற்றாண்டு மலர், கொழும்பு 1967, பக்கம் 67.

[13] தொழிலாளர் ஆணைக்குழு அறிக்கை 1908, கொழும்பு 1908, பக்கம் 371.

15. லயம்—காம்பரு

தோட்டங்களிலேயே தொழிலாளர்களின் உறைவிடங்களாக "லயம்கள்" கட்டப்பட்டன. ஒரே தோட்டத்தில் சிறிது உயர மான பகுதியில் கட்டப்பட்டவை "மேட்டுலயம்" என்றும் சிறிது கீழே கட்டப்பட்டவை "பணியலயம்" என்றும் அழைக்கப்பட்டன. எண்ணற்ற குடும்பங்கள் இவற்றில் வசிப்பதற்கெனப் பல "காம்பரு"க்களாக இவை பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றைப் பற்றி (அ) பாட்டுக்கு பணியலயம் பந்தடிக்க மேட்டுலயம் (ஆ) அறுபத் தெட்டு காம்பருவாம் என்ற ஆதாரம் பாடல்களிலுள.

16. பீலிக்கரையும் குடிப்பழக்கமும்

தொழிலாளர் தண்ணீர் பெற்றுவந்த இடமே பீலிக்கரை. இத்தகைய பீலிக்கரை தோட்டப் பகுதிகளில் இருந்ததற்கு (அ) "பேச்சிக்கு பீலிக்கரை" (ஆ) "மஞ்சக் குளிச்சது பீலிக்கரை" என்னும் பாடலடிகள் ஆதாரங்களாகும். தொழிலாளரிடம், சம்பளத்திற்கு அடுத்த நாட்களில் முக்கியமாகக் காணப்பட்ட குடிப் பழக்கம் அவர்களின் தொழிலாற்றலைக் குறைப்பதாகக் கணிக்கப் பட்டது.[14] தொழிலாளரிடையே குடிப்பழக்கம் இருந்ததென்பதற்கு "கஷ்டப்பட்டு சம்பாரிச்சு காலு ரூபாய்க்கு நான் குடிச்சா கஷ்டம் ஒனக்கு என்ன" என்னும் பாடலடிகள் ஆதாரமாகும்.

17. கொழுந்து கோச்சு—புகையிரத வருகை

இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களில் தொழிலாற்ற ஆரம்பித்த பின்னரே மலைநாட்டிற்குப் புகையிரதப்பாதை போடப்பட்டது. புகையிரதம் மலைமேட்டிற் சென்றதைப் புதுமையோடு பார்த்தார்கள். (அ) ரெயிலுவண்டி ஏறுதடி நீலகிரி எவ்வளவு லேசாக, (ஆ) கோச்சிமேலே கோச்சி வரும் கொழுந்து கோச்சி முன்ன வரும் என்னும் பாடலடிகள் தேயிலைக் கொழுந்து ஏற்றிச் செல்வதற்காகப் புகையிரதம் பயன்படுத்தப்பட்டமைக்கும் ஆதாரங்களாகும்.

18. தொழிலாளர் மனோநிலை

தோட்டங்களில் இன்றைய, வசதிகளையுடைய நிலைக்கு மாறான தொரு நிலை ஆரம்பகாலங்களில் இருந்ததனால் அக்காலத்தைய அவர்களின் மனோநிலையை "காறுதடி கம்பரிசி கசக்குதடி காணுத்தண்ணி இனிக்குதடி நம்ம சீமை இனிப் பயணம் தப்பாது." "பாதையில வீடிருக்க பழனிச் சம்பா சோறிருக்க எருமைத்தயிரிருக்க ஏண்டி வந்தா", "அட்டை ரத்தம் குடிக்கிறதும் அரிய பெரு நடையும் கட்டை எறடுரதும் அங்க காணலாம் கண்டியிலே," என்னும் அடிகள் தெரிவிக்கின்றன.

---

[14] மே.கா.நா. பக்கம் XI.

19. இழப்பு

தொழிலாளர் தமது உறவினரை இலங்கை மண்ணிலேயே இழந்த தகவல்களையும் அறியக்கூடிய வகையில் (அ) "ஊரான ஊரிழந்தேன் ஒத்தவளை தோப்பிழந்தேன் பேரான கண்டியிலே பெத்த தாயை நானிழந்தேன்" (ஆ) 'அண்ணனைத் தோத்தமலை ஐயோ தெரியுதடி' என்னும் நாட்டுப் பாடல்கள் ஆதாரங்களாக அமைந்துள்ளன. இலக்கிய மூலாதாரங்கள் என்னும் வகையில், சங்ககாலத் தமிழர் வரலாற்றிற்குப் புறநானூறு பெறும் முக்கியத்துவம் இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளரின் வரலாற்றிற்கு இவ்வாறமைந்த நாட்டுப்பாடல்களுக்கும் உண்டு.

நாட்டுப்பாடல்கள் பெறப்பட்ட ஆதாரங்கள்

1. சாரல் நாடன்-மலையகக் கதைப்பாட்டு-வீரகேசரி 1963.

2. சேயூர் வாசன் (காந்தி)-கிராமிய இலக்கியம்-செய்தி 1964.

3. ஏ.பி.வி. கோமஸ்-அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்-சுதந்திரன், 1965.

4. சி. வி. வேலுப்பிள்ளை-தோட்டப்பாடல்கள்-டைம்ஸ் தேயிலை நூற்றாண்டு சிறப்பு இதழ்-1967.

உழைப்போர் இலக்கியம்

க. பெருமாள்*

''எழுதுகோல் தொட்டு இலக்கியம் படைப்பவன்
எண்ணக் கதிர்களை எங்கு விரிக்கினும்,
உழுது படைக்கும் உழைப்பவன் ஆங்கு
உறுதுணை யாக வந்துறல் போல;
பழுதறப் பசியறத் தொழுதுற வாடத்
தோற்றம் காட்டுமாம் 'உழைப்போர் இலக்கியம்'!''

''நாடு என்பது உழைப்பை நாடலாம்!
வீடு என்பது பீடு சேர்ப்பதாம்!
நாடும், வீடும், பீடும் உழைப்பின்
பிள்ளைகள் என்றால், இல்லையென் பார்ஆர்?''

இத்தகு உழைப்பின் தலைமக்களாகிய தமிழர்கள், தாங்கள் வாழச் சென்ற நாடுகளிலெல்லாம் உழைப்போடு இரண்டறக் கலந்து விதைத்து, வாழ்க்கையின் வரலாறாக விளைவித்த ''நாட்டுப்பாடல்கள்''—நந்தமிழன்னைக்குப் படைத்த வாடாமலர்களாம்!

இற்றைக்கு ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, தமிழர்கள் கீழை நாடுகளிலும் சுமத்திரா, சாவகம், மலாயா முதலான நாடுகளிலும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது வரலாறு.

மதுராந்தகன் எனும் இயற்பெயர் கொண்ட, முதலாம் இராசேந்திர சோழன் கங்கை கொண்டான், கடாரம் கொண்டான்—எனும் சிறப்புப் பெயர்களும் கொண்டவனுவான். முதலாம் இராசேந்திர சோழன், கடாரம் கொண்ட வரலாறு, மலையகத்தோடு தமிழகம் கொண்ட வரலாற்றுப் பொற்காலமாகும். இவனது காலம், கி.பி. 1012க்கும் கி.பி. 1044க்கும் இடைப்பட்டதாகும்.

தமிழர்கள் மலையகத்தோடு தொடர்பு கொண்ட மூன்றாவதும், இறுதியானதுமான காலம், தொழிலாளர்களாய்க் குடியேறிய காலம் கி.பி. 1880·

பெருங்காடுகளாய்ப் புதர் மண்டிக்கிடந்த மலாய் நாட்டுக் (மலை நாடு) காடுகளை அழித்துச் சீராக்கிச் செம்மைப்படுத்த, பட்டறி

---

*சிங்கப்பூர் வானொலி நிலையம், சிங்கப்பூர்.

வால் உழைப்பிற்குச் சிறந்த தென்னிந்தியர்களை வரவழைக்க, ஆங்கிலேயர்கள் முற்பட்டனர். இதற்கு, ''கண்காணிகள்'' என்று கூறப்பட்டோர் உதவினர்.

அப்பொழுது;

''மலைநாட்டு மரஞ்செடிகளில் பணம் காய்த்துக் குலுங்குகிறது'', என்று, 'தலைக்காசு' வரிபோட்டு, தொழிலாளர்களாய் மலைநாட்டில் குடியேறிய தமிழர்களைச் சூதாட்டக் காயாக்கிக் கடாரத்தைச் சேர்ந்த ''பிராவின்ஸ் வெல்லஸ்லி'' (Province Wellesly) பகுதிக் கரும்புத் தோட்டங்களில், ஆந்திரர், கேரளர், தமிழர்களாகிய தென்னிந்தியத் தொழிலாளர்களைக் கொண்டுவந்து இறக்கினர்.

முதன் முதலில், பிழைப்பை நாடி, உடலுழைப்பை மட்டும் துணைகொண்டு வந்த தமிழ்த்தொழிலாளர்களாகிய இவர்களும், இவர்கள் வழி வந்தோரும், மலைநாட்டினை வளநாடு ஆக்கினர்!

இவர்கள் தமிழ்ப்புலமை வாய்ந்தோரல்லர்!

''குருதி உறிஞ்சும் அட்டைகள், குருதி குடிக்கும்
கொசுக்கள் ஒரு பக்கம்!
உறுதியூட்டும் தமிழுணர்வும், பண்பும் மறுபக்கம்!''

துன்பத்தினூடே இன்பக் கனவு காணும் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர் வாழ்வோடெழுந்த நாட்டுப்பாடல்களை, உழைப் போர் இலக்கியமெனல் பொருந்தும்.

அகத்துறையும், புறத்துறையும் தமிழர்தம் மூலநாடாம் தமிழகத்தில் உருவானதுபோல, தமிழர் குடியேறிய மலைநாட்டிலும் அகம் புறம் இரண்டும் இரண்டறக் கலக்க உருவாக்கினர்.

தங்களின் உழைப்பினூடே, வியத்தகு இலக்கியம் உருவாகும் விந்தைதனை, மலையகத் தமிழ் உழைப்பாளிகள் அறியார்!

கடந்த இருபத்து ஏழு ஆண்டுகள் மலையகத் தமிழ்ப் பாட்டாளி களுடன் வாழ்ந்ததன் பயனாக, பட்டறிவுவழி உருக்கொண்ட பாடல்கள் (மலையகத்து நாட்டுப்பாடல்கள்) எழுந்தன.

மரப்பலகைகளினால் ஆன சுற்றடைப்பும், துத்தநாகத் தகடு களால் வேயப்பெற்ற கூரையும் கொண்ட இல்லங்கள், ரப்பர்த் தோட்டங்களினூடே 'தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளாக' அமைக்கப்பட்டன.

மலையகத்து மண் செழிப்பைக் காட்டுமாப்போல், நொய்வமரங் கள் (ரப்பர் மரங்கள்) வானோங்கி வளர்ந்து கூரை வேய்ந்தன! நாட்டுச் செல்வச் செழிப்புக்கு உழைக்கும் பாட்டாளிகள், துத்த நாகக் கூரைக்கடியில், தகர விளக்கொளியில் குடும்பம் நடத்தினர். ரப்பர்த்தோட்டத்து உழைப்புச் செல்வங்களோடு ஊடாடி உறவு

கொண்ட பாடல்; தமிழர்தம் பண்டைப் பெருமை கூற இலக்கிய மாகி—இறவாத காப்பியமாகிய சிலப்பதிகாரப் பாடல் வரிகளைத் துணைகொண்டு அமைந்துள்ளது.

''...............பார் அரசு ஆண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலிற்
காலை முரசம் கனைகுரல் இயம்பும்''[1]

''முத்து மாலையணிந்து, வெண்கொற்றக் குடைநிழல் அமர்ந்து, இந்நில முழுதும் ஆண்ட பாண்டியன் அரண்மனையிலே, காலை முரசம் உரத்த குரலுடன் முழங்கிற்று!'' நம் முன்னோர் சிறப்பு இது! மலையகத்து ரப்பர்த் தோட்டத் தமிழ் உழைப்பாளர் வாழ்வி லும், கொம்பொடு முரசம் முழங்கின!

காலைத் துயிலெழ மதுரைமாநகரில் எழுந்த முழக்கொலிபோல்; காலைத் துயிலெழ ரப்பர்த்தோட்டத்திலும் முழங்கியது! இங்கு.

''கொம்புக்காரன் வந்து சங்கு பிடிச்சான், சங்கு பிடிச்சான்!
குந்துகாலன் வந்து கதவிடிச்சான்!''

இந்த நாட்டுப்பாடலின் பொருள்:

விடியற்காலை. முதல் நாள் உழைப்பால் களைப்படைந்த பாட் டாளி மக்கள், அலுத்து உறங்கிக்கொண்டிருக்கும் நேரம். அப் பொழுது, ''வேலைக்குப் போக வேண்டாமா? இன்னுமா உறங்கிக் கொண்டிருப்பது?''—என்று, காலைத் துயிலெழக் கொம்பு ஊதி, பாட்டாளி மக்களை எழுப்பிவிடும் பணியைத் தன் தொழிலாகக் கொண்ட கொம்புக்காரன் கொம்பு ஊதினான்.

மலையகத்துத் தோட்டங்களில், பல ஆண்டுகளுக்கு முன், விடி காலையில் கொம்பு ஊதியும், பறைகொட்டியும் பாட்டாளிகளை வேலைக்குச் செல்ல ஆயத்தமாயிருக்கச் செய்யும் முறை இருந்தது. இன்றும் சிற்சில தோட்டங்களில் இவ்வழக்கம் உண்டு.

இப்படி, கொம்புக்காரன் ஊத, பக்கத்து வீட்டுக் குந்துகாலன் வந்து கதவைத் தட்டினான்.

(குந்து காலன் என்பது, குதிகால் நிலத்தில் பாவாமல், முன் பாதங்களில் நடப்பதைக் குறிப்பதாகும்).

பாண்டிமாநகரில் ''காலை முரசம் கனைகுரல் இயம்பியது'' மலாயா ரப்பர்த்தோட்டத்தில், ''கொம்புக்காரன் வந்து சங்கு பிடித்தான்!'' இவ்வகை நாட்டுப் பாடல்கள் ரப்பர்த் தோட்டங் களில், வேலைக்காட்டில் பால் வெட்டும்போது பாட்டாளித் தமிழர் கள் பாடுவனவாகும்.

---

[1] சிலப்பதிகாரம்: மதுரைக்காண்டம் 17.
ஆய்ச்சியர் குரவை—வரி 4-6.

தமிழகத்துச் சேலம் மாவட்டக் கிராமங்களில், மாரியம்மன் திருவிழா கொண்டாடுங்காலை, விழாவிறுதி நாளன்று, பாலிகையொடு கும்பம் எடுத்துக் குளத்தில் இட, கொட்டு முழக்கொடு எடுத்துச் செல்லும்போது, பறைமுழங்கப் பாடல் ஒன்றுண்டு.

அப்பாடல்:

''நாம் போவுந் தடத்துலே கல்லு முள்ளுங் கெடக்குது!
கல்லு முள்ளுங் கெடக்குது!
மாரியாத்தா போற தடம் பூவா மணக்குது!
பூவா மணக்குது!''

என்பதாகும்.

பொருள்: மானிட வாழ்க்கைப்பாதை—கல்லும் முள்ளும் நிறைந்தது. கடவுட் தத்துவமாகிய அறநெறிப் பாதையோ மலர் போன்று மென்மையானது, என்பதாம்.

மலாயா நாட்டின் காமரன் மலை (Cameron High Lands) தேயிலைத் தோட்டங்களில் குடியேறிய சேலம் மாவட்டத் தமிழர்களோடு ஒட்டி உறவாடிய நாட்டுப்பாடல்—உடனேறியது. காமரன் மலைத் தேயிலைத் தோட்டங்களில், பழைமையானது ''பசுமலைத் தோட்டம்'' (Boh Tea Estate). அங்கு வாழ்வோரில் பெரும்பான்மையினர், சேலம் மாவட்டத் தமிழர்வழி வந்தோர். ஒயிலும், சிலம்பமும், கூத்தும் ஓயாது நிகழ்வுறும் தேயிலைத் தோட்டத்தில், சித்திரைத் திங்களில் மாரியம்மன் திருவிழா கொண்டாடப்பெறும். தாங்கள், குடியேறியபோது, உடனுறவாடி வந்த நாட்டுப்பாடல், விழாவில் முழங்க, உடன் முழங்கியது தங்கள் உழைப்போடொட்டிய பாடல்.

''காத்தாடி மலையிலே நேத்து வந்து நின்னேண்டி!
நேத்து வந்து நின்னேண்டி!
காத்துக் காத்துப் பார்த்திருந்து ஆத்து ஆத்துப்
போனேண்டி!
ஆத்து ஆத்துப் போனேண்டி!''

அம்மன் திருவிழாவில், அரங்கேறும் அறநெறிப் பாடலொடு, தனது உள்ளத்தே அரங்கேறியவளைக் குறித்துப் பாடும் பாடல் இணைகிறது. விழா மகிழ்ச்சிப் பாடலாகிய இது, மூலப்பாடலின் சந்தச் சுவையொடு எழுகின்றது. அகத்துறையொடு தொழில் எனும் புறத்துறையும் இணைந்து இழையோடும் பாடலின் பொருள் எளிதில் விளங்கக்கூடியதே! பாடலில் வரும் ''காத்தாடி மலை''—தனிப் பெயர் தனைக்கொண்ட மலையன்று! காற்று வீசும் திக்கறியக் கருவியமைக்கப்பட்ட மலையுச்சி எனப் பொருள் கொள்ளலாம். காற்றூடி மலைக்கு மற்றுமொரு பொருளுண்டு. ''தேவதாரு சவுக்கை முதலிய நாரோட்டமுள்ள மரங்கள், மலைப்பகுதியில் வீசுங் காற்றைத் தடுத்து, மென்காற்றாக்கி, தேயிலைச் செடிகள்

மீது பரவ விடுவதால், அரும்பிய தேயிலைக் கொழுந்து அழிபடாது இருக்கும். அம்மரங்கள் அமைந்த மலைச்சாரலை—''காற்றுடிமலை'' எனத் தேயிலைத் தோட்டப் பாட்டாளி மக்கள் அழைப்பர்!

அம்மன் விழாவில் அரங்கேறிய மற்றுமொரு பாடல்.

''மட்டக்காட்டு மேட்டுக்கு மயிலாளும் வந்தேனே!
மயிலாளும் வந்தேனே!
கொட்டுக்காலன் கங்காணி குறுக்கே வந்து நின்னுனே!
குறுக்கே வந்து நின்னுனே!''

தருக்கப் பாடல் போலமைந்ததே, தேயிலைத் தோட்டத்து நாட்டுப் பாடல்! (மட்டக்காடு—தேயிலைச் செடிகளின் மேல் மட்டம் அமைவுற வெட்டிவிடல். அவ்வாறு மட்டப்படுத்தி வெட்டிவிட்டால் நிறைய அரும்பு கிளம்பும்).

தங்கள் தொழிலோடொட்டிய இப்பாடலை, அம்மன் திருவிழாவில், மாவிளக்கு எடுத்துச் செல்லும்போது பறையொடு இசை கூட்டிப் பாடியாடுவர்.

மலாயாவின் எழிற் கோவிலாய் விளங்கும் காமரன் மலையில், தேயிலை பயிரிடத் தமிழகத்துக் கொங்கு மண்டலப் பகுதியிலிருந்து குடியேறிய தமிழர்கள், உழைப்பையும் வாழ்க்கையையும் ஒன்ருகப் பிணைத்து உருவாக்கிய நாட்டுப்பாடல்களில் ஒன்று:

''மூடுபனி வந்து கப்புது கப்புது, மொகந் தெரியாமெ
எல்லாம் நிக்கிது நிக்கிது!
மூடுபனி வந்து கப்ப மொகந் தெரியாமெ நிக்க,
ஓடியோடி வேலை செய்ய
ஒல்லாது, ஒல்லாது,—சும்மா
மூடுபனி வந்து கப்புது!''

(கப்புது—மூடிக்கொள்ளுதல்; மொகம்—முகம்; நிக்கிது—நிற்கின்றனர்).

கடல் மட்டத்திலிருந்து ஏறக்குறைய நான்காயிரத்து ஐநூறு அடி உயரத்தில், காமரன்மலைத் தேயிலைத் தோட்டம் உள்ளது. விடியற்காலை நேரம், அப்பகுதியைப் பனிப்போர்வை போர்த்தியிருக்க, உழைப்பின் பெருமக்கள் வெளிப்பட, பனிமூட்டத்தினூடே ஒருவரையொருவர் கண்டறியவியலா நிலையில் பாடல் பிறக்கின்றது.

தொழில் அடிப்படையில் மற்றுமொரு பாடல்:

''பெரட்டுக் களத்துக்குந்தான் போவணும் போவணும்!
பேரு சொல்லிச் சீட்டு வாங்கி யாரணும்
பெரட்டுக் களம் போயிப் பேரு சொல்லிச் சீட்டு வாங்க
மொரட்டுக் கம்பளி தூக்கி முந்திப் போவ எண்ணயிலே
மூடுபனி வந்து கப்புது!''

பனித்திரை கிழித்துப் பணிபுரியப் புறப்படும் தேயிலைத் தோட்டப் பாட்டாளிகளில் ஒருவன், ''குளிர்தடுக்கும் முரட்டுக் கம்பளியை உடல் சுமக்க, 'பெரட்டுக் களம்' சென்று பெயர் கொடுத்துப் பதிவுச் சீட்டு வாங்கிவர வெளியே வந்தேன். ஆயினும் என் செய்வேன்! மூடுபனிக்குமுன் என் எண்ணம் ஈடேறாது போல் இருக்கிறதே!'' என்று கூறும் பொருள் விளக்கம் தருவதே இப்பாடல்.

ஆங்கிலத்தில் (Parade) என்ற சொல்லின் திரிபு பெரட்டு, ஆனது. ஒவ்வொரு கண்காணியின் ஆட்களும் வரிசை வரிசை யாக நின்று, பெயர் சொல்லி, வேலைப்பதிவுச் சீட்டு வாங்கிக் கொண்டு, வேலைக்குச் செல்லல் வழக்கம்.

வரிசை பிடித்து நிற்றலை (Parade) என ஆங்கிலத்தில் கூறி யதைப் பாட்டாளிகள் 'பெரட்டாக்கி,' நிற்கும் இடமாகிய' களத் தையும்' சேர்த்து 'பெரட்டுக்கள' மாக்கி விட்டனர். 'பெரட் டுக்களம்'' வழக்கச் சொல்லாகிவிட்டது.

தேயிலைத் தொழிலின் அறுவடை — கொழுந்து கிள்ளல். கொழுந்தெடுக்கும் முறை விளக்கப் பாடல் இது:

''மூத்த எலை மொட்டைப் புடுங்காதீங்க புடுங்காதீங்க,
மூணெலையைப் பார்த்துக் கிள்ளிப் போடுங்க போடுங்க!
மூத்தெலையை மொட்டைவிட்டு முளைச்ச அரும்பை விட்டு
வெத்தலைக் கொழுந்து போல வெடிச்ச கொழுந்தெக்கிள்ளு!''

தேயிலைச் செடியிலிருந்து முற்றிய இலையைக் கிள்ளாதீர்கள்! தேயிலை அரும்பைக் கிள்ளாதீர்கள்! அரும்பின் இரண்டாம் பருவ மாகிய மொட்டைப் பிடுங்காதீர்கள், தளதளவென்றிருக்கும் வெடித்த கொழுந்தை—மூன்றிலைக் கொழுந்தாகப் பார்த்துக் கிள்ளிக் கூடை நிரப்புங்கள்!''—இவ்வாறு தேயிலைத் தோட்டத் தொழிலடிப்படையில் எழுந்த பாடல்கள் பலப்பல!

'செல்வம் கொழிக்கும் மலைநாடு' என்று செப்புவர், மலையகத் தைக் காணவரும் வெளிநாட்டு விருந்தினர். நாட்டுப் புகழ் கேட் டுப் பெருமை கொளும் பாட்டாளிகள் செல்வச் செழிப்பிற்கு வித் தாயினர். மலையகத்தின் தொழிற் செல்வத்தின் தலையாய் நிற்பது ரப்பர் தொழில். தாங்கள் புரியும் தொழிலைக் கருவாகக்கொண்டு பாடிய பாடல் இது.

''பொறந்த பொறப்பெ நெனைச்சுப் பாருங்க—மாடு
கறந்த பாலுபோல் வடிஞ்சு காண்டா வாளி கனக்கவழிஞ்சு,
நெறஞ்ச மனசுக்காரி போல நித்தம் நமக்குச் சோறுபோடப்
பொறந்த பொறப்பை நெனைச்சுப் பாருங்க—ரப்பர்பாலு
பொறந்த பொறப்பை நெனைச்சுப் பாருங்க!''

பாடல் ஆரம்பத்தில், ''மானிடப் பிறப்பை நினைத்துப் பார்!'' என்று அறிவுறுத்துவதுபோல் தோன்றினாலும் மானிடப் பிறப்பிற்கும் மலையகத்து ரப்பர்ப்பால் பிறப்பிற்கும் நெருங்கிய ஒற்றுமையிருக்கிறது என்பதை எடுத்தோதும் பாடல் இது!

பிறந்த குழந்தை பாலுண்டு வளர்கிறது. தாய்ப்பாலுக்கு நிகர் பசுவின்பால் என்போம்? சேய் வளர்க்கத் தாய்மை உருக்கொண்டு வந்த பசுவின் பாலைப்போல், வடிந்து வாளி நிறைந்து, பாட்டாளிகளாகிய நமக்குச் சோறு போடுகிறது. ரப்பர்ப்பால்! அதுவும் எப்படி? குறையொன்றில்லா நிறைமனம் கொண்ட தாய்போல், உழைப்போர்தம் உணவிற்கு வழிசெய்து உதவுகின்றதாம்!

(பொறந்த பொறப்பே—என்றால் பிறந்த பிறப்பை என்று பொருள் கொள்ளல் வேண்டும்).

இப்பாடலில் வரும் 'காண்டா' எனும் சொல், மலாய் மொழிச் சொல் என்பர். மலாய் மொழியில் 'Kandar' என்பர். தோள் சுமை தூக்க, காவடியமைத்து, அக்காவு தடி, சுமை தூக்கி நடப்பார்தம் நடைக்கேற்ப 'வில்' போல் வளைந்து வளைந்து கொடுக்க, தோள் சுமையறியாது இருக்க உதவுவது காண்டா.

'வில்—காண்டீபம்—காவடி—Kandar காண்டா'. எனவே Kandar என மலாய் மொழியில் வழங்கும் 'காண்டா' தமிழ்ச் சொல் எனில் சாலப் பொருந்தும்!

'தூது'க்குத் தனி இலக்கணம் வழங்கினார் திருவள்ளுவப்பெருந்தகை!

''தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச் சொல்லி
நன்றி பயப்பதாந் தூது''[2]

செந்தமிழ் இலக்கியச் சோலையில், தொட்ட மலரெல்லாம் தூதாகி இன்புறுத்தும் இயல்புடையன!

''சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ!''[3]

''குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ!''[4]

இவ்வரிகள், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம். இறைவர்க்குத் தூதாக எழுந்த வரிகள். மேலும்,

''கீதம் இனிய குயிலே கேட்டியேல்......... ''[5]

[2] குறள்: 685.
[3] திருவாசகம்: கோத்தும்பீ. 7 : 4.
[4] திருவாசகம்: கோத்தும்பீ. 8 : 4.
[5] திருவாசகம்: குயிற்பத்து. 1 : 1.

''தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேள்நீ''[6]

''கொந்தண வும்பொழிற் சோலைப் பூங்குயி லேயிது கேள்நீ''[7]

என்பன போன்ற திருவாசக வரிகள், குயிலொடு கிளத்தல்போல், தன் நெஞ்சொடு கிளத்தி, இறைவர்க்கு விடுத்த தூதுப் பாடல்களாகும்.

தனிப்பாடல் திரட்டு, முத்தொள்ளாயிரம், நைடதம், குற்றாலக் குறவஞ்சி உட்பட நமது இலக்கியமனைத்தும் தூதாகி இன்புறுத்தும் இயல்புடையன! இவ்வாறு இலக்கியம் கண்ட தூதுக்கு இணையாக, மலையகத்து ரப்பர்த்தோட்டத்துப் பாட்டாளி மகன், தன் உழைப்போடொட்டி உறவு கொளும் 'காண்டா'வைத் தூதாக்கினான்!

''உளியைத் தீட்டி மொனை பிடிச்சேன் கேளு காண்டா கேளு!
ஔவு பாத்து நெரை பிடிச்சேன் கேளு காண்டா கேளு!
வளவு பாத்து நிமிர்ந்து நின்னேன் மனசு பாத்து மயிலி வந்தாள்!
அளவு பாத்து அளந்து கொட்ட
அரிசி, பருப்பா அன்பு? பொண்ணே!''

நெஞ்சோடு கிளத்தல் போல், குயிலொடு கிளத்தல்போல், நாரையொடு, அன்னமொடு கிளத்தல்போல், உழைப்பின் திருமகன்-தன் தொழிலுக்கு உதவும் காண்டாவோடு கிளத்தித் தூதாக்கினான்!

என் தொழிலுக்குதவும் காண்டாவே கேள்! ரப்பர் மரம் காயம் படாமலிருக்க உளியைத் தீட்டி முனைபிடித்து, என் நிரைக்குச் சென்று, மளமளவெனப் பால்வெட்டிச் சென்றவன், நிமிர்ந்து நின்றேன்! என் மனமறிந்த மயிலாள் வந்தாள்! ஏ காண்டாவே! அளவு பார்த்து அளந்து கொட்டுவதற்கு அரிசியா, பருப்பா அன்பு? என்று, ''காண்டா''விடம் கூறுவதுபோலக் காதலை வெளியிடுகிறான். மலாயாவின் ரப்பர்ச் செல்வத்திற்கு உரமான உழைப்புச் செல்வம் வழங்கியவர்கள் தமிழ்ப் பாட்டாளிகள்! 'உளி' அவர்கள் உழைப்புக்குத் திறவுகோல்! நுனி வளைந்த உளியைக் கூர்மையாக்கி, வெங்காயச் சருகினும் மெல்லியதாக ரப்பர் மரப்பட்டையைச் சீவ—மரம் பால் வடிக்கும்! இத்தொழிலில் கைதேர்ந்த கலைஞர்கள் மலையகத் தமிழர்கள்! இப்பாடலில், காண்டா, உளி ஆகிய இவ்விரு உழைப்பிற்குதவும் கருவிகள் முதலிடம் பெறுகின்றன! தன்நிலை எந்நிலையாயினும், செய்தொழில் நினைவோடு நிற்கும் தமிழனைக் காண்கிறோம்!

---

[6] திருவாசகம்: குயிற்பத்து. 4 : 1.

[7] திருவாசகம்: குயிற்பத்து. 9 : 1.

காண்டா விடு தூதின் மற்றொரு பாடல்:

''சாயத் துண்டு முண்டா சாம் கேளு காண்டா கேளு!
சரிகைத் துண்டு வல்ல வட்டம் கேளு காண்டா கேளு!
காயி பழுப்பதுண்டு, காட்டுச்செடி பூப்ப துண்டு;
ஓயப் பொறக்க வில்லே உங்க மேலே வைச்ச நேசம்!''

தலைவன் 'காண்டா'வைத் தூதாக்கினன்! தலைவியும் அதனையே தூதாக்கினள்! ''சாயத் துண்டு முண்டாசும், சரிகைத் துண்டு வல்ல வட்டமும் உங்கள் அழகிற்கு அழகு சேர்த்தன! அன்பு கலந்த அழகு, என்னை அடிமைப்படுத்தியது! ஒன்று கூறுகிறேன் கேளுங்கள்''—எனச் சொல்லாமற் சொல்லக் காண்டாக்கம்பியி னிடம் கூறுவதுபோலக் கூறுகிருள். ''காய் பழுப்பதுண்டு! காட்டுச் செடியும் பூப்பதுண்டு! அவை ஓய்ந்துவிடும். நான் உங்கள் மேல் வைத்த நேசம் ஓயாது!'' எனும் பொருளமைந்த பாடல், தூதுப் பாடலில் ஒரு துளி இது!

மலையகத்தில் ரப்பர்ப் பயிரீடு செய்யப்பட்ட ஆரம்ப காலத்தில் எழுந்த உழைப்பை உருவாக்கிக் காட்டும் பாடல்களில் ஒன்று:

''ஒடிக் கொளுத்தி நெரை பிடிச்சு ஓம்பதாயிரம் சிம்பெடுத்து
தடி பிடிச்சு அளவு கண்டு தடந் தடமாய்ப் பிரிச் செடுத்து
ஒட்டுக்கன்னே நட்டு வைச்சேண்டி! தொரை மவனும்
செட்டுப்பாத்து எட்டிப் போனுண்டி!''

முன்னேடி உழைப்பாளர்களின் முன்னேடியாக நின்று, உழைப் பின் முத்திரைக் காப்பாளனுகி, புதர் மண்டிக் கிடக்கும் பெருங் காடழித்து, ரப்பர்த் தோட்டமாக்கிய நல்ல உழைப்பாளித் தலைவன் பாடிய பாடல் இது!

பாடலின் பொருள்: ''வானுற ஓங்கிய மரஞ் சாய்த்துப் புதர ழித்து, ஒடிந்த மிலாறுகளை ஒன்ருய்க் குவித்துத் தீயிட்டுச் சுத்தம் செய்து, அளவுகோல் கொண்டு அளந்து, 'சிம்பு' நட்டுத் தடம் பிரித்து, நிலத்தை வேளாண்மைக்கேற்ற நன்னிலமாக்கி, ஒட்டுக் கன்றுகளை நடவு செய்து வளஞ் சேர்த்தேன்! உழைப்பை ஓயாமல் நோட்டமிட்டுவந்த தோட்டக்காரத் துரை, சம்பள நாளன்று பணம் கொடுப்பதில் செட்டுப் பார்த்தான்! எட்டிப் போனன்!'' என்பதாம்.

இப்பாடலில், 'ஒடி' என்பது காடழித்துக் குவித்த காய்ந்த மிலாறுகளைக் குறிக்கும் சொல். 'சிம்பு'—நிரைபிடித்து அளந்து, அளவுக்கு அடையாளமாக ஊன்றிவைக்கும் மூங்கிற் சிம்புகளை யும், 'செட்டு' சிக்கனத்தையும் குறிக்கும்.

சிங்கப்பூர் தொட்டு, மலாயா நாட்டின் சாலைகள் அத்தனையும் சமைத்துக் கொடுத்தவர்கள் தமிழ்ப் பாட்டாளி மக்கள்! காடு மலைகளைத் தகர்த்து, மேடு பள்ளங்களை நிரவி, கல்லடுக்கித்

'தார்' ஊற்றிப் பாதை போட்டனர் தமிழ்ப் பாட்டாளிகள்! கொதிக்கும் தார்—சுட்டெரிக்கும் வெயில்—குட்டாணுய்க் குவிந்து கிடக்கும் சல்லிக் கற்கள் புகைவிட்டு நகர்ந்து கொண்டிருக்கும் உருளை வண்டி: இவற்றிற்கிடையே, உழைப்பின் தழும்பேறி நிற்கும் பாதை போடும் பாட்டாளிகள்! அவர்களை மறந்தால், நடக்க வழியமைத்த நல்லாரை மறந்த மக்கள் நாமாவோம்! நமது மறவா உறவுக்கு நாட்டுப் பாடலைத் துணைகொள்வோம்! கொதிக்கும் 'தார்' போல, வெயில்பட்டு மேனி கறுத்து, வியர்வை வழிந்தோட, முட்டுக்கற்களை அடுக்கி அடுக்கிக் கைகள் காய்ப்பேற, உழைப்பின் சிரமத்தை மறக்கப் பாடும் பாடலே இது.

''கூடை சுமக்கையிலே—என் நெஞ்சு
கூட சுமந்ததடி—பெண்ணே
சாடை நீ செஞ்சிருந்தா—வந்து
தாங்கிச் சுமப்பேண்டி!—சுமை
தாங்கிச் சுமப்பேண்டி!''

''வேகாத வெயிலிலே, என்னேடு பாதையமைக்க வந்த பாட்டாளிப் பெண்ணே, சிறு கற்கள் நிறைந்த கூடை, உன் தலையேற, நீ சுமந்து வரும்போது, உன்னை என் உயிராகக் கருதும் என் நெஞ்சு, ஏனே கனத்துச் சுமக்கின்றது. உழைக்கப் பிறந்தவன் நானிருக்க, உனக்கேன் சுமை! வாழ்க்கைச் சுமையை இருவரும் இணைந்து சுமக்கவேண்டும் எனச் சொல்லாமற் சொல்லவா கூடை சுமந்து வந்தாய்! கண்சாடை காட்டிஞல் போதாதோ! உனக்காக நான் சுமப்பேனே சுமை!''—இவ்வாறு உழைப்பின் பளுவை பாடலாக்கினர் பாட்டாளிகள்!

தமிழன், எங்கிருந்தாலும், எவ்வழி வாழ்ந்தாலும் தனக்கெனத் தனித்தன்மையும், இலக்கியமும் அமைத்துக்கொள்ளும் தகவுடையோன்—என்ற உண்மையை—மலாயா-சிங்கப்பூர்ப் பாட்டாளித் தமிழர்கள் வாழ்க்கையோடு ஒட்டி நின்று பார்த்தோர் ஒப்புக் கொள்வர்!

'உழைப்போர் இலக்கியம்' எனும் தலைப்பின்கீழ், நான் எடுத்தாண்ட பாடல்கள் ஒரு சிலவேயாம்! தன் நினைவை உழைப்பின் முன் நிறுத்தி, வளஞ்சேர்த்த வரலாறு, நாட்டின் சிறப்பும் செழிப்புமாகும்.

'உழைப்போர் இலக்கியம்' எனத் தனிப்பேரிலக்கியம் உருவாக, 'இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு', ஒரு வாய்ப்பாக அமைந்தது குறித்து மகிழ்ந்து, உழைப்போர் இலக்கியத் தலைவாசலில் இதனை வைக்கிறேன்.

தமிழகமும் சித்த வைத்தியமும்

Dr. எம். பி. தங்கவேலு *

தமிழ்நாடு பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே சகல வகைகளிலும் சிறந்த நன்னுடுகளில் ஒன்ருக இருந்து வந்துள்ளது. இந்நாட்டில் சித்த வைத்தியமும் சிறந்தோங்கியது. வைத்தியம் என்றும், மருத்துவம் என்றும் சொல்லப்படும் சொற்கள், மக்களின் நோயைத் தீர்க்கும் பணியைக் குறிக்கும் பெயராக வழங்கி வந்தன.

மக்களின் நோயை நீக்கும் முறையை உலகில் முதலில் கண்டு பிடித்தவர்கள், தமிழர்களே. மனிதன் நோய்வாய்ப்பட்டால் அவனையும், அவனது உடலையும் பரிசீலித்து நோய் இன்னதெனக் கண்டு, அதனை நீக்குவதற்குரிய மருந்துகளைத் தயாரித்துக் கொடுத்துக் குணமாக்கிய மருத்துவப் பெரியார்கள், முற்றும் துறந்த முனிவர்களாகவும், முக்காலத்தையும் உணர்ந்த மேதைகளாகவும் இருந்ததால், அக்காலத்தில் அவர்களைச் 'சித்தர்'களென அழைத்தனர்.

அத்தன்மை பெற்ற சித்தர்கள் வைத்தியக் கலையிலும், வான சாஸ்திரத்திலும், வல்லுநர்களாக இருந்ததோடு மாபெரும் விஞ்ஞானிகளாகவும், திகழ்ந்து செயற்கரிய காரியங்களையும் செய்துள்ளார்கள். இச்சித்தர்கள் எண்ணிக்கையில் பதினெண்மராக இருந்து, ஒவ்வொருவரும் தாங்கள் கண்ட உண்மைகளைப் பல நூல்களாக வடித்துத் தங்கள் பெயரை அவற்றிற்கிட்டு மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். சித்த வைத்திய நூல்களின் அடிப்படைத் தத்துவம் காப்பு, நீக்கம், நிறைப்பு என்ற மூன்று முக்கிய குறிக்கோள் கொண்டதாகும். 'காப்பு' யென்ருல் உடலில் நோய் வராமல் காப்பது; 'நீக்கம்' என்பது, மக்களிடையே வந்த நோயை நன்கு பரிசீலித்து, அதற்குரிய மருந்தைக் கொடுத்து நோயை நீக்குவது; 'நிறைப்பு' என்ருல் உடலில் குறைந்த சத்துக்களை நிரப்பி, தேகம் வலுவடையச் செய்வதாகும்.

சித்தர்கள் ஆத்மசக்தியைப் பெற்றிருந்தார்கள். மேலும், இப்புவியில் நெடுநாள் வாழ எண்ணி, 'கல்பம்' எனச் சொல்லப்படும் மூலிகைகளையும், மருந்துகளையும் முறைப்படி உண்டு, உடல் உரம் பெற்று, மூச்சடக்கும் பயிற்சி செய்து, சித்திகள் அடைந்து, சித்தர்களாகி, தங்கள் வாழ்நாளைப் பெருக்கிக் கொண்டார்கள் என்பதை

---

* சித்த வைத்திய ஆராய்ச்சியாளர், நிபுணர், பழனி, தமிழ்நாடு.

அவர்கள் நூல் வழியாக அறிகிறோம். தங்கள் தேகம் நீண்ட நாட்கள் இருக்கும்படியான நிலையைப் பெற்ற சித்தர்களில் பதினெண் சித்தர்கள் என்று மட்டும் தனித்துச் சொல்வதற்குக் காரணம் யாதென ஆராய்ந்தால், அக்காலத்திலே அவர்களுக்குள் ஓர் சங்கத்தை ஏற்படுத்தி, அச்சங்கத்தின் செயற்குழுவினராகப் பதினெட்டுப் பேர்கள் இருந்ததாக அறிகிறோம். அதனால்தான் பதினெண் சித்தர்கள் என்று கூறுகிறோம். இதற்குச் சான்றுகள் சித்தர்கள் நூல்களிலுள்ள 'சித்தர் வணக்கம்' எனக் கூறியுள்ள பாடல்களேயாகும். ஒரு சித்தரின் நூலைத் தொடர்ந்து படித்தால், அந்நூற்களில், குறித்த ஒரு பொருளிற்கு விளக்கம் கூறிக் கொண்டே போய் வேறு சித்தர்களின் பெயர்களையும், அவர் தம் நூலையும் 'பார்' எனக்கூறியுள்ளார்கள். ஆகவே, சித்தர்கள் நூல்களைத் தொகுத்துப் பார்ப்போமானால், சட்டமன்றத்தில் வாதம்—பிரதிவாதம் செய்து எவ்வாறு சட்டம் உருவாக்கப்படுகின்றதோ அதுபோல் சித்த நூல்களும் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் அறிகிறோம். சித்தர்கள் பெயர்கள்: 1. அகஸ்தியர் 2. திருமூலர் 3. காலங்கி 4. போகர் 5. புலிப்பாணி 6. சட்டமுனி 7. ராமதேவர் 8. கமலமுனி 9. மச்சமுனி 10. உரோமரிஷி 11. கருவூரார் 12. கடைக்காட்டார் 13. சுந்தரானந்தர் 14. அகப்பைச் சித்தர் 15. பாம்பாட்டிச் சித்தர் 16. தேரையர் 17. யூகி முனி 18. யாகோப்பு. இவர்களில் பதினெட்டாவது காணப்படும் 'யாகோப்பு' எனப்படும் முகம்மதிய பெயருடைய சித்தர், ஏழாவது காணப்படும் ராமதேவர் என்றும், மேற்படியார் மெக்காநகர் சென்று அநேக ஆண்டுகள் தங்கி, 'யாகோப்பு' எனப் பெயர் பெற்று, தமிழகம் திரும்பினார் என்றும் தெரிகிறது.

மேலே கண்ட சித்தர்கள் அல்லாமல், ரோமாபுரியில் இருந்து 'பெஸ்கி பாதிரியார்' என்ற பெரியார் தமிழகம் வந்து, பல ஆண்டுகள் தங்கித் தமிழை நன்கு கற்றறிந்து தன் பெயரை 'வீரமாமுனிவர்' யென மாற்றியதோடு, நச காண்டம், மூப்பச்சூத்திரம், வைத்திய காவியம் போன்ற பெரிய நூல்களையும் ஆக்கியுள்ளார். திருமூலருடைய திருமந்திரம் 8,000 என்ற அரிய நூல், அனைவருக்கும் தெரிந்திருக்கும். அதில், "வைத்தியம் எதற்காக?" என்ற கேள்வியை எழுப்பி, பதிலையும் பாட்டாகத் தந்துள்ளார்:

"உடம்பினை முன்னம் இழுக் கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறு பொருள்கண்டேன்
உடம்புளே உத்தமன் கோவில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேன்" —திருமூலர்.

நோய் என்ற பிணி அணுகாமல் உடம்பைக் காப்பதற்காகத்தான் வைத்தியம் தேவை. மேலும், கற்பசாதனைகள் செய்தும், கற்பம் என்னும் மருந்துகளைச் சாப்பிட்டும், உடல் உரம் பெற்று எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் திடத்துடன் இருந்து வந்தார்கள்.

''கால மெனும் கொடிதான கடும்பகையைக்
கற்ப மென்னும் வாளினுற் கடிந்துவிட்டோம்
சாலப் பிறப்பிறப்பினை நாம்கடந்தோம்
தற்பரங் கண்டோ மென்று ஆடாய்பாம்பே.''

'கற்பம்' என்பதை அழகாக விளக்கியுள்ளார், பாம்பாட்டிச் சித்தர். மேலும் உலகப் பொது மறையைத் தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர், திருக்குறளில் 'மருந்து' வென ஒரு அதிகாரத்தைத் தொடங்கி, ''மருந்து என்ருல் என்ன? ஏன் மருந்து வேண்டும்? மருந்து இல்லாமல் எப்படி வாழலாம்? வியாதி வருவது எப்படி? அதைத் தடுப்பது எவ்விதம்?'' என்பதைத் பத்துக் குறளில் இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

''மிகினும் குறையினும் நோய் செயும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று'' (941)

வள்ளுவர் காலத்திற்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் சித்த வைத்தியம் தழைத்தோங்கியதை அறிகிருேம். **ஞானவெட்டியான்** என்ற நூலிலும் வைத்தியம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. சித்த வைத்தியம் முத்தோச அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது. வாத, பித்த, கபம் என்ற மூன்று நாடிகளின் விகற்பங்களாலே நோய் தோன்றுகிறது. இதனுல் தான் நாடிப் பரிட்சையை நன்கு கற்றறிந்திருக்க வேண்டும் வைத்தியர்கள்.

''நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்.'' (948)

ஆண்டவன் படைப்பில் விசித்திரம் நிறைந்த படைப்பு மனித உடல். இதை 'அஸ்வத்மரம், அச்சுவத்மரம்' தலைகீழாய் வளரும் விருட்சம் என்று திட்டமாகச் சொன்னுர்கள். மரமானது வேரிலிருந்து மரம், கிளை, கொம்பு, இலை முதலியவைகளாகவும் மேல் நோக்கி வளருகின்றன. மனித உடலோ மேலே காணப்படும் தலையிலுள்ள மூளையை வேராகக் கொண்டு வளர்வதால், வேரிலிருந்து கை, கால் சரகைகள், உடல் உறுப்புக்கள் கீழ் நோக்கி வளருகின்றன. இந்த உடல் 72,000 நாடி நரம்புகளாலும், 95 தத்துவங்களாலும் உருப்பெற்றது. எண்சாண் உடம்பிற்கு 'சிரசே' பிரதானம் என்றபடி, அதன் ஆதரவாய் இயங்குவதால் உடலுக்குத் தலைகீழான விருட்சம் எனப் பெயர் ஏற்பட்டது. அதை நன்கு அறிந்து தெளிந்தவர்களே 'ஞானி' எனப்படுவார்கள். கீதையில் அர்ச்சுனனுக்குக் கூறிய உபதேச மொழியில், கண்ணன், ''அர்ச்சுனு! தலைகீழாய் உள்ள விருட்சம் தன்னை அறிந்தவன்; சம்சார சாகரத்தை அறிந்தவன்; ஞானத்தை அறிந்தவன்; என்னை அடைந்தவன்'' என்கிருர். அப்படிப்பட்ட மனித உடலை ஆராய்வது வைத்தியத்திற்கு மட்டும் அல்லாது, தத்துவஞானியாகவும், 'பிரம்மம்' என்னும் பொருளை அடைந்து ''சொரூபமுக்தி அடையவும் உதவும்'' என்கிருர். மேலும், உண்மையை அறிந்தவன் எப்படி

இருப்பானென்றும் விளக்கியுள்ளார். அர்ச்சுனு, என்னுடைய பக்தன், சாஸ்திரத்திலுள்ள திரவியங்களைக் கொண்டு சாரீரத்தை வளர்த்தவனுய் இருப்பான். இது சத்துவகுண ஆகாரம், இது ராச்சகுண ஆகாரம், இது தமோகுண ஆகாரம் என்பதை அறிந்து சத்துவகுண ஆகாரங்களை உட்கொண்டு சரீரத்தில் நோய் அணுகாமல் காப்பதுதான் அதன் பொருள். ஆகார பேதங்களால் குணுபேதங்கள் ஏற்பட்டு அதனுல் ஏற்படும் நோய்களைத் தீர்த்துக் கொள்வதுதான் வைத்தியம் என்றுர்கள்.

''திண்ண மிரண்டுள்ளே சிக்கவடக்காமற்
பெண்ணின் பாலொன்றைப் பெருக்காமல் உண்ணுங்கால்
நீர் சுருக்கி மோர் பெருக்கி நெய்யிருக்கி உண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி'' —தேரையர்.

பூமியின் ஆகர்ஷண மாறுபாட்டால் வானத்திலுள்ள கிரகங்களுக்கும் கடல் மாறுபாடுகளுக்கும் சம்பந்தம் இருப்பதாக அறிந்தனர். பூமியின் மாறுபாட்டுக்கும் மனித உடலுக்கும் உள்ள தொடர்பை எளிதாகக் கூறியும், எவ்வெக்காலங்களில் மனிதன் எவ்வாறு நடந்து கொண்டால் நோயின்றி வாழலாம் என்பதையும் கூறியுள்ளார்கள். சித்த மருந்துகள் யாவும் முன்யோசனையுடன், சித்தர்களின் அனுபவத்தில் சரியென்று நிர்ணயிக்கப்பட்டவை ஆகும். சித்த மருந்துகளுக்கு அடிப்படை, 'மூப்பு, செயநீர்' என்ற சீவசக்தியுள்ள கடுங்காரச் சரக்குகள் ஆகும். மேலும், மூலிகைகள், பட்டைகள், வேர்கள், 'சம்பச்சரக்கு' என்ற கடைச் சாமான்கள், உப்புக்கள், தாதுப் பொருட்கள், பாலங்கள், உலோகங்கள், நவரத்தினங்கள், சீவப்பிராணிகளின் உயிர்ச் சத்துக்கள் முதலியவற்றைப் பஞ்சபூத வாரியாகப் பிரித்தும், தொகுத்தும், சுத்திகள் வகுத்தும், ஒவ்வொன்றிலும் என்னென்ன பொருள், எந்தெந்த அளவுகள் இருக்கின்றன? அதனுல் எந்தெந்த நோய்கள் தீரும்? என்று ஆய்ந்தனர். ஒவ்வொரு பதார்த்தத்தின் குணங்களையும் அறிந்து, ஒவ்வொன்றிற்கும் பகை, நட்பு, முறிவு முதலியவற்றை நிர்ணயித்து, முத்தோசத்தான் ஏற்படும் நோய்களை நிர்ணயித்தும் உள்ளனர். ஒவ்வொரு வியாதியையும், அதன் உட்பிரிவுகளையும் விரித்துப் பெயரிட்டு, எந்தெந்த வியாதிகளுக்கு, எந்தெந்த மருந்துகளைக் கொடுப்பது என்று திட்டம் செய்துள்ளனர். மேலும் உடலின் எடை, அளவு, எத்தனை சுவாசம், எத்தனை நரம்புகள், ரத்தத்தின் அளவு, மூளை, மாமிசம், எலும்பு இவைகளின் எடையும் எண்ணிக்கையையும், உடலின் வரட்சி, குளிர்ச்சி, கொழுமை முதலியவற்றைக் கரு உற்பத்தியிலிருந்தே ஒவ்வொரு பருவத்திற்கும் வகுத்தும், இன்ன விதமான மருந்துகளால் தீர்க்க வேண்டுமென்றும் திட்டம் செய்துள்ளார்கள். மேலும் சரம், வாசி, யோகம், ஆசனம், கல்பம் முதலியவற்றையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

விஞ்ஞான முறைப்படி அமைந்த சித்த மருந்துகளை நோய்பட்ட உடலில் எவ்விதம் உபயோகிப்பது என்பதைச் சித்தர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். மனித உடலையும், மருத்துவ வகைகளையும் மூன்று கூறுகளாகப் பிரித்துள்ளார்கள். அவற்றில் மனித உடலைத் தூல தேகம், சூட்சும தேகம், காரண தேகம் என மூன்ருகப் பிரித்து உண்டாகும் நோயையும் மூன்ருகப் பிரித்தார்கள்.

1. **தூல தேகம்:** ஏழு தாதுக்களை ஆதாரமாகக் கொண்டு, பிண்ட தத்துவ நிலையில் விளங்குவது.

2. **சூட்சும தேகம்:** பத்து வாய்வுகளையும், பத்து சீவநாடிகளையும் ஆதாரமாகக் கொண்டு சராசர தத்துவ நிலையில் விளங்குவது.

3. **காரண தேகம்:** ஐந்து பூதங்களை ஆதாரமாகக் கொண்டு அண்ட தத்துவ நிலையில் விளங்குவது.

உடலைப் பற்றும் மூன்று வகை நோய்கள்: **தூல தேகத்தில்** சுகாதாரப் பிசகால் ஏற்படும் நீர்க்கோவை, வலி, கடுப்பு, சிரங்கு, வெட்டு, குத்து, காயங்கள், அடிபடல், சீதோஷ்ண பேதங்களால் உண்டாகும் குணக்கேடுகள், பசி, தாகம் முதலான பிணிகள் ஏற்படுகின்றன. இதற்கு உடற்பிணி என்று பெயர். **சூட்சும தேகம்:** சல்லி, சயம், குட்டம், நீரிழிவு, வாதம், குன்மம் முதலியன. இதற்கு உயிர்ப் பிணியென்று பெயர். **காரண தேகம்:** நரை, திரை மூப்பு, பயம், சாக்காடு என்ற பிறவி நோய்களாகும். தூல தேகத்தில் உண்டாகும் உடற்பிணியைப் போக்க மூலிகைகள், பூக்கள் பட்டைகள், வேர்கள், கடைச் சரக்குகள் முதலியவற்றைக்கொண்டு சூரணம், லேகியம், மாத்திரை, தைலம், கசாயம், குடிநீர், கருக்கு, மணப்பாடு (சர்பத்) முதலிய மருந்துகளைச் செய்து உடற்பிணியைப் போக்கலாம். சூட்சும தேகத்தில் அப்பூத (நீர்) துணையின் வழியாக உடலில் கலக்கச் செய்து, உடற் பிணியைப் போக்கலாம். சூட்சும தேகத்தில் தோன்றும் உயிர்ப் பிணிகளுக்கு இரசம், கெந்தகம், வீரம், பூரம், நவலோகங்களால் செய்யப்பட்ட மருந்துகள் தேவையாகும்.

கூடுமானவரை நாடி பிடித்துப் பார்த்து நோயை அறிந்துகொள்ளும் அளவுக்கு வைத்தியர்கள் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

கருப்படைந்தவனை வாழ்த்திக் கைதனில் நாடிபார்க்க
பெருவிரலங்குலத்தில் பிடித்தடி நடுவே—தொட்டால்
ஒருவிரலோடில் வாதம் யிருவிரலோடிற் பித்தம்
திருவிரல் மூன்றிலோடிற் சிலேத்தும நாடியாமே.

நாடியின் மூலம் நோயை நன்கறிய முடியும். மேலும், கையைப் பிடித்து விரல்களின் முட்டுகளில் தங்கியுள்ள வாயுக்களை நீக்கும்படி நெட்டை வாங்கி, உள்ளங்கைகளில் சூடு பிறக்கத் தேய்த்துப் பின் நாடி பார்க்க வேண்டும்.

செப்ப, ஆண் மக்களுக்குச் சேர வலக்கையாகும்
ஒப்ப அரிவையருக் கோதாவிடம்—தப்பா
தறைந்தார் முனிவ ரவைகோள்—தோற்றும்
விரைகோது மையாம் வியந்து.

என்பது போல ஆண்களுக்கு வலக்கையிலும் பெண்களுக்கு இடக் கையிலும் நாடிகளை அறியவேண்டும்.

கொழுமதி வாதம் ஒன்றும்
கொடுங்கதிர் பித்தம் முக்கால்
கழுமுனை ஐயம் காலாம்
ஓடிடில் சுகமே.

வாதம் ஒரு கோதுமையின் அளவாக ஒரு மாத்திரையும், பித்தம் முக்கால் மாத்திரையும், சிலேத்துமம் கால் மாத்திரையுமான அளவு நடந்தால் இந்த உடலில் எந்த நோயுமின்றி வாழலாம்.

சித்திரை வைகாசிக்கும் செழுங்கதிர் உதயம்தன்னில்
அத்தமாய் ஆனி ஆடி ஐப்பசிக் கார்த்திகைக்கும்
மத்தியானத்தில் பார்க்க
மார்கழி தை மாசி வித்தகன் கதிரோன் மேற்கில்
விழுகின்ற நேரம்தானே
தானது பங்குனிக்கு தனது நல் ஆவணிக்கும் மானமாம்
புரட்டாசிக்கும் அத்தராத்திரியில் பார்க்க
தேனென மூன்று நாடி தெளிவாகக் காணுமென்று
காளைமாமுனிவர் சொன்ன கருத்தை நீ கண்டுபாரே—
காரிகை தமக்குப் பிள்ளை கருப்பையைப் பற்றி நின்றால்
கூரியவாத நாடி குண்டலப் புழுப்போ லூரும்
வீரிய மூன்றுந் திங்கள் விட்டில் போல் பதைத்து நிற்கும்
பாரிய எட்டாந்திங்கள் பையவே புழுப்போ லூரும்—

குணவாகடத்தில் நாடியில் சூலுற்ற பின் மூன்று, எட்டு ஆகிய மாதங்களில் வாத நாடி எப்படி இருக்கும் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

மாதர் கைப் பிடித்தபோது வந்திடும் வாத நாடி
தீதுற வெடித்துப் பாய்ந்து சிதறியே கிளம்பி நின்றுற்
பேதை தன் வயிற்றிலுள்ளே பெருகு சுரோணிதமே தங்கி
வாதைகள் பண்ணி மாத விடைக் காலம் வருந்தச் செய்யும்

பொய்ச்சூல் ஏற்பட்டு உதிரமானது கற்பாசயத்தில் பிண்டம்போல் உருவாகி வளரும் போதும் சூதக நோயிலும், வாத நாடி தீதுற வெடித்துப் பாய்ந்து சிதறியே கிளம்பி நிற்கும் என்கிறார்கள்.

வைத்தியர்களுக்குரித்தான கண்கள் 3, தலைகள் 4, முகங்கள் 5, கைகள் 6, சரீரங்கள் 8, கால்கள் 10, இவை நன்குணர்ந்தவர் களே மக்களின் பிணிகளைத் தீர்க்க முடியும். 1. மருந்து

2. சுத்தி 3. அதன் தன்மை. இவைகள் தாம் என்று உறுதி செய்தால் இம்மூன்றும் கண்களாம்; (2) வாதம், பித்தம், சிலேத்துமம், தொந்தம் இவ்வித நாடிகளின் பரிசீலிப்புகள் தலைகள். (3) உண்ணுகின்ற சுவை ஆறும், ஆறு கைகள். (4) மெய்க் குறி; நிறம், தொனி, விழி, நாக்கு, மலம், சிறுநீர், கைக்குறி (நாடி நிலை) இவைகள் எட்டும் சரீரங்களாம். (5) தசநாடி, தசவாய்வு ஆகிய இவ்விரண்டினையும் பார்ப்பதே நூல்கள் பத்தாம். (6) பிண்ட நிலையோடு கூடிய சடப்பொருள்களாலாகியதே முகங்கள் ஐந்து என்று கூறப்படுகிறது:

ஓதுகின்ற மலக்கட்டை யொழிய வைத்தால்
உடலிலுள்ள வாதமெல்லா மொடுங்கிப் போகும்
தாதுற்ற சிறுநீரைத் தெளிய வைத்தால்
சடத்திலுள்ள வேகமெலாந் தணிந்து போகும்
கோதுற்ற உமிழ்நீரை முறிய வைத்தால்
கூட்டிலுள்ள பகையெல்லாங் குலைந்து போகும்
கோதடர்ந்த இவைமூன்றும் களங்கமுற்ருல்
கொல்ல வந்த காலனையும் வெல்லலாமே—

சித்த மருத்துவத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். தேவ மருத்துவம், மனித மருத்துவம், ராச்ச மருத்துவம் என்பன. இரசம், கந்தம், பாசானம், உப்பு, உலோகங்களால் சித்த வைத்திய முறைப்படி தயாரித்து கட்டு மாத்திரை, களங்கு, செந்தூரம், பஸ்பம், சுண்ணம், மெழுகு முதலிய உயர்ந்த பொருளால் செய்யப்படுவது தேவ மருத்துவம். முன்கூறிய முறைப் படியே தாவரங்களைக் கொண்டு செய்யப்பட்ட குடிநீர், சூரணம், இரசம், பிட்டு, வடகம், இனகம், மணப்பாடு, மாத்திரை ஆகியவை மனித மருத்துவம். மேற்கூறிய மருந்துகளால் தீராத வியாதிகளை அறுவை, கீறல், அட்டை விடல், சூடு போடுதல், இரத்தம் வாங்குதல், சலாகை போடுதல், கொம்பு கட்டுதல் முதலியவைகளால் நோய்களைக் குணப்படுத்தும் முறைக்கு ராச்ச மருத்துவம் என்று பெயர்.

அகஸ்தியர் சாஸ்திராயுத விதி

சித்தர் முறையில் அறுவை சிகிச்சை முறை இல்லை; மேல் நாட்டார் தான் அறுவை வைத்தியத்தைக் கண்டு பிடித்தார்கள் என்று பலர் நினைக்கிருர்கள். தலை ரோமத்தையும் இரண்டாய் வகுக்கும் கத்தியும் முன்பு இருந்து இருக்கிறது என்ருல், அறுவை சிகிச்சை முறையில் எத்துணை உயர்ந்து விளங்கியிருக்கிருர்கள் என்பதை எளிதில் ஊகிக்க முடியும்.

கத்தி சத்திரம் கவின்குறும்பி வாங்கியும்,
முக்காவா தன்னுடன் முள்ளு வாங்கியும்
ஆழிக்கோலு மடுத்த பிறையுடன்

கத்திரிக் கையுடன் பரகரை வாங்கியும்
முச்சலாகை யோடு முனிமொழியோட்டும்
மட்டக் கோலும் மாறும் ஊசியும்
செப்புக் குழைவுரு சீரிய சலாகையும்
வட்டகை தன்னுடன் வளர் பஞ்சமுகமும்
செப்புச்சிலாகையும் கொம்புங் குடோரியும்
வெங்கலக் குழலும் ஈயச் சலாகையுங்
காயக்கோலுங் கண்கத்தி தண்டும்
இவையிவை யாயுத மிருபத்தாறும்
சிவன வனருளால் திகழ் சத்திராயுதமே—என்கிறார்.

அறை தருங் கத்தியா றங்குல நீளம்
அகலமோ ரங்குலம் ஆம்முனை வட்டம்
மயிர்க்கத்தி போன்று வழங்கு மென்ப—
சத்திரநீளஞ் சாற்றிரு றங்குலம்
வேப்பிலை போலும் விளங்கும் பல்பல்லாய்
நிறைகளைஞ்சாறு நெடியதோர் பிளவை
கட்டியிவற்றைக் கண்டமா யறுக்க
மெத்தவும் பயனும் மேதினி மிசையே
குறும்பி வாங்கியின் கூறே ழங்குலம்
நிறையறைக் கழஞ்சு நெடுங்கைப் பிடியோ
ஐந்தே அங்குலம் ஆமெனப் பகர்வார்
முகவா தனமே முந்நான் கங்குலம்
முக்காற் கழஞ்சு நிறையென மொழிவார்
முள்வாங்கி நீளம் மூவிரண்டங் குலம்
அகலமோ ரங்குலம் அணிநிறை கழஞ்சொன்
றறுக்கவுங் சீறவுங் அவிர்நகம் வாங்கவும்
பயனும் என்ப பணித்தனர் மேலோர்
ஆழிக்கோல் பத்தே அங்குலம் நிறையோ
அரைப்பலம் ஆகமென்றறைந்தன ரறிஞர்
பிறைக்கோ லென்பது பேசின் மூவங்குலம்
நிறை மூன்று கழஞ்சு நிகழெழுத் தாணிபோல்
நீண்ட பிறைபோல் மத்தியில் நிலவுறும்
கத்திரி கைச்சீர் கழறெட்டொடரை
அங்குலம் நிறை காற்பலமே யாகும்
பரகரை வாங்கியோ பதினு றங்குலம்
நிறையறைப் பலமென நிகழ்த்துவருணர்ந்தோர்
முக்கிலா கைச்சீர் மொழியினே ழங்குலம்
நிறை நான்கு கழஞ்சே நிலவுதன் வடிவோ
ஒரு மூன்று தகட்டுளா யுள்ளது பாரே
முனி மொழி யென்பதோர் முக்கிய கருவியே
ஓட்டுக்கோ லங்குலம் ஒன்றேடு பத்தே
தலையொரு கழஞ்சரைப் பலமுடன் நிறையே
அட்டக்கோ லீரொன் பானங் குலமே
காசிடை யெட்டெனக் கழறுவ ருசியோர்

ஊசிமூ வங்குலம் உரைநிரை யரைமா
செப்பு குழைதான் திரட்சியாங் குழலே
ஒரு சாணளவின துயர் நிறை யரைப்பலம்
தகடோலைக் கனம் சார்புண் விடுவது
கலாசை யங்குலந் தாமொரு நான்கே
அன்றியைத் ததன் நிறை யாறிரு கழஞ்சே
வட்டசை யென்பதோர் வகையாயுதமே,
பஞ்ச முகமுப் பரிசின தாமே
செப்புச் சிலாகை சிறந்ததோர் கருவியோ—
கொம்பீரைந்தும் குலமாம் வாழையின்
குறுந்தொப்பது பூவின் குலவிரண் டங்குலம்
மேனி வீக்கத்தை வீட்ட வல்லதே
கீறிக் கட்டியைக் கெட்ட செந்நீரை
வெளியிடத்தக்க மிகு பயனுயதே
குடோரியே டிழராயங் குலம் நிறைகாலற்பலம்
வெண்கரக் கழல்தான் மேவுமெட்டங்குலம்
நிறைபலம் முன்சோ டரையென நிகழ்த்துவார்
ஈயச்சலாகை மியம்பின் மூவங்குலம்
நிறையோ நான்கு கழஞ்சென நிலவிடும்
காயக்கோல் நீளம் கழறினே ழங்குலம்
நிறையிரு கழஞ்சு நெடிய பருமனே
இரண்டங்குலமென விசைந்தனர் பெரியார்
தெண்டு சலாகை கொண்ட வங்குலமோ
ஒன்பதங்குலம் நிறையோரரைக் கழஞ்சே
ஈர்க்குப்போலும் எழில் கனம் வாய்ந்ததே.

தமிழ்நாட்டுச் சித்தர்கள்

இரா. மாணிக்கம்*

முன்னுரை

1. சித்து என்னும் சொல் இறைவன் அருள்பெற்ற அடியார்கள் வாழ்வில் நிகழ்கின்ற விந்தையான செயல்களைக் குறிக்கும். அருள் விளையாட்டு என்றும் இதனைக் கூறுவர். ஆங்கிலத்தில் குறிக்கப் படும் 'மிஸ்டிசிசம்' (Mysticism) என்னும் சொல் ஏறக்குறைய இப்பொருள் உடையது எனலாம். ஆனால் மந்திரம், தந்திரம் எனவரும் சொற்களுக்கும் இதற்கும் சற்றும் தொடர்பு இல்லை. [1]மேலைநாடுகளில் இச்சொல் சாதாரண மக்கள் வழக்கில் 19-ம் நூற்றாண்டில் நுழைந்து மிக விரைவான வளர்ச்சியைப் பெற்றது என்றும், 'மஸ்டர்' (Muster) என்னும் கிரேக்கச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இச்சொல்லுக்குப் பிறப்பு இறப்பின் உண்மையை அறிவது என்பது பொருள் என்றும் கூறுவர். ஆனால் நம் தமிழ் நாட்டில் மிகத் தொன்மையான அகஸ்தியர் காலத்திலிருந்தே சித்து பற்றிய சிந்தனை இருந்து வந்திருக்கிறது என்பதை இலக்கிய வரலாற்றின் மூலம் காணமுடிகிறது. இறை வனோடு வேற்றுமையின்றி இரண்டறக் கலக்கின்ற ஒப்பற்ற பேர னுபவத்தைக் கொண்ட இச்சித்து என்னும் கொள்கை கிழக்கு, மேற்கு ஆசிய நாட்டுச் சமயங்கள் அனைத்திலும் ஏற்றுக் கொள் ளப்படுகின்ற ஒன்றாகும். ஆனால் சமயங்களில் புகுந்துள்ள வீண் கொள்கைகளையும் கோட்பாடுகளையும், சடங்கு முதலிய சம்பிர தாயங்களையும் தாக்கிப் பேரின்ப அனுபவம் ஒன்றாலேயே நிறைவு பெறுபவர்கள் சித்தர்கள் ஆவர்.

சித்தமும் சித்தரும்

2. சித்து ஆடுபவன் சித்தன் ஆகும். இச்சித்து என்னும் சொல் சித்தம் என்னும் சொல்லினின்று தோன்றிய ஒன்றாகும். இது பிரகிருதியினின்று தோன்றி விடயங்களைச் சிந்திப்பது ஆகும். சித்தை அடக்கிச் சிவன்பால் வைத்த சித்தர் கண்ட முடிபே சித் தாந்தம் என்பர்.

---

*எம்.ஏ., எம்.லிட்., விரிவுரையாளர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

[1] Richard Ince., M. A., Dictionary of Religion and Religions. P. 188.

3. "[2]தேவாரத்தின் வழி நோக்குழி கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள்; கண்டு தெரிந்தவர்கள் சித்தர்கள். அனுபூதி ஞானம் பெற்றவர்களை 'மிஸ்டிக்ஸ்' (Mystics) என்ற ஆங்கிலச் சொல் குறிக்கும். சித்தர்களின் அனுபூதி அனுபவத்தில் வேற்றுமை இல்லை. அதைக் கூறும் வருணனையிலேயே வேற்றுமை உளது. ஆதலின் சித்தர்கள் எல்லாச் சமயத்திற்கும் அப்பாற்பட்ட சர்வ சமய சன்மார்க்கத்தினைப் பாடக் காண்கிறோம்."

4. வாசி என்னும் மூச்சினை அடக்கி ஆண்டு யோக சித்தியினால் உடலில் உள்ள மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரப்பையின் நடு, கழுத்து, தலைமுடி என்கின்ற ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலினியை எழுப்பிப் பலபல அனுபவமும் பெற்றியும் கண்டு அப்பால் உள்ள எல்லாம் ஆன பொருளில் நிலைத்துச் சித்தி பெற்றவரே சித்தர் என்பார் டி. பி. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்.

5. மேற்கண்ட கூற்றுக்கு விளக்கம் தருவதுபோல [3]சிவயோக சாரம் என்னும் நூல் "பிராணவாயுவின் அசைவு எதுவோ அதுவே சித்தத்தின் அசைவு என்று மேலான புத்திமான்கள் பிராணனது சலனத்தைச் செயித்தலில் முயல்கின்றார்கள்" எனக் குறிக்கிறது. இக்கருத்தையே [4]நிஜானந்தபோதம் எனும் நூலும், "தவசிகளுக்கு ஆகாரம் வாசி. வாசி என்பது பிராணவாயு. இதைக் கட்டிச் சகல சித்திகளையும் பெற்றனர்" என்று குறிக்கிறது. ஆதலின் வாசி எனப்படும் பிராணவாயுவை அடிப்படையாகக் கொண்டது சித்தம் என்பதும், பிராணவாயுவின் அசைவே சித்தின் அசைவுக்குக் காரணம் என்பதும், பிராணவாயுவின் அசைவை அடக்கினால் சித்தத்தின் அசைவை அடக்கமுடியும் என்பதும் அசைவற்ற சித்தமுடையானே சித்தனாகும் என்பதும் விளங்கும். இராமலிங்க அடிகளார் இப்பிராணாயாம அடக்கத்தையே 'கால்பிடித்தல்' எனக் குறிக்கின்றார். 'வேகாக்கால்' என்றும் 'சாகாக்கால்' என்றும் சித்தர்கள் குறிப்பதும் இதையேயாகும்.

சித்தமும்-சித்தியும்

6. இனிச் சித்திகள் எட்டு என்பர். 'அட்டமா சித்தி' என்னும் சொல் வழக்கு இதனை உணர்த்தும். அவை:

அணிமா: சூக்ஷ்ம காரண மகாகாரண சரீரமென்பதில் மகா காரண சரீரமாய் அணுவிலசைவாக நுழைவது.

மகிமா: விஸ்வரூபமாய்த் தோன்றல்.

---

[2] கலைக்களஞ்சியம்-தொகுதி 4. பக்கம் 643-644.

[3] மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை—சித்தர் ஞானக்கோவை. பக்கம் 248.

[4] மே.கா.நா. பக்கம் 439.

கரிமா: அதிகப் பளுவாயிருத்தல்.

இலகிமா: தக்கையைப்போல் இலேசாய்த் தோன்றல்.

பிராத்தி: இரவிமதியோரை வசப்படுத்தல்.

பிரகாமியம்: பிறர் காயத்தில் நுழைந்து நினைத்தவரிடம் அக்கணமே தோன்றல்.

ஈசத்துவம்: பஞ்ச கிர்த்தியத் தொழிலை நடத்துதல்.

வசித்துவம்: அண்டர் முதலிய அனைவரையும் தன் வசப் படுத்துதல்.

இச்சித்துக்களில் வல்லவர்கள் பதினெண்மர் எனக்கூறுவர். ஆனால் கிடைக்கின்ற சித்தர்கள் வரலாற்றைத் தொகுத்துப் பார்த்தால் சுமார் முப்பத்தேழு பெயர்கள் கிடைக்கின்றன. அவை: அகத்தியர், திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பத்திரகிரியார், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர், அழுகணிச் சித்தர், சட்டை முனி, மச்ச முனி, உரோம முனி, யூகி முனி, நந்தீஸ்வரர், இராமதேவர், கருவூரர், காகபுசுண்டர், சூரியானந்தர், கொங்கணர், சங்கரனார், அருணாசலகுரு, கணபதி ஈசர், சேஷயோகியார், பீர் முகமது, மதுரை வாலைசாமி, வால்மீகர், புலத்தியர், காலாங்கிநாதர், போகர், தன்வந்திரி, தேரையர், பிண்ணாக்கீசர், கோரக்கர் முதலியோர் பெயர்கள் காணப்படுகின்றன. இராமலிங்க அடிகளாரையும் இவர்களுள் ஒருவராகக் கொள்வர்.

7. இவர்கள் செய்த தொண்டு தமிழ்நாட்டு வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் குறிப்பிடத்தக்கதோர் இடத்தைப் பெறுவது ஆகும். மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்று விளங்கும் 'சித்த மருத்துவம்' இச்சித்தர்கள் வகுத்த தமிழர்க்கியைந்த மருத்துவ முறையாகும். பல்வகையான மந்திர நூல்களையும், யோக நூல்களையும், ஞான நூல்களையும் எழுதித் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு வளமை சேர்த்தவர்கள். தமக்கே உரிய குறிச்சொற்களைப் (Code words) பயன்படுத்திய இவர்கள் உருவ வழிபாடு, சாதி, சமயம், இனம், குலம் முதலிய கோட்பாடுகளை எதிர்த்தவர்கள். யோக நெறியையும், ஞான நெறியையும் பின்பற்றிய இவர்கள் கண்ட முடிபே சித்தாந்தம் என முதலில் வழங்கப்பட்டது என்பர்.

8. வடநாட்டில் எண்பத்திநான்கு சித்தர்கள் இருந்தார்கள் என்றும், இவர்கள் பயின்றவை யோக மார்க்கம், நாத மார்க்கம் எனப்பட்டன என்றும், இந்த மார்க்கங்களைச் சாதி மத வேறுபாடில்லாமல் எல்லோரும் பயிலலாம் என்றும் கூறுவர்.

9. [5]கா. சு. பிள்ளையவர்கள் தமது நூல் ஒன்றில் இத்தகைய அறிவர்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே தமிழ்நாட்டில் ஒவ்வொரு பொருளின் நுட்பங்களைக் கண்டு பிறருக்கும் உணர்த்தும் தவமும், அறிவாற்றலும் உடையராய் விளங்கினர் எனக்குறிக்கின்றார். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான [6]குறுந்தொகையிலும், [7]மணிமேகலை, [8]சூடாமணி முதலிய இலக்கியங்களிலும் சித்துப்பற்றிய குறிப்புகள் வருவது ஈண்டுக் குறிக்கத் தக்கது ஆகும்.

வகையும் தொகையும்

10. 19ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய பெரும் புலவரும் ஞானியுமான இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாப் பாடல்களின் வாயிலாகச் சித்திகள் எண்ணற்றவை என அறிய முடிகிறது.

[9]''என்னுயிர் நட்பார் மருந்து எனக்
கெட்டெட்டுச் சித்தியு மீந்தமருந்து,''

எனவரும் அடிகளின் வாயிலாக 64 வகைச் சித்தியைப் பற்றி அறிய முடிகிறது. திருமந்திரம் 631-ம் நூற்பாவுக்கான விளக்கத்தில் 64 சித்திகள் எனப்படுவன 64 கலைகள் என்னும் குறிப்புக் காணப் படுகிறது.

[10]''ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு கோடி''
''கூட்டுறு சித்திகள் கோடிபல் கோடி''
''அறிவுறு சித்திகள் அனந்தம் கோடி''

எனவரும் அடிகளை நோக்கின் சித்திகளின் தொகை மிகப்பல என்பது விளங்கும். எனினும் அருட்பெருஞ்சோதி அகவல், சிற்சத்தி துதி முதலிய பகுதிகள் வாயிலாக சித்தியின் வகை மூன்று என்பது விளங்கும். அவை கரும சித்தி, யோக சித்தி, ஞான சித்தி என்பன.

[11]**கரும சித்தி**: அணிமா, இலகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், தேகத்தைக் கல்ப சித்தி செய்து கொள்ளுதல், அபரமார்க்கி, சதாசிவானந்த அனுபவம், சதாசிவ காலவரை, பிரேதத்தை உயிர்ப்பித்தல். சித்தி காலம் $3\frac{3}{4}$ நாழிகை முதல் $3\frac{3}{4}$ வருஷத்திற்குள்.

---

[5] கா. சு. பிள்ளை—தமிழர் சமயம். பக்கம் 67.

[6] குறுந்தொகை—பாடல் 130.

[7] மணிமேகலை—26:46-47.

[8] சூடாமணி—4:2.

[9] அருட்பா கீர்த்தனைப் பகுதி—12. ஞான மருந்து.

[10] அருட்பா அருட்பெருஞ்சோதி அகவல்—456-458.

[11] அருட்பா உபதேசப் பகுதி—பக்கம் 94.

யோகசித்தி : 64 சித்திகளையும் தன் சுதந்திரத்தில் நடத்துகிறது, சங்கல்ப குளிகை, பிராண கல்பதேகி, பிரம காலம், பராபர மார்க்கி, புதைந்த தேகத்தை நாசமடையா முன் உயிர்ப்பித்தல். சித்திகாலம் 12 வருஷம் முதல் 108 வருஷத்திற்குள்.

ஞானசித்தி : 64,000 சித்திகளையும் தன் சுதந்திரத்தில் நடத்து கிறது; 688 கோடி பேதமாகிய மகாசித்திகளையும் தன்னிஷ்டம் போல் நடத்துகிறது; காலம் கடந்தது; அடிநிலை, முடிநிலை, சுத்த கர்ம, சுத்தயோக, சுத்தஞான, சித்திவல்லபங்களைத் தன் சுதந் திரத்தால் நடத்துகிறது.

இம்மூன்று சித்திகளில் உயர்ந்ததும் சிறந்ததுமாகக் கருதப் படும் ஞானசித்தியினை ஆறுகப் பிரிப்பர்:

[12]கருமஞான சித்தி
யோகஞான சித்தி
தத்துவஞான சித்தி
ஆன்மஞான சித்தி
சுத்தஞான சித்தி
சமரச சுத்தஞான சித்தி

இவற்றை மேலும் எட்டாகப் பிரித்துக்கூறுவர்:

அடிநிலை கருமஞான சித்தி
முடிநிலை கருமஞான சித்தி
அடிநிலை யோகஞான சித்தி
முடிநிலை யோகஞான சித்தி
அடிநிலை தத்துவஞான சித்தி
முடிநிலை தத்துவஞான சித்தி
அடிநிலை ஆன்மஞான சித்தி
முடிநிலை ஆன்மஞான சித்தி

மேலும்,

கருமஞான சித்தி—அது அதுவாகி நிறைதல்
யோகஞான சித்தி—அது அதுவாகி விளங்குதல்
தத்துவஞான சித்தி—அது அதுவாகி இனித்தல்
ஆன்மஞான சித்தி—அதீதமாய்க் கலத்தல்
சுத்தஞான சித்தி—இவையனைத்துமாய் ஒருமித்தல்
சமரச சுத்தஞான சித்தி—ஆதிதாதீத மாகுதல்.

எனவும் இவற்றை விளக்குவர். பெறுதற்கரிய இஞ்ஞான சித்தி யின் மற்றொரு கூறாக அந்தரங்க சித்தி, பகிரங்க சித்தி, தத்துவ சித்தி, தாத்துவீக சித்தி, என நான்கைக் கூறுவார் அடிகளார். இவை முறையே பிண்ட சித்தி, அண்ட சித்தி, பகிரண்ட சித்தி,

---

[12] மே.கா.நூ. பக்கம் 133.

அண்டாண்ட சித்தி என்ற பெயரோடும் காணப்படுகின்றன. இவற்றுள் பிண்ட சித்தி எனப்படும் அந்தரங்க சித்தி மேலும் பதினைந்து உட்பிரிவுகளை யுடையதாய்க் காணப்படுகிறது. அவை:

பூத சித்தி	புருட சித்தி	கலா சித்தி
கரண சித்தி	விந்து சித்தி	விசுவ சித்தி
இந்திரிய சித்தி	பர சித்தி	வியோம சித்தி
குண சித்தி	சுத்த சித்தி	பிரம சித்தி
பிரகிருதி சித்தி	கால சித்தி	சிவ சித்தி

இங்ஙனம் சாதரண அறிவுக் கெட்டாத மிகப் பரந்த முறையில் இச்சித்தியின் வகையையும் தொகையையும் விரிவையும் அடிகளார் குறிப்பதுபோல் வேறு சித்தர்கள் யாரும் குறித்திலர் என்பது குறிக்கத்தக்கது ஆகும்.

சித்தியும் முத்தியும்

11. இங்ஙனம் மிக விரிவான முறையில் சித்தியைப் பற்றிக் குறிக்கும் இராமலிங்க அடிகளாரின் வேறு ஒரு குறிப்பையும் ஈண்டுக் காணுதல் ஏற்புடைத்தாக அமையும்.

> [13]“ஏகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஒவ்வொரு சித்திக்கும் பத்து வருஷம் எட்டு வருஷம் பிரயாசை எடுத்துக்கொண்டால் அற்பசித்திகளை அடையலாம். அதற்காக அவற்றில் இலக்ஷியம் வைத்தால் ஆண்டவரிடத்தில் வைத்துக் கொண்டிருக்கிற இலக்ஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த இலக்ஷியம் போய் விட்டால் நீங்கள் அடையப் போகிற பெரிய பிரயோஜனம் போய்விடும் அல்லது அதில் முயற்சி செய்து அவ்வளவு காலம் உழைத்து அந்த அற்பப் பிரயோசனத்தைத் தெரிந்துகொண்டு அதனால் ஒரு இலாபத்தை ஏகதேசம் அடைந்தால் முக்கிய இலாபம் போய்விடும். ஆகையால் அவைகளில் இலக்ஷியம் வைக்காமல் ஆண்டவரிடத்திலேயே இலக்ஷியம் வைக்க வேண்டும்”.

இப்பகுதியை ஆராய்வுழி சீவன், சிவனாகும் வழிமுறையில் செல்லுங்கால் பெறப்படும் எண்ணரும் பேறுகளுள் ஒன்றே சித்து என்பது புலனாகும். இப்பேறுகளைப் படிகள் என அடிகள் குறிப்பர். சிறந்த பேறு இது என்பது உண்மைதான் எனினும் இப்பேற்றின் இயல்பு கண்டு மயங்கி ஈடுபட்டுவிடாமல், மேல் மேல் சென்று ஒவ்வொரு நிலையும் கடந்து ஆறந்தப் பொருளாய் அதீதா தீதமாக விளங்கும் சர்வ ஞானியை அடைதலே இலக்ஷியமாக—ஆன்ம இலாபமாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார் என்பது புலப்படும்.

---

[13] மே.கா.நூ. பக்கம் 134.

முடிவுரை

12. வாசி என்னும் பிராணவாயுவைக் கட்டிச் சித்தத்தை அடக்கிச் சிவனோடு கலந்தார் சித்தர் எனவும், அவர்தம் கொள்கையும் முடிவும் சித்தாந்தம் எனவும், இச்சித்தர்தம் ஞானப் பாதையில் பெறலாகும் பேறுகளுள் ஒன்றே சித்து என்னும் அருள்விளையாட்டு எனவும், இவ்வருள் விளையாட்டு பல வகை, தொகை, விரிவினையுடையது எனவும், இயல்பாகப் பெறலாகும் அவற்றில் ஈடுபாடு தவிர்த்தல் வேண்டும் எனவும் இதுவரை கூறிய கருத்துக்களைக் காணும் போதும், இராமலிங்க வள்ளலாரின் ஞான சித்திக்குத் தரும் அரிய விளக்கத்தோடு, மேலைநாட்டு அறிஞர்தம் (மிஸ்டிசிசம் என்னும்) கருத்தை ஒப்பவைத்துப் பார்க்கும் போதும், இறைவனோடு இரண்டறக் கலக்கின்ற எல்லையில்லா இன்ப அனுபவத்தைப் பெறுவதே சித்தி என்னும் உண்மை விளங்கும்.

சிலம்புச் செல்வியும் சிங்கள இலக்கியமும்

நா. சுப்பிரமணியன்*

இலங்கையில் பத்தினி வழிபாடு புகுந்த முறையைச் சிலப்பதிகாரமும், இலங்கை வரலாற்று நூலான 'இராஜாவலி'யும், 'கஜபாகத்தாவ' என்னும் சிங்கள நூலும் குறிப்பிடுகின்றன. இவைதரும் குறிப்புக்களின்படி கி.பி. 2ஆம் நூற்றுண்டிலிருந்து பத்தினித் தெய்வத்தை வழிபடும் வழக்கம் சிங்கள நாட்டில் பரவியிருக்கிறது எனக் கொள்ளலாம்.

சேரன் செங்குட்டுவனின் கொற்றவையிலே இலங்கை மன்னன் கஜபாகுவும் சமுகமளித்திருந்து பத்தினிக்கு விழாவெடுத்துத் திரும்பினுன் எனச் சிலப்பதிகாரம் கூற, 'இராஜாவலி' இன்னெரு விதமாகக் கூறுகிறது.

கஜபாகு ''நாளை சோழ நாடு செல்வேன்'' எனச் சேனைகளைத் திரட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குப் போய், 'சோழ மன்னன் சிறைப்பிடித்துச் சென்றவர்களைக் கொணர்வேன்'' எனக் கூறித் தனது படைகளைத் திருப்பி அனுப்பி விட்டான். பின்னர் நீலனுடன் சென்று இரும்புக் கைத்தடியால் கடல் நீரை அடித்து இரண்டாகப் பிளந்து, பாதை அமைத்துக்கொண்டே போய், சோழபுரத்தை அடைந்தான். அங்குச் சோழ மன்னனைப் பயமுறுத்தி, இந்திரனை நிகர்க்க சிங்காசனத்தில் அமர்ந்தான். நீலனும் அந்த நகரிலுள்ள யானைகளைப் பிடித்து, ஒன்ருெடொன்றை அறைந்து கொன்று வந்தான். இவ்விதம் அவன் சோழபுரத்தைப் பாழாக்கியதை அமைச்சர்கள் சோழ மன்னனுக்குத் தெரிவித்தார்கள். சோழ மன்னன் 'சிங்களச் சேனை இந்த நகரை அழிக்கவா வந்திருக்கிற'தெனக் கஜபாகுவிடம் கேட்டான். அதற்குக் கஜபாகு, 'என்னுடன் சிறுவன் ஒருவனே வந்திருக்கிருன்' எனக் கூறி நீலனை அழைத்துத் தன் பக்கத்தில் நிறுத்திஞன். படைகளின்றி இலங்கை மன்னன் தனியே வரக் காரணமென்னவெனச் சோழன் கேட்டபோது, 'உனது தந்தையரசன், என் தந்தையின் ஆட்சிக் காலத்தில் பன்னீராயிரம் பேரைச் சிறைப்பிடித்து வந்திருக்கிருர். அவர்களைக் கூட்டிச் செல்லவே வந்திருக்கிறேன்' என்று கஜபாகு கூறவும், சோழ மன்னன், ''தேவலோகத்திற்குப் போய் அசுர யுத்தத்தில் வெற்றிவாகை சூடிய முதலரசன் என் மூதாதைகளில் ஒருவர்'' எனக் கூறிச் சனங்களை அனுப்ப மறுத்துவிட்டான். கஜ

---

*மொழிபெயர்ப்பாளர், இலங்கைப் பாராளுமன்றம், கொழும்பு.

பாகு கோபித்து, 'இந்த நகரையும் சுட்டெரித்து விடுவேன், காலந் தாழ்த்தாமல் எனது மக்களுக்குப் பதிலாக 24,000 பேரைத் தர வேண்டு'மெனக்கூறி, மணலைப் பிழிந்தும் இரும்புத் தடியை நெரித்தும் நீரெடுத்துக் காட்டிச் சோழ மன்னனைப் பயமுறுத்தி 24,000 சோழரைச் சிறைப்பிடித்துக் கொண்டு **பத்தினித் தெய்வத்தின் சிலம்பையும்** பெற்று, நாலு கோயிற் தெய்வங்களின் ஆயுதச் சின்னங்களையும் வரவழைத்துப் பெற்றுக்கொண்டு, வாலகம்பாகு காலத்தில் எடுத்துச் செல்லப்பட்டிருந்த புனித பாத்திரத்தையும் பெற்றுக்கொண்டு, இனிமேல் இவ்விதமாக நடந்து கொள்ளாதே என எச்சரிக்கை விடுத்துவிட்டு மீண்டான். பரவேணிக் கைதிகளை அவர்களின் காணிகளுக்கு அனுப்பிவிட்டு, மற்றவர்களை **அலுத்குரு, சாரசியபத்து, யட்டடிநுவரை, தும்பனே, ஹேறவா, ஹ்ட்டை, பன்சியபத்து, எகொடதிஹ, மெகொடதிஹ** என்னுமிடங்களில் குடியேற்றுவித்தான்.[1]

'கஜபா கத்தாவ'—கஜபாகுவின் கதை—என்ற நூலும் கஜபாகுவை, பராக்கிரமம் மிக்க அரசனாகவே காட்டுகின்றது. கதையும் மேற்கூறிய இராஜாவலியின் கதையை ஒத்தே எழுதப்பட்டிருக்கிறது.

பத்தினி வழிபாடு

பத்தினி வழிபாடு இலங்கை மக்களின் சமய வாழ்வில் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. சிங்கள மக்கள் பத்தினித் தெய்வத்தை, தொற்று நோய்களின் அதி தேவதையாகக் கொள்ளுகின்றனர். எனவே, இலங்கையிலே பத்தினிக் கடவுளின் நினைவாக, எழுந்துள்ள தேசிய சமய விளையாட்டுக்கள் பல. போர்த் தேங்காய் அடித்தல், கொம்பு இழுத்தல், 'கம்மடுவ', 'கோஹொம்ப கன்காரிய' ஆதியாம் சமய அடிப்படையில் எழுந்த விளையாட்டுக்கள் பத்தினித் தெய்வம் சம்பந்தப்பட்டவை.[2] இக்கட்டுரை சிலப்பதிகாரத்துடன், ஈழத்தில் தோன்றியுள்ள சிங்கள இலக்கியத்தின் பத்தினி மரபைத் தொடர்புபடுத்தி ஆராய்கிறதாகையால், பத்தினியின் பெயரில் இந்நாட்டில் பரவியிருக்கும் சமயப் பழக்கவழக்கங்களை ஆராயாது விடுகின்றது.

இலங்கையில் பத்தினி வழிபாடு தோன்றிய காலத்தில் தமிழ்ப் பூசகர்களே முன்னின்று பூசைகளை நடத்தி வந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமாகச் சிலப்பதிகாரக் கதையும் இலங்கையில் பரவியிருக்கின்றது. வாய்மொழி மூலமாகச் சிங்கள மக்களிடையே பரவிய இக்கதை, காலக்கிரமத்தில் பௌத்த உருவம் பெற்றிருக்கிறது. இன்று பத்தினி பெயரால் உருவாகியுள்ள கதைகள் அனந்தம். இவையாவும் சிலப்பதிகாரக் கதையை மூலமாக வைத்தே எழுந்

---

[1] இராஜவலிய—(சிங்களம்), பக்கம் 34-35.

[2] எம். டி. ராகவன்—சமூக சமய அமைப்பில் பத்தினி வழிபாடு (ஆங்கிலம்), பக்கம் 252-253.

துள்ளன. சிங்கள இலக்கியத்திலுள்ள பத்தினித் தெய்வத்தின் கதைகளைச் சிலப்பதிகாரத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகையால் நேரே அவ்விடயத்துக்கு வருவோம்.

ஜயவர்த்தனபுரக் கோட்டைக் காலம் (கி.பி. 1412-1580) சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் எனக் கொள்ளப்படலாம். சனரஞ்சகமான இலக்கியங்கள் இக்காலத்திலேயே எழுதப்பட்டன. கம்பளைக் காலத்தில் (கி.பி.1347-1412) சிங்களத் தூது காவியங்கள் தோன்றத் தொடங்கி, கோட்டைக் காலத்தில் சிறந்த இலக்கியங்களாகப் பரிணமித்தன.

பத்தினிக் கதைகள்

இதுகாலம் வரை, வாய்மொழி இலக்கியமாக இருந்த பத்தினிக் கதைகள் கோட்டைக் காலத்திலே எழுத்து வடிவில் வரத் தொடங்கின. இவ்விதமாக எழுந்ததே "வயந்தி மாலா" எனப்படும் பத்தினிக் கதை.

"வயந்தி மாலா" அல்லது மாதேவி கதை

சிங்கள இலக்கிய நூல் வரிசையிலே முன்னணியில் வைத்து மதிக்கப்படும் நூல் பத்தினியின் பெயரால் எழுந்த "வயந்தி மாலா" என்னும் காவியமாகும். இந்நூலைக் கலாநிதி சி. ஈ. கொடகும்புற அவர்களும், கலாநிதி புஞ்சிபண்டார சன்னஸ்கல அவர்களும் ஆராய்ந்திருக்கின்றனர். இதில் 119 செய்யுட்கள் உள. கோவலன் மாதவியிடமிருந்து பிரிந்து கண்ணகியை அடையும் வரையுள்ள கதையை இந்நூல் கூறுகிறது. இதன் ஆசிரியர் **வீதாகம திரிசிங்கள கவிதிலக்க** என்பவராவார். இவர் தமிழ் அறிஞர் என்பதும் சிலப்பதிகாரத்தை நன்கு அறிந்தவர் என்பதும் இந்நூலை வாசிக்கும்பொழுது புலனாகின்றது. சிங்களத்திலே முதன்முதல் வெளிவந்த பத்தினிக் கதை இதுவே. இதற்கு முன் எழுதப்பட்ட எந்தச் சிங்கள நூலிலும் காணப்படாத பல சிறப்பம்சங்கள் இதில் உள.

"வயந்தி மாலா"வில் வரும் கதை

ஒருமுறை இந்திரன் ஊர்வசி முதலாம் தேவகன்னியர் புடைசூழக் களியாட்டத்திற்குச் சென்றான். அங்கு, ஊர்வசி வீணையை மீட்டி இனிய கானத்தை எழுப்பினாள். நாரதரும் தனது வீணையை எடுத்து மீட்டினார். (நாகராஜன் வீணை மீட்டினார் எனவும் அறிஞர்கள் கூறுகிறார்கள்). அவரது வீணாகானத்தில் வயப்பட்ட ஊர்வசி நாரதர் மீது மையல் கொண்டாள். இதனைத் தேவ பலத்தால் அறிந்த இந்திரன் அவளைச் சபித்தான். அந்தச் சாபத்தின் பயனாக ஊர்வசி, சோழ நாட்டில் வாழ்ந்து வந்த நடனமாது சித்திராவதியின் மகளாகப் பிறந்தாள். அப்பெண் குழந்தைக்கு

மாதேவி என நாமம் சூட்டப்பட்டது. மாதேவி அழகே உருவெடுத்தாற்போல் வளர்ந்து எட்டுவித நடனக் கலைகளைப் பயின்றாள். வீணை மீட்டுவதிலும், அழகாகப் பாடுவதிலும், பரத சாஸ்திர முறையில் ஆடுவதிலும் அவளுக்கு நிகராக எவருமில்லாத விதத்தில் சிறந்து விளங்கினாள். சோழ மன்னனின் முன்னிலையில் மாதேவியின் அரங்கேற்றம் மிக விமரிசையாக நடைபெற்றது.

கவிஞர், வேறெந்தச் சிங்கள நூலாசிரியரும் விவரிக்காத விதத்தில் அவளது நடனத்தை அழகாக வர்ணித்திருக்கிறார்.

சோழ மன்னன் அவள் நடனத்தைப் பாராட்டிப் பொற்கொடியொன்றினைப் பரிசளித்தான். அப்பரிசினைப் பெற்ற மாதேவி, அதனை வீதியில் விற்றுவருமாறு வயந்தி மாலையை அனுப்பினாள். மாலையை வாங்கிய பாளங்கன், மாதேவியிடம் வந்து அவளின்பத்தில் திளைத்தான். ''வயந்தி மாலா'' அவர்களின் இன்ப நாட்களைப் பல செய்யுட்களில் விவரிக்கின்றது.

பிறகு ஒருநாள் அரசவைக்குச் சென்ற மாதேவி நடனம் முடிந்து நேரங்கழித்து வந்ததைப் பொறுக்காத பாளங்கன் அவளை விட்டுப் பிரிந்து செல்கின்றான். பாளங்கனைப் பிரிந்த மாதேவி விரக வேதனையால் படும் கஷ்டத்தைக் கவிஞர் இருபத்தைந்து செய்யுட்களில் மிக உருக்கமாகத் தருகின்றார். பிரிவு நிலையைச் செய்யுட்களின் மூலமாகச் சிங்கள இலக்கியத்திலே மிக உயர்ந்த இடத்தைப் பிடித்து விடுகின்றது, கவி திலக்கவின் ''வயந்தி மாலா''. ஒரு செய்யுளில், மாதேவி பாளங்கன் விரும்பாவிட்டால் தான் அரச சேவையை விட்டே விலகிக்கொள்வதாகக் கூறுகிறாள்.

பாளங்கன் வீட்டைவிட்டு வெளியேறியதும் மாதேவி அவனது செல்வங்களையெல்லாம் வயந்தி மாலாவிடம் கொடுத்து, பாளங்கனிடம் கையளிக்குமாறு அனுப்புகிறாள். பாளங்கன் அதனை ஏற்க மறுத்துவிட்டு, கண்ணகியை நாடிச் செல்கிறான். கண்ணகி, தாசியிடம் சென்ற கணவனைக் கடிந்து பின்னர் ஏற்கிறாள். கதை இத்துடன் முடிகிறது.

''இக் காவியத்தில் காணப்படும் கவி நயத்தைக் கவனிக்கும் பொழுது, இதன் ஆசிரியர் கவிதிலக்க, அறிஞர் என்பதும் கவிதை புனைவதில் கைதேர்ந்தவர் என்பதும் நன்கு புலனாகும். கலை அபிவிருத்தியடைந்த காலத்திலன்றி, கலை வீழ்ச்சியுற்ற காலத்தில் இத்தகைய சிறந்த நூல் தோன்ற முடியாது. ''வயந்தி மாலா'', ஜயவர்தனபுரக் கோட்டை அல்லது அதற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த நூலென்றே கொள்ளப்பட வேண்டும்.''

''இங்குக் குறிப்பிடப்படும் மாதேவி நடனம், எமது (தூது காவியங்களிலே) காவியங்களிலே கோயில்களை வர்ணிக்கும்பொழுது கூறப்பட்ட பெண்களின் நடனத்துடன் தொடர்புள்ளதாகக் காணப்படுகிறது. நடன மங்கையரின் நடனத்தைப் பற்றி

கம்பளை, கோட்டைக் காலச் சிங்கள நூல்கள் குறிப்பிடுகின்றன. இது, தென் இந்தியக் கோவில்களில் வழக்கிலிருந்து வந்த இசைக் கலையின் ஒரு பிரிவாக அமைந்துள்ளது. புலவர் திரிசிங்கள கவி திலக்க இந்த நடனக்கலையில் நன்கு பரிச்சயமுள்ளவர். இந்நாட்டுச் சிங்களத் தூது காவியங்களில் பரத நாட்டியம் குறிப்பிடப்படுவதற்கும் ''வயந்தி மாலா'' எழுதப்படுவதற்கும் ஏதோ தொடர்பு இருக்கவேண்டுமெனப் படுகிறது. இத்தொடர்பும் இந்நூலைக் கோட்டை அல்லது அதற்குக் கிட்டிய காலத்திற்குக் கொண்டு செல்கிறது.''[3]

சிலப்பதிகாரமும் ''வயந்தி மாலா''வும்

சிலப்பதிகாரத்திலே, அரங்கேற்று காதையில் மாதவி வரலாறு கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்தை வாசித்த சிங்களக் கவிஞர் தமது கற்பனையின் மூலம் சிறு மாற்றங்களைப் புகுத்தி மாதேவி வரலாற்றை ஆரம்பித்துள்ளார்.

வசந்த மாலை (கூனி) மூலமாக அரசனால் அளிக்கப்பட்ட மாலையைத் தெருவில் விலைகூற அனுப்பியது போன்றே, ''வயந்தி மாலா''வும் மாலையை விலைகூறச் செல்கிருள். சிலப்பதிகாரத்தில் கோவலன் வாங்குகிருன். ''வயந்தி மாலா''வில் பாளங்கனும் அவ்விதமே செய்கிருன்.

பாளங்கன் என்ற சிங்களச் சொல் தமிழில் கோவலனையே குறிக்கும். கோவலன் சமஸ்கிருதத்தில் கோபாலன் என நிற்கும். அதனைச் சிங்களமாக்கும்பொழுது ''பாளங்கன்'' என்றமையும்.

மாதவி வசந்த மாலையிடம் முன்னர் மாலையின் விலையாக அவன் தந்த பொருளையெல்லாம் அளித்து அவனைக் கூட்டிவருமாறு பணித்தாள். ''வயந்தி மாலா''வின் மாதேவி, பாளங்கனிடமிருந்து பெற்ற பொருளையெல்லாம் வயந்தி மாலையிடம் கொடுத்து அவற்றைப் பாளங்கனிடம் சேர்ப்பிக்குமாறு பணித்தாள்.

தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரம் தமிழிலக்கியத்திலே பெறும் உயரிய இடத்தை, சிங்கள இலக்கியத்திலே ''வயந்திமாலா'' பெறத் தக்கதாகப் புலவர் கவிதிலக்க காவியத்தை இயற்றியுள்ளாரெனச் சிங்கள இலக்கியத் திறனாய்வாளர்கள் கருதுகிருர்கள்.[4]

''மாதேவி கத்தாவ'' (மாதேவி கதை)

இந்நூல் 419 செய்யுட்களைக்கொண்டது. இதன் ஆசிரியர் **சிங்கள கவிராஜ பண்டிதர்** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் தாம் ஒரு பிராமணர் என்று காவியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

[3] புஞ்சி பண்டார சன்னஸ்கல—சிங்கள சாகித்திய வம்சய (சிங்களம்), பக்கம் 287.

[4] சி. ஈ. கொடகும்புற—சிங்கள இலக்கியம் (ஆங்கிலம்), பக்கம் 282.

தமிழிலிருந்து இக்கதையை எடுத்திருப்பதாகக் கூறும் இவர், சோழ நாட்டிலிருந்து அல்லது பாண்டி நாட்டிலிருந்து வந்த தமிழர் எனக் கருதப்படுகிறது.

''வயந்தி மாலா'' ஆசிரியர் ஒரு பௌத்தர். அவர் தமது காவியத்தை புத்த, தர்ம, சங்க வணக்கத்தோடு ஆரம்பிக்கின்றார். ஆனால் ''மாதேவி கத்தாவ'' ஆசிரியர் கலைமகள் வணக்கத்துடன் காவியத்தைத் தொடங்குகிறார். ''வயந்தி மாலா''வில் வரும் கதையே இதிலும் இடம் பெறுகிறது. ஆனால் இடையிடையே சிறு மாற்றங்களை ஆசிரியர் ஏற்படுத்தியுள்ளார். இவர் கம்பீரமான நடையைக் கையாண்டிருக்கிறார்.

மாதேவி ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்த சோழ மன்னன் பொன் மாலையைப் பரிசளித்தான். அவள் தனது ஆட்டத்தைப் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருந்த கண்ணகி மணாளனை பாளங்கனின் கழுத்தில் அம்மாலையை அணிவித்து அவனைத் தன் மனைக்குக் கூட்டிச்சென்று அவனுடன் ஏழாண்டுகள் சுகித்திருந்தாள். அவனது செல்வமெல்லாம் கரைவதைக் கண்ட மாதேவியின் தாய் சித்திராவதி அவனை விரட்டச் சந்தர்ப்பத்தை நாடியிருந்தாள். ஒரு நாள் இவர்கள் காவேரி நதியிலே நீராடிக் களித்திருந்த வேளையிலே காவேரியில் மிதந்து வந்த விளக்குமாற்றைப் பார்த்து, பாளங்கனுக்குக் கேட்கக் கூடியதாக ''கையிலே பணமில்லாதவனைப் போன்றல்லவோ போகின்றாய்' எனக் கூறினாள்.

பாளங்கன், இக்குறிப்பை உணர்ந்து, மாதேவியைப் பிரிந்து கண்ணகியை நாடிச் சென்றான். காதலனின் பிரிவைத் தாங்கமுடியாத மாதேவி வயந்தி மாலியை அழைத்து அவளிடம் ஓலை எழுதிப் பாளங்கனிடம் சேர்ப்பிக்கும்படி அனுப்பினாள். வயந்தி மாலி பாளங்கனிடம் சென்று மாதேவியுடன் அவன் அனுபவித்த இன்ப நாட்களை நினைவுறுத்துகிறாள். பாளங்கன் போக மறுக்கிறான். இங்கு வயந்தி மாலி தனது எஜமானிக்குப் பாளங்கன் மூலம் பிறந்திருக்கும் மணிமேகலையை ஞாபகமூட்டுகிறாள்.

இளங்கோவடிகள் மாடலன் என்னும் அந்தணன் மூலமாக மணிமேகலை பிறந்ததையும், கோவலன் செம்பொன்னை வாரிவாரிப் பொழிந்ததையும் கூறிவைக்கின்றார்.

''அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
'மணிமேகலை' என வாழ்த்திய ஞான்று;
மங்கல மடந்தை மாதவி—தன்னொடு
செம்பொன் மாரி செங்கையிற் பொழிய''[5]

மணிமேகலை பிறந்ததை ''மாதவி கத்தாவ'' ஆசிரியர் வயந்தி மாலி மூலமாகச் சொல்லி வைக்கின்றார்.

---

[5] சிலப்பதிகாரம்—, புலியூர்க்கேசிகன் தெளிவுரை—அடைக்கலக் காதை, பக்கம் 213—வரி 38-41.

சிங்கள காவியங்களிலே மிக நீண்ட பிரிவு நிலைச் செய்யுட்களைக் கொண்டது ''மாதேவி கத்தாவ''. இது கோள்முற சாகித்தியத்தில் இடம்பெறும் ஒரு காவியமாகும்.

''கோள்முற சாகித்தியம்'' அல்லது காவல் முறையிலக்கியம்– கண்டிக்காலம் கி.பி. 1480-1815

கண்டிக் காலத்திலே பத்தினி வழிபாடும் தமிழ் இலக்கியங்களிலே சிங்கள மக்களின் ஈடுபாடும் அதிகரித்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இக்காலத்தில் தமிழ் நூல்கள் பல சிங்களத்திலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ் நூல்களைத் தழுவிய பல சிங்கள நூல்களும் வெளிவந்தன. சிங்களப் புலவர்கள் சமஸ்கிருதம், பாலி மொழிகளைக் கற்பதற்குப் பதிலாகத் தமிழைக் கற்றுத் தமிழ் இலக்கியங்களைச் சுவைக்கத் தொடங்கினர். இக்காலத்தில் பத்தினி வழிபாட்டின் மூலம் சிங்கள இலக்கியத்திலே புதியதொரு இலக்கிய மரபு தோன்றியது. அதுதான் **''கோள்முற''** சாகித்தியம். ''கோள்முற'' என்பது காவல்முறை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும். பத்தினிக் கோயில்களிலே பாடுவதற்காகச் சிங்களத்திலே இயற்றப்பட்ட இக்காவியங்கள் ''கோள்முற'' சாகித்தியம் எனப்பட்டது. நோய் நொடிகளிலிருந்தும், பஞ்சம் வறட்சி முதலாம் இன்னல்களிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமுகமாகப் புலவர்கள் இக்காவியங்களை இயற்றியிருக்கிறார்கள். எனவே, இவ்விலக்கியம், 'காவல் முறை' இலக்கியம் எனப்பட்டது.

தெய்வந்துறைத் தேவாலயம்

இலங்கையின் தென் மாகாணத்திலே தெய்வந்துறைத் தேவாலயம் அமைந்துள்ளது. தேனுவரை எனப்படும் இவ்விடத்திலுள்ள பத்தினித் தேவாலயத்திலே ஏழு நாள் பூசை நடப்பது வழக்கம். இந்த ஏழு நாட் பூசைக்காகப் பத்தினிக் காவியங்கள் இயற்றப்பட்டுள்ளன. இப்பாடல்களை வரிசைக்கிரமமாகப் பூசை வேளைகளிலே வாசித்துப் பத்தினித் தெய்வத்தின் அருளை வேண்டி நிற்பர் சிங்கள மக்கள். இதற்கென முப்பத்தைந்து நூல்கள் எழுதப்பட்டுள்ளன. எனவே, இவை **'' பன்திஸ் கோள்முற ''** என அழைக்கப்படுகின்றன.

''பெரும்பாலும் கண்ணகையம்மன் பொங்கல், வைகாசி மாதத்திலேயே நடக்கும்; பொங்கலுக்குச் சில நாட்களுக்கு முன் 'கோயில் திறந்து' கண்ணகையம்மன் கதை படிப்பர்.''[6] இப்பழக்கம் தமிழர்களிடையே இருந்து வந்திருக்கின்றது.

[6] பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை—ஈழத்து வாழ்வும் வளமும்—பக்கம் 50-51.

சென்னையில் சிங்களச் சுவடிகள்

கொழும்பு தேசியப் பொருட்காட்சிச் சாலை நூனிலையத்தில் இருகையெழுத்துப் பிரதிகள் உள. இவ்விரு எழுத்துச் சுவடிகளும் சென்னை அரசாங்கத்தின் எழுத்துச் சுவடிகளைப் பாதுகாக்கும் நூனிலயத்திலிருந்து பெயர்த்தெழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் ஒன்று "பாண்டி நளுவ" என்ற சிங்கள எழுத்துச் சுவடியாகும். அடுத்தது "(பாளங்க) மெரீம" என்னும் சிங்கள எழுத்துச் சுவடியாகும். இவ்விரண்டு நூல்களில் முக்கியமாகக் கொள்ளப்பட வேண்டியது "மெரீம" - கொலை செய்வித்தல் - என்னும் நூலாகும். சிலம்புச் செல்வியின் பெயரில் எழுந்த காவியங்களில் மிக நீண்டதும், கவிநயத்தில் "வயந்தி மாலா"வுடன் ஒப்பிடக் கூடியதுமான காவியம் "மெரீம" ஆகும். இது 588 பாடல்களைக் கொண்டது. சிலப்பதிகாரத்தைச் சிங்களத்தில் மொழி பெயர்த்த இவ்வாசிரியர் இடையிடையே பௌத்தக் கருத்துக்களையும், இந்நாட்டில் பத்தினி சம்பந்தமாகப் பரவியிருக்கும் கதைகளையும் இந்நூலில் புகுத்தியிருக்கிறார். கண்டிக் காலத்தில் எழுந்த நூல்களில் மிகச் சிறந்த காவியமாக இதனைச் சிங்கள இலக்கியத் திறனாய்வாளர்கள் கொள்கின்றனர். இதன் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.

இக்கதை, கண்ணகியிடம் திரும்பி வந்த பாளங்கனுடன் ஆரம்பிக்கிறது. கண்ணகியும், பாளங்கனும், கண்ணகியின் வேலைக்காரியும் இரவோடிரவாக நாட்டை விட்டுச் செல்கின்றனர். வழியில் போகும்பொழுது பத்தினி "நாம் எங்கே போகின்றோம்" என்ற கேள்வியை எழுப்புகின்றாள். அப்போது பாளங்கன் 'நாம் பாண்டிநாட்டுக்குப் போகின்றோம்' எனக் கூறிப் பாண்டியனின் பெருமையைச் சொல்லுகிறான்.

சிலப்பதிகாரத்திலே மதுராபதித் தெய்வம், கண்ணகிக்குப் பாண்டியர் பெருமையை எடுத்துரைக்கையில் கைதுணித்த பாண்டியனைப் பற்றியும் குறிப்பிடுகிறாள் அல்லவா?

> "உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
> . . . .
> உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை."[7]

இதே கருத்தினைப் பாளங்கன் மூலமாகக் கண்ணகியிடம் சொல்ல வைக்கிறார், "மெரீம" ஆசிரியர். பாண்டியன் தன் கையைத் துணித்ததும், அதற்குப் பதிலாக அவனது தாயார் பொற்கையொன்றைச் செய்து கொடுத்ததாகச் சிங்களக் காவியம் கூறுகிறது.

---

[7] சிலப்பதிகாரம்—புலியூர்க்கேசிகன் தெளிவுரை—கட்டுரைக் காதை, பக்கம் 192—வரி 41-51.

இதனைத் தொடர்ந்து புத்தரின் முற்பிறப்பினைக் கூறும் ஒரு கதையையும் பாளங்கன் மூலமாக இவ்வாசிரியர் கூறிவைக்கிறார். அவர்களிருவரும் (சிங்களத்தில் மூவரும்) வழியில் செல்லும்பொழுது காண்கின்ற காட்சிகளும், வணங்குகின்ற தெய்வங்களும், தங்கும் இடங்களும் சிலப்பதிகாரத்திலுள்ளவாறு சிற்சில மாற்றங்களுடன் விவரிக்கப்பட்டுள்ளன.

"வேசி மடம்" என்னும் நூலிலே, பாளங்கன் கண்ணகியை ஆய்ச்சியர் வீடொன்றில் நிறுத்திவிட்டு, மதுரையைப் பார்த்துச் செல்லும்பொழுது, பரத்தையர் வீதியைக் கடந்து செல்ல நேர்வதையும், அவன் அவர்களைப் பாராது செல்வதையும், பரத்தையர் அது கண்டு அவனை எள்ளி நகையாடுவதையும் பற்றிய கதை விவரிக்கப்படுகிறது.

அடுத்து வருவன 'பாளங்க ஹேல்ல', 'பத்தினி ஹேல்ல' என்ற இரு நூல்களாகும். இவற்றில் பத்தினி ஹேல்ல-பத்தினி கதை-சனரஞ்சிதமானது. இந்நூலை அறியாத சிங்கள மக்கள் இல்லையென்றே சொல்லிவிடுமளவுக்குஇந்நூல் நாடெங்கும் பரவியுள்ளது. பத்தினிக் கதையில் 147 செய்யுட்களுண்டு.

'பாளங்க ஹேல்ல' என்னும் நூலில் வயந்தி மாலாவில் காணும் மாதவியின் காதலைக் காணுகிறோமில்லை. மாதவி, செல்வந்தரின் செல்வத்தையெல்லாம் கறந்துவிடும் கீழ்த்தரமான பரத்தையாகவே உருவகப்படுத்தப்பட்டுள்ளாள். கோவலன் தன் செல்வமெல்லாவற்றையும் செலவழித்து வெறுங்கையுடன் நிற்க, மாதவி அவனைத் துன்புறுத்துகிறாள். பத்தினி அவனது உதவிக்கு வந்து, தன் விலையுயர்ந்த சிலம்பினைக் கொடுத்து, அதனை விற்று வியாபாரத்தை நடத்த வழி செய்கிறாள். பாளங்கன் பாண்டியனின் தலைநகருக்குச் சிலம்பை விற்கச் செல்கிறான். அங்கு, கோவலன், அரசியின் சிலம்பைத் திருடியதாகச் சந்தேகிக்கப்பட்டுக் கொல்லப்படுகிறான். பத்தினி, கணவனைத் தேடிப்போய், பாண்டியனைச் சபித்து, நகரைத் தீக்கிரையாக்குகிறாள். இறுதியில் பத்தினித் தெய்வமாகி வானவூர்தியில் சென்று மறைகிறாள்.

பத்தினி ஹேல்ல

பத்தினி கதை, பத்தினியின் கனவுடன் துவங்குகிறது. கனவின் மூலமாகத் தன் கணவனுக்கு நேர்ந்த கதியைப் பத்தினி அறிகிறாள். பத்தினி தன் தோழியுடன் கணவனைத் தேடிச் செல்லும் காட்சி விவரிக்கப்படுகிறது. 'பத்தினி ஹேல்ல' ஆசிரியர் சிலப்பதிகாரக் கதையுடன் பௌத்தக் கருத்துக்களையும் கதையில் புகுத்தியுள்ளார். பாளங்கனைக் காப்பாற்றக் கருதிய பாண்டியன் மாதேவி, சிலம்பு தன்னுடையதல்லவெனக் கூறுகின்றாள். அரசன் பெண்களின் விசுவாசமற்ற போக்கினைப் பல சாதகக் கதைகளின் மூலம் எடுத்துக் காட்டுகிறான். பத்தினி தீயினால் நகரைச் சுட்டெரிக்கும்

போது தாகபைகளையும், மலர்ப் பீடங்களையும், தர்மோபதேச மண்டபங்களையும், புத்தகுருமார் தங்கும் மடங்களையும் சுட்டெரிக்க வில்லை. ஈற்றில் பத்தினி புத்த பதவியை எய்த, மறுபிறப்பில் ஆணாகப் பிறக்கப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

"விந்திய" என்னும் காவியம் பத்தினிக் கதையைக் கூறுவதொன்றாகும். இது 280 செய்யுட்களைக் கொண்டது. பத்தினி பாண்டிய மன்னனைக் குற்றஞ்சாட்டியதையும், பாண்டி நாட்டினைத் தீக்கிரையாக்கிப் பின்னர் பால் தெளித்துத் தீயணைத்ததையும் இது கூறுகிறது. சோழ மன்னர்களின் பெருமையினைக் கூறும் பல கதைகள் இதில் அடங்கியுள்ளன.

"சத் பத்தினி கத்தாவ" முற்றிலும் இலங்கைச் சூழ்நிலையில் உருவாகிய கதையாகும். இது ஏழு பத்தினித் தெய்வங்கள் நீர், தீ, மலை, மாங்கனி, பூ, தந்தம், சால்வை ஆகியவற்றிலிருந்து அவதரித்ததைக் குறிப்பிடுகிறது.

"அம்ப பத்தினி உபத்த", "அம்ப விதுமன", "பத்தினி யாதின்ன", "தெத ரத்ன மாலய", தொளொஸ் ரெஸ் சாந்திய", என்பவை ஒரே கதையைக் கூறுகின்றன.

"பாண்டி நெத்த மெக்கு உபத்த", பாண்டியனின் கண்ணை மறைத்த கதையைக் கூறுகிறது.

"கன்னூரன் கத்தாவ" பத்தினி மதுரை அருகேயுள்ள கன்னூரன் (கன்னனூர்) நகரை அடைதலைக் கூறுகிறது. **'தெத் பத்தினி'** கதை திருவள்ளுவரின் வாழ்க்கையில் பின்னப்பட்ட ஒரு கதையைப் போன்றதொரு கதையைக் கூறுகிறது. பத்தினி நீரெடுக்கச் சென்று குடத்திலே கயிற்றைக் கட்டி கிணற்றினுள் விடும்பொழுது கணவன் கூப்பிடவே குடத்தையும் கயிற்றையும் விட்டுவிட்டுக் கணவனை நாடி ஓடினாள். பின்சென்று பார்த்தபொழுது கற்பின் மகிமையால் கயிறும் குடமும் அவள் விட்ட இடத்திலேயே நிற்கக் கண்டாள்.

"கோவிலன் கதை" என்ற பெயரில் 'புகழேந்தி' என்பாரொருவர்—புகழேந்திப் புலவரல்லர்—ஒரு கதைப் பாடலை இயற்றியிருப்பதாகவும் அக்கதைப் பாடல் கிட்டத்தட்ட 3443 வரிகளில் அமைந்திருப்பதாகவும் அறிகிறோம். இக்கதை 'சிலப்பதிக்காரக் கதையோடு ஓரளவு ஒட்டியும் பல இடங்களில் முரண்பட்டும் வருகின்றது. சிலப்பதிகாரத்திலுள்ள வஞ்சிக் காண்டம் இதில் இல்லை. கவுந்தி அடிகள், மாடலன், மாங்காட்டு மறையோன், கோசிக மாணி ஆகிய உறுப்பினர்கள் இக்கதையில் காண முடியாதவர்களாவர். மற்றப் பாத்திரங்களின் பெயர்கள் காப்பியத்தில் வரும்

பெயரைப் போலன்றிச் சிறிது மாறுபாட்டுடன் அதாவது மாதகி, கோவிலன், கோவிலங்கி (கோப்பெருந்தேவி), முத்துச் செட்டி (மாசாத்துவன்) என வழங்கி வருகின்றன.[8]

இது தவிர, நாயக்க மன்னர் காலத்தில் 'கோவலன் நாடகம்' தமிழில் இருந்ததாகப் பேராசிரியர் செல்வநாயகம் 'தமிழ் இலக்கிய வரலாற்றில்' குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை, இலங்கைக்குப் பத்தினி வழிபாடு வந்த முறையையும், அதன் பயனாக இங்கு சிலப்பதிகாரமும் கோவலன் கதை, கோவலன் நாடகமும் உருவாக்கி வைத்த சிங்கள இலக்கிய மரபினையும், அவ்விலக்கிய மரபிலுதித்த காவியங்களின் தன்மையையும் ஓரளவு ஆராய்ந்தோம். ஒவ்வொரு நூலும் தனித்தனியே ஆராயப்பட வேண்டியதாகும். இக்கட்டுரையில் இவ்விதம் ஆராயின், அது மிக நீண்டுவிடுமாகையால் இத்துடன் நிறுத்துகின்றோம்.

எடுத்தாளப்பட்ட நூல்களும் கட்டுரைகளும்

1. கலாநிதி சி. ஈ. கொடகும்புற—சிங்கள இலக்கியம் (ஆங்கிலம்), கொழும்பு அபோத்திகரிஸ் கம்பெனி லிமிட்டெட், 1955.

2. கலாநிதி புஞ்சிபண்டார சன்னஸ்கல—சிங்கள இலக்கிய வரலாறு (சிங்களம்), லேக் ஹவுஸ் அச்சகம், 1964.

3. எம். டி. ராகவன்—சமூக, சமய அமைப்பில் பத்தினி வழிபாடு—(ஆங்கிலம்), இலங்கை மனிதவர்க்க ஆய்வு-3, ஸ்போலியா சிலானிக்கா தொகுதி, 26-இதழ் 1-1951.

4. சிலப்பதிகாரம்—புலியூர்க்கேசிகன், பாரி நிலையம், சென்னை—1964.

5. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி—சோழர் (ஆங்கிலம்), சென்னைப் பல்கலைக் கழகம், 1955.

6. எச். டபிள்யூ. கொட்ரிங்டன்—இலங்கைச் சரித்திரச் சுருக்கம் (ஆங்கிலம்), மக்மில்லன் கம்பெனி லிமிட்டெட், லண்டன், 1947.

7. இராஜாவலிய—(சிங்களம்) தகவல் திணைக்களம்-1953.

8. இலங்கை வரலாறு—(ஆங்கிலம்) இலங்கைப் பல்கலைக் கழக வெளியீட்டுக்குழு, 2 தொகுதிகள்-1959, 1960.

9. பி. பி. ஜி. ஹேவாவசம்—''பன்திஸ் கோள்முற'' (சிங்களம்), இலக்கியச் சஞ்சிகை-இதழ் 3, 1962.

10. ஆறு. அழகப்பன்—''கோவிலன் கதை''-மக்கள் இலக்கியம், கலைவாணி-தை, 1955.

11. ம.பொ. செல்வரத்தினம்—''வட இலங்கையில் பத்தினி வழிபாடு'', கலைவாணி-தை, 1955.

12. பி. செல்வநாயகம்—தமிழ் இலக்கிய வரலாறு- சிறீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம், 1965.

13. கலாநிதி சி. ஈ. கொடகும்புற—கொஹொம்ப கன்காரிய (சிங்களம்), கலாச்சாரத் திணைக்கள வெளியீடு, 1963.

14. ஐ.இ. சேதரமன்—ஐந்து கதைகள், கோம்பகன்காறிய (சிங்களம்), லங்காதீப.

[8] ஆறு. அழகப்பன்—''கோவிலன் கதை''—கலைவாணி—தை, 1965, பக்கம்-51.

15. வி. முத்துக்குமாரசுவாமி—இலங்கையில் பத்தினி வழிபாடு, இலங்கை வானொலி சஞ்சிகை-செப்தெம்பர். 5-18, 1955.

16. என். சுப்பிரமணியன்—பத்தினி வழிபாடு (தமிழ்), தினகரன் 1951.

17. வயந்தி மாலா—(சிங்களம்), வித்தியாகல் பிற்ற அச்சகம், கேகாலை, 1925.

18. பத்தினி ஹேல்ல—சிங்களப் பாடல்- ஹியூ நெவில் என்பவரின் தொகுப்புக்கள்.

19. அம்பவிதுமன—(சிங்களம்).

20. பாளங்க ஹேல்ல—(சிங்களம்), ஹியூ நெவில் என்பவரின் தொகுப்புக்கள்.

21. மெரீம—சென்னை நூல் நிலையத்திலுள்ள கையெழுத்துப் பிரதிகளின் பிரதி.

22. பத்தினித் தெய்வ வழிபாடு—இலங்கை இலக்கியப் பதிவேடு-தொகுதி இல. 2, 1890-பக்கங்கள் 10-11.

23. என். டி. விஜயசேகர—பத்தினித் தெய்வ வழிபாட்டில் உபயோகிக்கப்பட்ட பாம்புகளின் சித்திரங்களையுடைய பூஜுவ களிமண் பாத்திரங்கள் தொகுதி 15-1940.

24. எல். டி. பாணெற்—சிங்கள நாட்டுக் கதைகட்கு வழிகாட்டி, 1917.

25. டபிள்யூ. ஏ. டி. சில்வா—பத்தினி தேவி.

26. மஞ்சு ஸ்ரீ—பத்தினி—இன்றைய இலங்கை, 1956.

27. ஆர். சி. த. எஸ். மனுகுலசூரிய—கரைநாட்டு முகமூடிகளும் தென் இந்தியாவுடன் அவற்றிற்குள்ள தொடர்புகளும்—''ரைம்ஸ்'' வாரப்பத்திரிகை. 9-2-1965.

தமிழ் இசைச் செல்வம்

அ. சு. தனப்பாண்டியன் *

தமிழ் மொழியை, ''முத்தமிழ்'' என்று தனிப்பெருஞ் சிறப்புடன் போற்றி வந்தனர் நம் முன்னோர். ஏனெனில், இயல், இசை, நாடகம் என்ற முக்கூறுகளும் தமிழ் என்ற அடிமரத்திலிருந்து கிளைத்துள்ளன. உலகில் இன்றுவரை வழக்கில் உள்ளனவும், இல்லாதனவுமான பிறமொழிகளுக்கு இச்சிறப்பு அமையவில்லை. இது மொழி அறிஞர்களின் துணிபு.

உயர்திணை, அஃறிணை எனப்படும் அனைத்தையும் தன் வயப் படுத்தி இசைய வைக்கின்ற காரணத்தாலும், இறைவனைப் போற் றிப் பண் பாடும் அன்பரை இசைய வைப்பதாலும், சங்கீதத்திற்குத் தமிழர் இசையென்ற பெயரைச் சூட்டினர். இசையை ஒரு களிப் பூட்டும் கலையாக மட்டும் கைக்கொள்ளாமல், காதலாகிக் கசிந் துருகிக் கண்ணீர் மல்கிக் கானம்பாடிக் கடவுளின் பேரின்பத்தில் திளைக்கவே தமிழர் இசையைக் கைக்கொண்டார். பழந்தமிழர் தோல்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி ஆகியவை களைத் துணைக்கொண்டு இசைக்கலையை வளர்த்தனர். இசை யமைப்பதற்குரிய இலக்கணங்களையும் படைத்தனர். இசை ஆராய்ச்சிக்கு ஏழிசைச் சங்கம் கண்டனர். அகத்தியம், பெரு நாரை, பெருங்குருகு, பேரிசை, சிற்றிசை, இசைமரபு, இசை நுணுக்கம், சிலப்பதிகாரம் முதலிய அநேக இசை நாடக நூல்களை உருவாக்கினர். இசைக்கு அடிப்படையான சுரங்களையும், சுருதி களையும் நுட்ப சுருதிகளையும் பண்(இராகம்) உண்டாக்கும் முறை களையும், நுணுகி ஆய்ந்து கடைப்பிடித்தனர். இவ்வாறு பழந்தமிழ் மக்கள் பாடிவந்த இசைகள் 12,000 ஆகும். தேவாரம், திருவாச கம், திருவிசைப்பா, திருவாய்மொழி முதலியவற்றை இவ்வழியில் இன்றும் இசைவல்லுநர்கள் பாடி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

இங்ஙனமிருக்க, ''தமிழில் இசை உண்டா? தமிழில் பாட வருமா? தமிழ் மொழிக்கு அத்தகுதி ஏது?'' என்று இசைமேதை களிற் சிலர் எதிர்க்கும் அளவிற்குத் தமிழிசை மறைந்தும் மறைக் கப்பட்டும் இடைக்காலத்தில் இருண்ட நிலையை அடையலாயிற்று.

---

* இசைச்செல்வர் ஆபிரகாம் பண்டிதர் வழிவந்த ஆய்வாளர், தஞ்சாவூர்.

இசைத்தொண்டு

தமிழறிஞர்களில் ஒரு சிலர் தமிழ் இலக்கண, இலக்கிய வளர்ச்சியில் அக்கரை காட்டினார்கள். எனவே இடைக்காலத்தில் தமிழிசை வளர்ச்சி குன்றியிருந்தது. இந்நிலையில் தமிழ் இசை உலகில் உண்மையொளி பரப்பத் தோன்றியவர்களுள் தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர் முதன்மையானவர். அவர் இளமை தொட்டு இசைக்கலையில் ஈடுபட்டுத் திளைத்தவராதலின் தமிழிசையின் தனிப் பெருஞ்சிறப்புகளைக் கண்டறியத் துடித்தார். உயர்திரு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் அரும்பாடுபட்டு ஓலைச் சுவடிகளிலிருந்த தமிழ் நூல்களை அச்சேற்றினார். அவர் பதிப்பித்த சிலப்பதிகாரம் தமிழிசைக் கலையின் அருமைபெருமைகளை விளக்குவதைக் கண்டு தனிப்பெருமகிழ்ச்சி அடைந்தார். உலகத்தவர் அன்றுவரை கண்டும் கேட்டுமிராததும் ஒரு ஆரோகண (வலமுறை) அவரோகணத்தின் (இடமுறை) பலவித அம்சங்களையும் கவனித்து, இனிமை பெற இராக சஞ்சாரம் செய்யும் முறையும், கீதமும், கீர்த்தனமும் எழுதும் முறையும் அவைகளில் ஜீவ முறை சுரம் இன்னதென்று காணும் முறையும், ஆலாபனம்—(ஆளத்தி) செய்யும் முறையும் யாவரும் அறியுமாறு நூலாக வெளியிட வேண்டும் என்று மிகவும் முயன்றார். அவரது அரிய உழைப்பின் பயனே கருணாமிர்த சாகரம் என்னும் இசைத் தமிழ் நூலாகும். அதை ஆக்கியதின் வாயிலாகத் தமிழ் இசைக்கலைக்குப் புத்துயிரும் தமிழர் நாகரிகத்திற்கு மறுமலர்ச்சியும் தோன்றின. கருணாமிர்த சாகரம் தோன்றிய 1917ஆம் ஆண்டுக்கு முன் இசைக்கலையைச் சிறப்பாகத் தமிழ் இசைக்கலையை இந்த அளவிற்கு ஆழமாகவும், அகலமாகவும் நுட்பமாகவும், திட்பமாகவும் எவரும் ஆராய்ந்திலர். இன்று தென்னிந்திய சங்கீதமென்றும் கருநாடக சங்கீதம் என்றும் இன்னும் வெவ்வேறு பெயர்களை வைத்துக்கொண்டும் வெளிவந்து உலவுகின்ற நூல்கள் அனைத்தும் ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் ஆராய்ச்சியை அடியொற்றி வந்தனவே என்பது வெள்ளிடைமலை.

இனி, கருணாமிர்த சாகரம் என்ற அப்பெருநூலில் இடம் பெற்றுள்ள சிறப்பான செய்திகள், இசை ஆராய்ச்சி வரலாற்றுக் குறிப்புகள் முதலியனவற்றை ஓரளவு சுருங்கக் காண்போம். அப் பெருநூலை அறிஞர்களும், கலைஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் ஏற்றுப் பயில இது ஒரு தூண்டுகோலாக அமையவேண்டும் என்பதே எனது ஆசை.

கருணாமிர்த சாகரம்

கருணாமிர்த சாகரம் என்ற இசைநூல் நான்கு பகுதிகளை உள்ளடக்கியதாகும். அவற்றுள் முதற் பகுதி பழங்காலத்தில் இசையானது, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் ஒன்றாயிருந்தது என்பதையும், தமிழ்மொழி, தமிழ் நாடு என்பவற்றின் தொன்

மையையும், இசைத்தமிழ் வழங்கிய விபரத்தையும், சில இசை வல்லுநரையும் பற்றி 275 பக்கங்களில் எடுத்தியம்புகின்றது. இரண்டாம் பகுதி ஒரு ஸ்தாயியில் வழங்கும் சுரம், சுருதிகளைப் பற்றிப் பலர் கூறும் கருத்துக்களையும் ஒத்துப்பார்த்து, அவைகள் தற்கால அனுபவத்திற்கு எவ்வகையில் ஒத்துவரவில்லை என்பதை 238 பக்கங்களில் தெளிவுறக் காட்டுகின்றது. மூன்றும் பகுதி இசைத்தமிழில் வழங்கிவந்த சுரம் சுருதிகள், நுட்ப சுருதிகளை யும், பழங்காலத்தில் வழங்கி வந்த தமிழ்ப் பண்முறைகளையும், யாழையும், கிரகசுரம் மாற்றுவதையும் பல சக்கரங்களினுல் 255 பக்கங்களில் விளக்குகின்றது. நான்காம் பகுதியில் ஆயப்பாலையில் உண்டாகும் 12 சுரங்களுக்கும் வட்டப்பாலை, திரிகோணப்பாலை சதுரப்பாலைகளில் உண்டாகும் 24, 48, 96 நுட்பமான சுருதி களுக்கும் லாகிரத முறைப்படி கணிதமும், அளவும் (சென்ட்சும்) ஓசையும் அலைகளும் சொல்வதுடன் நான்கு அட்டவணையில் அவை களுக்கு எடுத்துக்காட்டுகளும் தரப்பட்டுள்ளன. மேலும் பரோ டாவில் கூடிய அகில இந்திய இசைமாநாட்டில் சுருதிகளைப் பற்றிய ஆய்வும், அதுபற்றிய குறிப்புகளும், தஞ்சை வித்யா மகாஜன சங் கத்தில் நிகழ்த்திய சுருதிகளைப் பற்றிய ஆராய்ச்சியும், அது பற்றிய இசைவல்லுநர்கள், கலைஞர்கள், கண்ட முடிவும் மாநாட்டுத் தலைவர் அவர்களின் கருத்தும், இன்னும் இசைபற்றிய சிறப்புச் செய்திகளும் 421 பக்கங்களில் இடம் பெற்றுள்ளன. இந்நூலைப் பதிப்பிக்க வேண்டுமென்ற பெருநோக்குடன் பெரும் பொருட்செல வில் ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் 1917ல் அச்சேற்றி வெளியிட்டு இசை உலகிற்கு வழங்கித் தமிழிசையின் பெருமையை நிலைநாட்டி னர்கள். சுருதிகளைப் பற்றிச் சொல்லும் இம்முதல் புத்தகத் திற்கு அவர்கள் ''கருணைமிர்த சாகரம்'' என்னும் திருப் பெயரைச் சூட்டியுள்ளார்கள். தோற்றுவாய்:

''நாதமே முக்கலை நாதமூ வெழுத்து
நாதமே முக்குணம் நாதமே முப்பொருள்
நாதம் முவுலகாகி விரிந்து
நாதமாம் பரத்தில் லயித்தது பாரே.
நாதம் பரத்தில் லயித்திடு மதனுல்
நாதம் அறிந்திடப் பரமும் அறியலாம்.''—அகவல்.

நாதமே ஆதியென்றும், அண்டபுவன சராசரங்கள் யாவும் அதனுல் உண்டாயின என்றும் காண்கின்றோம். உயிர்கள் கீழ் ஆறு மேல் ஆறு ஸ்தானங்களைப் படிப்படியாய்ப் பெற்று விளங்கி நிற்பது போல ஜீவர்களின் ஓசையும் மத்திமம் வரை ஆறு ஸ்தானங்களும், அதன்மேல் ஆறு ஸ்தானங்களுமாகப் பன்னிரண்டு விதம் பிரிந்து ஏழு சுரங்களாய் விளங்கி நிற்கின்றன. பன்னிரண்டு ஆதாரம் பெற்ற ஜீவனுடைய தத்துவங்களின் விபரம் சொல்லவந்த இடத் தில் 24, 48, 96 ஆகப் பிரித்துச் சொன்னதுபோல், சங்கீத சாஸ் திரத்தில் வழங்கிவரும் 12 சுரங்களையும் 24 சுருதிகளாகவும், 48, 96 நுட்ப சுருதிகளாகவும் பிரித்துள்ளனர். அனுபவத்தில் அவை

களை இன்னவையென்று அறிந்துகொள்ளாமல் பலர் பலவிதமாகச் சொல்லவும் எழுதவும் நேரிட்டது.

''வரன்முறை மருங்கின் ஐந்தினும் ஏழினும்
உழைமுதலாகவும் உழையீருகவும்
குரல்முத லாகவும் குரலீருகவும்.''

சிலம்பு: 8:36—38.

என்னும் சிலப்பதிகார அடிகள் ஒரு ஸ்தாயியில் வரும் 12 சுரங்களும் சம அளவான ஓசையுடன் கூடியன என்பதை உறுதிப் படுத்தும்.

பாலை என்பது பகுப்பு அல்லது வகை என்ற பொருள்படும். சுரங்கள் 7. அரை அரையான சுரங்களில் கானம் பண்ணுவதை ஆயப்பாலை என்ற முதற்படியாகவும், கால் கால் சுரங்களில் கானம் பண்ணுவதை வட்டப்பாலை என்று இரண்டாம் படியாகவும், அரைக்கால் அரைக்கால் சுரங்களில் கானம் பண்ணுவதைத் திரிகோணப்பாலை என்ற மூன்ரும் படியாகவும், வீசம், வீசம் சுரங்களில் கானம் பண்ணுவதைச் சதுரப்பாலை என்ற நான்காம் படியாகவும் முன்னேர் கொண்டிருந்தனர். ச-ப, ச-ம முறைப்படி ஒரு ஸ்தாயியில் கண்டுபிடித்த 12 சுரங்கள் உள்ள ஆயப்பாலையின் சுரங்களில், பலரும் பல சந்தேகம் கொண்டு, ச-ப 2/3. ச-ம 3/4 என்று பெருக்கிப் பிரித்து முதற்படியிலேயே தள்ளாடுகின்றனர். கிரகமாற்றி வெவ்வேருன பல இராகங்கள் பாடும் முறை, துறையறியாது பல இராகங்களையும் ஒன்று சேர்த்துப் பாடுவதின் பயனுகும்.

ஒரு ஸ்தாயியை 24 சுருதிகளாகப் பிரித்து, அவற்றில் இரண்டு சுருதிகள் குறைத்து வீணையில் கமகமாய் வாசித்து வந்த 16 ஜாதிப் பண்களின் முறை தெரியாமல், ஒரு ஸ்தாயியை 22 சமபாகங்களாகப் பிரித்து அதற்கு ஏற்ற விதமாய் இராக இலட்சணங்கள் சொல்லிக் கிரகமாற்றி, அவைகளில் சிலவற்றை நீக்கிவிட்டு, மற்றவைகளை அனுபவத்திற்கு வராதவைகளாகச் செய்து இரண்டாம் படியிலேயே தவறினர்கள். இதைப்பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளும்போது ஒரு ஆரோகண (வலமுறை) அவரோகண (இடமுறை) சுரத்தில் இராகங்கள் உண்டாக்கவும், அதில் ஜீவசுரம் இன்னதென்று கண்டுகொள்ளவும் ஜீவ சுரம் இன்னின்ன நுட்பமான சுருதிகள் சேர்ந்து வருகிறதென்று காணவும், அம்முறையில் கீர்த்தனங்கள் எழுதவும், இராகங்களுக்கு வாய்ப்பாடமாய் அமைந்த கீதம் இயற்றவும் கூறியவர்களாவோம். தியாகராஜ ஸ்வாமிகள் முதலிய மகான்கள் புதிதாகச் செய்த அநேக பதங்களும் கீர்த்தனங்களும் (கிருதிகளும்) இராகமாலிகைகளும் தற்காலத்தில் வழங்கி வருகின்றன. தமிழ்மக்கள் பழமையாக வழங்கிவந்த இராகங்களில் இவர்கள் வெகுகாலம் பழகிவந்த பழக்கத்தாலும் சுர ஞானத்தாலும் தெய்வ பக்தியினுலும் அவற்றைப்

படைத்தனர். ஆனால் கீர்த்தனங்கள் எழுதுவதற்குரிய முக்கிய விதிகளைத் தம்முடைய பின்னடியார் எவருக்காவது சொல்லி வைத்ததாகவோ எழுதி வைத்ததாகவோ தெரியவில்லை. இவர்கள் படைத்த கீர்த்தனங்கள் ஒரு பொதுவிதியை அனுசரித்துச் செய்தது தாக இல்லாமல், அனுபவத்தைக்கொண்டு எழுதியதாகவே தோன்றுகிறது. ஆனால் தெய்வ அருளால் இராகங்களின் ஜீவ நிலையைக்காட்டி யாவரும் பின்பற்றும்படியான உயர்ந்த மார்க் கத்தை விளங்க வைத்துள்ளனர்.

சுருதி இசை ஆராய்ச்சி

சுரஞானமுள்ள ஒருவர், இராகமுண்டாக்கும் பொதுவிதிகளைக் கொண்டு கீர்த்தனங்களை மிகச் சுலபமாகச் செய்யலாம் என்ற உறுதி, பண்டிதர் அவர்களிடம் வலுப்பெற்றது. இசைவித்துவான் களிடம் இதை வெளிப்படுத்தி, இசை முறைப் பொதுவிதிகளைக் காணும் பேரவாக்கொண்டு தஞ்சையில் 1912 மே 27ஆம் நாள் சங்கீத வித்யா மகாஜனசங்கம் என்ற ஒரு சங்கத்தை அமைத் தார்கள். இதில் கர்நாடக சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகளைப் பற்றியும், சங்கீத இரத்தினாகரருடைய சுருதி முறைகளையும் பழந் தமிழ் மக்களின் சுருதி முறைகளையும் இவை பற்றிய பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்தனர்.

தென்னிந்திய சங்கீதத்தில் வழங்கிவரும் சுருதிகள் இன்ன தென்று நிச்சயிப்பதற்கு முன், சுருதிகள் இன்னதென்று சித் தாந்தப்படுத்திய மற்றவர் முறைகளைத் தீர ஆராய வேண்டுமென்று ஆசிரியர் விழைந்தார். சங்கீத இரத்னாகரம் முதலான சமஸ்கிருத சங்கீத நூல்கள் சுருதிபற்றிய வெவ்வேறு கருத்துக்களைக் கூறு கின்றன. மேற்றிசை இசை அளவுகளும் (Enharmone Scale) பைதா கோரஸ் முறையும், மர்க்கடர், பூல், ஒயிட், தாம்சன், போசான்கே முதலியோர் கூறும் 53 சுருதிகளின் முறைகளும் கிளமெண்ட்ஸ் கருதுகிற 27 என்ற முறையும், நாகோஜியார் கூறும் 22 என்ற முறையும், தேலால் அவர்களின் முறையும், ஹெல் மோல்ட்ஸ் அவர்களின் கருத்தும் ஆசிரியரின் ஆராய்ச்சியில் இடம் பெற்றன. இம்முறைகளில் எல்லாம் குறைபாடுகள் பொருந்தி யிருப்பதை இரண்டாம் பகுதியில் நன்கு விளக்குகின்றார்.

ஒரு ஸ்தாயியில் (இயக்கில்) 22 அலகுகள் (சுருதிகள்) என்று கூறும் முறைப்படிப் பொருள்செய்து அலகு மாற்றியும் ச-ம ஐந்தும், ச-ப ஏழுமான ராசிகளில் வரும் மறைப்பு நீங்கிய முறையில் ஒரு ஸ்தாயியில் 24 அலகுகள் வருகின்றனவென்றும், 2 அலகுகள் குறைத் துக் கமகமாய் யாழில் வாசிக்கும்பொழுது 22 அலகுகள் என்றும் இது ''உய்த்துணரவைப்பு'' என்ற நூல் மரபென்றும் சொல்லி, இம்மறைப்பு நீங்கிய பின் எளிதாய் இராகங்கள் உண்டாகும் முறையையும், மத்திமத்தின் இரண்டு அலகைக் குரலில் வைத்துப்

பன்னிருகால் கிரகம் மாற்றும்பொழுது உண்டாகும் பன்னிருபாலை இராகங்களையும் அவைகளுக்குத் தற்காலத்தில் வழங்கிவரும் பெயர்களையும் சில மேற்கோள்களையும் ஆசிரியர் காட்டியுள்ளார்.

''ஆயத்துக் கீரா றுநான்கு வட்டத்துக்
கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத்—தூயவிசை
நுண்மைக் கதிலிரட்டி நோனலகு மோர்நிலைக்கிங்
கெண்மூன்று கேள்வி கொண் டென்.''

என்ற இசை மரபு வெண்பா இதற்குச் சான்றாகிறது.

ஒரு ஆயப்பாலையில் வரும் 12 அரைச்சுரங்களையும், வட்டப் பாலையில் வரும் 24 ஆன கால் சுரங்களையும், திரிகோணப்பாலையில் வரும் 48 ஆன அரைக்கால் சுரங்களையும் சதுரப்பாலையில் வரும் 96 ஆன வீசம் சுரங்களையும், நுட்பமாய்க் கண்டறிந்த தமிழ்மக்கள் தம் நுண்ணறிவிற்கேற்ப யாழ் வாசிப்பதிலும், இராகம் ஆளத்தி (இராக ஆலாபனம்) செய்வதிலும் அபிநயிப்பதிலும், நடனம் செய்வதிலும், தாளத்திலும், குழலிலும், கணிதத்திலும், சோதிடத்திலும் மிகச் சிறந்த அறிவுடையவர்களாய் விளங்கினார்கள் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலும் நான்காம் பாகத்தில் சுரங்கள் சுருதிகளினுடைய எண்களும் கணக்குகளும் அவைகள் வழங்கிவரும் இராகங்களும் அவற்றின் பெயர்களும் அவைகள் வீணையில் இன்னின்ன இடங்களில் வருகின்றன என்ற அளவு முறைகளும் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

வானமண்டலத்தை 12 இராசிகளாகப் பிரித்து, அவைகளில் சஞ்சரிக்கும் ஏழு கிரகங்களின் கதிபேதங்களினால் உண்டாகும் வெவ்வேறு சஞ்சாரத்தைக் குறிக்கும் எண்ணிறந்த சாதகங்களைப் போலவும், அவைகளின் பலன்களைப் போலவும், முற்றிலும் ஒத்திருக்கும் விதமாகச் சங்கீத சாஸ்திரத்தையும் தமிழர் படைத்துள்ளனர். ஒரு ஸ்தாயியை 12 சம அளவாகப் பிரித்து அவைகளில் 7 சுரங்கள் வரவேண்டிய இடங்களையும், அவைகளைக் கிரகம் மாற்றும் பொழுது உண்டாகும் அளவிறந்த இராகபேதங்களையும் நுட்பமான சுருதிகள் சேர்ந்து வரும்பொழுது உண்டாகும் அளவிறந்த மூர்ச்சனா பேதங்களையும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள். மேலும் கிரகங்கள் நட்பு, ஆட்சி, உச்சம், திரிகோணம், நீசம், பகை முதலிய இடங்களை அடைய அவற்றின் பலன் வெவ்வேறாவது போலவே, சங்கீதத்தில் வழங்கிவரும் 7 சுரங்களும் இணை, பகை, கிளை, நட்பு என்ற இடங்களின் பேதம் பெற்று இனிமையும் செயலும் ஆகிய இவைகளில் வேறுபடுகின்றன. ஒரு இராசிச் சக்கரத்தில் 2, 4, 5, 7, 9, 11, 12 ஆகிய இடங்கள் சுபஸ்தானங்கள் என்றும் 3, 6, 8, 10 ஆகிய இடங்கள் பகைஸ்தானங்கள் என்றும் கொள்ளப்படுவதுபோலவே சங்கீத சாஸ்திரத்திலும் சொல்லியிருக்கிறார்கள்.

உடற்கூறு, தத்துவம், யோகம், வைத்தியம், பூகோளம் முதலிய சாஸ்திரங்களிலும் ஏழு சுரங்களைப் போல் 7, 7 ஆகவும் 12 ஆகவும் 24, 48, 96 ஆகவும் அமைந்த இலக்கங்களும் ஓசை அலைகளின் கணக்கும் யோக சாஸ்திரத்தின் உண்மையும், மனிதனுடைய தூல சூட்சும காரணசரீரங்களில் விளங்குகின்றன வென்றும் அம்முறைப் படியே ஒரு யாழின் அமைப்பும், அதன் ஓசையும் கணக்கும் ஒத்து வருகின்றவென்றும் காட்டியுள்ளார். இவைகளை ஒருங்கே காண விழையும் அன்பர்களுக்கு வீணையில் சுரங்களும் சுருதிகளும் இன்னின்ன இடத்தில் தோன்றுகின்றன என்ற அட்டவணை அமைத்து விளக்கியுள்ளார் (884, 885). உலகத்தவர் எவரும் கண்டும் கேட்டுமிராத நுட்பமான சுரஞானத்தையும் அருமையான கீத முறையையும் பழந்தமிழ் மக்கள் பெற்றிருந்தனர் என்பதைக் காட்ட ஒரு சில சரித்திரக் குறிப்புக்களையும் காட்டியுள்ளார்கள். கேக்வார் மகா ராஜா நடத்திய அகில இந்திய இசை மாநாட்டுக்குச் சென்று 24 சுருதிகளை உறுதிப்படுத்தி விளக்கிக் காட்டியதையும் அதுபற்றி அறிஞர்களின் கருத்துரைகளையும் மறுப்புரைகளையும் இந்நூலில் வெளியிட்டுள்ளார்.

1916 ஆகஸ்டு 19ஆம் நாள் தஞ்சையில் நடந்த இசை மாநாடு பற்றியும், அது குறித்துத் தமிழ்ப் புலவர்கள், கணித அறிஞர்கள், சங்கீத வித்வான்கள் ஆகியோரின் கருத்துரைகளையும், இசை மாநாட்டுத் தலைவர் திரு. வி. பி. மாதவராவ், வி. ஐ. ஈ., மைசூர் வைணீக சிகாமணி திரு. சேஷண்ணு, விஜயநகர சமஸ்தான வித்துவான் வைணீக சிரோமணி திரு. வேங்கடரமணதாஸ் ஆகியோர்களின் கருத்துரைகளையும் காட்டியுள்ளார்கள். ஆங்காங்கே சக்கரங்களையும், அட்டவணைகளையும், விளக்கப்படங்களையும் அமைத்துத் தமிழ் இசைக்கலையின் நுட்பங்களை உள்ளங்கை நெல்லிக்கனியென யாவரும் அறியத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

''மேளதிகார லட்சணம்'' என்ற தெலுங்கு நூலில், பிரம்ம மேளத்தில் வழங்கிவரும் 24 சுருதிகளின் பெயர்கள் சொல்லப்படுவதை அட்டவணை அமைத்துக் காட்டியுள்ளார்கள் (864). 24 சுருதிகள் என்பது இவர் உள்ளத்தில் தோன்றிய ஓர் ஆராய்ச்சி. இந்நூல் அதன் பின்னர்தான் கிடைத்தது. பண்டிதர் அவர்களின் கருத்தும் பழநூலின் கருத்தும் ஒத்திருப்பதைக் கண்டு இசை மேதைகள் வியந்தனர்.

இசைத்துறையில் ஆராய்ச்சி நிகழ்த்த முதலாவது இசைச் சங்கத்தை 1912ஆம் ஆண்டு மே 27 ஆம் நாளிலும், அதுமுதல் தொடர்ந்து சங்கங்கள் கூட்டி வந்து ஏழாவது சங்கத்தை 1916 ஆம் ஆண்டு ஆகஸ்டு 19, 20, 21 தேதிகளிலும் நடத்தினுர்கள்.

ஒரு இராகத்தை ஸ்புடம் பண்ணிக் கணக்கிட்டு அதிலிருந்து ஜீவசுரமும், அதற்கு இணை கிளையான சுரங்களில் அமுதவைப்பு வருவதையும், இன்னும் பாடலமுதம் தெரிந்து கீதம், கீர்த்தனம்,

பதம், சுரஜதி, வர்ணம் முதலானவைகள் இயற்றும் விதத்தையும் உலகினர் யாவரும் அறிந்து கொள்ளும் பொருட்டுக் ''கருணாமிர்த சாகரம்'' இரண்டாம் புத்தகத்தை எழுதினார்கள். முதல் பாகத்தில் இராகங்களின் தொகையையும், அவற்றின் விபரங்களையும், இரண்டாம் பாகத்தில் பரம்பரையாய் வழங்கி வருகின்ற தாய் ராகங்களை அல்லது மேள கர்த்தாக்களையும் மூன்றாம் பாகத்தில் 72 மேளகர்த்தா இராகங்களையும், அவற்றில் பிறக்கும் ஜன்ய ராகங்களையும், அவைகளின் ஆரோகண (வலமுறை) அவரோகண (இடமுறை) சுரங்களையும் அவை இன்னின்ன அலகில் வருகின்றன என்பதையும் விளக்கி அச்சிட்டுள்ளார்கள். மேலும் சுரங்களைத் தெரிந்து ஸ்புடம் செய்து கீதம், கீர்த்தனை, சுரஜதி, வர்ணங்கள் முதலியவற்றை இயற்றும் முறையை எழுதி வைத்திருந்தார்கள். அவைகளை ஆய்ந்து கருணாமிர்தசாகரம் இரண்டாம் புத்தகமாக, ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் குமாரனும் குமாரத்தியுமான ஆ. சுந்திர பாண்டியன் அவர்களும், மரகதவல்லி துரைப்பாண்டியன் அவர்களும் வெளியிட்டனர். ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் இருக்கும்பொழுதே அவர்கள் குமாரத்தி மரகதவல்லி துரைபாண்டியன் அம்மையாரைக் கொண்டு மாயாமாளவகௌளை, கருடத்துவனீ முதலிய நடைமுறையிலுள்ள இராகங்களிலும், கனகாங்கி, நாகபூஷணி முதலிய அபூர்வ இராகங்களிலும், ஆனந்த ரூபா, சுந்தராங்கி முதலிய புதிதாக உண்டாக்கப்பட்ட இராகங்களிலும் கீதம், கீர்த்தனை முதலியவற்றை இயற்றி இரண்டாம் நூலின் இறுதியில் ஸ்புடம் செய்து விளக்கியுள்ளார்கள். அவ்விதமே அவர் காலங்களுக்குப் பிறகு மரகதவல்லி அம்மையார் சுமார் நூற்றுக்கும் அதிகமான கீர்த்தனங்களைச் செய்து அவற்றிற்குத் தமிழ் சாகித்யங்களை எழுதினார். அவை அச்சிடப்படாமல் இன்றும் இருந்து வருகின்றன. அம்மையார் காலத்திற்குப் பிறகு பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் ஸ்புடம் செய்யும் விதங்களைத் தெரிந்தும், கீர்த்தனங்கள் செய்தும் வருகிறார்கள்.

இவ்வாறு இசையை முறையோடும் பொருளோடும், பாடிப் பரமனைத் துதித்துப் பிறவிப் பயனை அடையவேண்டுமென்பதே பண்டிதர் அவர்களின் நோக்கமாகும். தமிழிசைக் கலைக்கு இத்துணை அரும்பாடுபட்டு நிலையான ஒரு பெருநூலை இயற்றித் தந்த அவருக்குத் தமிழ் உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. அவர் வழி நின்று இசைக்கலையைச் சுவைப்போமாக.

பனம்பாரனார் பாயிரம்

ந. சஞ்சீவி *

பனம்பாரனார் பாயிரத்தின் பழமை

ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவல் அன்றே.

என்பது நன்னூல்[1]. இந்நூல் காட்டும் இந்நெறி பெரும்பழமை வாய்ந்தது என்பதை விளக்கும் பெருமை பனம்பாரனார் பாயிரத்தின் தனியுரிமை. ஏனெனில் நமக்குக் கிடைக்கும் பாயிரங்களுள் பழமையானது பனம்பாரனார் பாயிரமே. இதுவே இன்று முழுவதாகக் கிடைக்கும் தமிழ் நூல்களுள் மிகப் பழமையானதற்குரிய பாயிரமாகவும் விளங்குகிறது. அவ்வகையில் பார்க்கும்போது இன்று கிடைக்கும் தமிழ் நூல்களின் நுழைவாயிலாக விளங்கும் பெருமை பனம்பாரனார் பாயிரத்திற்கு உண்டு.

பாயிரம் என்ற சொல்லின் பொருள்

1. பாயிரம் என்ற சொல்லுக்கு (1) முகவுரை, (2) பொருளடக்கம், (3) புறம்பானது ஆகிய பொருள்கள் இலக்கிய வழக்கிலேயே காணப்படுகின்றன.[2] வரலாறு என்ற பொருள் மேற்குத்திசை வழக்கில் உள்ளது.[3] பாயிரம்—பாசுரம் ஆகிய இரு சொற்கட்கும் இடையே உள்ள நெருங்கிய உறவை நினைக்க வைக்கிறது தமிழ்ப் பேரகராதி.[4]

பனம்பாரனார் யார்?

2.1. பனம்பாரனார் பற்றி அறியத்தக்க வரலாற்றுக் குறிப்புகள் பலவாக இல்லை. இவர் அகத்தியரிடம் தொல்காப்பியரோடு பயின்ற மாணாக்கருள் ஒருவர் என்றுமட்டும் சொல்லப்படுகிறது.[5] குறுந்தொகை 52-ஆம் பாடல் இவர் பாட்டோ இவர் பெயர் கொண்ட இன்னொருவர் பாட்டோ என்று துணியக்கூடவில்லை.

---

* எம்.ஏ., எம். லிட்., துணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

[1] நன்னூல்-54.

[2-4] சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி-4.

[5] கலைக்களஞ்சியம், தொகுதி-7:58.

நடையும் கருத்தும் இடம் தரவில்லை. பாயிரம் வேண்டும் என்பதற்காகப் பிற்காலப் புலவர் ஒருவர் பாயிரம் பாடியிருப்பார் என எண்ணுவதும் இயற்கையாய் இல்லை. காரணம் பாயிரமற்ற—பாடினார் பெயரில்லாப் பாயிரமுடைய—இலக்கண இலக்கிய நூல் பல காண்கின்றோம்.

பாயிரம் காட்டும் பனுவல் பண்பு

7. பனம்பாரனார் பாயிரத்தின் தலைமைச் சிறப்பு அது உணர்த்தும் தொல்காப்பியச் சிறப்பே ஆகும். அச்சிறப்பினைச் செறிவும் நிறைவும் உடைய சொற்களால் பனம்பாரனார் பாடுவதே தனிச் சிறப்பாகும். தொல்காப்பியக் கடலைக் கடைந்தெடுத்த அமிழ்தமாய் விளங்குவதே பனம்பாரனார் பாயிரம். அப்பாயிரத்துள் உள்ள ஒவ்வொரு சொல்லும் பெரும் பொருண்மை வாய்ந்தது என்பது நவில்தொறும் நூல்நயம் காண வல்லார் அறிந்த தொன்றாகும்.

பனம்பாரனார் கண்ட தொல்காப்பியர்

8. இனி, பனம்பாரனார் போற்றும் தொல்காப்பியரைக் காண்போம்: (1) தொல்காப்பியர் தமிழகத்தின் வழக்கு, செய்யுள் இரண்டையும் முதலாகக்கொண்டு நூல் செய்தார்; (2) எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றையும் ஆராய்ந்தார்; (3) செந்தமிழ் நிலத்து முந்தையோர் நூல்களை ஆராய்ந்து தம் நூல் செய்தார்; (4) முறைப்பட எண்ணிச் செய்தார்; (5) முன்னமே இருந்த புலமைக் கருத்துக்களைத் தொகுத்தார்; (6) குற்றமற்ற பனுவலாகச் செய்தார்; (7) பாண்டியன் அவையில் அரங்கேற்றினார்; (8) அதங்கோட்டு ஆசானுக்குக் குற்றமற (உளங்கொள) உரைத்தார்; (9) மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டினார்; (10) தொல்காப்பிய ஆசிரியர் பெயர் தொல்காப்பியன்; (11) ஐந்திர இலக்கணம் வல்ல அறிஞர் அவர்; (12) தொல்காப்பியம் செய்தமையால் தன்புகழ், தமிழ்ப் புகழ் முதலாகப் பல்புகழ் நாட்டிய தொல்காப்பியர் தவநெறியாளர்.

பாயிரத்தின் வாய்மை

9. பனம்பாரனார் தொல்காப்பியர் சிறப்புகளாக எடுத்துரைத்துள்ள எதுவும் மிகைப்படக் கூறியது அன்று என்று இன்றும் தொல்காப்பியத்தை ஆராய்வார் அறிவார். வழக்கு, செய்யுள் இரண்டையும் இருமுதலாகக் கொண்டது தொல்காப்பியம் என்பது இருபத்தேழு இயல்களுள் நான்கின் தலைப்பில் 'மரபு' மருவியிருத்தலாலும் இருபத்திரண்டின் தலைப்பில் 'இயல்' இலங்குவதாலும் ஒரே ஒரு இயலில் 'ஆக்கம்' இடம்பெற்றிருத்தலாலும் அறியலாம். மரபும் இயலும் வழக்கை வலியுறுத்துவன அன்றோ? நூலுக்குள்.

ளும் பற்பல இடங்களில் தொல்காப்பியர் மரபின் மாட்சியைப் புலப்படுத்தலைப் பார்க்கலாம். தொல்காப்பியப் பனுவலே மரபியலில் முடியக் காணலாம். மொழியியல் துறையில் வழக்கின் சிறப்பு வற்புறுத்தப்பெறும் இந்நாளில் வழக்கு, செய்யுள் இரண்டுள் பனம்பாரனார் பாயிரத்திலேயே வழக்கு முதலிடம் பெற்றிருப்பது நினைந்து மகிழ்தற்குரியது. தமிழிலக்கணத்தின் சிறப்பே எழுத்து, சொல், பொருள், மூன்றையும் முறையாக ஆராய்ந்து கூறுவதே என்பதைப் பனம்பாரனார் விளக்குவதும் போற்றத்தக்கதே. இவ்வகையில் மூவிலக்கணமும் முறைப்படக் கூறும் முழுமை வாய்ந்த நூல்களுள் மிகப் பழமை வாய்ந்தது தொல்காப்பியமே என்பதும் கருதத்தக்கது. முந்தையோர் நூல் பல கண்டு செய்யப் பெற்ற நூல் தொல்காப்பியம் என்பதற்கு அகச்சான்றுகள் நூற்றுக்கணக்கில் உள்ளன.[15] முறைப்பட எண்ணிச் செய்யப் பெற்ற நூல் என்பதை அறிய நூலுக்குள் இயல்கள் அமைந்துள்ள ஒழுங்கும் அவ்வியல்களுக்குள் நூற்பாக்கள் அமைந்துள்ள ஒழுங்கும் பெருந்துணை புரியும். ஒவ்வொரு அதிகாரத்துள்ளும் ஒன்பதே இயல்கள் அமையுமாறு செய்த அமைப்பே தொல்காப்பியர் 'முறைப்பட எண்ணி' யமைக்குரிய மிக வெளிப்படையான சான்றாகும். முன்னமே நிலவிய புலமைக் கருத்துகளைத் தொகுத்தார் என்பதற்கும் தொல்காப்பியத்துள் நூற்றுக்கணக்கான அகச்சான்று களைக் காணலாம்.[16] மேலும் தொல்காப்பியர் செய்த இத் 'தொகை' முயற்சியே பாட்டும் தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும் தொகை பெறக் காரணமாயின எனவும் எண்ணலாம். தொல்காப்பியம் குற்றமற்ற பனுவல் என்பது அன்று தொட்டு இன்று வரை அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். பாண்டியன் அவையில் அதங்கோட்டு ஆசான் உளங்கொளத் தொல்காப்பியம் அரங்கேறியது என்பதில் ஐயுற ஏதும் இல்லை. சேர நாட்டு ஆசான்கள் பற்றிய செய்தியைச் சிலம்பும் ஒலிக்கும்.[17] மயங்கா மரபின் எழுத்து முறை காட்டினார் தொல்காப்பியர் என்பது இற்றைநாள் ஆராய்ச்சி அறிஞரும் ஒப்பும் உண்மையாகும்.[18] 'மாற்றருஞ் சிறப்பின் மரபியல்'[19] என்றும் 'மரபு நிலை திரியா மாட்சி'[20] என்றும் மரபியலில் தொல்காப்பியர் கூறுவது மரபு காப்பதில் அவர்க்கு இருந்த மையலைக் காட்டும். ஐந்திரம் வல்ல இலக்கணி தொல்காப்பியர் என்பது ஆராய்ச்சி அறிஞர் தொல்காப்பியம் தோன்றிய காலத்தையே உறுதி செய்யத் தூண்டு கோலாய் மட்டுமின்றி ஊன்றுகோலாயும் உதவுவது ஆகும். தொல்காப்பியம் இயற்றப்பெற்றது தொல்காப்பியரால் என்பதிலும் பல்புகழ் தோன்ற அவர் ஆற்றிய பணி தவநெறி நின்றோரா

15-16 டாக்டர் மா. இராசமாணிக்கனார், தமிழ்மொழி, இலக்கிய வரலாறு (1963), பக். 66-9.

17 சிலப்பதிகாரம்-26:3.

18 கு. கோதண்டபாணிப் பிள்ளை, முதற்குறள் உவமை (1956), பக். 89-106.

19 தொல்காப்பியம் (கழகப் பதிப்பு)-1500

20 மே.கா.நூ.-1593.

லேயே ஆற்றத்தக்கது என்பதிலும் ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமில்லை. 'பெரியோர் ஒழுக்கம் பெரிது'[21] என்னும் பொன்மொழி தொல்காப்பிய நன்மொழி. இவ்வாறு நோக்குமிடத்து பாயிரத்தின் வாய்மை பகலாகும்.

பனம்பாரனார் பாநலம்

10. பனம்பாரனார் சொல்லும் பொருளும் 'நவில்தொறும் நூல் நயம்' காண்பார்க்குப் பயில்தொறும் பற்பல நலங்களைக் காட்டுவதாகும். சில வருமாறு: (1) பனம்பாரனார் தலைசிறந்த நாட்டுப் பற்றுளர். இது அவர் தமது பாயிரத்தைத் தமிழக எல்லைகளை வரையறுத்துக்கொண்டு தொடங்கும் பான்மையாலேயே புலனாகும்.[22] (2) உயர்ந்த நாட்டுப் பற்று ஒருபோதும் உலக உணர்வுக்கு மாறாகாது[23] என்னும் உண்மையை உடனே உறுதி செய்வார் போலத் 'தமிழ்கூறு நல்லுலகம்' எனப் போற்றும் நலம்; (3) ஓர் இலக்கண நூலுக்கு முதலாகத் தக்கன வழக்கு, செய்யுள் என்னும் இரண்டும் என்று தெளிந்த தெளிவு; (4) 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்' என்பதால் நிலத்திற்கும் நெஞ்சிற்கும் உள்ள தொடர்பு உணர்ந்திருந்தமை; (5) 'முந்துநூல்' எனச் சிறப்பிப்பதால் தொல்காப்பியத்திற்கு முன்பே நூல்பல இருந்தமையை உணர்த்தல்; (6) உயர் ஆராய்ச்சிக்கு ஒருதலையாக வேண்டுவது 'முறைப்பட எண்ணும்' முயற்சி என இந்நாள் அறிஞரும் போற்றத்தக்க கருத்துரைத்தல்; (7) தொல்காப்பியர் செய்த பணி 'புலம் தொகுத்தமை' என்பதால் அவர் தொண்டின் சிறப்பையும் தமிழின் தொன்மையையும், வளத்தையும் குறித்தல்; (8) தொல்காப்பியம் தமக்கும் பிறர்க்கும் தந்த மனநிறைவைப் 'போக்கறு பனுவல்' எனப் புகழ்வதால் காட்டுதல்; (9) பழந்தமிழரசன் (பாண்டியன்) அவை அருந்தமிழ் வளர்த்த மாட்சி அறிவித்தல்; (10) தமிழரசர் அவையில் வடமொழியும் அறிந்த அறவோர் இருந்தனர் எனத் தெரிவித்தல்; (11) அரசன் அவையில் அறிவார்ந்த அறவோர் முன்னிலையில் நூலரங்கேறும் மரபு தமிழகத்துப் பழைய மரபு என மொழிதல்; (12) 'மயங்கா மரபின்' எழுத்துமுறையே பெருஞ்சிறப்பு எனப் போற்றல்; (13) 'ஐந்திரம் நிறைந்த' என்றமையால் வடமொழி அறிவின் சிறப்பும் பயனும் குறித்தல்; (14) தொல்காப்பியம் செய்தவர் பெயர் 'தொல்காப்பியன்' எனத் துலக்கல்; (15) பெயர் தோற்றிப் பல்வகையான புகழைத் (தனக்கும் தமிழுக்கும்) நிலைநிறுத்தியமை நூல் செய்த பயன் என விளக்கல்; (16) நூலாசிரியன் ஒழுக்கத்தால் உயர்ந்த துறவி என்னும் சிறப்புப் பொறித்தல்.

---

[21] மே.கா நூ.-1096:16.

[22] (1) ப. ராமஸ்வாமி, டெரன்ஸ் மாக்ஸ்வினியன் சுதந்திரத்தின் தத்துவங்கள் (1944) பக். 91-97.

(2) The Encyclopaedia of Religion & Ethics—VII: 789-94.

[23] Bertrand Russell—Political Ideals (1963) pp. 85, 89.

இலக்கிய வரலாற்றுக்குப் பாயிரத்தின் இன்றியமையாமை

11. பனம்பாரனார் சிறப்புப் பாயிரம் இல்லையேல் தொல்காப்பியத்தின் சிறப்பும் தொல்காப்பியர் சிறப்பும் இவ்விரு சிறப்புக்களும் அவை தோன்றிய காலத்திலேயே உணரப் பெற்றிருந்த உயர்வும் தொல்காப்பியத்தின் இன்றியமையாமையும் அந்நூல் இயற்றியமையால் தொல்காப்பியருக்கும் தமிழுக்கும் விளைந்த புகழும் பெருமளவிற்கு நமக்கு விளங்காமலே போயிருக்கும். சிறப்பாகத் தொல்காப்பியம் எப்படி ஏன் எவரால் எப்போது இயற்றப்பட்டது என்னும் வினாக்களுக்கு விடையில்லாமலே போயிருக்கும். அவ்வகையில் பார்க்குமிடத்துப் பனம்பாரனார் பாயிரம் பதினைந்தே வரிகளில் பாவடிவில் அமைந்த தலைசிறந்த ஓர் இலக்கிய வரலாற்று மணி—இலக்கிய ஆராய்ச்சி—ஒளி எனலாம்.

பாயிரச் சொற்கள் சிலவற்றின் பண்பு

12. பனம்பாரனார் சொற்கள் பலவும் தொல்காப்பியத்துள் பயின்ற சொற்களே. தொல்காப்பியத்துள் தோய்ந்து அந்நூலை அணிசெய்யும் சொற்கள்—சொற்றொடர்கள்—கொண்டே இயன்றது பனம்பாரனார் பாயிரம் எனலாம். ஆயினும் பனம்பாரனார் தம் திறனும் திகழ அச்சொற்களையும் சொற்றொடர்களையும் தேர்ந்து தெளிந்து அமைத்துள்ள அழகும் அறிவுமே வியந்து மகிழ்ந்து போற்றத்தக்கன. சில காண்போம்: அடைகளின் பெருமை அளப்பரிது. அவ்வகையில் சிறு அடைமொழிகளால் பெருங்கருத்துக்களைப் பனம்பாரனார் புகட்டும் பான்மை கருத்தைக் கவர்வதாகும். சிறப்பாக உலகிற்கு 'நன்மை'யையும் தமிழிற்குச் 'செம்மை'யையும் முதன்முதல் அடையாகத் தந்த பெருமை பனம்பாரனார் தனியுரிமை. அவ்வாறே அதங்கோட்டாசானைச் சிறப்பிக்குமிடத்து நான்மறை முற்றியதன் பயன் அறங்கரை நாவுடைமை என்னும் குறிப்பும் பிறர் உய்யக் 'கரை' தலே நான்மறை—அறம்—நா ஆகியவற்றின் பயன் என்னும் குறிப்பும் தோன்றப் பனம்பாரனார் பாடியிருப்பது போற்றத்தக்கது.

இலக்கண உலகில் பாயிரத்தின் ஒலி

13. பனம்பாரனார் பாயிரத்தின் செல்வாக்கை எண்ணும்போது முதற்கண் நினைவுக்கு வருவது நன்னூலே ஆகும். அந்நூலின் தொடக்கமே பனம்பாரனார் பாயிரத்தின் செல்வாக்குச் சிறப்பைக் காட்டுகிறது. பாயிரத்தைப் பொது, சிறப்பு எனப் பிரித்துப் பொதுபற்றி 46, சிறப்பு பற்றி 9 நூற்பாக்கள் செய்துள்ளார் நன்னூலார். இப்பாகுபாட்டின்படி பனம்பாரனார் பாயிரம் சிறப்புப் பாயிரமாகும். இதில் வியப்புக்குரியது தொல்காப்பியத்திற்கு எழுந்த (சிறப்புப்) பாயிரத்தின் ஆசிரியர் பெயர் தெரியும்போது நன்னூலுக்கு எழுந்த (சிறப்புப்) பாயிரத்தின் ஆசிரியர் பெயர் தெரியாமையே ஆகும். இந்நிலை இலக்கண இலக்கிய நூல்கள்

பலவற்றின் பாயிரங்கட்கும் இருப்பது ஆழ்ந்து கருதற்குரியது. இதனால் தொல்காப்பியப் பாயிரம் பனம்பாரனார் பாடியதே என்பதும் பிற்காலத்தது அன்று என்பதும் எவராலோ இட்டுக்கட்டப் பட்டது அன்று என்பதும் உறுதி பெறுகின்றது.

இலக்கிய உலகில் பாயிரத்தின் ஒலி

14 1. இலக்கிய உலகில் பனம்பாரனார் பாயிரத்தின் செல்வாக்கை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் தெளிவாகக் காணலாம்.

'வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்'

என்னும் அடிகளின் எதிரொலியே இளங்கோ அடிகளின்,

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நல்நாட்டு'

என்னும் வேனிற்காதை தொடக்க அடிகளாகும் எனலாம்.

14.2. பனம்பாரனார் பாயிர அடிகட்கும் சிலப்பதிகார வேனிற் காதை அடிகட்கும் இடையே உள்ள வேறுபாடுகளும் நுணுகி நோக்கத்தக்கன. சிலப்பதிகார காலத்தில் 'வட வேங்கடம்' 'நெடியோன் குன்ற'மாகவும் 'தென்குமரி' 'தொடியோள் பௌவ' மாகவும் போற்றப்படல் குறிக்கத்தக்கது. தெற்கே நேர்ந்த கடல் கோள் மட்டுமன்றி வேங்கடமும் குமரியும் முறையே திருமாலுக்கும் குமரித் தெய்வத்திற்கும் உரிய இடங்களாயும் போற்றப்பெற்ற நிலையும் இவ்வடிகளால் விளங்கும். இக்கருத்து இருபதாம் நூற்றாண்டுக் கவிஞராகிய பாரதியார் பாட்டிலும் ஒலிக்கின்றது.[24] எனவே பனம்பாரனார் பாயிரம் இருபதாம் நூற்றாண்டையும் ஊடுருவும் செல்வாக்கைப் பெற்றுள்ளதாகும்.

14.3. பனம்பாரனார் பாயிரத்திற்கும் சிலப்பதிகார வேனிற் காதை அடிகட்கும் இடையே உள்ள இன்னொரு வேறுபாடு 'தமிழ் கூறு நல்லுலகம்', 'தமிழ் வரம்பறுத்த நல்நாடு' ஆகியமையே. 'வரம்பறுத்த' என்றும், 'நாடு' என்றும் இளங்கோ அடிகள் குறிப்பது அவர்தம் நாட்டுப் பற்றையும் கடல்கோளால் தமிழகத்தின் எல்லைகட்கு நேர்ந்த இழப்பை நினைந்து அவர் குமுறிய குமுறலையும் காட்டும். இவ்வுண்மை காடுகாண் காதையில்[25] மாங்காட்டு மறையோன் வாயிலாக அவர் கூறும்,

பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

என்னும் சொற்களால் நன்கு தெளியலாம்.

[24] பாரதியார் கவிதைகள்-செந்தமிழ் நாடு-5.

[25] சிலப்பதிகாரம்—காடுகாண் காதை-19-20.

14.4. பனம்பாரனார் பாயிரத்தில் தமிழக எல்லைகளைக் கூறும் போது முன்னே வடவெல்லை கூறுகிறார். இதற்கொரு காரணம் வடதிசை 'புண்ணியத் திசை' என்பதாலோ? இவ்வாறு நினைக்கச் செய்கிறது இளங்கோ வாக்கு.[26]

14.5. பனம்பாரனார் பாயிரத்துக்குத் தமிழ் இலக்கியத்தின் மீதுள்ள செல்வாக்கை ஆராயும்போது சிறப்பாகச் சொல்லத்தக்க வேறு சில கருத்துக்கள் வருமாறு:

(1) 'தமிழ்கூறு நல்லுலகம்' என்னும் பாயிர அடியில் உள்ள 'நல்' என்னும் அடை நினைக்கத்தக்கது. அவ்வாறு நினையுங்கால் சங்ககாலச் சான்றோர்களுள் தனிச் சிறப்புகள் பல உடையவர் ஔவையார் என்பதும் அவர்தம் பாடல்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த பாடல் 'நாடா கொன்றோ' என்று தொடங்கும் புறப் பாடல்[27] என்பதும் அப்பாடலில் அவர் வற்புறுத்துவதெல்லாம் நன்மைப் பண்பு ஒன்றே என்பதும் உடன் நினைக்கத்தக்கது.

(2) 'அறங்கரை நாவின்' என்ற தொடர்

காக்கை கரவா கரந்துண்ணும்; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.[28]

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.[29]

என்னும் குறள்மொழிகளோடும்,

வாயே வாழ்த்து கண்டாய்[30]

என்னும் திருநாவுக்கரசர் வாக்கோடும் ஒப்பிடத்தக்கன.

அவ்வாறே

. . . . தன்பெயர் தோற்றிப் பல்புகழ்
நிறுத்த படிமையோனே.

என்னும் சொற்கள்,

தோன்றிற் புகழொடு தோன்றுக[31]

என்னும் குறள்மொழிகளோடு ஒப்பிடத்தக்கன.

உரையாசிரியர் உலகில் பாயிரம்

15. தொல்காப்பிய உரையாசிரியர் பலரும் பாயிரத்திற்கு உரை வகுத்துள்ளனர்—சிற்சில வேறுபாடுகளுடன். ஆயினும் தொல்

---

[26] சிலப்பதிகாரம்-5:94.
[27] புறநானூறு-187.
[28-29] திருக்குறள்-527, 9.
[30] திருநாவுக்கரசர் தேவாரம்-திருஅங்கமாலை.
[31] திருக்குறள்-236.

காப்பியப் பாயிரத்தின் தனிச்சிறப்பை ஒரு தனி நூலில் விளக்கிக் காட்ட முதன்முதல் முனைந்த பெருமை சிவஞான முனிவருக்கே உண்டு எனலாம். அவர் எழுத்தால் உந்தப்பெற்ற அரசஞ் சண்முகனர் மிக விரிவாகச் செய்துள்ள தொல்காப்பியப் பாயிர உரை விளக்கம் வியத்தற்குரியது.

பாயிரப் பெருமை

16.1. இதுகாறும் எண்ணியவற்றல் பனம்பாரனர் பாயிரத்தின் தனிச்சிறப்புகளுள் சில விளங்கும். சுருங்கச் சொல்லுமிடத்துத் தமிழின் பெருமை தொல்காப்பியத்தால் விளங்குமெனின் தொல் காப்பியத்தின் பெருமை பனம்பாரனர் பாயிரத்தால் குறிப்பாகவும் சிறப்பாகவும் விளங்கும் எனலாம்.

16.2. பாயிரத்தின் சிறப்பு பன்னாட்டறிஞரும் போற்றும் ஒன்று.[32] அத்தகு பாயிரக்கலை தமிழுக்கே உரிய தனிச்சிறப்போ என்றும் எண்ண வேண்டியுள்ளது. காரணம் இப்பாயிர மரபு இவ்வளவு பழமையான—முழுமையான—நிலையில் வடமொழி உள்ளிட்ட வேறு எம்மொழியிலும் இல்லை எனத் தோன்றுகிறது. எனவே பாயிரக்கலை தமிழிலக்கியக் கலையின் தனிச் சிறப்புகளுள் ஒன்று என்று போற்றலாம்.

துணைபுரிந்த நூல்கள் (Bibliography)

தமிழ்

அரசஞ் சண்முகனர்—பாயிர விருத்தி, 1905.

இளங்கோவடிகள்—சிலப்பதிகாரம்.

கோதண்டபாணிப்பிள்ளை, கு.—முதற்குறளுவமை, பாரி நிலைய வெளியீடு, 1956.

சதாசிவப் பண்டாரத்தார், தி. வை.—பாண்டியர் வரலாறு, பாரி நிலைய வெளியீடு, 1956.

சமாஜ வெளியீடு, சங்க இலக்கியம் (1940).

சாமிநாத ஐயர், உ. வே., பதிப்பாசிரியர்—குறுந்தொகை, 1937.

சிவஞான முனிவர், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, கழக வெளியீடு, 1964.

தமிழ் வளர்ச்சிக் கழகம்—கலைக்களஞ்சியம்—தொகுதி-4.

திருவள்ளுவர்-திருக்குறள்.

துரைஅரங்கசாமி, மொ. அ., சங்ககாலச் சிறப்புப் பெயர்கள், பாரி நிலைய வெளியீடு, 1960.

தொல்காப்பியர்—தொல்காப்பியம்.

பவணந்தி முனிவர்—நன்னூல்.

ஆங்கிலம்

BURNELL, A. C., The Aindra School of Sanskrit Grammarians, 1875.

ILAKKUVANAR, S., Tholkappiyam, 1963.

The Encyclopaedia of Religion & Ethics.

The New Dictionary of Thoughts.

[32] The New Dictionary of Thoughts—See under 'Preface'.

நாடக வழக்கும் உலகியல் வழக்கும்

அ. சண்முகதாஸ் *

1. கட்டுரையின் நோக்கம்

தமிழ் மொழியின் தொல்லிலக்கணமாகிய தொல்காப்பியத்தின் சூத்திரங்களுக்கு உரை வகுத்தவர்களிடையே கருத்து வேற்றுமைகளும் முரண்பாடுகளும் உண்டு. எழுத்ததிகாரச் சொல்லதிகாரச் சூத்திரங்களைவிட, பொருளதிகாரச் சூத்திரங்கள் பலவற்றை உரைகாரர் பிறழக் கொண்டு, தொல்காப்பியர் கருதியதை விடுத்துத் தாம் கருதியதையே வலிந்து கூறுவதைப் பேராசிரியர் ச. சோமசுந்தரபாரதியார் போன்ற அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். பொருளிலக்கணம் தமிழ் மொழிக்கே சிறப்பாக உரியதொன்றாகும். ஆகவே, தமிழ் மாணவர்களாகிய நாம் பொருளிலக்கண மரபுகளைத் திரிபின்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு விரும்புவது இயற்கையே. பொருளதிகார அகத்திணையியலில்,

> ''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்
> கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
> உரிய தாகும் என்மனார் புலவர்'[1]

என்ற சூத்திரத்திற்கு உரைகாரர் கூறும் மயக்கம் செறிந்த கருத்தன்றித் தொல்காப்பியர் வேறு பொருள் கருதியிருக்கவேண்டும் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இச்சூத்திரம் பற்றிய ஆராய்ச்சி, இது எழுந்த காலம், கலி, பரிபாட்டு ஆகிய பாக்களின் பண்புகள் ஆகியனவற்றை அறிந்து கொள்ள உதவும்.

2. நச்சினார்க்கினியர் உரையும் நடையும்

மேற்காட்டிய சூத்திரத்திற்கு உரை வகுக்கும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் ஐங்குறுநூற்றுப் பதினோராம்[2]

---

* பி.ஏ.(ஆனர்ஸ்), ஆராய்ச்சி மாணவர், எடின்பரோ பல்கலைக்கழகம், ஸ்காட்லாந்து, இங்கிலாந்து.

[1] தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம் (முதற்பாகம்), முன் ஐந்தியல்களும் நச்சினார்க்கினியமும், சூத்திரம்: 53.

[2] ஐங்குறுநூறு, செய். 11:
''மனைநெடு வயலை வேழஞ் சுற்றுந்
துறைகே ழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே
யல்ல னென்னுமென் தடமென் றோளே.''

பாடலை மேற்கோளாகக் கொண்டு,

> "இதனுள் முதல் கருவுரிப்பொருளென்ற மூன்றுங் கூறலின் நாடக வழக்கும், தலைவனைத் தலைவி கொடுமைகூறல் உலகியலாகலின் உலகியல் வழக்கும் உடன் கூறிற்று. இவ்விரண்டுங் கூடிவருதலே பாடலுட் பயின்ற புலனெறி வழக்கம்."[3]

என்று கூறிச் செல்கிறார். இவருடைய கருத்தின்படி முதல், கரு, உரிப் பொருள் பாடலில் அமைதல் நாடக வழக்கு என்றும், தலைவனைத் தலைவி கொடுமை கூறல், அவ்வந்நிலத்து மக்களே பாடலிற் தலைவராதல் ஆகியன உலகியல் வழக்கு என்றுங் கொள்ள இடமுண்டு. இவருடைய கருத்திற்கேற்ற நாடக வழக்கும் உலகியல் வழக்கும் அகவற் பாவாலமைந்த அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகிய நூற்பாடல்களில் தெளிவுடனும் சிறப்புடனும் இடம் பெற்றுள்ளன. அவ்வாறெனில் தொல்காப்பியர் ஏன் கலிக்கும் பரிபாடலுக்குந்தான் இவை உரியன என்று விதந்து கூறவேண்டும்.[4]

3. ச. சோமசுந்தரபாரதியார் உரையும் நடையும்

ச. சோ. பாரதியார் இச்சூத்திரத்தின் முதலிரு அடிகளை ஒரு பகுதியாகவும் இறுதியிரு அடிகளை வேறொரு பகுதியாகவும் கொண்டு விளக்கங் கூறுவதாக அவருடைய குறிப்புரை அமைகிறது. முதலில்,

> "உலகியல் வழக்கு, உள்ளவாறுலகத்தார் ஒழுகலாகும். அவ்வொழுக்கச் சிறப்பைச் சுவைபட ஆடிக்காட்டுவதே நாடகவழக்காம். ஆதலால் இவ்விரண்டும் மக்களின் வாழ்க்கையொடுபட்ட இயல்புகளையே குறிப்பனவாம். அகத்திணைப் புலனெறி வழக்கம் எல்லாம் மக்கள் வாழ்க்கையின் மெய்யியல்புகளைத் தழுவி இன்றியமையாதாதலால் அவ்வாறு புலனெறி வழக்கஞ் செய்தலே தமிழ் மரபென்பதைத் தொல்காப்பியர் இச்சூத்திரத்தால் வற்புறுத்துவர்."

என்று கூறிச் செல்கின்றார். மக்கள் வாழ்க்கையின் மெய்யியல்புகளைத் தழுவி நடக்கும்படி புலனெறி வழக்கஞ் செய்தல் தமிழ் மரபென்பதை இச்சூத்திரம் வலியுறுத்துவதென்றால் கலி, பரிபாட்டு என்ற யாப்பு வடிவங்கள் பற்றித் தொல்காப்பியர் இங்கு ஏன் பேசவேண்டும்? அகவற் பாவாலமைந்த அகநானூறு, நற்றிணை ஆகிய நூற்பாக்களில் இத்தமிழ் மரபு அமையவில்லையா என்ற

---

[3] நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், சூ. 53.

[4] ச. சோமசுந்தரபாரதியார், தொல்காப்பியர் பொருட்படலம் அகத்திணையியலும் புதிய உரையும், பக். 207.

கடாக்கள் எழுகின்றன. இன்னும் பாரதியார் அவர்கள் தமது உரையிலே,

> "இனி, பலவகைப் பாக்களில், புறத்திணைக்குச் சிறப்பனவும் புறத்திணைக்கும் அகத்திணைக்கும் பொதுவாய் வருவனவுமான வெண்பா, அகவல், வஞ்சிகளிலும் கலியும் கலியுறுப்புக்கொண்டு நடக்கும் பரிபாட்டுமாகிய இரண்டுமே அகத்திணைக்குச் சிறந்து பயிலும் பெற்றியன.... அதனால் இவ்வியலில் அச்சிறப்புரிமை சுட்டப்பட்டது."[5]

என்று தொடர்ந்து கூறுகிறார். செய்யுளியலிலே பரிபாடல் ஒன்றனையே காமங்கண்ணிய யாப்பாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவர்.[6] கலிப்பாவைப் பற்றி அவ்வியலிலே, விரிக்கும்போது, அதன் ஒரு பகுதி கடவுள் வாழ்த்துப் பாடவும் அமையும் எனக் கூறியுள்ளார்.[7] ஆகவே, கலி அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவானது எனக் கொள்ளமுடிகின்றது. இக்கருத்தினைச் செய்யுளியலிலே நிறுவிய தொல்காப்பியர் இச்சூத்திரத்திலே கலி அகத்திணைக்குச் சிறந்து பயிலும் யாப்பு எனக் கூறி முரண்படமாட்டார். பாரதியார் தமது உரையிலே கலி, பரிபாட்டு என்று யாப்புக்களுக்கும் நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்பனவற்றுக்கும் என்ன தொடர்பு உண்டு என்பதைத் தெளிவாகக் கூறினாரில்லை.

4. நாடக வழக்கு

4.1. நாடக வழக்கு என்பது பற்றியும், அதற்கும் கலி, பரிபாட்டு ஆகிய யாப்புக்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் தொல்காப்பியர் கருதியது என்ன என்பதை ஆராய்வோம். அகவற்பாவாலமைந்த சங்ககால அகத்திணைப் பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாத்திரத்தினுடைய கூற்றாகவே அமைகின்றது. பல பாத்திரங்கள் உரையாடுவதாக இப்பாடல்கள் அமையவில்லை. ஆனால், கலித்தொகை நூலிலோ நாடகத்தில் இடம்பெறுவது போலத் தோழி தலைவி உரையாடல்,[8] தலைவன் தலைவி உரையாடல்,[9] தோழி தலைவன் உரையாடல்,[10] ஆகிய முறையிலே செய்யுட்கள் அமைந்துள்ளன: உதாரணமாக முல்லைக்கலியுள் 112வது பாடலை

---

[5] ச. சோமசுந்தரபாரதியார், முன் குறிப்பிட்ட நூல், பக். 207.

[6] தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம் (இரண்டாம் பாகம்), பின்னான்கியல்களும் பேராசிரியமும், சூ. 433:

> "கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு
> செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
> காமங் கண்ணிய நிலைமைத் தாகும்."

[7] தொல்காப்பியர், முன் குறிப்பிட்ட நூல், சூ. 450.

> "ஏனையொன்றே,
> தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே".

[8] கலித்தொகை, செய். 60.

[9] கலி., செய். 64.

[10] கலி., செய். 61.

நோக்கின், அங்கு இடையன் ஒருவனும் இடைச்சி ஒருத்தியும் காதலுரையாடும் ஓர் ஓரங்க நாடகமாக அப்பாடலமைவதைக் காணலாம்.[11] இவ்வாறு உரைநடைப் பண்பு கொண்ட நாடக அமைப்பிலேயே கலித்தொகைப் பாடல்களுட் பெரும்பாலானவை அமைந்துள்ளன. கலிவெண்பாப் பாட்டிலமைந்த செய்யுட்களிலும் இவ்வுரையாடற் பண்பு காணப்படுகின்றது. கலித்தொகைப் பாடல்களில் தொல்காப்பியராற் குறிக்கப்படும் கலிப்பாவின் வகைகள் பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. கலிப்பாவினுடைய வளர்ச்சிக் கிரமத்தை இப்பாடல்களிலே ஓரளவுக்குக் கண்டுகொள்ளக் கூடியதாயுள்ளது. வெண்பாவிலிருந்தே கலிப்பா தோன்றி வளர்ந்திருக்க வேண்டும் என்பதனைத் தொல்காப்பியருடைய சூத்திரங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன.[12] பஃறொடை வெண்பா, வெண்பாவினுடைய வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றது எனக் கொள்ளலாம். கலிப்பாவின் ஒருவகையாகிய கலிவெண்பாட்டு, பஃறொடை வெண்பாவிலிருந்தே தோன்றியுள்ளதென்பதற்குக் கலிவெண்பாட்டின் அமைப்புச் சான்று பகருகின்றது. வெண்பாவில் உரையாடற் பண்பு, நாடகப் பாங்கு ஆகியனவற்றிற்கு இடமில்லை. ஆனால், வெண்பாவினைப் போன்ற அமைப்புக் கொண்ட கலிவெண்பாட்டிலே[13] இப்பண்புகள் இடம் பெற்றுள்ளன என்பதற்குக் கலித்தொகைப் பாடல்கள் சில சான்றுகளாகின்றன.[14] பரிபாடலிலும் அகத்திணை பற்றிய வையைப் பாடல்களில் இத்தகைய உரையாடற்றிறன் பொருந்திய நாடகப் பண்பு இடம்பெற்றுள்ளது.[15]. குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஆகிய அகத்துறை நூல்களிலுள்ள அகவற் பாக்களில் இப்பண்பு இல்லை. இப்பண்பு கொண்ட செய்யுட்கள் செய்வதற்குக் கலிப்பாவும் பரிபாடலுமே உகந்த யாப்புக்களாகும். ஆகவேதான் நாடக வழக்கிலமைந்த புலனெறி வழக்கம் கலிக்கும் பரிபாட்டுக்கும் உரியது எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இன்னும் பரிபாடலுக்கு உரையெழுதியதிரு. பொ. வே. சோமசுந்தரனார் தமது அணிந்துரையில்,

> "... தலைவன் தலைவி தோழி செவிலி பாங்கன் முதலிய உறுப்பினர்களைக் கொணர்ந்து நிறுத்தித் தன் கூற்றுனன்றி அவ்வுறுப்பினர் கூற்றாகவே வினவும் செப்புமாய்

---

[11] கலி., செய். 112.

[12] தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சூ. 107, 108.

> "பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பி
> னாசிரியப்பா வெண்பா வென்றாங்
> காயிரு பாவினு ளடங்கு மென்ப"
> "ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை
> வெண்பா நடைத்தே கலியென மொழிப".

[13] சுடர்த்தொடீஇ......என்ற கலிவெண்பாவாலான கலித்தொகைச் செய்யுளை உதாரணமாகக் காட்டி, வீரசோழிய உரைகாரர் (வீரசோழியம், கழக வெளியீடு, யாப்., படலம், பக். 134, 135) "இது நேரிசை வெண்பாவே போன்று, அதனின் நீண்டு வந்தமையாற் கலிவெண்பா எனக்கொள்க" எனக் கூறியுள்ளதை நோக்குக.

[14] கலி., செய். 51, 65.

[15] பரிபாடல், செய். 20.

உரையாடல் நிகழ்வித்து ஓதுவோர் அகக்கண் முன்னர் ஓர் இனிய நாடகக் காட்சியினைத் தோற்றுவித்தலைக் கருதியே நாடக வழக்கு என்றார் எனக் கருதுதல் மிகையாகாது. இங்ஙனம் நாடகமாகக் கூறுதற்குக் கலிப்பாவும் பரிபாடலுமே தகுதியுடைய பாடல்கள் ஆதலும் ஏனைய பாக்கள் தகுதியல்லாதனவாதலும்...''[16]

என்று கூறியுள்ளதை நோக்குமிடத்து, அவருடைய கூற்று எமது கருத்தை வலியுறுத்துகின்றதென்றே கொள்ளலாம்.

4.2. கலிப்பா வெண்பாவிலிருந்து தோன்றியதென்பதை முன்பு குறித்துள்ளோம். அவ்வாறு தோன்றிய பாவினுடைய வளர்ச்சிக்குக் கிரமம் கலிவெண்பாட்டு, கொச்சகக்கலி, ஒத்தாழிசைக்கலி, உறழ்கலி என்ற முறையிலே அமைந்திருக்கவேண்டும். கலிவெண்பாட்டு வெண்பாவினைப் போன்றது. கொச்சகக்கலியில் வெண்பாவினுடைய ஆதிக்கமே அதிகம்.[17] தொல்காப்பியருடைய கொச்சகக்கலிச் சூத்திரம் பற்றி உரையாசிரியர்களிடையே கருத்து வேற்றுமையுண்டு. இளம்பூரணர் அமைத்துள்ள ஐந்து அடிச் சூத்திரத்தின் முதன்மூன்று அடிகளையும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கலிவெண்பாட்டுச் சூத்திரத்துடன் சேர்த்துக் கூறுவர். ஆனால் இளம்பூரணருடைய சூத்திர அமைப்பே பொருத்தமானதாகும்.[18] ஒத்தாழிசைக்கலியும் உறழ்கலியும் வெண்பாவின் ஆதிக்கத்தினின்று நீங்கி, கலிப்பாவின் சொந்தப் பண்புகள் கொண்டனவாயுள்ளன. வெண்பாவின் ஆதிக்கங் கொண்ட கலிவெண்பாட்டுக்கள் சிலவற்றிலேயே உரையாடற் பண்பும் நாடகப் பாங்கும் உண்டு என முன்பு காட்டியுள்ளோம். ஆனால், தொல்காப்பியர் ஒத்தாழிசைக் கலிக்கும் உறழ்கலிக்கும் ஓதியுள்ள இலக்கணங்களின் படி அவற்றிலே இவை மிகுதியாகக் காணப்படுகின்றன என்று கொள்ளலாம். கலிப்பாவின் ஒரு பகுதியாகிய உறழ்கலி பற்றித் தொல்காப்பியர் பின்வருமாறு கூறுவார்:

''கற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும்
போக்கின்றாக லுறழ்கலிக் கியல்பே''[19]

நாடகத்திற்குரிய உரையாடற் பண்பு கலிக்கும் உண்டு என்பது இச்சூத்திரத்தாலே தெளிவுறுத்தப்படுகின்றது. அத்துடன் கலிப்பாவுக்குப் பொதுவாக ஓதப்படும் தரவு, தாழிசை, தனிச்சொல்,

---

[16] பொ. வே. சோமசுந்தரனார், பரிபாடல் அணிந்துரை, பக். 10.

[17] இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சூ. 154.
''தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து
மைஞ்சீ ரடுக்கியு மாறுமெய் பெற்றும்
வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூலளவில் புலவர் நுவன்றறைந்தனரே''.

[18] A. Chidamparanathan Chettiyar: Advanced Studies in Tamil Prosody, pp. 87-88.

[19] தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், சூ. 468.

சுரிதகம் போன்ற உறுப்புக்கள் நாடகப் பண்பினை மேலும் வலியுறுத்துகின்றன. நாடகத்திற்குரிய இடமும், சந்தர்ப்பமும், களமும் தரவு என்ற பகுதியிலே அடங்குகின்றன. நாடகத்திற்குரிய முடிவும் அதனாலேற்படும் படிப்பினை, பயன் ஆகியனவற்றைக் காட்டுவது போல் சுரிதகம் அமைகின்றது. பரிபாட்டு கலியின் சில உறுப்புக்கள் கொண்டு நடத்தலால், அதற்கும் இப்பண்புகள் உரித்தாகின்றன.

5. ''உலகியல் வழக்கு''

5.1. தொல்காப்பியர் உலகியல் வழக்கு என்பது பற்றிக் கருதியது எதுவாயிருக்கலாம் என்பதை ஆராய்வோம். சங்க இலக்கியங்களாகிய அகநானூறு, நற்றிணை ஆகியவற்றின் செய்யுட்களிலே இடம்பெறும் தலைவர்களும் தலைவியரும் பெயர் சுட்டப்பெறுதவராயினும், அவர்கள் ஒத்த குணநலன்கள் கொண்ட உயர்ந்த மக்களாகவேயுள்ளனர். ஆனால், கலித்தொகைப் பாடல்கள் சிலவற்றிலே கூனி, குறளன் முதலியோர் தலைமக்களாக இடம்பெறுகின்றனர்.[20]

5.2. நற்றிணை முதலிய சங்க நூல்களில் காமக்கிழத்தி தலைவனை ஏசுவதாகச் செய்யுள் செய்யப்படவில்லை. ஆனால், அவ்வாறு கலித்தொகையில் இடம்பெறுகின்றது.[21] பரிபாடலில் ஒரு செய்யுளிலே காமக்கிழத்திக்கும் பரத்தைக்குமிடையே பின்வருமாறு ஒரு வாக்குவாதம் உண்டாகின்றது:

தலைவி:

''... நல்லவை நாணுமற்
றந்து முழவின் வருவாய் நீ வாய்வாளா
எந்தை எனக்கீத்த இடுவளை ஆரப்பூண்
வந்தவழி நின்பான் மாயக் களவன்றேல்
தந்தானைத் தந்தே தருக்கு''

பரத்தை:

''மாலை யணிய விலைதந்தான் மாதர்நின்
கால் சிலம்பு கழற்றுவாய் சால
அதிரலங் கண்ணிநீ அன்னெற் கன்பன்
இதுவாய் அவன்கள்வன் கள்விநா னல்லேன்''[22]

பொதுமக்கட் சார்புடைய இலக்கியமாகிய பள்ளுப் பிரபந்தத்திலே மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் வாக்குவாதம் புரிவதுபோல் இப்பாடற் பகுதி அமைவதைக் காணலாம். இவ்வாறு சாதாரண

[20] கலி. செய்யு. 30.
[21] கலி. செய்யு. 69, 72, 73.
[22] பரி. செய். 20.

உலகியல் நிகழ்ச்சிகள் நற்றிணை, குறுந்தொகை நூற்பாக்களைவிடக் கலித்தொகைப் பாடலிலும் பரிபாடலிலும் பெரும்பாலும் இடம் பெறுவதை நோக்கியே தொல்காப்பியர் உலகியல் வழக்குப் பற்றிச் செய்யுள் செய்வதற்குக் கலியும் பரிபாட்டும் சிறந்தன என்று கூறியுள்ளார்.

5.3. இனி இவ்வுலகியல் வழக்கு அகவல் முதலிய யாப்புக்களில் ஏன் இடம்பெற முடியாது என்பதை நோக்குவோம். சாதாரண மக்கட் சார்புடைய நிகழ்ச்சிகள் கொண்ட இலக்கியங்கள் யாவும் இசை, நாடகப் பண்புடையனவாகவே அமைகின்றன. விசயநகர நாயக்க மன்னர் காலத்தின் இறுதிப் பகுதியிலே தோன்றிய மக்கள் நாட்டமுடைய இலக்கியங்களாகிய பள்ளு, குறவஞ்சி ஆகியன நாடகப் பண்பும், இசைப் பண்பும், சாதாரண உலகியல் வழக்குப் பண்பும் கொண்டு விளங்குவது இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும். இதிலிருந்து நாடகமும், இசையும் உலகியல் வழக்குடன் பெரிதுந் தொடர்புடையன என்பதை அறிகிறோம். ஆனால், இவ்விரு பண்புகளும் அகவல், வெண்பா யாப்புக்களை விடக் கலியிலும் கலியுறுப்புக்கள் சிலவற்றைக் கொண்டு நடக்கும் பரிபாட்டிலுமே காணப்படுகின்றன. கலியில் இசைப்பண்பு பற்றிப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பின்வருமாறு கூறுவார்:

> ''வெண்பாவின் பின் வந்தது கலிப்பாவின் ஒரு பகுதியாகிய தாழிசை. இது பாடுதற்கெனவே அமைந்தது என்று கூறலாம். தாழிசை என்ற பெயரே இதனை விளக்குகின்றது. கலிப்பாவிற்குரிய ''முரற்கை'' (தொல். பொருள் 382) என்ற பெயரும் இதனையே வலியுறுத்தும். முரற்கை என்பது ஒலித்தல் என்று பொருள்படும். ''இசை முரலுதல்'' என்றல் முற்காலத்து மரபு.[23]

ஆகவே மேற்காட்டியவற்றின் மூலம் உலகியல் வழக்குடன் பொருந்திய புலனெறி வழக்குக்கு இசைப் பண்பும் நாடகப் பண்பும் பொருந்திய கலியும் பரிபாட்டும் சிறந்தன என்று தொல்காப்பியர் கூறியது பொருத்தமெனக் கொள்ளலாம்.

6. ''பாடல் சான்ற''

கலியிலும் பரிபாட்டிலுமுள்ள இசைப் பண்புக்கும் நாடக வழக்கு, உலகியல் வழக்கு ஆகியனவற்றிற்குமுள்ள தொடர்பினை நோக்கியே தொல்காப்பியர் ''பாடல் சான்ற'' என்ற அடியினை இச்சூத்திரத்தில் அமைத்தார் எனலாம். பரிபாடலுக்கு நல்லச் சுதனார், கண்ணகனார் போன்றோர் இசை வகுத்துள்ளமை இங்கு குறிப்பிடற்பாலது. பாடல் சான்ற என்ற சூத்திர அடிக்கு உரையாசிரியர்கள் எவரும் தெளிவாகப் பொருள் கூறினாரில்லை. தொல்

[23] எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி, பக். 110.

காப்பியர் ''புலனெறி வழக்கம்'' என்று குறிப்பிடுவதாலே செய்யுள் செய்தல் என்ற பொருள் குறிப்பிடப்பட்டுவிட்டது. அப்படியெனில் ''பாடல்''என்ற மற்றொரு சொல்லினை அவர் அச்சூத்திரத்திலே யமைக்க வேண்டியதில்லை. ஆகவே, ''பாடல்'' என்ற சொல் அங்கு ஒரு விசேடப் பொருளில் வழங்கும்படியாக அவர் அமைத்திருக்கின்றார் என்று கொள்ளலாம். பாடல் சான்ற என்ற அடிக்கு இசையுடன் பாடுதற்கமைந்த என்ற பொருளினைக் கொள்ளுவதே பொருத்தமெனக் கூறலாம்.

7. காமங் கண்ணிய வையைப் பாடல்களும் சூத்திரம் எழுந்த காலமும்

7.1. தொல்காப்பியர் செய்யுளியலிற் பரிபாட்டினைக் காமங் கண்ணிய யாப்பு என்று குறிப்பிட்டு, அகத்திணையியலில் அது நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும் பொருந்திவரும் புலனெறி வழக்குக்கு உரியது எனக்கூறுவர். தற்போதுள்ள பரிபாடல் நூலிலுள்ள பாடல்கள் தொல்காப்பியர் கருத்திற்கமையாது கடவுள் வாழ்த்துப் பொருள் கொண்டனவாகவும் அமைந்துள்ளன. இக்கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பிற்காலத்தனவாகையாலும், தொல்காப்பியர் இப்பரிபாடல் நூற்பாக்களை நோக்கி இச்சூத்திரம் அமைத்திருக்க முடியாது எனக் கருதலாம். ஆனால், பரிபாடல் நூலிலே காணப்படும் பாடல்கள் யாவும் ஒரே காலத்தில் எழுந்தன என்று கொள்வதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை. காமத்தினையே பொருளாகக் கொண்ட வையைப்பாடல்களும், காமமும் கடவுள் வாழ்த்தும் விரவி வந்துள்ள செவ்வேள் பாடல்களும்,[24] கடவுள் வாழ்த்து மட்டுமே பொருளாயுடைய திருமால், செவ்வேள் பற்றிய பாடல்களும் பரிபாடல் நூலிலே காணப்படுகின்றன. காமத்தை மட்டுமே பொருளாகக் கொண்டு பாடப்படும் பரிபாட்டு, காலகதியில் காமத்தினையும் கடவுள் வாழ்த்தினையும் ஒருங்கு சேரப் பாடுதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும். பின்பு காலஞ்செல்லக் கடவுள் வாழ்த்துப் பாடுதற்கே இது சிறந்த பாவாகக் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆகவே, தற்போது எமக்குக் கிடைக்கும் பரிபாடல் நூல் பல காலங்களாகப் பல மாற்றங்களுடன் பாடப்பட்ட பரிபாட்டுக்களின் தொகுப்பு நூல் என்று கொள்வதே பொருத்தமாகும். ஆகவே, காமங்கண்ணி வந்த வையைப் பாடல்கள் தோன்றிய பின்னரும் ஏனைய பரிபாடற் பாடல்கள் தோன்றுவதற்கு முன்னரும் தொல்காப்பியர் இச்சூத்திரத்தினை அமைத்திருக்கவேண்டும்.

[24] பரிபாடல், செவ்வேள் பற்றிய 5ம், 14ம் பாடல்களைத் தவிர ஏனைய 8ம், 9ம், 17ம், 18ம், 19ம், 21ம் செய்யுட்கள் யாவற்றிலும் அகப்பொருளும் கடவுள் வாழ்த்துப் பொருளும் விரவி வந்துள்ளன.

7.2. கலித்தொகைப் பாடல்களும் பரிபாடலிலுள்ள வையைப் பாடல்களும் எழுந்த பின்னரே தொல்காப்பியர் ''நாடக வழக்கினும்....'' என்ற சூத்திரத்தை அமைத்திருக்க வேண்டுமென்பதை இதுகாறும் இக்கட்டுரையிற் கூறியவற்றிலிருந்து உணர்ந்துகொள்ளலாம். இவ்விடத்திலே பேராசிரியர் வி செல்வநாயகம் கூறும் கருத்தினை நோக்குதல் பொருத்தமாகும். அவர்,

> ''முதலில் அகவலோசையில் அகத்திணைச் செய்யுட்கள் இயற்றப்பட்டபின்பே கலியோசையிலும் பரிபாட்டிலும் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்பது செய்யுளோசையின் வளர்ச்சிக்கிரமத்தை நோக்குவார்க்கு நன்கு புலனாகும். எல்லாச் செய்யுளோசைகளுக்கும் தாயகமாயுள்ளவை அகவல், வெண்பாவென்னும் மூலவோசைகள்.... அகத்திணைச் செய்யுள் மரபு ஆரம்பித்த காலத்தில், அகத்திணைச் செய்யுட்கள் யாவும் அம்மூலவோசைகளிலே தோன்றி வளர்ச்சியடைந்த பின்னரே கலியிலும் பரிபாட்டிலும் அமையலாயினவென நாம் கொள்ளுதல் பிழையாகாது. ஆகவே, அகவலிலே அகத்திணைப் பொருள் அமையும் மரபு வழக்கொழிந்த காலத்திலேயே 'நாடக வழக்கினும்....' என்னும் பொருளதிகாரச் சூத்திரம் எழுந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்''[25]

என்று கூறுகிறார். அவருடைய கூற்று எம்முடைய கருத்துக்களைத் தொகுத்து இரத்தினச் சுருக்கமாகக் கூறுகின்றதெனக் கொள்ளலாம்.

8. முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால் தொல்காப்பியர் கலித்தொகைச் செய்யுட்கள், பரிபாடலிலுள்ள வையைப் பாடல்கள் ஆகியனவற்றை நோக்கியும், அவற்றிலுள்ள நாடகப் பண்பு, உலகியற் பண்பு, இசைப் பண்பு என்பனவற்றை உணர்ந்துமே இச்சூத்திரத்தை அமைத்துள்ளார் என்று கொள்ளுதலே பெரிதும் ஏற்புடைத்தாகும் என்பது ஒருவாறு தெளிவாக்கப்பட்டுள்ளது.

மேற்கோள்களாக எடுத்தாண்ட நூல்கள் அவற்றின் ஆசிரியர்கள் ஆகியவற்றின் தொகுப்பு

1. இளம்பூரணர்—தொல்காப்பிய உரை.
2. ஐங்குறுநூறு—தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் மேற்கோள்.
3. கலித்தொகை—தமிழ்ச் சங்க வெளியீடு, சென்னை, 1958.

[25] வி. செல்வநாயகம், தமிழ் இலக்கிய வரலாறு, பக். 60, 61.

4. செல்வநாயகம், வி.—தமிழ் இலக்கிய வரலாறு, சிறீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம், நான்காம் பதிப்பு, 1965.

5. சோமசுந்தரபாரதியார், ச.—தொல்காப்பியப் பொருட்படலம், அகத்திணையியலும், புதிய உரையும், மதுரை, முதற் பதிப்பு, 1942.

6. சோமசுந்தரனார், பொ. வே.—பரிபாடல், கழக வெளியீடு, அணிந்துரை.

7. தொல்காப்பியர்—பொருளதிகாரம், நச்சினார்க்கினியம், கணேசையர் பதிப்பு, சுன்னாகம், 1948.

தொல்காப்பியர்—பொருளதிகாரம், பேராசிரியம், கணேசையர் பதிப்பு, சுன்னாகம், 1943.

தொல்காப்பியர்—பொருளதிகாரம், செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு.

தொல்காப்பியர்—பொருளதிகாரம், இளம்பூரணம்.

8. நச்சினார்க்கினியர்—தொல்காப்பிய உரை.

9. பரிபாடல்—கழக வெளியீடு, 1957.

10. வீரசோழியம், பெருந்தேவனார் உரை, கழக வெளியீடு.

11. வையாபுரிப்பிள்ளை, எஸ்.—தமிழின் மறுமலர்ச்சி, பாரி நிலையம், சென்னை. இரண்டாம் பதிப்பு, 1953.

12. A. Chidamparanathan Chettiyar. Advanced Studies in Tamil Prosody, Annamalai University Press, Annamalainagar, Reprinted in 1957.

பல பொருள் பற்றிய ஐயங்கள்

மெ. சிதம்பரம்*

இலக்கியம்

திருக்குறளில் ஒரு பாட்டு

''பெறின்என்னும் பெற்றக்கால் என்னும் உறினென்னும்
உள்ளம் உடைந்துக்கக் கால்.''

இது திருக்குறள், காமத்துப்பாலில், அவர்வயின் விதும்பல் என்னும் 127ஆம் அதிகாரத்தில் உள்ள இறுதிச் செய்யுள். இதன் பொருளும் இதற்குப் பரிமேலழகர் எழுதியுள்ள விளக்கமும் ஆராய்ச்சிக்கு உரியனவாக உள்ளன. முதலில் உரைகளைப் பார்ப்போம்.

பரிமேலழகர் உரை

காதலி, நம் பிரிவினை ஆற்றாது, உள்ளம் உடைந்து, இறந்து பட்டவழி, பெறக்கடவள் ஆனாலென்? அது வன்றியே பெற்றாலென்? அதுவன்றியே மெய்யுறக் கலந்தாலென்? இவையொன்றானும் பயனில்லை.

இவை மூன்றும் உடம்போடு புணர்த்துக் கூறப்பட்டன. அதன் மேலும் முன்னை வழக்கு உண்மையின், அதற்கு முன்னே யான் செல்ல வேண்டும் என்பது கருத்தாகலின் விதுப்பாயிற்று, இது தலைமகள் கூற்றாயவழி, இரங்கல் ஆவதல்லது, விதுப்பாகாமை அறிக.

வை. மு. ச. விளக்கம்

(குறள், பரிமேலழகர் விளக்க உரை, பக்கம் **133**, காமத்துப்பால்.)

பரிமேலழகரின் இந்த உரைக்கு வை. மு. சடகோப ராமானுஜா சாரியார் எழுதிய விளக்கம் வருமாறு:

தலைவி இறந்துபடுவதை வெளிப்படையாகக் கூறாமல், உள்ளமுடைந்துக்கக் கால் என்பதனால் குறிப்பித்தான் என்க.

---

*துணை ஆசிரியர், 'தமிழ் முரசு', சிங்கப்பூர்.

இந்தக் குறளின் விசேட உரையில், இம்மூன்றும் உடம்போடு புணர்த்துக் கூறப்பட்டன. அதன் மேலும் முன்னை வழக்கு உண்மையின் என்ற சொற்றொடர்க்குப் பொருள் விளங்காமையால், பாஷா கவிசேகரர், சேதுசமஸ்தான வித்வான் ரா. ராகவையங்கார் சுவாமிகளை வினவினேன்.

அந்த ஸ்வாமி அருளிய விடை வருமாறு

குறளில், உக்கக்கால் என்பதற்கு, இறந்துபட்டவழி என்றதனால் உள்ளது உடம்புதான் என்று கருதிப், ''பெறிலென், பெற்றக்காலென், உறின்என்'' என்ற இம்மூன்றும் உடம்பொடு சேர்த்துக கூறப்பட்டன என்று கொண்டவர் ஆவர். அதன் மேலும் முன்னை வழக்குண்மையின் என்புழி, அதன் மேலும் என்றது, அவ்வுடம்பின் மேலும் என்றவாறு. முன்னை வழக்கு என்பது உயிருள்ள போழ்தின் வழக்கு என்றவாறு. உண்மையின் என்பது, நூலினும் உலகத்திலும் உண்டாதலால் என்றவாறு. உயிர்நீத்தொரு மகன் கிடந்தான் எனவும் படுமகன் கிடக்கை காணூஉ எனவும் வருவன காண்க. இக்குறளில், இறந்துபட்டவழிப் பெறக் கடவளானல், என்று கூறினுைதலால் இக்கருத்தை எளிதில் அறியலாம்.

இறந்துபட்டவழி, உடம்பு பெறக்கடவதானல், என்பதன்றே, இயைபு உடைத்தெனின், அற்றன்று. அவ்வுடம்பின் மேலும் இறந்ததற்கு முன்னை வழக்கு நிகழ்தல் உண்டென்று விளக்கினர் என்க.

என்னிடம் உள்ள பரிமேலழகர் உரை பழைய ஏட்டில், உடம்பொடு கூறப்பட்டன, என்றே உள்ளது. இதனல் இஃது உத்தி அன்று என்பது தெளியப்படும். என் ஏட்டில், ''உறின் என்'' என்பதற்கு மெய்யுறக் கலந்தாற்றுன் என், மெய்யுறக் கலவாதொழியினென் என்று கூறப்பட்டுள்ளது என்பது.

இனி ஒரு சாரார், இந்தக் குறளில் அசை நிலையாகிய, ஆம் என்பது மூன்று வந்திருப்பதைச் சமர்த்திக்க வந்தது இந்த வாக்கியம் என்பர்.

அவர் உரைக்குமாறு

ஆமென்பது மூன்றும் ஒரு குறட்பாவிற் கூறப்பட்டன. மூன்றற்கு மேலும் ஓர் அசைச் சொல்லைச் சேர்த்துக் கூறலும் செய்யுள் வழக்கில் உண்டு என்பது. மற்றொரு சாரார், உத்தியாகவே கொண்டு, பொருள் கூறுவது பொருந்துமா என்பதனையும் ஆராய்க.

உள்ள முடைந்துக்கக்கால், தலைமகள் பெறக் கடவளாதல் முதலியவற்றல் பயனின்று ஆதலால், அதற்கு முன்னமே செல்ல வேண்டுமென்றுன் என இதில் காட்சி விரைவு விளங்குவதால், இது விதுப்

பாகும். இங்ஙனமன்றித் தலைவி, தலைவனைப் பற்றிக் கூறியதாகக் கொள்ளின், ''உள்ள முடைந்துக்கக்கால், பெறின் என்னும் என்று கூறுதல் இரங்குதலில் சேர்வதன்றி விதுப்பாகாது. ஆகவே இப்பாடலையும் கீழிரண்டு பாடல்களைப் போலவே, தலைவன் கூற்றாகக் கொள்ளுவதே பொருத்தமாம் என்பது பரிமேலழகர் கூறியதன் பொருள்.

இதுவரை வை. மு. ச. வின் விளக்கத்தைப் பார்த்தோம். இனிப் பழைய உரையாசிரியர்களின் உரைகளைப் பார்ப்போம்.

மணக்குடவர்

எனது உள்ளம் உடைந்து போயின் பின்பு அவரைப் பெறுவேம் என்று இருந்ததனால் பயன் என்னுண்டாம்? முன்பே பெற்றேமானேம். அதனால் பயன் என்னுண்டாம்? இப்பொழுது உற்றேமாயின் அதனாற்பயன் என்னுண்டாம் என்றவாறு, இது வருவாரென்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதியார்

நாயகர் வந்தால் என்ன? காதலின்பம் விளைந்தால் என்ன பயன்? பக்குவம் தப்பி உள்ளம் உடைந்து உக்கிப் போன தினமே என்றவாறு.

காளிங்கர்

தோழி: காலை, பகல், மாலை என்னும் முக்காலங்களிலும் யாம் அவரை எய்தப் பெறுவேமாயினும் என்? மற்றும் பெற்றேமாயினும் என்னும்? மற்றும் அதன் முன்னமே உள்ளமானது உடைந்து உக்ககாலத்து என்றவாறு. உறின் என்பது இன்புறுதல் என்பது.

தண்டபாணி தேசிகர் விளக்கம்

இனிப் பரிமேலழகர் உரைக்கும் மணக்குடவர் முதலியோர் உரைக்கும் திருக்குறள், உரைவளம், காமத்துப்பாலில் தொகுப்பாசிரியர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் எழுதியுள்ள விளக்கத்தைப் பார்ப்போம். (பக்கம் 275-276)

பெறின், பெற்றக்கால், உறின் என்பன மூன்றும் எதிர்கால வினையெச்சங்கள். அடைந்தால் என்னும் பொருளனவே. பரிமேலழகர் இம்மூன்றுக்கும் வேற்றுமை உண்மையை விளக்க உளங்கொண்டு, பெறின் என்பதற்குப் பெறக் கடவளாதல் எனத் தலைவி மேலதாயும், பெற்றக்கால் என்பதற்குப் பெற்றால் எனவும், உறின் என்பதற்கு மெய்யுற்றால் எனவும் தலைவன் வினையாகவும் பொருள்

கண்டார். விசேடவுரையில் இம்மூன்றும் உடம்பொடு புணர்த்துக் கூறப்பட்டன என்ருர். உடம்பொடு புணர்த்துக் கூறுதல், உத்தியுள் ஒன்ருக உரையிற்கோடலால் கொள்ளப்பெற்ற ஒன்று.

இதன் இலக்கணமாவது, கூறும் இலக்கியத்திலேயே, இலக்கணமும் பெற வைத்தல் அஃதாவது எழுத்ததிகாரத்து, எழுத்துக்கட்குப் பிறப்பு, வன்மை, மென்மை முதலியவை கூறவே, உரு என்பதொன்று உண்டு என்னும் இலக்கணமும் கொள்ள வைத்தாற் போல்வது.

கோ. வடிவேலுச் செட்டியாரவர்கள், கூறவேண்டிய அருத்தத்தை வெளிப்படையாகக் கூருது தான் கூறுவதன் குறிப்பினுல் விளங்கச் செய்வது இது. பெறின் முதலிய மூன்றும் உடன் கூறியதனுல் தலைவன் பிரிந்தவழி தலைவி இறந்துபடும் வழக்கு உண்மையை உணர்த்தியதாம் என்பர்.

சடகோப ராமானுஜாசாரியார் குறிப்பில், உள்ளம் உக்கவிடத்து இருப்பது உடம்பு ஒன்றுமே யாதலால், அதனெடு சேர்த்துப் பெறின் முதலிய மூன்றனையும் கூறியதாகப் பாஷா கவிசேகர ரா. ராகவையங்கார் கூறியதாகக் குறிப்பித்தனர். இம்மூன்று கருத்துக்களுள் ரா. ராகவையங்கார் கருத்துத் தெளிவாக இருப்பது காண்க.

பரிதியார், மனம் உடைந்து சிதறிய விடத்து மனங்கூடாத நாயகரைப் பெற்ருல் என்ன, பெருவிடில் என்ன என்று உரை காண்பர்.

இவ்வுரைக்கு இவர் கொண்ட பாடம், பெற்றக்கால் என்னும் பெருவிடில் என்னும் என்று இருக்கும் போலும். இந்தப் பாடம் இருப்பின் பெறின் பெற்றக் கால், உறின் என்ற ஒரு பொருள் தரும் சொல் மூன்றிற்கும் வேற்றுமை தோன்றப் பொருள் கற்பிக்கும் சிரமமும் குறையலாம்.

ரா. ராகவையங்கார் அவர்கள் சொல்லிய குறிப்பிலும், ''அதன் மேலும் வழக்கு உண்மையின் என்பது விளக்கம் இல்லாமை சிந்தித்தற்கு உரியது. இங்ஙனமன்றித் தலைவிக்கு மனம் உடைந்து சிதறியவிடத்துத் தலைவனுய தன்னை அவள் பெற்ருலும் உற்ருலும் என்ன பயன் என்றும் அடையலாம் என்ற முயற்சி சிதறிக்கெட்ட பிறகு பயன் என்ன என்றும் உயிர்கெட்டுச் சிதறி வெளிப்பட்ட பிறகு பயன் என்ன என்றும் உரை காண்டலும் உண்டு. உள்ளம் உயிராதலைக் காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் என்ற சிவஞான போதச் சூத்திரம் கொண்டு துணியலாம்.

இது திரு. தண்டபாணி தேசிகரின் விளக்கம்.

(இனி ஆங்கில மொழி பெயர்ப்புகளைப் பார்ப்போம்.)

எம். ஆர். இராசகோபால் ஐயங்கார்

If the heart is broken, of what avail is the hope of return or re-union or even the embrace ?

V. V. S. Iyar

Of what avail will be my getting back or the meeting or even the hearty embrace, if the heart of my loved one be broken before then ?

Rev. Drew and John Lazarus

After my wife has died of a broken heart, what good will there be, if she is to receive me, has received me or has even embraced me ?

கா. சு. பிள்ளை

பிரிவு, பொருது மனமுடைந்து காதலி இறந்துபடுவாளாயின் அவளைப் பெறக் கூடுமானாலும் பெற்றாலும் என்ன பயன் உண்டு. பயன் யாதுமில்லை.

பழமொழி நானூற்றில் ஒரு பாட்டு

பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழி நானூற்றில் 'நன்றியில் செல்வம்' என்னும் அதிகாரத்தில் வருகிற 11-வது பாட்டு ஆராய்ச்சிக்கு உரியதாக உள்ளது. இடையன் எறிந்த மரம் என்னும் பழமொழி அமைந்த அந்தப் பாடல் வருமாறு:

அடையப் பயின்றார்சொல் ஆற்றுவராக் கேட்டால்
உடையதொன் றில்லாமை யொட்டின் படைபெற்
றடைய அமர்த்தகண் பைந்தொடீ அஃதால்
இடைய னெறிந்த மரம்.

இந்தப் பாட்டுக்குப் புலவர் மா. இராசமாணிக்கம் பிள்ளை, வித்துவான் மி. பொன். இராமநாதஞ் செட்டியார், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் ஆகிய பெருமக்கள் மூவரும் மூன்று விதமாக உரை கூறியுள்ளனர். அவற்றை இங்கே தருகிறேன்.

(அ) இராசமாணிக்கம் பிள்ளை உரை

(கழக வெளியீடு).

சொற்பொருள் : வேலினது தன்மையைப் பெற்று, முகம் முழுதும் நிறைந்திருக்கின்ற கண்களையும் பசிய தொடியையும் உடையாய்! மிகவும் நெருங்கிப் பழகியவர்கள், தமக்கொன்று வேண்டியதாகக் கூறுஞ் சொற்களைக் கேட்டால், தன்னிடத்தில் இல்லாத அப்பொருளைத் தன்னிடத்து உள்ளது ஒன்றாகவும் அதனைச் செய்வாராகவும் உறுதியாகக் கூறினால், அங்ஙனம் கூறுதல், இடையனால்

வெட்டப்பட்ட மரத்தினை ஒக்கும். **அடையப் பயின்றார் - மிகவும்** நெருங்கிப் பழகியவர்கள். சொல் கேட்டால்—தமக்கொன்று வேண்டியதாகக் கூறுஞ் சொற்களைக் கேட்டால், இல்லாமை தன்னிடத்திலில்லாத அப்பொருளை உடையது ஒன்று, தன்னிடத்து உள்ளது ஒன்றாகவும், ஆற்றுவரா - அதனைச் செய்வாராகவும், ஒட்டின்-உறுதியாகக் கூறினால், அஃது-அங்ஙனம் கூறுதல், இடையன் எறிந்த மரம்-இடையனால் வெட்டப்பட்ட மரத்தினை ஒக்கும்.

கருத்து: முடியாத செயலை முடியும் என்று கூறற்க.

விளக்கம்: அடையப் பயின்றார் என்றது தன்னோடு மிகவும் நெருங்கிப் பழகினமையால், கூறியன தட்டமுடியாதாரை, ஒட்டின் என்றது, அவர் மீதுள்ள அன்பினால் எதுவாயினும் அவர் விரும்பியன தன்னிடத்துளதாகவும் அதனைக் கொடுப்பதாகவும் உறுதி கூறுதலை. இடையன் தழை பெறும் பொருட்டு நாடொறும் மரத்தினைச் சிறிது சிறிதாகக் குறைப்பான். இஃது இடையன் எறிந்த மரம் எனப்பட்டது. இடையனால் எறியப்பட்ட மரம் நாடோறும் குறைந்து வருதல் போலத் தன்னிடத்து இல்லாததை உளதாகக் கூறுதலால், ஒருவன் புகழ் அதன் வாயிலாகக் குறைந்து கொண்டே போகும் என்பதாம். இடையனால் தழை வெட்டப்படுதல் போல இல்லாததை உளதாகக் கூறுதலால், புகழ் குறைக்கப்படும். ஒல்லாததை ஒல்லுமென்றலும் புகழ் குறைபடூஉம் வாயில் அத்தை என்பதே இக்கருத்தாம். இடையன் எறிந்த மரம் என்பது பழமொழி.

(ஆ) பொன். இராமநாதன் செட்டியார் உரை

(பழனியப்பா பிரதர்ஸ்)

நெருங்கிப் பழகினவர் தமக்கு ஏதேனும் வேண்டுமென்று கூறிய சொல்லைக் கேட்டால், அது தம்மிடம் இல்லாதிருப்பினும் இருப்பதொரு பொருளைப் போல, (அவர்க்குக்) கொடுப்பதாக உடன்பட்டால் அது (ஆடுகளின் உணவுக்காக) இடையன் ஒடித்துச் சாய்த்த மரத்தினை ஒப்பதாகும். அடையப்பயின்றார்—நெருங்கிப் பழகியவர். ஆற்றுவரா—செய்யக்கூடியவர் போன்றவராக. உடையதொன்று—உடையதாகிய ஒரு பொருளைப் போன்று. இல்லாமை—இல்லாதிருந்தும், ஒட்டின் - உடன்பட்டால், எறிந்த—வெட்டிச் சாய்த்த—காரணவாகு பெயர். பைந்தொடி! சொல் கேட்டால், இல்லாமை உடையது ஒன்று ஒட்டின், அஃது மரம் எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

விளக்கம்: இடையன் ஒடித்தலால், உள்ளே தண்டு ஒடியப்பெற்ற மேற்புறத்தில் பட்டை மட்டும் ஒட்டிக்கொண்டு சாய்ந்திருக்கும் மரக்கிளை, அடியோடு பட்டும் போகாது, மற்றக் கிளைகளைப்போல், நன்றாகப் பசுமையுற்றுமிராது., இடைநிகர்த்ததாய் இருத்தல் போல, இல்லாத பொருளை இருப்பது போன்று நம்புவித்துக்

கொடுப்பதாகக் கூறிய சொல்லைக் கேட்ட நண்பர், அதைப் பெற்றதனால் உண்டான மகிழ்ச்சியோ-பெருமையால் உண்டான வருத்தமோ இன்றி இடைப்பட்ட நிலையில் இரங்கி நிற்பர் என்பது கருத்து.

(இ) டாக்டர் உ. வே. சா. விளக்கம்

மனமறிந்து முற்றும் நம்மோடு பழகினவர் நம்மிடமிருந்து ஓர் உபகாரத்தை எதிர்பார்க்கிறார். வாய் விட்டும் சொல்லிக் கேட்டு விடுகிறார். அவர் கேட்கும்போது தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டு அந்த உபகாரத்தைச் செய்வதாக நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அவர் கேட்கும் பொருளோ நம்மிடத்தில் இல்லை. கேட்பவர் நெடுநாளாகப் பழகியவர். நாமோ வாக்குக் கொடுத்து விட்டோம். நம்முடைய அளவை முன்பே நன்றாக யோசனை செய்யாமல் அவருக்கு ஒரு நம்பிக்கையை உண்டாக்கி விட்டோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் தத்தளிக்கிறோம். ''முடியாது'' என்று கடைசியில் சொல்லுவது நியாயமாகத் தோன்றுவதில்லை. இந்த மாதிரியான தர்மசங்கட நிலையை ஓர் உபமானம் நன்றாக விளக்குகிறது. ''நாம் இடையன் எறிந்த மரம்போல'' இருக்கிறோம். உபகாரத்தை மறுப்பதற்கும் இல்லை. செய்வதற்கும் இல்லை. இந்த விஷயத்தையே பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகிய பழமொழி என்பதிலுள்ள ஒரு செய்யுள் தெரிவிக்கின்றது.

மரத்தை வெட்டும்போது, கிளை அடியோடு விழும்படி வெட்டினால் என்ன? என்று நான் கேட்டேன்.

''அப்படி வெட்டிவிட்டால் அந்தக் கிளை பிறகு உபயோகமில்லாமற் போய்விடும். நாங்கள் வெட்டும் கிளையோ மரத்தோடு ஒட்டிக் கொண்டிருப்பதால் மறுபடியும் தழைக்கும்.''

''இடையன் எறிந்த மரம் முழுவதும் அறாமல் அரைகுறையாக உயிர் வைத்துக் கொண்டிருக்கும்'' என்ற எண்ணத்தை அவன் கூறிய விடை உண்டாக்கியது. அதனைத் தொடர்ந்தவாறே ''இடையன் மகன் கொன்றவின்னா மரத்தினேன்'' (1914) என்ற சீவக சிந்தாமணி அடி ஞாபகத்திற்கு வந்தது. சீவகன் தன்னுடைய தாயைப் பார்த்துத் தன் நிலையை'' நான் என் தந்தை மரணமடையப் பின் பிறந்தேன்; அன்றியும் நீ துன்பத்தில் தங்கவும் நட்புடையவர்கள் மனம் வருந்தவும் இடைமகன் கொன்ற இன்னா மரம் போல இருந்தேன்'' என்னும் சொற்களால் விளக்குகிறான்.

நச்சினார்க்கினியர் அந்த உவமையை விரித்து ''உயிருடன் இருந்தேனாய்ப் பகையை வென்றேனுமல்லேன், உயிரை நீத்தேனுமல்லேனென்று கருதி மரத்தினேன் என்றான்'' என்று விசேடவுரை எழுதுகின்றார். அவ்வுரை இடையன் கொன்ற மரத்தின் தன்மையை நன்கு விளக்குகிறது.

அந்த இடையன் சொல்லி வந்த செய்திகள் இலக்கியப் பொருளைத் தெளிவாக விளக்கின. இலக்கியங்களில் இடையர்களைப் பற்றி வருணிக்கும் இடங்களில் ''ஒடி யெறிதல்'' என ஒரு தொடர் வரும். ''ஒடிய எறிதல்'' என்பதே அவ்வாறு விகாரப்பட்டு வந்தது. இடையர்கள் ஒடிய எறிவார்களே அன்றி அற்றுவிடும்படி எறியார்கள் என்பதை அத்தொடர் குறிப்பதை அப்போது தெளிவாக நான் உணர்ந்தேன்.

''அவ்வளவு ஜாக்கிரதையாக வெட்டுவது கஷ்டமல்லவா?'' நான் கேட்டேன்.

''அது கைப்பழக்கம். இல்லாவிட்டால் பழமொழி வருமா'' என்றான் அவன். பழமொழியா? என்ன அது?'' என்று ஆவலுடன் வினவினேன்.

'''இடையன் வெட்டு அரு வெட்டு' என்ற பழமொழியைத்தான் சொல்லுகிறேன், எங்கள் கைப்பழக்கத்தை அந்தப் பழமொழி தெரிவிக்கிறதே''. (நினைவு மஞ்சரி முதற்பாகம்—1957ஆம் ஆண்டு 4ம் பதிப்பு, பக்கம் 32-34).

இலக்கணம்

1. உண்மைப் பொருளும் உடைமைப் பொருளும்

(செந்தமிழ்ச் செல்வி 1959 மார்ச், மகா வித்துவான் மறைத் திரு. சி. கணேச ஐயர் அவர்கள். பக்கம் 323).

உண்மைப் பொருள், உடைமைப் பொருள் எனப் பொருள்கள் இருவகைப்படும். உடைமைப் பொருளைக் கூறும்பொழுதுதான் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ உருபை விரித்துப் பொருள் கூறுதல் வேண்டும். உண்மைப் பொருளைக் கூறுமிடத்து ஐ உருபு விரித்துப் பொருள் கூறவமையாது. சிவபிரானின் முகங்களும் கரங்களும் உண்மைப் பொருள்களாதலின் ஐ உருபை விரியாது விளங்கா நின்ற பத்துத் திருக்கரங்களும் உள்ள சிவபிரான் என்று கூற வேண்டும்.

இவ்விளக்கம் இலங்கையைச் சேர்ந்த பெரும் புலவர், வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப் பிள்ளை அவர்கள் கூறியதாகும். திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான் என்னும் கந்த புராணக் காப்புச் செய்யுளுக்கு உரை கூறிய இலங்கை மகாவித்துவான் மறைத் திரு. சி. கணேச ஐயர், தாம் சிறுவனாக இருந்தபோது, தாம் படித்தபடியே விளங்காநின்ற பத்துத் திருக்கரங்களையும் செவ்விய ஐந்து முகங்களையுமுடைய சிவபிரான் என உரை கூறினர். அப்போது தான் திரு. பிள்ளையவர்கள் மேற்கூறியவாறு விளக்கம் கூறினார்.

ஆனால் உரையாசிரியர்களில் பலரும் முகங்களை உடைய கண்களை உடைய என்றே உரை கூறியுள்ளனர். பாண்டியன் அறிவுடை

நம்பி என்னும் பெயரும் இங்கே கவனிக்கத் தக்கதாகும். அறிவு உண்மைப் பொருளேயன்றி உடைமைப் பொருளாகாது ஆதலால் இது ஆராயத்தக்கதாகும்.

2. இன்மையும் அன்மையும்

இக்காலத்தில் பெரும்பாலோர் அறிஞருள்ளும் பலர், இன்மை அன்மை வேறுபாடு கருதாமலே எழுதுகின்றனர். ஆனல் இவ்விரண்டும் அடிப்படையில் பொருள் வேறுபாடு உள்ளனவாகும். அதனை இங்கே பார்ப்போம்.

ஆறுமுக நாவலர் விளக்கம்

(இலக்கணச் சுருக்கம் 25ம் பதிப்பு, பக்கம் 134-135).

இன்மை என்பது ஒரு பொருளினது உண்மைக்கும் ஒரு பொருளை உடைமைக்கும் மறுதலை. உண்மை உளதாதல்.

எடுத்துக்காட்டு

உண்மை	இன்மை
இங்கே சாத்தன் உளன்.	இங்கே சாத்தன் இலன்.
இவனிடத்தே அறமுண்டு.	இவனிடத்து அறமின்று.

உடைமை	இன்மை
இவன் பொருள் உடையன்	இவன் பொருளிலன்
இது குணமுடையது.	இது குணமில்லது.

அன்மை: என்பது ஒரு பொருள், சுட்டியதொரு பொருளாதற்கு மறுதலை. பிறிது பொருளாதலைக் காட்டும் என்றபடி.

எடுத்துக்காட்டு

இவன் சாத்தனல்லன் (கொற்றன்)
இஃது அறனன்று (மறம்).

வை. மு. சடகோப ராமானுஜாசார்ய சுவாமிகள் விளக்கம்

திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு விளக்கம். பக்கம் 109, அறத்துப்பால் 17ம் அதிகாரம். குறள் விழுப்பேற்றின் அஃதொப்ப.

அன்மை, ஒரு பொருளை மறுத்து அதற்கு இனமானதைச் சொல்வதென்றும் இன்மை, இல்லாததைச் சொல்வதென்றும் வேறுபாடறிக.

இத்துணை வேறுபாடு இருந்தாலும் அது இயல்புமில்லை. அது தேவையில்லை. அது சிறப்பில்லை. அவன் என் தம்பியில்லை. அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை என்றே எழுதுகின்றனர். இவை

முறையே அது இயல்புமன்று, அது தேவையன்று, அது சிறப்பன்று, அவன் என் தம்பி அல்லன். அது வெறும் புகழ்ச்சியன்று என்று அமைந்திருப்பதே சரியாகும்.

ஒருமை-பன்மை

(1) அவை இங்கே வரக்கூடா
அவை இங்கே வரக்கூடாது.

(2) அவை தனித்தியங்கவியலாது.

இவற்றில் எவை சரியானவை. அவை இங்கே வரக்கூடாது என்பதும் அவை தனித்தியங்கவியலாது என்பதுமே சரியாகும். ஏனெனில் இச்சொற்றொடர்களில் எழுவாய் அவை என்னும் பன்மைச் சொல்லன்று. வர, இயங்க என நிகழ்கால வினை எச்ச வடிவில் நிற்கிற சொற்களே எழுவாயாகும். இவற்றை முறையே வருதல், இயங்குதல் எனத் திரித்தல் வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டு:- எனக்குப் பாட்டுப் பாடத் தெரியும் என்பதில் பாட என்பது பாடுதல் எனப் பொருள்படுவதைக் காணலாம். வினையெச்சம் எழுவாயாகவும் செயப்படு பொருளாகவும் வருதலுண்டு. அறஞ் செய விரும்பு என்பதில் செய என்பது செய்தலைக் குறித்துச் செயப்படு பொருளாதல் காணலாம். இந்த விதியைக் கருதாமல் அவை வரக்கூடா. அவை தனித்தியங்கவியலா என எழுதுவது பிழையாகும். ஏனெனில் அவர்கள் வரக் கூடார் என நாம் சொல்வதில்லை.

சொல்லாராய்ச்சி

வேலியூஸ் (Values) என்னும் ஆங்கிலப் பன்மைச் சொல்லுக்குத் தமிழில் சரியான சொல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பெரும்பாலோர் இதனை மதிப்புஎன்றே மொழிபெயர்த்துள்ளனர். இது பிழையாகும். இந்தச் சொல் பண்பாட்டையும் பெருநிலையையும் முடிந்த நிலையினையும் குறிப்பதாகும். காலஞ்சென்ற ராவ்சாகிப் வெள்ளக்கால் சுப்ரமணிய முதலியாரவர்கள் இச்சொல்லைப் புருஷார்த்தம் என மொழிபெயர்த்துள்ளார்கள். புருஷார்த்தம் என்பது தமிழில் உறுதிப்பொருள் எனப்படும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை உறுதிப் பொருள் என்பது தமிழ் மரபு. வேலியூஸ் என்னும் சொல் இவற்றையும் இவற்றை ஒத்த சிறப்பு நிலைகளையுமே குறிக்கிறது. அறிஞர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் பெருஞ்சுட்டு என்று இச்சொல்லை மொழிபெயர்த்திருப்பதாக அறிகிறேன். பெருஞ்சுட்டு என்னும் சொல் குமரகுருபரர் இயற்றிய நீதிநெறி விளக்கத்தின் 20வது செய்யுளில் வருகிறது. பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் என்னும் அந்தச் செய்யுளில் இச்சொல் பெருமதிப்பு என்னும் பொருளில் வருகின்றது. இதுவும் பொருத்தமான சொல்லே. என்றாலும் மரபு வழிப்பட்ட உறுதிப் பொருள் என்னும் சொல் பெரிதும் பொருத்தமாகும்.

ஊடல்

வெ. தெ. மாணிக்கம்*

1. தமிழ் மொழி சிறந்த இலக்கிய இலக்கணங்களைப் பெற்றிருப்பதோடு தொன்றுதொட்டு இன்றுவரை மொழியமைப்பில் பெரு மாற்றம் ஏதுமின்றிப் பேச்சு வழக்கிலும் இருந்து வருகிறது. ஆதலின் சொல்வளமும் பொருட்சிறப்பும் உடையது. இக்கால அறிவியற் கருத்துக்களை விளக்குவதற்குப் போதிய கலைச்சொற்கள் வேண்டுமளவுக்கு இன்னும் தமிழ் மொழியில் விரைவாக இடம் பெறவில்லை, என்றாலும் நுண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றல்மிக்கது தமிழ் என்பதில் ஐயமில்லை. மனித உள்ளத்தின் உணர்ச்சிகளைச் சில சொற்களைக்கொண்டே சுருக்கமாகவும் அதே நேரத்தில் அழுத்தமாகவும் தெளிவாகவும் விளக்குவது தமிழுக்குள்ள தனிச் சிறப்புகளுள் ஒன்று.[1] தமிழிலுள்ள எண்ணற்ற சொற்களெல்லாம் தத்தமக்கென ஒரு பொருளைக் குறித்து நிற்பன பொருள் குறியாது அவை நிற்பதில்லை.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்பர் தொல்காப்பியர்.[2] ஒரே பொருளைக் குறித்து நிற்கும் பல சொற்களை ஒரு பொருட்பன்மொழிகள் (Synonyms) என்று தமிழ் இலக்கணிகள் வழங்குவர்.[3] இத்தகைய ஒருபொருட் பன்மொழிகள் தமிழிலுள்ளது போன்று பிறமொழிகளில் மிகுதியாக இருக்கின்றனவா என்பது ஐயத்திற்கிடமான ஒன்றே. திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி போன்ற தமிழ் நிகண்டுகளைக் காண்போர் இவ்வுண்மையை உணரமுடியும்.[4]

2. இத்தகைய இணைபொருட்சொற்களெல்லாம் பொதுவாக ஒரு பொருளைக் குறித்தாலும் சிறப்பாகத் தமக்குள் சிறுபொருள் வேறுபாடு (Shades of meaning) உடையவை எனலாம். இன்று ஒருபொருட்பன்மொழிகளாயுள்ள பலவும் அவை தோன்றிய

---

* எம்.ஏ., தமிழ் ஆராய்ச்சித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

[1] Rev. Percival :- "No Language combines in greater force with equal brevity than Tamil and it may be asserted that no human speech is an exponent of the mind than the same"

—அழகப்பா தமிழ் மன்றச் சிறப்பு மலர், காரைக்குடி-3, 1962-63, ப. 47.

[2] தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியல், 1.

[3] நன்னூல் 398.

[4] 'கள்'ளைக் குறிக்கும் 49 சொற்களும், பொன், பூமி, மலை, யானை ஆய ஒவ்வொன்றுக்கும் 39 சொற்களும், கடல் 37ம், துன்பம் 48ம், அச்சம் 42ம், பெருமை 40ம், பூசல் 35ம் இடம் பெற்றுள்ளன.

காலத்தில் தனித்தனிப்பொருளேயோ, ஒரே பொருளின் பல்வேறு நிலைகளேயோ (various stages) உணர்த்தி நின்றன. காலப் போக்கில் அந்நுண்ணிய பொருள் வேறுபாடு அறியப்படாது போனமையால் அச்சொற்களும் நாளடைவில் பொதுவாக ஒரே பொருளேக்குறிக்க முற்பட்டு அவற்றுள் சில வழக்கிழந்து மறைந்து வருவதைக் காண்கிறோம். எனவே, ஒரு மொழிக்குச் சொற்கள் எவ்வளவு இன்றியமையாதனவோ அவ்வளவு அச்சொற்களின் பொருளும் இன்றியமையாததாகும்.

(அ) உண்மை, வாய்மை, மெய்ம்மை.

(ஆ) பார், காண், நோக்கு.

(இ) கூறுதல், இயம்புதல், பன்னுதல், செப்புதல்.

(ஈ) ஈ, தா, கொடு.

(உ) அம்பல், அலர்.

(ஊ) இகழ்தல், எள்ளல்.

(எ) உவத்தல், மகிழ்தல்.

இன்னோரன்ன சொற்களே நாம் இன்று ஒருபொருட்பன்மொழி களாக வழங்கிவருகிறோம். ஆனல், தொடக்கத்தில் அவை தம்முள் பொருள் வேறுபாடுடையனவாக இருந்தன. எண்ணச்சுத்தத்தை உண்மை என்றும், சொற்சுத்தத்தை வாய்மை என்றும், மெய்யின் நன்னிலேயை மெய்ம்மை என்றும் வழங்கினர். வேறு வகையாகக் கூறின் உளத்தூய்மை மட்டும் உண்மையாகும். உள்ளமும் சொல்லும் தூயநிலே வாய்மை எனப்படும்; உள்ளம், சொல், செயல் என்ற மூன்றனும் நன்னிலே பிறழாதிருப்பது மெய்ம்மை ஆகும். (Sincerity in heart, utterance and deed)

> ''உள்ளத்தால் பொய்யாது ஒழுகல்''—(உண்மை)—
> —திருக்குறள் 294

> ''அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்''—
> திருக்குறள் 298

> ''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
> வாக்கினிலே ஒளியுண் டாகும்.'' —பாரதியார்.[5]

> ''மெய்த்த திருவள்ளுவனர்'' —சிவஞான சுவாமிகள்.[6]

முன்கூறியது போலவே, 'பார்த்தல்' என்பது எதைப் பார்க்கிறோம் என்ற கருத்தின்றியே கண்ணில் தென்படுவதை எல்லாம் பார்ப்பதாகும் (Just see). பார்க்கப்பட்ட அப்பொருள் சிறிது நேரத்தி

---

[5] மகாகவி சுப்பிரமணியபாரதி, பாரதியார் கவிதைகள், இரண்டாம் பதிப்பு, ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை, 1956; (22) தமிழ்: 4, ப. 53.

[6] 'மனமொழிமெய்களால் தூய வள்ளுவப் பெருந்தகை'—சோமேசர் முதுமொழி வெண்பா, 41; சிவஞான சுவாமிகள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

லேயே நினைவிலிருந்து அகன்றுவிடும். 'காண்டல்' என்பது உற்றுப்பார்த்துப் பொறியாலறிவதாகும் (Perceive) ; இது நினைவிலிருக்கும். 'நோக்குதல்' என்பது வேண்டுமென்றே கண்களை அகல விரித்த நிலையில் , வைத்த கண் வாங்காது, ஓர் உட்கருத்தோடும் மிக்க ஆவலோடும், காண்பார் மனத்திலும் தான் கருதியது சென்று தைக்குமாறு பார்ப்பதாகும். (Intentional and yearning look with eagle-eye). பெரும்பாலும் காதலர் இருவரிடையேதான் இத்தகைய நோக்கு இடம் பெறும்.

'எங்கோ பார்த்த மாதிரி இருக்கு' (பேச்சு வழக்கு).
''கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்க.''
—பட்டினத்தார்.[7]

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.'' —திருக்குறள், 1100.

''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்''.
—கம்பர்.[8]

இன்று ஒரே பொருளில் கையாளப்படும் கூறுதல், இயம்புதல், பன்னுதல், செப்புதல் என்ற சொற்கள், பண்டு முறையே, பகுத்துக் கொண்டு சொல்வதையும், இனிதாகச் சொல்வதையும், வளவளவென்று திரும்பத் திரும்பக் கூறுவதையும், வினாவுக்கு விடையாகச் சொல்வதையும் உணர்த்தின. இவ்வாறே, நிலைதாழ்ந்த ஒருவன் தன்னின் உயர்ந்தானிடம் இரத்தலை 'ஈ' என்ற சொல்லானும், ஒத்த நிலையிலுள்ள இருவருள் ஒருவர் மற்றவரிடமிருந்து ஒன்றைப் பெறுவதற்காகக் கேட்பதைத் 'தா' என்ற சொல்லாலும், உயர்நிலையிலுள்ள ஒருவன் தன்னினும் தாழ்ந்தானிடம் அதிகாரத்தோடு கேட்டலைக் 'கொடு' என்ற சொல்லானும் குறித்தனர் ஆன்ற தமிழ்ச் சான்றோர்.[9] அகத்திணைப் பாடல்களில் வரும் 'அம்பல்' 'அலர்' என்னும் சொற்கள் முறையே, காதலர் இருவரிடைப்பட்ட களவொழுக்கை ஊரிலுள்ள சிலர் மட்டுமே அறிந்து தம்முட் புறங்கூறுவதையும், பலரும் அறிந்து வெளிப்படையாகப் பழி தூற்றுவதையும் குறிக்கும்.[10]

''இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து.'' —திருக்குறள் 1057.

என்ற குறளில், இகழ்தலும், எள்ளலும், உவத்தலும் மகிழ்தலும் தம்முட்பொருள் வேறுபாடுடையன என்று வள்ளுவப்பெருந்தகை சுட்டுகிறார். ஒருவன் மற்றவனைப் பற்றித் தன் மனத்தில்

---

[7] பட்டினத்தார் பாடல், இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 14; பொது 5:1.

[8] கம்பராமாயணம், மிதிலைக்காட்சிப் படலம். 602.

[9] தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், 48-51; நன்னூல் 407.

[10] தொல்காப்பியம், இளவழகனார் பதிப்பு, கழக வெளியீடு, 1171:3; திருக்குறள் 1141.

குறைத்து மதிப்பிட்டு அவனை மதியாதிருத்தல் இகழ்தலாகும் (undervaluing and disrespectfulness); அவனிடம் நேரிலோ, பிறரிடம் அவனைப் பற்றியோ சொற்களால் இழிவுபடக்கூறுவது எள்ளலாகும் (abuse or ridicule); உவகையும், மகிழ்வும் மனத்தின் செயலே யாயினும் உணர்வழிய மிகுதியாக இன்புறுவதே மகிழ்வதாகும் என்று பரிமேலழகர் திறம்பட உரை விளக்கம் செய்துள்ளது அறிந்தின்புறற்பாலது.[11] சங்க இலக்கியங்கள் பலவும் இம்மகிழ்ச்சியை ''மெய்ம்மலி உவகை'' (உடம்பு பூரிக்கும்படியான மகிழ்ச்சி) என்றே குறிப்பிடுவதும் ஈண்டு ஒப்பு நோக்கற்குரியது.[12] இத்தகைய பொருட்சிறப்புடைய தமிழ்ச்சொற்கள் பலவும் தம் முடைய நுண்பொருளை இழந்து பொதுப்பொருட்பேறுகளாக (General Terms) வழங்கிவருவது வருந்துதற்குரியது.

3. இனி, ஒரே பொருளின் பல்வேறு நிலைகளைக் குறிக்கும் சொற்களைக் காண்போம். 'பூ' (Flower) என்பது தனிமலரைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல். அது அரும்பி, முகையாகி, விரிந்து, மணம் வீசி, பிறகு உதிர்ந்து கீழே விழுந்து, வாடித் துவண்டு போகும் பல நிலையிலும் தனித்தனிப் பெயர் பெறும்.[13]

(அ) அரும்பு—மிகச் சிறியது. (Young sprout in the initial stage).

(ஆ) மொக்கு அல்லது மொட்டு-நுனி இன்னும் கூர்விடாதிருக் கும் சற்றுப் பெரிய அரும்பு. (Tender flower-but with sharp pointed edge).

(இ) போது-நுனி கட்டுவிட்ட பருவத்திலுள்ள பெருமொட்டு (Big flower-bud).

(ஈ) அம்பல்-புறவிதழ் விரிந்து, பூவாக அலர்தற்கு இன்னும் ஒரு சிறிது நேரமே உள்ள பெரும்போது நிலை. (about to blossom).

(உ) அலர்-அதன் தாதும் அல்லியும் (pollen and inner-petals) நன்கு வெளியே தெரியுமாறு அகவிதழ்கள் ஓரளவு விரிந்து, மலர்ந்தும் மலராமலும் உள்ள நிலை. (flower just half opened-up).

---

[11] திருக்குறள் 1281.

[12] குறுந்தொகை, 398:7; நற்றிணை 43:7; கலித்தொகை 40:32; அகநானூறு 62:12-3, 272:12; புறநானூறு 45:9.

[13] 'மொட்டறுமலர்'—திருவாசகம் 29:8:1.

'அம்பலும் அலரும்'—இறையனாரகப்பொருள், கழகப் பதிப்பு, 1960, 22 வரை, பக். 117.

'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலைமலரும்'—திருக்குறள் 1227;

'வீமலிகான்யாற்றின் துருத்தி'—பரிபாடல் 10:30.

'மென்பூஞ் செம்மலொடு'—மதுரைக்காஞ்சி 685.

'உதிர்ந்த கலவைச் செம்மல்'—சிலப்பதிகாரம், 7:39:1-2.

'செம்மல் பழம்பூ ஆகச் செப்புவர்'—திவாகரம்.

(ஊ) மலர்-முழுதும் விரிந்து மணம் வீசும் பூ-(full blown flower with its rich fragrance).

(எ) வீ-வாடிக்கீழே உதிரும் பூ. (withered flower that falls down from the stalk).

(ஏ) செம்மல்-கீழே வீழ்ந்த பிறகு நிறம் மங்கிச் சோர்ந்து கிடக்கும் பழம்பூ. (faded flower after falling down).

இதேபோன்று, சாரல், தூறல், பெயல், மழை, சோனை, ஆலி என்னும் பல சொற்களும் மழையின் பல்வேறு அளவைக் காட்டி நிற்கின்றன.

(1) சாரல்-நுண்மழைத்துளி. (The slightest drizzle).

(2) தூறல்-பெருஞ்சாரல். (Soft drizzling or rain-spray).

(3) பெயல்-பெருந்தூறல். (Heavy shower or gentle rain).

(4) மழை. (Rainfall),

(5) சோனை-விடாமழை-அடைமழை (Incessant downpour of rain).

(6) ஆலி-ஆலங்கட்டி மழை. (Hailstone).

பலநிலை எய்திவரும் ஒரு பொருள் இவ்வாறு அதன் ஒவ்வொரு நிலையிலும் தனித்தனிப் பெயர் பெற்று விளங்கக் காண்கிறோம். இதுவரை தமிழ்ச்சொற்கள் பல நுண்ணிய பொருள் வேறுபாடுணர்த்தி ஆற்றலோடு கருத்தை வெளிப்படுத்தும் சிறப்பைக் கண்டோம். விரிவஞ்சி இதை இவ்வளவில் நிறுத்தி, 'ஊடல்' என்ற சொல்லை இனிப் பார்ப்போம்.

4. ஊடலின் சிறப்பையோ, அது மனித வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதையோ, காதல் வாழ்வில் அது தரும் அளவிலா இன்பத்தின் ஏற்றத்தையோ ஈண்டு நான் கூற முற்படவில்லை. எப்பாலரும் போற்ற முப்பால் மொழிந்த முதற்பாவலர் தம் ஒப்பற்ற திருக்குறளில் ஊடலுவகையைத் திறம்படச் சுவை பொதுள விரித்துரைக்கிறார்.[14] மருதத்திணைப் பாக்களும் அதன் மாண்பை விளக்கி நிற்பனவே. உணவின் சுவையைக் கூட்டும் உப்பைப் போன்று காதல் வாழ்வில் இன்பத்தை மிகுவிக்கும் ஊடலின் மூவகை நிலையை மட்டும் இக்கட்டுரையிற் காண்போம்.[15] 'ஊடல்' என்பது கணவன் மனைவியிடையே ஏற்படும் சிறு பிணக்கைக் குறிக்கும் பொதுச்சொல் (temporary love-bickering) ஆகும். அகத்திணைப் புலவர்கள் புலவி, ஊடல், துனி என்ற மூன்று சொற்களால் அதை உணர்த்துவர். காதற்பூசலின் தொடக்க

[14] திருக்குறள், 130-3 அதிகாரங்கள்.

[15] திருக்குறள் 1302.

பொருள்பற்றியதோ அம்மொழியிலும் அப்பொருளிலும் தமிழிலும் நிரம்பிய அறிவுடையோர் தமிழ்மொழி பெயர்ப்பைத் திறம்படச் செய்யலாம். புதுநூல்கள் ஆக்குவோரும் மொழிபெயர்ப் போரும் கலைச்சொற்களைத் தாம் தாம் விரும்பியவாறு தமிழ்ப் படுத்த முயன்றால் குழப்பமும் மயக்கமும் முரண்பாடும் உண்டாகும். அன்றியும் இவர்கள் தமிழ்மொழிச் சொற்களுக்குத் தக்க தமிழ்ச் சொற்களைத் தெரிந்தெடுத்து வழங்குவதில் நேரத்தைப் போக்கினால் மொழிபெயர்ப்பை விரைவிற் செய்யமுடியாது இடர்ப் படுவர். எனவே மொழிபெயர்ப்பாளருக்கும் புதுநூல்களை எழுது வோருக்கும் கலைச்சொற்களை ஆக்கி உதவுதல் வேண்டும். கலைச் சொல்லாக்கமும் தமிழுக்குப் புதிதன்று. வடமொழியில் உள்ள சொற்களை மொழிபெயர்த்தும், தமிழோசைப்படுத்தியும் தொல் காப்பியர் காலந்தொட்டுத் தமிழ்ப்புலவர்கள் ஆண்டுவந்துளர். தமிழ்'நடைப்படுத்தலெனச்[2] சிவஞானமுனிவர் கூறியதை யாவருக் கும் இலகுவில் விளங்கத்தக்கதாகத் தமிழோசைப்படுத்தலென[3] ஈண்டுக் குறிப்பிட்டுள்ளேன்.

கிரந்த எழுத்தைக் கலத்தலும் தமிழோசைப்படுத்தாமல் வழங்கலும் பொருத்தமற்றன

3. தமிழிற் கலைச்சொற்களை ஆக்கும்பொழுது கிரந்த எழுத்துக் களையும் கலந்து ஆக்கவேண்டுமென்னும் கொள்கையும் பிறமொழி களில் உள்ள மக்கட்பெயர், இடப்பெயர் முதலியவற்றைத் தமி ழோசைப்படுத்தாமல் அம்மொழிகளின் ஓசை சிதையாமலே தமி ழில் எழுதவேண்டுமென்னும் கொள்கையுமுடையவர்கள் சிலர் இன் றுமுளர். இவ்விரு கொள்கையும் ஒன்றோடொன்று இணைந்துள. தமிழோசைப்படுத்தாமலும் கிரந்த எழுத்தைக் கலந்தும் எழுத வேண்டுமென்பது இவ்விரு கொள்கையாளருக்கும் உடன்பாடாகும். இக்கொள்கைகள் பொருத்தமற்றவை எனினும் இவை இன்னும் சிலரிடம் வாழ்கின்றன. இதனால், கலைச்சொல்லாக்க ஒருமுக வளர்ச்சி சிறிது தடைப்படுகின்றது. தமிழகத்திலும், ஈழத்திலும் தமிழ் மக்களின் வாழ்வில் இடைக்காலப் பகுதியில் உண்டான மாற்றங்களையும், அம்மாற்றங்கள் எவ்வாறு தமிழ்மொழியைப் பாதித்தன என்பதையும், அண்மையில் ஆங்கிலேயர் ஆட்சி இத் துறைகளில் உண்டாக்கிய மாற்றங்களின் விளைவுகளோடு ஒப்பிட்டு நோக்கின் இப்பொருத்தமற்ற கொள்கைகள் எவ்வாறு தோன்றின என்பதும், இனி அவை நிலைத்தல் முடியாதென்பதும் நன்கு புலனாகும்.

---

[2] நன்னூல் விருத்தியுரை-திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு—1957, பக்கம் 256.
[3] நன்னூல் பதவியல் சூ-ம் 19-22.

ஆரியமொழி ஆட்சி, ஆங்கிலமொழி ஆட்சி போன்றதே

4. ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலம் அரசகரும மொழியாயிற்று. பலர் பணங்கொடுத்தும் படித்தனர். தமிழர் சிலருடைய வீட்டு மொழியாகவும் அஃது ஆகிற்று. விடுதலை அடைந்தபின் இன்றும் நாம் தமிழிற் பேசும்பொழுது ஆங்கிலச் சொற்களையும் கலந்து பேசுகின்றோம். தமிழில் எழுதுங் கடிதங்கள் வேண்டுகோள்கள் என்பவற்றில் முகவரி, கையொப்பம் முதலியனவற்றையும் இன்றும் சிலர் ஆங்கிலத்தில் இடுகின்றனர். தமிழொடு ஆங்கிலத்தைக் கலந்து N. K. நல்லதம்பி என்று எழுதுகின்றனர். என். கே. நல்லதம்பி என ஆங்கில எழுத்தோசையைத் தமிழ் எழுத்திலும் சிலர் எழுதுகின்றனர்.

5. ஒரு நூலின் பெயரில் 'டெலிபோன்' என்ற ஆங்கிலச் சொல்லைச் சேர்த்து ஒரு பதிப்பகத்தார் வெளியிட்டனர்.[4] தொலைபேசி என்றால் தமிழ் மக்களுக்கு விளங்காது. டெலிபோன் என்றால் நன்கு விளங்கும் என்று அவர்கள் எண்ணினர். இது 1960இல் நிகழ்ந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் ஆங்கிலச் சொற்களைத் தமிழோடு கலந்து எழுதினார்கள். இலகுவில் பொருள் விளங்காத தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலச் சொற்களைக் கூறிப் பொருள் விளக்கும் நிலை இன்றுமுளது. அண்மையில் தமிழ் வழங்கும் நாடுகளில் ஆங்கிலம் பெற்ற இந்த ஆதிக்கத்தை, ஆரியமொழி இடைக்காலத்திலே பெற்று ஆட்சி செய்தது. 'அறம்' எனும் தனித்தமிழ்ச் சொல்லை-சங்க நூல்களிலும், திருக்குறளிலும் பெருவழக்காய்ப் பயின்ற சொல்லை-தர்மம் எனும் ஆரியச் சொல்லாலே விளக்கவேண்டிய நிலைமை தமிழ்நாட்டில் உருவாகியதெனின் ஆரியத்தின் ஆதிக்கத்தை அளவிட்டுரைத்தல் முடியுமா? ஆரியமொழிக்கு நாகர எழுத்துக்கள் இருக்கக் கிரந்த எழுத்துக்களை உருவாக்கினமையும் தமிழை ஆரிய மயமாக்குதற்குச் செய்த முயற்சியினை நன்கு காட்டுகின்றது.

அண்மைக்காலத் தமிழ்ப் புலவர்கள் ஆங்கில-ஆரியச் சொற்களை ஆண்டனர்

6. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்ப் புலவர்கள் பலர் ஆரியச் சொற்களிற் கிரந்த எழுத்துக்களைக் கலந்து எழுதினர். தமிழ்ச் சொற்களை விடுத்து வடசொற்களையும் ஆரியச்சொற்களையும் வழங்கினர். ''முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை,

[4] தபால் தந்தி டெலிபோன்-இன்ப நிலையம்-1959.

தந்துரை, புனைந்துரை, பாயிரம்'' எனும் நன்னூற் சூத்திரத்தை[5] நன்கறிந்த குமாரசாமிப் புலவர் தாம் எழுதி வெளியிட்ட யாப்பருங்கலக்காரிகைப் புத்துரையில் முகவுரையைக் குறித்தற்கு இச்சொற்களில் ஒன்றையேனும் ஆளாமல் 'உபக்கிரமணிகை' எனும் வடசொல்லை ஆண்டார். 'விஷயக்கிரமசூசிகை,' 'காரிகைக்கிரம சூசிகை' எனுந் தொடர்களும் அந்நூலிற் காணப்படுகின்றன. இந்நூலின் முதற்பதிப்பு 1908இல் வெளிவந்தது.

7. ஈக்காடு இரத்தினவேலு முதலியார் 1900இல் 'இக்காலத் தமிழ் பயிலும் மாணவர்கட்கும், யூனிவர்சிடி பரீட்சைக்குப் புகும் வித்தியார்த்திகளுக்கும்'' என்று எழுதினர்.[6] இரத்தினவேலு முதலியாரவர்களைப் போன்றவர்கள் 'வழங்கிய ''யூனிவர்சிடி''யைச் சாமிநாதையர் ஸர்வகலாசாலை[7] எனக் கிரந்த எழுத்துக்களுடனும், வேறு சிலர் சர்வகலாசாலை எனவும் வழங்கினர். ஆனால் இன்று இச்சொல் பல்கலைக்கழகம் என்று வழங்குகின்றது. ''உபந்நியாசம்'' இன்று சொற்பொழிவாகிவிட்டது. கனவான்கள் என்று சாமிநாதையர் வழங்கிய சொல்லை இன்று தமிழறிஞர் வழங்குவதில்லை. உப அத்தியக்ஷகர் உப அத்தியட்சகராகி, இப்பொழுது துணைவேந்தர் எனத் தனித்தமிழாகிவிட்டது.[8] இம்மாற்றங்கள் தமிழ்மொழி நற்றமிழாக—செந்தமிழாக-ஆகும் போக்கினை அவாவுகின்றதென்பதை நன்குகாட்டுகின்றன.

ஒரு மொழியில் பிறமொழி எழுத்தைப் புகுத்தலாமா?

8. பிறமொழி எழுத்தோசைகள் சிலவற்றைக் குறிக்கும் எழுத்துக்கள் தமிழில் இல்லை என்பதற்காகப் பிறமொழி எழுத்தைக் கலந்தெழுதும் வழக்கத்தைத் தமிழ்மொழியிற் புகுத்தச் சிலர் முயன்றனர். இதற்குக் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தினர். வேறெம்மொழியிலேனும் பிறமொழிக்கேயுரிய எழுத்தைக் கலந்து எழுதுகின்றார்களா? ற, ன, ழ, எ, ஒ எனும் தமிழ் எழுத்துக்கள் ஆரிய மொழியில் இல்லை. ஆங்கிலேயர் Tami ழ் என்றோ Iளavaழ-kanaர் என்றோ எழுதுகின்றார்களா? யாரேனும் இவ்வாறெழுதின் அது நகைப்புக்கிடமாகும். நடராஜா, லக்ஷ்மணன் என எழுதுவதும் இத்தகையதே. ஆங்கில மொழியில் உள்ள F எனும் எழுத்துத் தமிழ்மொழியில் இல்லை. எனவே இந்த எழுத்தையும் புகுத்தி

[5] நன்னூல் சூ-ம் 1.

[6] அணி இலக்கணம்-பதிப்புரை, சென்னை பண்டித மித்திர யந்திரசாலை-1898.

[7] உ. வே. சாமிநாதையர்.

[8] பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தாண்டவராய முதலியார், மதுரை கந்தசாமிப் புலவர் முதலியவர்களைக் கொண்ட சென்னைக் கல்விச் சங்கத்தினர் வெளியிட்ட நூல்களின் முகவுரையிற் காணப்படுஞ் சில பகுதிகளும் ஈண்டு கருதத்தக்கன.

Fரான்ஸ் என்று ஏன் எழுதக்கூடாது? கிரந்த எழுத்தைக் கலந்தால் ஆங்கில எழுத்தைக் கலக்கலாமன்றோ? யாழ்ப்பாணம், பூனகரி, மதுரை போன்ற சொற்களை ஆங்கில மொழியில் யாவ்ன (Jaffna), பூனரின் (Pooneryn), மதுரா (Madura) என ஆளப்பட்டுள. சீர் திருந்திய மொழியினர் யாவரும் பிறமொழிச் சொற்களை மொழி பெயர்க்காமல் வழங்கும்பொழுது அவற்றைத் தம் மொழியோசைப் படுத்தியே வழங்குகின்றனர். எனவே தமிழிலும் இதனைக் கடைப் பிடிப்பதை மொழியியல்பு அறியாதவர்களும், மொழிப்பற்று அற்றவர்களுமே எதிர்க்க முயல்வார்கள்.

பிறமொழிச் சொற்களைத் தமிழோசைப்படுத்தி ஆளல்வேண்டும்

9. பிறமொழிச் சொற்களைத் தமிழோசைப்படுத்தி ஆளாவிடில் தமிழ் உரைநடையில் அவற்றை அமைத்து எழுதும்பொழுது அவை உருபு முதலியவற்றுடன் புணர்தல் சாலாது. 'தோமஸ்', 'சிமித்' எனும் பெயர்களை இவ்வாறே நிறுத்தி-'கு' உருபுடன் புணர்த்தினுல் 'தோமஸ்கு', 'சிமித்கு' என்றுதான் அமையும். இவை பிற மொழிச் சொற்களாகையால் தமிழ் இலக்கண விதிப்படி, புணர்த் தல் முடியாது. இவற்றைப் புணர்த்தவேண்டுமாயின் 'தோமசு', 'சிமிது' எனத் தமிழுருவாக்கி 'தோமசுக்கு', 'சிமிதுக்கு' என்று புணர்த்தல்வேண்டும். தோமசை, சிமிதை, தோமசின், சிமிதின் என்ற இவ்வுருவங்களிலே பிறமொழி ஓசை உருவம் சிதைந்து தமிழ் ஓசை உருவமே நிலைக்கின்றது. Thomas, Smith எனும் சொற்களை அறியாத தமிழன் ஒருவன் தோமசின், சிமிதின் எனும் சொற்களில் உள்ள உருபை நீக்கி, தோமசு, சிமிது எனக் கொள்வானேயன்றி 'தோமஸ்' எனவும் 'சிமித்' எனவும் கொள்ளான். ஆங்கிலத்தை நன்கறிந்த தமிழர்களே இவற்றின் ஆங்கில மூல உருவம் தோமஸ், சிமித் என்பதை அறிவர்.

10. எனவே பிறமொழிச்சொற்களைத் தமிழோசைப் படுத்தியே வழங்கல்வேண்டுமென்பதை மேலும் வற்புறுத்தவேண்டியதில்லை. இன்று கிரந்த எழுத்துக்களைக் கலந்து தமிழோசையைச் சிதைத்தும் பிறமொழிச் சொற்களின் ஓசையைச் சிதைக்காமலும் தமிழிலே கலைச்சொற்களை ஆள வேண்டுமென்று கூறுபவர்களிலே பலர் ஆங்கிலத்தை நன்கு பயின்றவர்கள்; ஆங்கிலத்தில் நினைப்பவர்கள்; ஆங்கிலச்சொற்களை எண்ணிக்கொண்டு தமிழ்ச்சொற்களிடம் அணுகுபவர்கள். இவர்களுக்குத் தமிழோசைப்படுத்தப்பட்ட சொற்களின் விகாரம் ஆங்கில மொழி பயின்ற செவிகளுக்குப் பொருந்தாமலிருப்பது இயற்கையே. தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள் யாருக்காக எழுதப்படுகின்றன? ஆங்கிலம் பயின்றவர் களுக்காகவா? தமிழ் பயின்றவர்களுக்காகவா? ஆங்கிலம் பயிலாது தமிழ் பயின்று தமிழிலே பல்வகைப் பாடங்களையும் படிக்கின்ற

வர்கள் முதலிலே தமிழோசைப்படுத்தப்பட்ட சொற்களையே அறிவர். பின்னர் ஆங்கில அறிவுபெற்று ஆங்கில நூல்களையும் சேர்த்துப் பயிலும் வாய்ப்புக் கிடைத்தால் அவர்களுக்குத் தமிழோசைப்படுத்தப்பட்ட சொற்களின் வேறுபாடு உள்ளத்திற் படாது. தமிழிலிருந்து ஆங்கிலம் முதலிய மொழிகளை அணுகுபவர் இத்தகைய சொற்களையே விரும்புவர். இத்தகைய சொற்களே அவர்கள் உள்ளத்தில் இலகுவில் பதியும். முதலில் ஆங்கிலம் படியாது தமிழ் படித்தவர்கள் தாவீது, கோலியாத்து என்று தாங்கள் படித்த சொற்கள் ஆங்கிலத்தில் டேவிட், கோலியாத் என்று உச்சரிக்கப்படுவன என்பதை அறியும்பொழுது எவ்வித வெருட்சியோ, மருட்சியோ கொள்வதில்லை. இங்கிலாந்து, ஐரோப்பா, அவுத்திரேலியா முதலிய சொற்களைத் தமிழ் வாயிலாக அறிந்தவர்கள் பின்னர் இவற்றைக் குறிக்கும் ஆங்கிலச்சொற்களை அறியும்பொழுது எவ்வித இடர்ப்பாடுமின்றி இருமொழிச் சொற்களையும் ஒன்றுபடுத்தி அறியலாம்.

ஆட்சியாளரின் மொழிக் கொள்கையின் செல்வாக்கு

11. ஆட்சியாளரின் மொழிக் கொள்கையும் அவ்வக்காலத்தில் மொழி நடையைப் பெரிதும் பாதிக்கும். உயர்திரு. இராசகோபாலாச்சாரியார் தமிழ் நாட்டின் முதலமைச்சராயிருந்த காலத்து ஆக்கி வெளியிடப்பட்ட கலைச்சொற்றொகுதி தமிழ்மயமாகக் கிரந்த எழுத்தின்றி அமைந்திருக்கின்றது. பின்னர் காங்கிரசு ஆட்சியில் தமிழ் நாட்டரசால் 1947ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கலைச்சொற்றொகுதி கிரந்த எழுத்துக்களையும் தமிழோசைப்படுத்தாத சொற்களையும் கொண்டுள்ளது. காவல் நிலையத்தைப் பொலிஸ் நிலையமென மாற்றியது ஓர் ஆட்சி. இப்பொழுதுள்ள அரசு மீண்டும் அதைக் காவல் நிலையமாக மாற்றுமாறு பணித்துள்ளது.[9] இன்றுள்ள தமிழ்நாட்டரசு தமிழின் விரிவான வளர்ச்சிக்கு வாய்ப்பானதொன்றாகும். சென்ற பல நூற்றாண்டுகளிலே தமிழ் மொழிக்கு இத்தகையதொரு தமிழ் ஆட்சி கிடைக்கவில்லை. இனித் தமிழ்மொழி பிறமொழிகளினை வென்று வாழும். கலைச் சொல்லாக்கமும் தமிழ் மரபுக்கிசையத் தமிழ் நடை வாய்ந்து பிற மொழிக் கலப்பின்றி வளம்பெறும்.

---

[9] இலங்கையிலும் 1955ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட 'அரசாங்கப் பகுதிகள், உத்தியோகப் பதவிப் பெயர்கள், நாமாவளி' எனும் வெளியீட்டையும் 1959இல் வெளியிடப்பட்ட அரச கருமச்சொற்றொகுதியையும் ஒப்பிட்டு நோக்கின் முன்னையது கிரந்த எழுத்துக்களையும் தமிழோசைப்படுத்தப்படாத ஆங்கிலச்சொற்களையும் கொண்டதாகவும், நல்ல சொற்களிருக்கவும் அவற்றை விடுத்து வடசொற்களையும் பிறமொழிச்சொற்களையும் கொண்டதாகவும் இருப்பதும் பின்னையது கிரந்த எழுத்துக்களின்றிச் செந்தமிழ்ச் சொற்கள் பலவற்றைக் கொண்டிருப்பதும் புலனாகும். முன்னையதிலுள்ள கந்தோர், தொலுக்காரிப்பாளர், அதிகாரசபை, தெலிபோன், அத்தியட்சகர், பின்னையதில் முறையே அலுவலகம், பேச்சு-மொழிபெயர்ப்பாளர், ஆணைக்குழு, தொலைபன்னி, கண்காணிப்பாளர் ஆகவும் மாறியுள. முன்னையது ஒரு சிங்கள உத்தியோகத்தரின் தலைமையில் தொகுக்கப்பட்டது. பின்னையது என் தலைமையிலே ஆக்கப்பட்டது.

கலைச்சொல்லாக்க வரலாறும் கலைச்சொற்றொகுதியும்

12. கலைச்சொல்லாக்குதலில் காவியங்கள், உரைநடை நூல்கள் முதலியவற்றைச் சங்ககாலத்தின் பின்னர் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்த புலவர் பெருமக்கள் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். இவர்களின் பின்னர் சமயநூல்களை மொழிபெயர்த்த அறிஞர் பெருமக்களும் குறிப்பிடப்படவேண்டியவர்கள். தருக்க சங்கிரகம் முதலிய நூல்களை மொழிபெயர்த்த சிவஞானமுனிவர் மொழிபெயர்ப்புக்கும் கலைச்சொல்லாக்கத்திற்கும் வழிகாட்டியாக விளங்குகின்றார். கலைச்சொற்றொகுதியை ஆக்க முயன்றவர்களுக்கு வைத்தியர் கிறீன் என்பவர் முன்னோடியாக இலங்குகின்றார். இவர் வைத்தியக் கலைச்சொற்றொகுதியைத் தொகுத்து வெளியிட்டார். அங்காதிபாத-சுகரணவாத உற்பாலன நூல், இரண வைத்தியம், வைத்தியாகாரம், கெமிஸ்தம், மனுஷசுகரணம், இந்து பார்த்தசாரம் முதலியன இவர் பதிப்பித்த மொழிபெயர்ப்பு நூல்களாகும். இந்நூல்களே முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட விஞ்ஞான நூல்கள் எனலாம். இவருடைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் 1857இல் தொடங்கின. தமிழகத்திலே கலைச்சொல்லாக்கப் பணியிலே சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 1934ஆம் ஆண்டு முதல் முயன்று வந்துள்ளது. 14-10-1934இல் சொல்லாக்கக் கழகம் ஒன்றினை அமைத்து ஒன்பது கலைகளைச் சேர்ந்த பதினாயிரம் சொற்களைக் 'கலைச்சொற்கள்' எனும் பெயருடன் 1938இல் வெளியிட்டது.[10] ஆட்சிச் சொற்களை அமைப்பதிலும் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் பெருமுயற்சி செய்தது. 5-12-56இல் தமிழ் ஆட்சிச் சொற்றொகுதி ஒன்றை வெளியிட்டுத் திருத்தங்களை அனுப்புமாறு கேட்டது. கிடைத்த திருத்தங்களைப் பயன்படுத்தி 21-12-56இல் நடந்த ஆட்சிச் சொல் ஒப்படைப்பு விழாவில் இந்த ஆட்சிச் சொற்களை இச்சங்கம் தமிழ்நாட்டில் அப்பொழுதைய முதலமைச்சர் திரு. காமராசரிடம் ஒப்படைத்தது. இக்கலைச்சொற்கள் பின்னர் தமிழ்நாட்டு அரசாங்கத்தால் ஆட்சிச் சொல் அகராதி எனும் பெயருடன் வெளியிடப்பட்டன. இந்த அகராதியில் ஏறக்குறைய 5,000 சொற்களுள்ளன. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட கலைச்சொற்றொகுதியின் பின்னர் தமிழ்நாட்டரசு 10-4-1947இல் ஒரு கலைச்சொற்றொகுதியை வெளியிட்டது.[11] இதன்பின்னர் சென்னை அரசாங்கத்தினர் நிறுவிய தமிழ்க்குழு புவியியல், பொருளாதாரம், உயிர்

---

[10] இத்தொகுதியில் கணிதம், பூதநூல், வேதிநூல், விலங்கு நூல், உடலியலும் நலவழியும், பூகோளம், வரலாறு, வேளாண்மை எனும் கலைகளுக்குரிய சொற்கள் தமிழோடு தமிழாய்க் கலக்கத்தக்கனவாக ஆக்கப்பட்டுள்ளன. இக்கலைச்சொற்களிலே கிரந்த எழுத்துக்கள் இடம்பெறவில்லை. பெரும்பாலும் இலக்கணமரபு தழுவியே இவை ஆக்கப்பட்டன.

[11] ரசாயனம், வர்த்தகம், உடலியலும் சுகாதாரமும், பௌதிகம், கணிதம், சரித்திரம், பொருளாதாரம், நிர்வாகம், அரசியல், நகராட்சி, இயற்கை விஞ்ஞானம், பூகோளம் என்பவற்றிற்குரிய கலைச்சொற்கள் அத்தொகுதியில் உள. ஆங்கிலச் சொற்கள் பல ஆங்கில உச்சரிப்புக்கேற்ப தமிழில் எழுதப்பட்டுள்ளன. இத்தொகுதியில் உள்ள சொற்கள் பல தமிழோடு தமிழாய்க் கலக்கத்தக்கன அல்ல.

நூல், வானநூல், பௌதிகவியல், வேதியியல், புள்ளியியல், அரசியல்-பொதுமக்களாட்சியியல், வானவியல், உளவியல், ஐரோப்பிய தத்துவவியல், தாவரவியல் என்பனவற்றிற்குக் கலைச்சொல் அகராதிகளைத் தொகுத்து வெளியிட்டது.[12]

14. இலங்கை அரசாங்கமும் சிங்களத்திலும் தமிழிலும் ஆட்சிச் சொற்களையும் கலைச்சொற்களையும் ஆக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. 1955இல் 'அரசாங்கப் பகுதிகள், உத்தியோக பதவிப் பெயர்கள் நாமாவளிகள்' எனுஞ் சொற்றொகுதி ஒன்று வெளியிடப்பட்டது.[13] இதனை அடுத்து அரசகருமச் சொற்றொகுதி நான்கு பகுதிகள் அரசகரும மொழித்திணைக் களத்தால் வெளியிடப்பட்டன. இந்நான்கு பகுதிகளில் முதலிரண்டும் 1959இலும் 1960இலும் ஏனையன 1962இலும் வெளிவந்தன. இவற்றிலே ஏறக்குறைய இருபதினாயிரம் சொற்களுள.[14] தன்மொழித் திணைக்களம் எனும் பெயருடன் தொடங்கி அரச கருமமொழித்திணைக் களத்துடன் ஒன்றாகி இப்பொழுது கல்வி வெளியீட்டுத் திணைக்களமாகப் பிரிந்து இயங்கும் நிலையம் கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகத்திற்கும் பயன்படும் ஆங்கிலப் பாடநூல்கள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளது.[15] நாற்பது கலைச்சொற்றொகுதிகளையும் ஆக்கி வெளியிட்டுள்ளது.

கலைச்சொற்கள் வேறுபடுதல்

15. தமிழ்நாட்டில் ஆக்கப்பட்ட ஆட்சிச்சொற்கள், கலைச்சொற்கள் என்பவற்றிற்கும், இலங்கையில் ஆக்கப்பட்ட கலைச்சொற்கள், ஆட்சிச்சொற்கள் என்பவற்றிற்கும் சில வேறுபாடுகளுள. ஒரு நாட்டிலே முன்னர் ஆக்கப்பட்ட கலைச்சொற்களுக்கும் பின்னர் ஆக்கப்பட்ட கலைச்சொற்களுக்கும் வேறுபாடுகள் இருக்கும்பொழுது, இருவேறு நாடுகளில் ஆக்கப்பட்ட கலைச்சொற்களிற் பல வேறுபட்டனவாயிருப்பது புதுமையன்று. Department என்ற சொல் இலங்கையிற் பகுதியெனவும் பின் திணைக்களமெனவும், தமிழகத்தில் இலாகா எனவும் பின் துறை எனவும் ஆகியுள்ளது. Office என்பதற்குக் கந்தோர், ஆபீஸ் என்பன மறைய, அலுவலகம், செயலகம், பணிமனை முதலிய வழக்கிற்கு வந்தன.

---

[12] இந்த அகராதியில் உள்ள சொற்கள் பலவற்றில் கிரந்த எழுத்துக்கள் உள்ளன.

[13] இச்சொற்றொகுதியில் பிறமொழிச்சொற்களும் தமிழோசைப்படுத்தப்படாத சொற்களும், கிரந்த எழுத்துக்கள் கலந்த சொற்களுமுள.

[14] இவற்றிலே கிரந்த எழுத்துக்கள் கலக்கவில்லை. பெரும்பாலும் தமிழ்ச்சொற்கள் இடம்பெற்றுள. பிறமொழிச்சொற்கள் தமிழோசைப்படுத்தி ஆளப்பட்டுள. இந்நான்கு தொகுதிகளும் என் தலைமையில் ஆய்ந்து வெளியிடப்பட்டன.

[15] இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம்-புத்தகப்பட்டியல்-1967.

16. மூன்று ஆங்கிலச்சொற்களுக்கு முறையே (1) கிறீன் வைத்தியரும் (1875), (2) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் (1938), (3) சென்னை அரசாங்கம் (1947), (4) இலங்கை அரசாங்கம் (1955), (5) சென்னைக் கல்லூரித் தமிழ்க்குழு (1960) என்பனவும் ஆக்கிய கலைச்சொற்களை நோக்குக.

	Chemistry	Hydrogen	Physiology
1.	கெமிஸ்தம்	ஐருதம்	சுகரணம் (சுகரணவாதம்)
2.	வேதிநூல் (இயைபுநூல்)	நீரகம்	உடலியல்
3.	ரசாயனம்	ஹைடிரஜன்	சரீரசாஸ்திரம்
4.	இரசாயனவியல்	ஐதிரஜன்	உடற்றொழிலியல்
5.	ரசாயனவியல்	ஹைட்ரஜன் (நீர்வாயு)	உடலியல்

17. இலங்கையிலே (Semipermeable) என்பதை ஓர் அறிஞர் குழுவினர் **குறையூடு புகவிடுகின்ற** எனவும் வேறோர் குழுவினர் **ஒரு பங்கூடு புகவிடுகின்ற** எனவும் மொழிபெயர்த்து வெளியிட்டனர். தொடக்கத்தில் இவ்வாறு மாறுபாடுகள் உண்டாவதைத் தடுக்கமுடியாதெனினும், கலைச்சொல்லாக்கத்திற்குச் சில விதிகளை வகுத்து யாவரும் அவற்றைத் தழுவிக் கொள்ளாமையினாலும் தமிழகத்திலும் இலங்கையிலும் நடைபெறும் கலைச்சொல்லாக்க முயற்சிகளில் ஈடுபட்டோர் இடையிடையே கூடிக்கலந்து உரையாடி இம்முயற்சிகளை ஒருமுகப்படுத்தாமையினாலுமே இவ்வேறுபாடுகள் பெருகின. 1938இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட கலைச்சொல்லை ஆக்கிய குழுவில் இலங்கையின் சார்பிலும் அறிஞர்கள் சிலர் பணியாற்றினர். இதன் பின்னர் இருநாடுகளிலும் நடைபெற்ற கலைச்சொல்லாக்க முயற்சிகள் ஒரு நெறிப்படுத்தப்படவில்லை.

கலைச்சொற்களை ஒருநெறிப்படுத்தற்கு வழி

18. கலைச்சொல்லாக்கத் தந்தையாக விளங்கும் கிறீன்வைத்தியர் வடசொல்லாக்கத்திற்கு இலக்கண நூலார் விதி வகுத்ததைப் போன்று தாமும் சில விதிகளை வகுத்தே கலைச்சொற்களை ஆக்கி

---

[16] ஆங்கிலம்-தமிழ்-கலைச்சொற்றொகுதிகள் மட்டுமன்றி தமிழ்-ஆங்கிலம் கலைச்சொற்றொகுதிகளும் வெளியிடப்பட்டுள.

[17] உயிரியல், விஞ்ஞானம் எனுந்தொகுதியில் தாவரவியல், விலங்கியல், உடற்றொழிலியல், உடனலவியல், பயிர்ச்செய்கை என்பன அடங்கியுள. கைப்பணியும் கைத்தொழிலும் எனும் தொகுதியில் வனைதற்றொழில், மரவேலை, நெசவுத்தொழில், அரக்குவேலை, உலோக வேலை, மோட்டார்பொறிநுட்பவியல் என்பன அடங்கியுள்ளன. சமூக விஞ்ஞானம் எனுந் தொகுதியில் புவியியல், பொருளியல், குடிமையியலும் ஆட்சியியலும், கணக்குப் பதிவியல் என்பன அடங்கியுள.

னர். அவர் இலங்கையிலிருந்து பணியாற்றினாரெனினும் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வழக்காறெய்தும் கலைச்சொற்கள் வேறுபாடற்றனவாயிருத்தல் வேண்டுமெனும் நோக்கம் உடையவராயிருந்தார். இந்நோக்கத்தை நிறைவேற்றத் தமிழ் நாட்டுடன் தொடர்புகொண்டார். மேனாட்டு மொழிகளிலும் கலைச் சொற்கள் தொடங்கிய காலத்திலே அவை வேறுபாடுகளையுடையனவாயிருந்தன. இவற்றைச் சீர்ப்படுத்த பல கழகங்கள் பணியாற்றின. உலகம் முழுவதும் வழங்கும் தாவரவியல், விலங்கியல் சொற்களை ஒன்றுபடுத்துவதற்கு உலக ஆணைக்குழுக்கள் உழைத்தன. எனவே இன்று தமிழ் வழங்கும் நாடுகளில் அரசாங்கங்களும் தமிழ் ஓம்புங் கழகங்களும் கலைச்சொற்களை ஒருமைப்படுத்துதற்கு ஒன்றுபடவேண்டியது இன்றியமையாதது. இதனைச் செயற்படுத்துவதற்காகவே யான் 1966இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இதுபற்றி ஒரு முன்மொழிவை மொழிந்து நிறைவேற்றி வைத்தேன்.[18] இம்முன்மொழிவைத் தமிழ்நாட்டரசாங்கம் ஏற்றுச் செயற்படுத்த முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது. முன்னைய முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்கள் தொடங்கிய முயற்சியினை இப்பொழுது கல்வி-தொழில் அமைச்சராயிருக்கும் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பயன்தரச் செய்தற்கு முயல்வது மகிழ்ச்சிக்குரியது.[19]

கலைச்சொற்களை ஆக்கும் முறைகள்

19. இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள அரச கருமச் சொற்றொகுதி நான்கு பாகங்களையும் ஆராய்ந்து வெளியிட்டமையாலும், கணிதம், பௌதிகம், இரசாயனவியல், புவியியல் முதலிய கலைச் சொற்களை ஆக்கிய குழுவின் உறுப்பினனாகப் பணியாற்றினமையாலும் நான் பெற்ற அனுபவங்களையும் அடிப்படையாகக்கொண்டு ஆட்சிச்சொற்களை ஆக்கும் விதிகளையும், அவற்றை ஆக்கிய பொழுது உண்டான இடர்ப்பாடுகளையும், அவற்றை நீக்குதற்குக்

---

[18] தமிழ் வழங்கும் நாடுகளில் பயன்படுத்தபபடும் கலைச்சொற்கள் யாவும் வேறுபாடின்றி இருத்தல் தமிழ்மொழியின் வாழ்வுக்கும் வளத்திற்கும் இன்றியமையாததாகையால் இந்நாட்டு அரசுகள் இத்துறையில் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு கலைச்சொல் இணைப்புக்குழு ஒன்றினை அமைக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இம்மாநாடு இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அரசுகளைக் கேட்டுக்கொள்வதுடன் இக்குழுவுக்கு அமைப்பாளராகத் தமிழக அரசு பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றது.

[19] இப்பணி குறித்து அமைச்சர் அவர்கள் எனக்கு எழுதிய கடிதம் இப்பணியின் நிலைமையை நன்கு விளக்குகின்றதாகலின் அதனை ஈண்டு காண்க. ''சென்ற ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத்தமிழ்க்கருத்தரங்கில் செய்த முடிவிற்கேற்ப மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நான்கு நாடுகளிலும் வழங்கிவரும் கலைச்சொற்களை ஒருமைப்படுத்தும் முயற்சிக்கான பணியை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய அரசுகளுக்கு விபரங்கள் கேட்டு எழுதினோம், மலேசியா, இலங்கை அரசுகள் பதில் எழுதியுள்ளன. சிங்கப்பூர் அரசின் பதில் இதுவரை கிடைக்கவில்லை. அந்த அரசின் பதிலும் கிடைத்தவுடன் தாங்கள் எழுதியுள்ளவண்ணம் ஒரு கூட்டத்தைச் சென்னையில் கூட்டுவதுபற்றி ஆராய்ந்து முடிவுசெய்ய எண்ணியுள்ளோம்.''

கைக்கொண்ட முறைகளையும் குறிப்பிட்டு இந்த ஆய்வுரையை முடிக்கின்றேன்.

20. கலைச்சொற்களையும் ஆட்சிச்சொற்களையும் பிறமொழிகளிலிருந்து தமிழாக்கஞ் செய்யும்பொழுது அவற்றை மூன்று வகையாகப் பிரித்து நோக்கலாம். மக்கள், இடங்கள், மூலகங்கள் முதலியவற்றின் பெயர்கள், உலகப் பொதுச் சொற்கள், நேர்மொழிபெயர்ப்புச் சொற்கள் என்பன அப்பிரிவுகள். அவற்றில் முன்னைய இரு பிரிவுகளையும் தமிழோசைப் படுத்தி யாக்கலாம். மூன்றும் பிரிவைப் பொருத்தமாக மொழி பெயர்க்கலாம்.

தமிழோசைப்படுத்தல்

21. தமிழோசைப்படுத்துபவர்கள் சில விதிகளைத் தழுவிக் கொண்டால் ஒரே வடிவத்தில் சொற்களை ஆக்குதல் சாலும். தமிழோசைப் படுத்துமுன் அச்சொற்களின் உச்சரிப்பைக் கிரந்த எழுத்துக்களைக் கலந்து தமிழ் எழுத்துக்களில் எழுதிப் பின்னர் தமிழோசைப் படுத்தலாம். தமிழோசை என்பது தமிழ்ச்சொல் ஓசையாம். முதனிலை-இறுதிநிலை-இடைநிலை மயக்கங்களுக்கு மாறுபாடின்றி ஆக்கப்படும் சொற்களே தமிழோசையுடைய சொற்களாகும். ஆரியச்சொற்களைத் தமிழோசைப்படுத்தி வடசொற்களாக ஆக்குவதற்கு நன்னூலார் வகுத்த விதிகளையும் தழுவலாம். தமிழில் இல்லாத பிறமொழி எழுத்தோசைகளையும், கூட்டோசைகளையும் தமிழ்ப்படுத்துதற்குச் சில விதிகளை ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். இதற்குச் சொல்லாக்க விதிகள் வழிகாட்டத்தக்கன. நேர்மொழிபெயர்ப்புகளைச் செய்யும்பொழுது தமிழிற் பொருத்தமான சொற்றொடர்கள் இருப்பின் அவற்றைப் பயன்படுத்தலாம். சொற்களின்றேல் மூலச் சொல்லின் கருத்தைச் சொற் சுருக்கமும் பொருட்டெளிவும் அமைய மொழிபெயர்க்கலாம். இவ்வாறு மொழிபெயர்க்கும் பொழுது சில சொற்கள் புதுமையாக விளங்கும். நாளடைவில் அவை இயல்பான சொற்களாக வழக்காறடைந்து விடும்.

நேர் மொழிபெயர்ப்பு

22. Pigiron எனுஞ்சொல் 'பன்றிஇரும்பு' என மொழிபெயர்க்கப்பட்டது. மிருகங்களின் பெயர்களுடன் சேர்ந்து பெயர் கொண்ட நரிப்பயறு, பூனைக்காலி முதலிய பலசொற்கள் தமிழ் வழக்கிலுள்ளன. பகுவிரீகிசமாசம் என்பதைப் பல நெற்சமாசம் என வீரசோழியம் நேர்மொழிபெயர்ப்புச் செய்துள்ளது. நேர் மொழிபெயர்ப்புச் செய்யும்பொழுது ஒரு சொல்லோடு சேர்ந்து உருவாகும் சொற்றொடர்களினை அச்சொல்லின் மொழிபெயர்ப்புடன் இணைத்தே தமிழ்ப்படுத்தல் வேண்டும். இவ்வாறு செய்யும்

பொழுது வழக்கிலிருக்கும் மொழிபெயர்ப்பையும் மாற்றவேண்டி நேரிடும். உதாரணத்திற்கு Phone எனும் ஆங்கிலச்சொல்லை நோக்குக. Telephone எனுஞ் சொல்லைத் தொலைபேசி என இரு நாட்டிலும் வழங்குகின்றேம். எனினும் பேசி என்பதினும் பன்னி என்பது Phone சேர்ந்துவரும் தொடர்களில் மிகுந்த பொருத்த முடையதாயிருப்பதால் Telephone தொலைப்பன்னி என்று தமிழாக்கஞ் செய்யப்பட்டுள்ளது. உதாரணம்—Ear-phone-செவிப் பன்னி, Phonograph-பன்னல் பதிகருவி. Photograph என்பதனை நிழற்படம் எனவும் சில இடங்களிற் புகைப்படம் எனவும் வழங்குவர். Photo எனுஞ் 'சொல்லின் மூலக்கருத்து ஒளியாகையால் ஒளிப்படம் எனத் தமிழாக்கஞ் செய்யப்பட்டது. Organisation எனுஞ் சொல்லைத் தமிழ்நாட்டில் நிறுவனம் என வழங்குவர். இத்தமிழ்ச் சொல்லை நிறுவகம் என வழங்கின் கருத்துப்பொலிவுறுமாகையால் நிறுவகம் என ஆக்கப்பட்டது.

23. மொழிபெயர்க்கத் தக்க பகுதிச் சொற்களும், தமிழோசைப்படுத்தப்படவேண்டிய சொற்களும் சேர்ந்துவருந் தொடர்களில் மொழிபெயர்க்கத் தக்கவற்றினை மொழி பெயர்த்தல் பொருள்விளக்கத்திற்கு இன்றியமையாதது. Di, Sub, Tri முதலியன, இரு, கீழ், மூன்று எனக் கொள்ளப்பட்டன, உதாரணம்: Dioxide-ஈரொட்சைட்டு, Sub oxide-கீழொட்சைட்டு. Tri Oxide-மூவொட்சைட்டு என்பன.

பிறமொழிச் சொற்களையும் கொள்ளல்

24. தமிழோடு தமிழாக இசைந்தும் வழக்காற்றிலிருக்கும் ஆங்கிலச் சொற்களையும் பிற மொழிச் சொற்களையும் ஏற்றுக்கொள்ளலாம். உதாரணம்: Bank-வங்கி, Telegraph-தந்தி. வழக்காற்றில் இல்லாதவெனினும் இயைந்தனவெனினும் கொள்ளப்படலாம். உதாரணம். Pump-பம்பி. வழக்கிலுள்ள வடசொற்களை ஒதுக்கவேண்டியதில்லை. ஆனுல் செந்தமிழ்ச் சொற்களும் வடசொற்களுமுளவெனின் பெரும்பாலும் செந்தமிழ்ச் சொற்களையே ஆளல்வேண்டும். உதாரணம்: அத்தியட்சகர், பிரசுரம், மாதம், காரியாலயம், காரியதரிசி என்பவற்றிற்கு முறையே கண்காணிப்பாளர், வெளியீடு, திங்கள், அலுவலகம், செயலாளர் என்பன கொள்ளப்படலாம்.

குலைச்சொற்கள்

25. சங்கம், கழகம், குழு, மன்றம் முதலியன ஓரினச் சொற்களாகும். இவற்றைக் குலைச்சொற்கள் எனவும் ஆளலாம். ஆங்கில மொழியில் இத்தகைய குலைச்சொற்கள் பலவுள. இவற்றைக் குறித்தற்குத் தமிழிலே சில சொற்களே வழக்கிலுள. ஒரு தமிழ்ச்

சொல் இரண்டு மூன்று ஆங்கிலச்சொற்களையும் குறிக்க ஆளப்படுகின்றது. உதாரணமாக, Society, Board, Council, Assembly என்பன 'சபை' எனப் பொதுவாக வழங்கப்படுகின்றன. மொழிபெயர்க்கவேண்டிய ஆங்கில நூல்களில் இச்சொற்கள் வெவ்வேறு நிறுவகங்களைக் குறித்து வரும்பொழுது தமிழ் மொழிபெயர்ப்புக்கு இவற்றிற்கு ஈடான ஒவ்வொரு சொல் தேவைப்படும். எனவே இந்தச் சிக்கலை நீக்குதற்குக் குழுச்சொற்களைத்தொகுத்து[20] ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் ஈடான ஒவ்வொரு தமிழ்ச் சொல்லை ஆளுதற்கு முயலல் வேண்டும். இம்முறையினைக் கலைச் சொல்லாக்கத்தின்போது செயற்படுத்திக் குலைச்சொற்கோவை ஒன்றினையும் ஆக்கினேன். இந்நூல் இன்னும் வெளியிடப்படவில்லை. விரைவில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

26. சபை, சங்கம், மன்றம், கழகம், இந்நான்கு சொற்களும் Society, Association, Committee, Council என்பவற்றில் ஒன்றைக் குறித்தற்கு இப்பொழுது நியதியின்றி வழங்கப்படுகின்றன. திருக்குறள் கழகம், திருக்குறள் சங்கம், திருக்குறள் மன்றம், திருக்குறள் சபை எனும் பெயர்களையுடைய நிறுவகங்களை நோக்குக. இந்நிறுவகங்கள் ஒத்த அமைப்புடையனவெனினும் வெவ்வேறு பெயரையுடைய இத்தகைய கலப்பு வழக்காறு, ஆங்கிலச் குலைச்சொற்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லை வழங்குதற்குத் தடையாயுள்ளது. நாளடைவில் ஒரு பொருளை ஒரு சொல்லால் வழங்குவதை உறுதிப்படுத்தல்வேண்டும். விஞ்ஞானத் துறைக்கு இஃது இன்றியமையாதது. நூல் எழுதுவோரும், பேச்சாளரும், பத்திரிகையாளரும் உளங்கொண்டு பணியாற்றின் விரைவிற் கலைச்சொற்கள் உறுதியான வழக்காறெய்தும். Department-என்பதனைப் பகுதி எனவோ 'துறை' எனவோ வழங்குவது பொருத்தமற்றது. Part-பகுதி. துறை என்பது Faculty என்பதற்குப் பொருத்தமானது. Port ஐயும் துறை எனத் தனித்து வழங்கலுமுண்டு. எனவே Department என்பதற்குத் திணைக்களம் எனும்சொல்லை ஆண்டுள்ளோம். இச்சொல் கல்

[20] Assembly, Association, Board, Body, Branch, Bureau, Clique, Club, Commission, Committee, Conference, Congress, Co-operative Society, Corporation, Council, Court, Department, Division, Establishment, Faculty, Forum, Federation, Gang, Guild, Head Office, Headquarters, Institute, Institution, Meeting, Mission, Office, Organisation, Panel, Parliament, Party, Pool, Rally, Section, Secretariat, Senate, Society, Station, Syndicate, Trade Union, Tribunal, Troupe, Union, Unit, Upper House. இவற்றை ஒரு குலைச்சொல்லாகக் கொள்ளலாம். இக்குலைச்சொற்களில் ஒன்றுன Committee எனும் ஆங்கிலச் சொல்லுக்கு முன்னும் பின்னும் பல சொற்கள் இணைந்து குழுக்களின் பெயர்களாக அமைந்துள்ளன.

Ad hoc Committee, Advisory Committee, Committee of Privileges, Committee of the whole House, Committee of ways and means, Contract Committee, Executive Committee, General Committee, Selective Committee, Standing Committee, Steering Committee, Sub Committee, Subject Committee, Working Committee.... முதலியன காண்க.

வெட்டிலுள்ளது. இப்பொழுது இச்சொல் இலங்கை அரசாங்கத்தின் வெளியீடுகளிலும் இலங்கைப் பத்திரிகைகளிலும் வழக்காறெய்தி நிலைத்துவிட்டது.

வினையடியொன்றிலிருந்து பிறக்குஞ் சொற்கள்

27. Direct, Direction, Director, Inspector, Inspection,.......... இவைபோன்று ஒரு வினையடியிலிருந்து பிறக்குஞ் சொற்களைத் தமிழாக்கஞ் செய்யும்பொழுது வினைச்சொற்களும் பெயர்ச்சொற்களும் ஓரடியிலிருந்து பிறப்பனவாக அமைத்தல் நன்று. Direct - பணி, Direction - பணிப்பு, பணிப்புரை, Director - பணிப்பாளர். தமிழ் நாட்டரசு Director என்பதை முன்னர் நெறியாளர் எனவும் இப்பொழுது இயக்குநர் எனவும் வழங்குகின்றது. இயக்குநர் என்பது Operator என்பதற்கே பொருத்தமுடையதாகையால் Director என்பதற்குப் பணிப்பாளர் என ஆண்டுள்ளோம். இப்பொழுது இச்சொல்லும் இலங்கையில் வழக்காறெய்தியுள்ளது.

நல்ல தமிழ்ச் சொற்கள் காணல் வேண்டும்

28. Candidate என்பதற்கு வேட்பாளர் எனும் சொல் மிகப் பொருத்தமானது. இது அண்மையில் திராவிட முன்னேற்றக் கழக ஏடுகள் தமிழுக்களித்த சொல்லாகும். இதைப்போல இன்னும் பல ஆங்கிலச்சொற்களுக்கு நல்ல செந்தமிழ்ச் சொற்கள் தேவைப்படுகின்றன.[21]

தமிழின் வளம்

29. பிறமொழிச் சொற்கள் சிலவற்றிற்கு நல்ல தமிழ்ச் சொற்கள் இல்லை என்பதனால் தமிழின் வளத்திற்கு எத்தகைய இழுக்குமில்லை. தமிழ்மக்கள் தம் ஆட்சியில், தாமாகவே செயலாற்றுவார்களாயின் அவர்கள் தம் எண்ணங்களை இயல்பாகவே தமிழ்மொழியில் வெளியிடலாம். முன்னர் ஊர்மன்றம் முதலியன ஆட்சி செய்த காலத்தில் ஆட்சிச்சொற்களும் பிறசொற்களும் தோன்றின. பிறநாட்டவர் வகுத்த பாராளுமன்றம் முதலிய நிலையங்களை நாம் நிறுவும்பொழுது அவற்றோடு தொடர்புடைய கலைச்சொற்களையும் அந்நாட்டவரின் மொழியிலிருந்தே தமிழாக்கஞ் செய்யவேண்டி

[21] உதாரணத்திற்குச் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுகின்றேன். Acknowledgement, Acting, Appointment, Approval, Arts and Science, Civil, Clause, Clerk, Common-Wealth, Condolence, Conductor, Confidential, Declaration, Delegate, Deputy Directory, Endorsement, Express, Frank, Hiring, Holidays, Honorary, Honorable, Individual, Interdict, International, Inspector, Leave, Licence, Magistrate, Mayor, Mechanic, Memorandum, Municipality, Objection, Pass, Payment, Permit, Personal, Petition, Plan, Proclamation, Propaganda, Que, Recommendation, Reference, Reorganisation, Representative, Sanction, Secondment, Speaker (Parliament) Specimen, Suspend, Temporary, Union, Vacancy, Whip (Parli.).

யுள்ளது. இதனுலேயே கலைச்சொல்லாக்கத்திலே சில இடர்ப் பாடுகள் உண்டாகின்றன. எமது மொழியிலுள்ள சிலசொற்களை-குடவோலை, காதல், ஊடல் போன்றவற்றை ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழிபெயர்க்கும்பொழுது இத்தகைய இடர்ப்பா டுள்ளது. சிற்சில துறைகளிலே ஏனைய மொழிகளுக்கில்லாத சொல்வளம் தமிழுக்குண்டு. Parliament என்பதற்குப் பாராளு மன்றம், நாடாளுமன்றம், மக்கள்மன்றம் என்ற பல சொற்கள் இன்று வழக்கிலுள. Office என்பதைக் குறிப்பதற்கு அலுவ லகம், செயலகம், பணியகம், பணிமனை எனச் சொற்கள் பெருகு கின்றன. Laboratory என்பதைக் குறிக்க ஆராய்ச்சிச்சாலை, ஆராய்ச்சிக்கூடம், ஆய்வுக்கூடம், ஆய்வகம், ஆயகம் முதலிய பல சொற்கள் ஆக்கப்பட்டுள. நாட்டாட்சிக்கும் உயர்கல்விக்கும் இப் பொழுதுதான் தமிழ்மொழி பயன்படுத்தப்படுகின்றது. எனவே அடுத்த தலைமுறையினர் எவ்வித இடர்ப்பாடுமின்றித் தமிழ்க்கலைச் சொற்களைப் பயன்படுத்துவார்கள். நல்ல கலைச்சொற்கள் வாழும். பொருத்தமற்றன புதியனவற்றிற்கு வாழ்வளிக்கும்.

ஆசிரியர்களின் பெயர் அகர வரிசை

கட்டுரைத் தலைப்புகளின் அகர வரிசை